652

Q6 : 417
N 20
72130

BOOK OF PSALMS.

OF THE REGISTRAR OF BOOKS
1- JUN 1920
MADRAS.

ஞான சங்கீதங்களின்

புஸ்தகம்.

மூன்றாம் பதிப்பு.

Tranquebar,
PRINTED AT THE CH. OF SWEDEN MISSION PRESS,
1920.

ஞான சங்கீதங்களின்

புஸ்தகம்.

1 - JUN 1920

1. சங்கீதம்.

தெய்வபத்தியுள்ளவர்களின் பாக்கிய
மும், ஆகாதவர்களின் நிர்ப்பாக்கியமும்.

ஆகாதவர்களுடைய ஆலோச
னையில் நடவாமலும், பாவிகளு
டைய வழியில் நில்லாமலும், சர
சக்காரர் உட்கார்ந்திருக்கிறஇடத்
தில் உட்காராமலும்,— 2 கர்த்தரு
டைய வேதத்தின்மேல் பிரியமா
யிருந்து, அவருடைய வேதத்தில்
இரவும் பகலும் தியானிப்பாயிருக்
கிற மனுஷன் பாக்கியவான்.—
3 அவன் நீர்வாய்க்கால்களின் ஓர
மாய் நடப்பட்டு, தன்காலத்திலே
தன் கனியைத் தந்து இலை உதி
ராதிருக்கிற மரத்தைப் போல்
இருப்பான்; அவன் செய்வதெல்
லாம் வாய்க்கும்.

4 ஆகாதவர்கள் அப்படி இரா
மல், காற்று பறக்கடிக்கும் பத
ரைப் போல் இருக்கிறார்கள்.—
5 ஆகையால் ஆகாதவர்கள் நியா
யத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்
களின் சபையிலும் நிலைநிற்பதில்
லை. — 6 ஏனென்றால் கர்த்தர்
நீதிமான்களின் வழியை அறிந்தி
ருக்கிறார்; ஆகாதவர்களின் வழி
யோ அழியும்.

2. சங்கீதம்.

மேசியாவின் இராச்சியத்தையும் அவ
ருடைய சத்துருக்களையுங் காண்பிக்
கும் தீர்க்கதரிசனம்.

சாதிகள் கொந்தளித்து, சன
சதளங்கள் விருதாக்காரியத்தைச்
சிந்திப்பானேன்.— 2 கர்த்தருக்கு
விரோதமாகவும், அவர் அபிஷே
கம் பண்ணினவருக்கு விரோதமா
கவும் பூமியின் இராசாக்கள் எழும்
பிக்கொண்டு, தலைவர் ஏகமாய்
ஆலோசனைபண்ணி:—3 அவர்கள்
கட்டுகளை அறுத்து, அவர்கள் கயி
றுகளை நம்மை விட்டு எறிந்து
போடுவோம் என்கிறார்கள்.

4 பரமண்டலங்களில் வாசமாய்
இருக்கிறவர் நகைப்பார்; ஆண்ட
வர் அவர்களைப் பரியாசம் பண்ணு
வார். —5 அப்போது தமது கோ
பத்திலே அவர்களோடே பேசி,
தமது உக்கிரத்திலே அவர்களைக்
கலங்கப் பண்ணுவார். — 6 நாம்
நமது பரிசுத்த பருவதமாகிய

சீயோன் மீதில் நமது இராசாவை
அபிஷேகம் பண்ணினோம்.
7 தீர்மானத்தின் விவரஞ்சொல்
லுவேன், கர்த்தர் என்னுடனே:
நீர் நமது குமாரன், இன்று நாம்
உம்மைச் ஜெனிப்பித்தோம் என்
றும், — 8 நம்மைக் கேளும், அப்
போது சாதிகளை உமக்குச் சுதந்
தரமாகவும், பூமியின் எல்லைகளை
உமக்குச் சொந்தமாகவுங் கொடு
ப்போம்;—9 இருப்புக் கோலால்
அவர்களை நொறுக்கி, குயக்கலத்
தைப் போல் அவர்களைச் சிதற
அடிப்பீர் என்றும் சொன்னார்.
10 இப்போதும், இராசாக்க
ளே, உணர்வடையுங்கள்; பூமியின்
நியாயாதிபதிகளே, புத்திமான்
களாய் நடந்துகொள்ளுங்கள்.—
11 பயத்துடனே கர்த்தருக்கு
ஊழியஞ் செய்யுங்கள், நடுக்கத்
துடனே களிகூருங்கள்.—12 குமா
ரன் கோபமடையாமலும், நீங்கள்
வழியில் அழியாமலும் இருக்கும்
படி, அவரை முத்திசெய்யுங்கள்;
ஏனென்றால் கொஞ்சக் காலத்தி
லே அவருடைய கோபம் பற்றி
எரியும்; அவரை அண்டிக்கொள்
ளுகிற யாவரும் பாக்கியவான்கள்.

3. சங்கீதம்.

சத்துருக்களாலே உபத்திரவப்படுகையில் தாவீது பராபரனை நம்பி மனந்தேறினது.

தாவீது தன் குமாரன் அப்ச
லோமுக்குத் தப்பி ஓடிப்போகை
யில் பாடின சங்கீதம்.
2 கர்த்தாவே, என் சத்துருக்
கள் எத்தனையாய்ப் பெருகினார்
கள்; எனக்கு விரோதமாய் எழும்
புகிறவர்கள் அநேகர். —3 அவனுக்
குப் பராபரனிடத்திலே இரட்
சிப்பு இல்லை என்று என் ஆத்து
மத்தைக் குறித்துச் சொல்லுகிற
வர்கள் அநேகராய் இருக்கிறார்
கள். சேலா.
4 ஆனால், கர்த்தாவே, தேவரீர்
எனக்கான கேடயமும், என்
மகிமையும், என் தலையை உயர்த்
துகிறவருமாய் இருக்கிறீர். —
5 என் சத்தத்தினாலே கர்த்தரை
நோக்கிக் கூப்பிட்டேன், அப்போ
து தமது பரிசுத்த பருவதத்தி
லிருந்து என் விண்ணப்பத்தைக்
கேட்டார். சேலா.—6 நான் படுத்
துக்கொண்டு நித்திரை பண்ணி
னேன், விழித்துங்கொண்டேன்;
ஏனெனில் கர்த்தர் என்னைத்
தாங்குகிறார். — 7 சுற்றிலும் எ
னக்கு விரோதமாகப் பாளயம்
இறங்குகிற பதினாயிரம் பேருக்
குப் பயப்படேன்.—8 கர்த்தாவே,
எழுந்திரும்; என் பராபரனே,
என்னை இரட்சியும்; ஏனெ
னில் நீர் என் பகைஞர் எல்லா
ரையுந் தாடையிலே அடித்து,
ஆகாதவர்களுடைய பல்லுகளைத்
தகர்த்துப்போடுகிறீர். —9 இரட்
சிப்பு கர்த்தருடையதே; தேவரீ
ருடைய ஆசீர்வாதம் உமது சனத்
தின்மேல் இருப்பதாக. சேலா.

4. சங்கீதம்.

தாவீது தன் பகைஞருக்குப் புத்தி சொல்லி, பராபரன் சலிகையால் மனந்தேறினது.

கின்னாரங்களில் வாசிக்க இரா
கத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட
தாவீதின் சங்கீதம்.

2 என் நீதியின் பராபரனே,
நான் கூப்பிடுகையில் என்னைக்
கேளும்; நெருக்கத்தில் இருக்கிற
எனக்கு விசாலம் உண்டாக்கினீர்;
என்மேல் இரங்கி, என் விண்ணப்
பத்தைக் கேளும்.

3 மனுப்புத்திரரே, எந்தமட்
டும் என் கீர்த்தியை அவமான
மாக்கி, அவத்தத்தைச் சிநேகித்
து, பொய்யைத் தேடுவீர்கள். சே
லா.—4 கர்த்தர் தமது சன்மார்க்
கனை அதிசயமாய் நடத்துகிறார்
என்று அறியுங்கள்; நான் கர்த்த
ரை நோககிக் கூப்பிடுகையில்,
அவர் கேட்பார்.—5 நீங்கள் சி
னம் அடைந்தால் பாவம் செய்யா
தேயுங்கள்; உங்கள் படுக்கையில்
உங்கள் இருதயத்திலே பேசி
அமர்ந்திருங்சள். சேலா.—6 நீதி
யின் பலிகளைச் செலுத்தி, கர்த்
தரின்மேல் நம்பிக்கையாய் இருங்
கள்.

7 நமக்கு நன்மை காண்பிப்ப
வன் ஆர் என்று சொல்லுகிறவர்
கள் அநேகர்; உம்முடைய முகத
தின் வெளிச்சத்தை எங்கள்மேல்
எறெடும், கர்த்தாவே.—8 அவர்
களுக்குத் தானியமும் திராட்ச
ரசமும் பெருகியிருக்கிற காலத
தின் சந்தோஷத்திலும் அதிக
சந்தோஷத்தை என் இருதயத்
தில் தந்தீர்—9 சமாதானத்திலே
சயனித்துக்கொண்டும் நித்திரை
பண்ணியும் இருப்பேன்; ஏனெ
னில், சர்த்தாவே, தேவரீர் ஒரு
வரே என்னைச் சுகமாய்த் தங்கப்
பண்ணுகிறீர்.

5. சங்கீதம்.

பராபரன் பொல்லாதவர்களை அருவ
ருத்து தம்முடைய விசுவாசிகளைக் காப்
பாற்றுகிறது.

நெகிலோத்தில் வாசிக்க இரா
கத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்
ட தாவீதின் சங்கீதம்.
2 கர்த்தாவே, என் வார்த்தை
களுக்குச் செவிகொடும், என் தியா
னத்தை உணர்ந்துகொள்ளும்.-
3 என் இராசாவே, என் பராபர
னே, என் கூப்பிடுதலின் சத்தத்
தைக் கவனியும்; ஏனெனில் உம்
மை நோக்கி விண்ணப்பம் செய்
வேன்.—4 கர்த்தாவே, காலமே
என் சத்தத்தைக் கேட்பீராக; கா
லமே உமக்கு நேரே வந்து ஆயத்
தமாகிக் காத்திருப்பேன். — 5 ஏ
னென்றால் தேவரீர் ஆகாமியத்
தை விரும்புகிற தேவன அல்ல;
பொல்லாதவன் உம்மிடத்திலே
தரிசொள்ள மாட்டான்.-6 வீம்புக்
காரர் உம்முடைய கண்களுக்கு
முன்பாக நிலைநிற்பதில்லை; எல்லா
அக்கிரமக்காரரையும் பகைக்கிறீர்.
7 பொய் பேசுகிறவர்களை
அழிப்பீர்; இரத்தப் பிரியனையுஞ்
சூதுள்ள மனுஷனையுங் கர்த்தர்
அருவருக்கிறார்.—8 நானோ உம்
முடைய மிகுந்த கிருபையினாலே
உமது வீட்டுக்குள் பிரவேசித்து,
உமது பரிசுத்த தெய்வாலய சந்நி
தியில் உமக்குப் பயந்து பணிந்து
கொள்ளுவேன்.
9 கர்த்தாவே, என் சத்துருக்க
ளின் நிமித்தம் என்னை உமது நீ
தியிலே நடத்தி, எனக்கு முன்பா

க உமது வழியைச் செம்மைப்
படுத்தும்.—10 ஏனெனில் அவர்
கள் வாயிலே நிசம் இல்லை; அவர்
கள் உள்ளம் கேடுபாடுகள்; அவர்
கள் தொண்டை திறக்கப்பட்ட
பிரேதக்குழி; தங்கள் நாவினால்
இச்சகம் பேசுகிறார்கள்.—11 பரா
பரனே, அவர்கள் தங்கள் ஆலோ
சனைகளை விட்டு விழும்படி அவர்
களைக் குற்றவாளிகளாக்கும்; அ
வர்கள் துரோகங்களினுடைய தி
ரட்சியின் நிமித்தம் அவர்களைத்
தள்ளிவிடும்; ஏனென்றால், தேவ
ரீருக்கு விரோதமாய்க் கலகம்
பண்ணினார்கள். — 12 ஆனால்
உம்மை அண்டிக்கொள்ளுகிறவர்
கள் எல்லாருஞ் சந்தோஷித்து,
என்றென்றைக்கும் கம்பீரிப்பார்
களாக; ஏனெனில் அவர்களைக்
காப்பாற்றுகிறீர். உம்முடைய நா
மத்தைச் சிநேகிக்கிறவர்கள் உம்
மிலே களிகூருவார்கள். — 13 ஏ
னென்றால், கர்த்தாவே, தேவரீர்
நீதிமானை ஆசீர்வதித்து, அவ
னைத் தயவென்ற கேடயத்தினால்
சூழ்ந்து கொள்ளுவீர்.

6. சங்கீதம்.

தாவீது தன் ஆத்தும சரீர நோக்காட்டில் பாடிய தப சங்கீதம்.

எண்ணரம்புக் கின்னரங்க
ளில் வாசிக்க இராகத் தலைவனுக்
கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின்
சங்கீதம்.

2 கர்த்தாவே, உம்முடைய கோ
பத்தில் என்னைக் கடிந்துகொள்
ளாதேயும், உம்முடைய உக்கிரத்
தில் என்னைத் தண்டியாதேயும்.
3 என்மேல் இரங்கும், கர்த்தா
வே, ஏனெனில் நான் பலமற்றி
ருக்கிறேன்; என்னைக் குணமாக்
கும், கர்த்தாவே, ஏனெனில் என்
எலும்புகள் கலங்கி யிருக்கிறது.
4 என் ஆத்துமம் மிகவுங் கலங்கி
யிருக்கிறது; கர்த்தாவே, நீர் எந்த
மட்டும் இரங்காதிருப்பீர்.—5 தி
ரும்பும், கர்த்தாவே, என் ஆத்து
மத்தை விடுவியும்; உம்முடைய
கிருபையின் நிமித்தம் என்னை
இரட்சியும். — 6 ஏனென்றால்
மரணத்தில் உம்மை நினைவுகூரு
வதில்லை, பாதாளத்தில் உம்மைத்
துதிப்பவன் ஆர்.—7 என் பெரு
மூச்சுகளால் இளைத்தேன்; இரா
முழுவதும் என் மெத்தையை மிக
வும் ஈரிக்கப்பண்ணி என் கண்
ணீரால் என் கட்டிலை நனைக்கி
றேன்.- 8 என் கண் சலிப்பினால்
குழிவிழுந்து போயிற்று, என் சத்
துருக்கள் அனைவர் நிமித்தந் தி
ரைந்து போயிற்று.

9 அக்கிரமக்காரராகிய நீங்கள்
எல்லாரும் என்னைவிட்டு அகன்
றுபோங்கள்; ஏனென்றால் கர்த்
தர் என் அழுகையின் சத்தத்
தைக் கேட்டார்.—10 கர்த்தர் என்
விண்ணப்பத்தைக் கேட்டார்;
கர்த்தர் என் செபத்தை ஏற்றுக்
கொள்ளுகிறார்.— 11 என் பகை
ஞர் எல்லாரும் வெட்கி, மிகவுங்
கலங்கிப் போவார்கள்; அவர்கள்
பின்னாகத் திரும்பி, அசுப்பிலே
வெட்கப்படுவார்கள்.

7. சங்கீதம்.

தாவீது தன் குற்றமில்லாமையைச் சொல்லி, தன்னை அவதிப்படுத்துகிறவர்களின் அழிவை முன்னறிவித்தது.

எமினியின் குமாரனாகிய கூஷியின் வார்த்தைகள் நிமித்தந் தாவீது கர்த்தரை நோக்கிப் பாடின துயர கீதம்.

2 என் பராபரனாகிய கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; என்னைப் பின்தொடருகிறவர்கள் எல்லாருக்கும் தேவரீர் என்னை விலக்கி, இரட்சித்து, — 3 சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமத்தைப் பிடித்துப் போய், விடுவிக்கிறவன் இல்லாமையால் பீறுதபடி, என்னைத் தப்பப் பண்ணும்.

4 என் பராபரனாகிய கர்த்தாவே, நான் இதைச் செய்ததும், என் கைகளில் நியாயக்கேடு இருக்கிறதும், — 5 முகாந்தரமில்லாமல் எனக்கு இடுக்கண் செய்தவனைத் தப்பவே பண்ணின நான் என்னோடே சமாதானமாய் இருந்தவனுக்குத் தீமை செய்ததும் உண்டானால்,- 6 பகைஞன் என் ஆத்துமத்தைத் தொடர்ந்து பிடித்து, என் பிராணனைத் தரையிலே தள்ளிமிதித்து, என் கனத்தைத் தூளிலே தாழ்த்திப்போடக்கடவான். சேலா.

7 கர்த்தாவே, நீர் உம்முடைய கோபத்தில் எழுந்திருந்து, எனக்கு இடுக்கண் செய்கிறவர்களுடைய மூர்க்கங்களின் நிமித்தம் உயர்ந்து, எனக்காக விழித்துக்கொள்ளும்; எனெனில் நியாயத் தீர்ப்பைக் கற்பித்தீரே.- 8 அப்போது சனங்களுடைய கூட்டம் உம்மைச் சூழும்; அவர்களுக்காக உயரத்துக்குத் திரும்பும். — 9 கர்த்தர் சனங்களுக்கு நியாயஞ் செய்வார்; கர்த்தாவே, என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ் செய்யும்.- 10 ஆகாதவர்களின் பொல்லாங்கை ஒழியப்பண்ணுமேன், நீதிமானை நிலைநிறுத்துவீராக; எனெனில் நீதியுள்ள பராபரனாகிய தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையுஞ் சோதித்து அறிகிறவர்.

11 என் கேடயம் செம்மை இருதயத்தாரை இரட்சிக்கிற பராபரனிடத்தில் இருக்கிறது.- 12 பராபரன் நீதியுள்ள நியாயாதிபதியும், நாள்தோறும் சினத்திருக்கிற தேவனுமானவர்.-13 மனந்திரும்பாதிருந்தால், தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார்; அவர் தம்முடைய வில்லை நாணேற்றி, அதை முஸ்திப்பாக்கி,— 14 அவனுக்குச் சாவுக் கினயான ஆயுதங்களை ஆயத்தம் பண்ணினார்; தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்குவார்.

15 இதோ, அக்கிரமத்தைப் பெறக் கர்ப்பவேதனையாய் இருக்கிறான்; தீவினையைக் கர்ப்பந்தரித்தான், ஆனால் அபத்தத்தைப்பெறுவான்.— 16 குழியை வெட்டி, அதைப் பள்ளமாக்கினான்; தான் பறித்த குழியிலே விழுவான்.— 17 அவன் தீவினை அவன் சிரசின்மேல் திரும்பி, அவன் கொடுமை அவன் உச்சந்

தலையின்மேல் இறங்கும். — 18
நான் கர்த்தரை அவருடைய நீதி
யின்படியே துதித்து, உன்னத
மான கர்த்தருடைய நாமத்தைக்
கீர்த்தனம் பண்ணுவேன்.

8. சங்கீதம்.

மனுஷ குமாரனாகிய மேசியாவின் தாழ்ந்த, உயர்ந்த நிலைமைகளைப் பற்றிய தீர்க்கதரிசனம்.

கித்தீத்தில் வாசிக்க இராகத்
தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட
தாவீதின் சங்கீதம்.
2 எங்கள் ஆண்டவராகிய கர்த்
தாவே, தேவரீருடைய நாமம் பூமி
எங்கும் எத்தனை பிரபலியமாய்
இருக்கிறது; உம்முடைய மகத்
துவத்தை வானங்களுக்கு மேல்
வட்டமாக்கினீர். - 3 பகைஞனை
யும் பழிகாரனையும் ஓயப்பண்ண
தேவரீர் உமது சத்துருக்களின்
நிமித்தம் குழந்தைகள் பாலகர்
வாயினாலே பலம் உண்டுபண்ணி
னீர்.
4 நான் உமது விரல்களின் கிரி
யையாகிய உம்முடைய வானங்க
ளையும், நீர் ஆயத்தப்படுத்தின சந்
திரனையும் நட்சத்திரங்களையும்
பார்க்கும்போது:— 5 மனுஷன,
நீர் அவனை நினைக்கிறதற்கும், ம
னுஷனுடைய குமாரன், நீர் அவ
னை நோக்கிப் பார்க்கிறதற்கும்
எம்மாத்திரம் என்கிறேன் -6 நீர்
அவரைக் கொஞ்சத் தியாலஞ் சே
வதூதரிலுஞ் சிறியவராக்கினீர்;
ஆனால் மகிமையினாலுங் கனத்தி
னாலும் அவரை முடி சூட்டினீர்.-
7 நீர் அவருக்கு உமது கைகளு
டைய கிரியைகளின்மேல் ஆளு
கை தந்து, சருவத்தையும், —
8 ஆடுமாடு முதலானவைகள் எல்
லாவற்றையும், அதனோடே கூட
வெளியின் மிருகங்களையும்,- 9 ஆ
காசத்துப் பட்சிகளையும், சமுத்தி
ரத்து மச்சங்களையும், கடல்களின்
பாதைகளில் நடமாடுகிறதையும்
அவர் பாதங்களுக்குக் கீழ்ப்ப
டுத்தினீர்.— 10 எங்கள் ஆண்ட
வராகிய கர்த்தாவே, தேவரீரு
டைய நாமம் பூமி எங்கும் எத்த
னை பிரபலியமாய் இருக்கிறது.

9. சங்கீதம்.

சத்துருக்கள்மேல் ஜெயம் சிறந்த பராபரனைத் துதித்தது.

முத்லாபேனிலே வாசிக்க இ
ராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்
பட்ட தாவீதின் சங்கீதம்.
2 என் முழு இருதயத்தாலுங்
கர்த்தரைத் துதிப்பேன், உம்மு
டைய அதிசயங்களை எல்லாம் வி
வரிப்பேன்.— 3 உமக்குள் மகிழ்
ந்து களிகூருவேன்; உன்னதமா
னவரே, உம்முடைய நாமத்தைக்
கீர்த்தனம் பண்ணுவேன்.
4 ஏனென்றால் என் சத்துருக்
கள் பின்னாகத் திரும்பி, உம்மு
டைய முகத்துக்கு முன்பாக இல்
லாதபடி, இடறுண்டு அழிந்தார்
கள்.— 5 அதேனெனில் நீர் என்
நியாயத்தையும் என் வழக்கையுந்
தீர்த்து, நீதியுள்ள நியாயாதிபதி
யாய் இராசாசனத்தின்மேல் உட்
கார்ந்தீர்.— 6 சாதிகளை உதம்பி,

ஆகாதவனை அழித்து, அவர்கள்
நாமத்தை என்றென்றைக்குமுள்
ள சதாகாலங்களுக்குங் குலைத்
துப்போட்டீர்.
7 சத்துரு பண்ணின பாழ்க்க
டிப்புகள் என்றென்றைக்கும் மு
டிவு அடைந்தது; ஏனென்றால்
அவர்கள் பட்டணங்களை நிர்மூலம்
பண்ணினீர்; அவர்கள் பேர் அவர்
களோடேகூட அழிந்தது.-8 கர்த்
தரோ என்றென்றைக்கும் இருப்
பார். தம்முடைய ஆசனத்தை நி
யாயத் தீர்ப்புக்கு ஆயத்தம் பண்
ணினார். — 9 அவர் பூச்சக்கரத்
தை நீதியாய் நியாயந்தீர்த்து,சன
சதளங்களுக்குச் செம்மையாய் நீ
தஞ் செய்வார். — 10 சிறுமைப்
பட்டவனுக்குக் கர்த்தர் உயர்ந்த
அடைக்கலமாய் இருப்பார்; நெ
ருக்கப்படுகிற காலங்களில் அவர்
உயர்ந்த அடைக்கலந்தானே. —
11ஆகையால் உமது நாமத்தை
அறிந்தவர்கள் உம்மை நம்பியிரு
ப்பார்கள்; ஏனெனில், கர்த்தா
வே, உம்மைத் தேடுகிறவர்க
ளைத் தேவரீர் கைவிடுகிறதில்லை.
12 சீயோனில் வாசமான கர்த்
தரைக் கீர்த்தனம் பண்ணி, அவர்
செய்கைகளைச் சனசதளங்களுக்
குள்ளே அறிவியுங்கள். — 13 ஏ
னென்றால் சிந்துண்ட இரத்தப்
பழிகளை அவர் கேட்டு, அவைகளை
நினைக்கிறார்; சிறுமையானவர்க
ளுடைய கூப்பிடுதலை அவர் மற
வார்.
14 என்னை மரண வாசல்களி
லிருந்து உயரப்பண்ணுகிற கர்த்
தாவே, நான் உம்முடைய துதி
களை எல்லாம் சீயோன் குமாரத்
தியின் வாசல்களில் விவரித்து,
உம்முடைய இரட்சிப்பினாலே க
ளிகூரும்படி, - 15 தேவரீர் என்
மேல் இரங்கி, என்னைப் பகைக்
கிறவர்களால் எனக்கு வருஞ் சிறு
மையைப் பாரும்.
16 சாதிகள் தாங்கள் வெட்டின
பள்ளத்திலே அமிழ்ந்தினார்கள்;
அவர்கள் மறைவாய் வைத்த வலை
யிலே அவர்கள் கால் அகப்பட்டுக்
கொண்டது.— 17 கர்த்தர் தாம்
செய்த நியாயத்தினால் அறியப்
பட்டார். ஆகாதவன் தன் கைக
ளின் செய்கையிலே சிக்கப்பட்
டான்; இது தியானிக்கப் படத்
தக்கது. சேலா. — 18 ஆகாதவர்
களும் பராபரனை மறக்கிற எல்
லாச் சாதிகளும் நரகத்துக்குத்
திரும்புவார்கள். - 19 ஏனெனில்
எளியவன் என்றைக்கும் மறக்கப்
படுவதில்லை; சிறுமைப்பட்டவர்
களின் காத்திருக்குதல் நித்திய
காலமாய்க் கெட்டுப்போயிருப்ப
தும் இல்லை.
20 மனுஷன் பலங்கொள்ளாத
படி எழுந்திரும், கர்த்தாவே; சா
திகள் உம்முடைய முகத்துக்கு
முன்பாக நியாயந் தீர்க்கப்படக்
கடவார்கள். — 21 சாதிகள் தாங்
கள் மனுஷர் என்று அறியும்படி,
அவர்களுக்குப் பயம் உண்டாக்கு
ம், கர்த்தாவே. சேலா.

10. சங்கீதம்.

பொல்லாதவர்களால் துன்பப்படுகிற
பராபரனுடைய சபை செய்கிற
வேண்டுதல்.

கர்த்தாவே, என் தூரத்திலே
நிற்கிறீர், நெருக்கப்படுகிற காலங்

களில் ஏன் உம்மை மறைக்கிறீர்.-
2 ஆகாதவன் தன் பெருமையினா
லே சிறுமையானவனைக் குரூர
மாய்த் துன்பப்படுத்துகிறான்; ஆ
னால் அவர்கள் சதிநினைத்த தீவி
னைகளிலே பிடிக்கப்படக் கடவர்
கள். — 3 ஏனெனில் ஆகாதவன்
தன் ஆத்துமத்தின் ஆசையைத்
தொட்டுப் பெருமை பாராட்டுகி
றான்; பொருளாசைக்காரன் தன்
னை ஆசீர்வதித்து, கர்த்தரை அச
ட்டை பண்ணுகிறான். — 4 ஆகா
தவன் தன் முக நெறிப்பினால்
ஒன்றுக்கும் விசாரப்படாதே போ
கிறான்; அவன் நினைவுகள் எல்லாம்:
பராபரன் இல்லை என்பதே.-
5 அவன் வழிகள் எப்போதும் வா
ய்த்த உண்டாக்குகிறவைகள்; உம்
முடைய நியாயத் தீர்ப்புகளோ
அவன் பார்வைக்கு மகா உயர்ந்த
தூரம்; தன் எதிராளிகளை எல்
லாஞ் சீறுகிறான்— 6 தன் இரு
தயத்திலே: நான் அசைக்கப்படா
மலும், தலைமுறை தலைமுறையா
கத் தீங்கு அடையாமலும் இருப்
பேன் என்கிறான். — 7 அவன்
வாய் சர்ப்பனையினாலும் கபடுகளி
னாலும் தந்திரத்தினாலும் நிறைந்
திருக்கிறது; அவன் நாவின் கீழ்த்
தீவினையும் அக்கிரமமும் இருக்கி
றது. 8 கிராமங்களிலே பதிவிருந்
து, ஒளிப்பிடங்களிலே குற்றமில்
லாதவனைக் கொல்லுகிறான்; அவ
ன் கண்கள் ஏழையைச் சூட்டாய்ப்
பார்க்கிறது. — 9 தன் கெபியில்
இருக்கிற சிங்கத்தைப்போலே
மறைவில் பதிவிருக்கிறான்; சிறு
மையானவனைப் பிடிக்கப் பதிவி
ருந்து, சிறுமையானவனைத் தன்
வலைக்குள் இழுத்துப் பிடிக்கிறா
ன். — 10 ஏழைகளின் கூட்டம்
அலைசடிப்பட்டு ஒடுங்குண்டு, அ
வன் வல்லமையில் விழுகிறது —
11 பராபரன் அதை மறந்தார்
என்றும், அவர் தம்முடைய முகத்
தை மறைத்து, அதை என்றைக்
கும் பாராதிருப்பார் என்றும் தன்
இருதயத்திலே சொல்லுகிறான்.-
12 பராபரனாகிய கர்த்தாவே, எ
ழுந்திருந்து, உம்முடைய கையை
உயர்த்தும்; சிறுமையானவர்களை
மறவாதேயும்.- 13 அவர் அதைக்
கேட்டு விசாரிப்பதில்லை என்று
ஆகாதவன் தன் இருதயத்திலே
சொல்லி, பராபரனை அசட்டை
பண்ணுவானேன் — 14 அதைப்
பார்த்திருக்கிறீரே; ஏனெனில்
தேவரீர் அவர்களுக்குப் பதில்
செய்ய அவர்கள் தீவினையையும் அ
லட்டு உண்டாக்குதலையும் நோக்
கியிருக்கிறீர்; அது உம்முடைய
கையில் இருக்கிறது. உமக்கு
ஏழை தன்னை ஒப்புவிக்கிறான்;
திக்கற்றவனுக்குத் தேவரீர் சகா
யராயிருக்கிறீர். — 15 நீர் ஆகாத
வனுடைய புயத்தை முறித்து,
பொல்லாதவனுடைய ஆகாமியங்
காணாதே போகுமட்டும் அதைத்
தேடி விசாரியும்.
16 கர்த்தர் என்றென்றைக்கு
முள்ள சதாகாலங்களுக்கும் இரா
சாவாய் இருக்கிறார்; புறச்சாதியார்
அவருடைய தேசத்திலிருந்து அ
ழிந்து போவார்கள். — 17 கர்த்
தாவே, சிறுமைப்பட்டவர்களு
டைய வேண்டுதலைக் கேட்டிருக்
கிறீர், அவர்கள் இருதயத்தைத்
திடப்படுத்துவீர். — 18 மண்ணு

ன மனுஷன் அப்புறம் பலவந்தஞ்
செய்யத் தொடராதபடி, தேவ
ரீர் திக்கற்றவனுக்கும் ஒடுக்கப்
பட்டவனுக்கும் நீதிசெய்ய உமது
செவிகளைச் சாய்த்துக் கவனிப்
பீர்.

11. சங்கீதம்.

தாவீது தன் சத்துருக்களின் சக்கந்
தங்களைக் கேட்டுப் பராபரனை ஆதரவா
கப் பிடித்தது

இராகத் தலைவனுக்கு ஒப்பு
விக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

கர்த்தரை நம்பி இருக்கிறே
னே; பின்னை எப்படி நீங்கள் என்
ஆத்துமத்துடனே: பட்சியைப்
போல் உங்கள் மலையிலே பறந்து
அலையுங்கள் என்கிறீர்கள். —2 ஏ
னெனில், இதோ, ஆகாதவர்கள்
வில்லை வளைத்து, செம்மை இருத
யத்தாரின் மேல் அந்தகாரத்தில்
எய்ய, தங்கள் அம்புகளை நாணின்
மேல் தொடுக்கிறார்கள். — 3 அஸ்
திபாரங்களும் நிர்மூலமாகிறதே,
நீதிமான் என்ன செய்வான்.
4 கர்த்தர் தம்முடைய பரிசுத்
த அரண்மனையில் இருக்கிறார்;
கர்த்தருடைய ஆசனம் பரமண்ட
லங்களில் இருக்கிறது, அவருடை
ய கண்கள் பார்க்கிறது. அவரு
டைய நிமைகள் மனுப்புத்திர
ரைச் சோதித்து அறிகிறது. —
5 கர்த்தர் நீதிமானைச் சோதித்து
அறிகிறார்; ஆனால் ஆகாதவனையுங்
கொடுமையைச் சிநேகிக்கிறவனை
யும் அவருடைய ஆத்துமம் பகைக்
கிறது. — 6 ஆகாதவர்கள்மேல்
சிறைதவுகளையும் அக்கினியையும்
கந்தகத்தையும் வருஷிக்கப் பண்
ணுவார்; கடுங்கோடைக் கொந்த
ளிப்பு அவர்கள் குடிக்கும் பாத்தி
ரத்தின் பங்கு. — 7 ஏனெனில்
கர்த்தர் நீதிபரனும் நீதிகளைச்
சிநேகிக்கிறவருமாய் இருக்கிறார்;
அவருடைய முகம் செம்மையான
வனை நோக்கியிருக்கிறது.

12. சங்கீதம்.

பராபரன் துன்மார்க்கருடைய தீங்குக்
குத் தமது சபையை விலக்கிக் காக்கத்
தாவீது ஜெபித்தது.

எண்ணரம்புக் கின்னாரங்க
ளில் வாசிக்க இராகத்தலைவனு
க்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின்
சங்கீதம்.
2 இரட்சியும், கர்த்தாவே, ஏ
னெனில் சன்மார்க்கர் அற்றுப்
போய், உண்மையுள்ளவர்கள் ம
னுப்புத்திரரில் குறைந்திருக்கி
றார்கள். — 3 அவரவர் தங்களுக்கு
அடுத்தவரோடே இச்சக உதடுக
ளால் அபத்தம் பேசுகிறார்கள், இ
ரு மனதாலே பேசுகிறார்கள். —
4 கர்த்தர் எல்லா இச்சக உதடுக
ளையும் பெருமைகளைப் பேசிக்
கொண்டிருக்கிற நாவையும் அறுப்
பாராக. — 5 அவர்கள்: எங்கள்
நாவுகளால் மேல்வட்டமாய் இருப்
போம், எங்கள் உதடுகள் எங்க
ளோடு இருக்கிறது என்றும், ஆர்
எங்களுக்கு ஆண்டவன் என்றுஞ்
சொல்லுகிறார்கள்.
6 சிறுமைப் பட்டவர்களுடைய
பாழாக்குதலின் நிமித்தமும் எளி
யவர்களுடைய பெருமூச்சின் நிமி
த்தமும் இப்போது நாம் எழுந்தி

ருந்து, அவனால் சீறுண்டவனைச்
சுகபத்திரமாயிருக்கப் பண்ணு
வோம் என்று கர்த்தர் சொல்லுகி
றார். — 7 கர்த்தருடைய வார்த்
தைகள் மண்குகையிலே ஏழுதரம்
உருக்கிப் புடமிடப்பட்ட வெள்
ளிக்கு ஒப்பான சுத்தச் சொற்க
ளாயிருக்கிறது. —
8 கர்த்தாவே, தேவரீர் அவர்க
ளைக் காப்பாற்றி, அவனவனை என்
றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்
கிக் காப்பீராக. — 9 மனுப்புத்தி
ரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்
போது ஆகாதவர்கள் எங்குஞ் சுற்
றித் திரிகிறார்கள்.

13. சங்கீதம்.

தெய்வ ஒத்தாசை தாமதப்படுகையில்
தாவீது செய்த விண்ணப்பம்.

இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.
2 கர்த்தாவே, எந்தமட்டும் என்
னை மறந்துகொண்டே இருப்பீர்,
எந்தமட்டும் உம்முடைய முகத்
தை எனக்கு மறைப்பீர். - 3 எந்த
மட்டும் என் ஆத்துமத்திலே யோ
சனைகளையும் என் இருதயத்திலே
சஞ்சலத்தையும் நித்தநித்தம் வை
ப்பேன்; எந்தமட்டும் என் சத்துரு
என்மேல் உயருவான். — 4 என்
பராபரனாகிய கர்த்தாவே, நீர்
நோக்கிப் பார்த்து, என் செபத்
தைக் கேட்டருளும். — 5 அவனை
மேற்கொண்டேன் என்று என்
பகைஞன் சொல்லாமலும், நான்
தள்ளம்பாறுகிறதினால் என் சத்
துருக்கள் களிகூராமலும் இருப்ப
தற்காக, தேவரீர் என் கண்களை
நான் மரண நித்திரை அடையாத
படி வெளிச்சமாக்கும்.
6 நானோ உம்முடைய கிருபை
யின் பேரிலே நம்பியிருக்கிறேன்;
உம்முடைய இரட்சிப்பினால் என்
இருதயம் களிகூரும். கர்த்தர்
எனக்கு நன்மை செய்தார் என்று
அவரைப் பாடுவேன்.

14. சங்கீதம்.

மனுஷ சாதியின் பாவக் கேடும், விசு
வாசிகளுக்கு இரட்சிப்பின்மேல் இருக்
கிற ஆசையும்.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.
பராபரன் இல்லை என்று மயித்
தியக்காரன் தன் இருதயத்திலே
சொல்லுகிறான். தங்களைக் கெ
டுத்து, கிரியைகளில் தங்களை அரு
வருப்பாக்கினார்கள்; நன்று செய்
கிறவன் இல்லை. — 2 பராபரனைத்
தேடுகிற உணர்வுள்ளவன் உண்
டோ என்று பார்க்க, கர்த்தர் பர
மண்டலங்களிலிருந்து மனுப்புத்
திரரைக் கண்ணோக்கினார். —
3 எல்லாரும் வழிவிலகி, ஏக
மாய்க் கெட்டுப் போனார்கள்; நன்
றுசெய்கிறவன் இல்லை, அப்படிக்
கொத்த ஒருவனாகிலும் இல்லை.
4 அப்பத்தைப் பட்சிக்கிறது
போலே நம்முடைய சனத்தைப்
பட்சிக்கிற சகல அக்கிரமக்கார
ருக்கும் அறிவு தானும் இல்லை
யோ, கர்த்தரைத்தொழுதுகொள்
ளார்கள். — 5 அங்கே மெத்தவும்
அருக்களித்தார்கள், ஏனெனில்

பராபரன் நீதிமானுடைய சந்ததி
யோடே இருக்கிறார். — 6 கர்த்
தர் சிறுமையானவனுடைய நம்
பிக்கை என்று நீங்கள் அவனு
டைய ஆலோசனையை வெட்கப்
படுத்தினீர்கள்.—7 ஆ சீயோனி
லிருந்து இஸ்ரவேலுடைய இரட்
சிப்பு வந்தால் தாவிளே; கர்த்தர்
தம்முடைய சனத்தின் சிறையி
ருப்பைத் திருப்பும்போது, யாக்
கோபுக்குக் களிப்பும் இஸ்ரவே
லுக்கு மகிழ்ச்சியும் உண்டாம்.

15. சங்கீதம்.

கர்த்தருடைய சபையின் மெய் அவய
வங்களுடைய நடக்கை.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தாவே, ஆர் உம்முடைய
கூடாரத்திலே தங்குவான், ஆர்
உம்முடைய பரிசுத்த பருவதத்
திலே வாசமாய் இருப்பான்;—
2 உண்மையாய் நடந்து, நீதியை
நடப்பித்து, மனதாரச் சத்தியத்
தைப் பேசுகிறவன் தானே.—
3. தன் நாவினால் பின்புறணிபே
சாமலும் தனக்கடுத்தவனுக்குத்
தீங்கு செய்யாமலும், தன்னைச்
சேர்ந்தவன்மேல் நிந்தனையான
பேச்சை எடுக்காமலும் இருக்கி
றான்.— 4 ஆகாதவன் அவன் பார்
வைக்குத் தீழ்ப்பானவன்; கர்த்
தருக்குப்பயந்தவர்களையோ கனம்
பண்ணுகிறான்; தன் நஷ்டத்
துக்கு ஆணையிட்டும், தவறாதிருக்
கிறான்.—5 தன் பணத்தை அ
டுத்திக்குக் கொடாமலும், குற்ற
மில்லாதவனுக்கு விரோதமாகப்
பரிதானம் வாங்காமலும் இருக்கி
றான். இப்படிச் செய்கிறவன் என்
றென்றைக்கும் அசைக்கப்படுவ
தில்லை.

16. சங்கீதம்.

மேசியா மரணபரியந்தம் தாழ்வதும்,
பிதாவின் வலது பாரிசத்துக்கு உயர்
வதும்.

தாவீதின் பொற்பணதி கீதம்.

பராபரனே, என்னைக் காப்பாற்
றும்; ஏனெனில் உம்மை நம்பியி
ருக்கிறேன்.— 2 கர்த்தருடனே:
தேவரீர் ஆண்டவராய்இருக்கிறீர்
என்றும்,—3 பூமியிலுள்ள பரி
சுத்தவான்களுக்காகவும், நான்
என்னுடைய எல்லாப்பிரியத்தை
யும் வைத்திருக்கிற மகாத்துமாக்
களுக்காகவும், என் நன்மை உம்
மிடத்திலே எனக்கு இல்லாதே
போயிற்று என்றுஞ் சொன்னே
ன்.—4 வேறொருவரண்டை தீவ
ரிக்கிறவர்களின் வேதனைகள் பெ
ருகும்; அவர்கள் பட்சிக்கிற இரத்
தமான ஊற்றுதல்களை நான் செ
லுத்தாமலும், அவர்கள் நாமங்க
ளை என் உதடுகளில் ஏற்றுக்கொ
ள்ளாமலும் இருப்பேன். - 5 கர்த்
தர் என் பங்குவீதமும் என் பாத்
திரத்தின் பங்கும் ஆனவர்; தேவ
ரீர் எனக்கு வரும் வீதத்தைக் கா
ப்பாற்றுகிறீர். —6 நேர்த்தியான
இடங்களிலே வீதம் எனக்குக்
கிடைத்தது; ஆம் வடிப்பமான
சுதந்தரம் எனக்கு உண்டாயிற்று.
7 எனக்கு ஆலோசனையான கர்த்
தரைத் துதிப்பேன்; அதற்கு
இராக்காலங்களிலும் என் உள்

ளிந்திரியங்கள் என்னை ஏவும்.—
8 கர்த்தரை எப்போதும் எனக்கு
முன்பாக வைத்துக்கொள்ளுகி
றேன்; அவர் என் வலது பாரிசத்
தில் இருக்கிறபடியால் அசைக்கப்
படாதிருப்பேன்.—9 ஆகையினு
லே என் இருதயம் பூரித்து, என்
மகிமை களிகூர்ந்திருக்கிறது; என்
மாமிசமும் பத்திரமாய்த்தாபரித்
திருக்கும். —10 ஏனெனில் என்
ஆத்துமத்தைப் பாதாளத்திலேவி
டீர், உம்முடைய பரிசுத்தவானை
அழிவைக்காண ஒட்டீர். - 11 சீவ
னின் வழியை எனக்குத் தெரியப்
படுத்துவீர்; உம்முடைய சமுகத்
திலே சந்தோஷங்களின் பரிபூர
ணமும், உமது வலது பாரிசத்தி
லே செல்வ பாக்கியங்களும் என்
றைக்கும் இருக்கும்.

17. சங்கீதம்.

தாவீது தான் குற்றமில்லாதவன் என்று நிச்சயித்து, பராபரன் தன்னைத்தன் சத்துருக்களின் துன்பத்துக்கு விலக்கிக் காக்க அவரை வேண்டிக்கொண்டது.

தாவீதின் விண்ணப்பம்.

கர்த்தாவே, நீர் நீதியைக் கேட்
டருளி, என் கூப்பிடுதலைக் கவ
னித்து, கபட்டு உதடுகளால் வரா
த என் விண்ணப்பத்திற்குச்செவி
கொடும். —2 உம்முடைய சந்நிதி
யிலிருந்து என் நியாயம் வெளிப்ப
டவும், உம்முடைய கண்கள் நிதா
னங்களைப் பார்க்கவுங் கடவது.
3 நீர் என் இருதயத்தைச் சோ
தித்து, அதை இராக்காலத்தில்
விசாரித்து, என்னைப் புடமிட்டுப்
பார்த்து, ஒன்றுங் கண்டுபிடியா
திருக்கிறீர்; என் வாய் மீறுதபடி
தீர்மானம் பண்ணினேன்.-4 மனு
ஷரின் செய் காரியங்களுக்கோ
நான் என்னை உம்முடைய உதடு
களின் சொற்படி துஷ்டனுடைய
பாதைகளுக்கு இடைஞ்சலாய்க்
காக்கிறேன்.—5 என் காலடிகள்
பிசகாதபடி, என் நடைகளை உம
து வழிகளுக்குள் திடப்படுத்தும்.

6 பராபரனே, நான் உம்மை
நோக்கிக் கூப்பிடுகிறேன், ஏனெ
னில் எனக்குக் கேள்வி கொடுக்கி
றீர்; என்னண்டை உம்முடைய
செவியைச் சாய்த்து, என் வார்த்
தையைக் கேட்டருளும்.- 7 உம்
மை நம்புகிறவர்களை உம்முடைய
வலது கரத்திற்கு விரோதித்து
எழும்புகிறவர்களின் கைக்குத்தப்
புவித்து இரட்சிக்கிறவரே, உம்
முடைய கிருபைகளை அதிசயமா
னதாக்கும். —8 என்னைக் கண்
ணின் கறுப்பு விழியைப்போலே
தற்காரும்.—9 என்னைப் பாழ்க்க
டிக்கிற துன்மார்க்கருக்கும், என்
னைச் சூழ்ந்துகொள்ளுகிற என்
பிராணப் பகைஞருக்கும் மறை
வாக என்னை உம்முடைய செட்
டைகளின் நிழலிலே காப்பாற்
றும்.—10 நிணந் துன்னியிருக்கி
றார்கள், தங்கள் வாயினாலே பெரு
மையாய்ப் பேசுகிறார்கள்.-11 எங்
கள் நடைகளில் இப்போது எங்
களை வளைந்துகொண்டார்கள்; அ
வர்கள் கண்கள் எங்களைத் தரை
யிலே விழப்பண்ண நோக்கிக்கொ
ண்டிருக்கிறது.— 12 பீறுகிற
தற்கு ஆசையான சிங்கத்திற்கும்,
மறைவுகளிலே பதிவிருக்கிற சிங்

கக் குட்டிக்கும் ஒப்பாயிருக்கி
ருன்.- 13 கர்த்தாவே, நீர் எழுந்
திருந்து, அவனுக்கு முந்திக்கொ
ண்டு, அவனை மடங்கப்பண்ணும்.
கர்த்தாவே, என் ஆத்துமத்தை
உம்முடைய பட்டயத்தினுல் ஆ
காதவன் கைக்கும், உம்முடைய
கரத்தினுல் லோக மனுஷராகிய
சனங்களின் கைக்குந் தப்புவியும்.-
14 அவர்கள் பங்கு இச்சீவனில்
இருக்கிறது, அவர்கள் வயிற்றை
உமது பொக்கிஷ வைப்பினுல்
நிரப்புகிறீர், அவர்கள் பிள்ளைகள்
திருப்தியாகி, தங்கள் மீதியைத்
தங்கள் குழந்தைகளுக்குப் பின்
வைக்கிருர்கள்.
15 நானோவெனில் நீதியிலே
உம்முடைய சமுகத்தைத் தரிசிப்
பேன்; நான் விழிக்கும்போது உம
து சாயலால் திருப்தியாவேன்.

13. சங்கீதம்.

கிறிஸ்துவின் இராச்சியத்துக்குஞ் செல்
லுகிற அர்த்தமாய்த் தாவீது பாடின
வீர கம்பீர சங்கீதம்.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட கர்த்தருடைய தாசனு
கிய தாவீதின் சங்கீதம். அவன்
இந்தப் பாட்டின் வார்த்தைகளை,
கர்த்தர் தன்னைத் தன்னுடைய
எல்லாச் சத்துருக்களின் கைக
ளுக்கும் சவுலின் கைக்கும் நீங்க
லாக்கி விடுவித்த நாளிலே கர்த்த
ரை நோக்கிச் சொல்லி, உரைத்
ததாவது:
2 என் பலமாகிய கர்த்தாவே,
உம்மை உட்கருத்தாய்ச் சிநேகிப்
பேன்.—3 கர்த்தர் என் கன்மலை
யும், என் கோட்டையும், என்னை
விடுவிக்கிறவரும், என் பராபர
னும், நான் நம்பியிருக்கிற என்னு
டைய குன்றும், என் கேடயமும்,
என் இரட்சிப்பின் கொம்பும், என்
உயர்ந்த அடைக்கலமுமாய் இருக்
கிருர். — 4 ஸ்தோத்தரிக்கப்பட்
ட கர்த்தரை நோக்கிக் கூப்பிட்
டேன், அப்போது என் சத்துருக்
களுக்கு நீங்கலாகி, இரட்சிக்கப்
பட்டேன். - 5 மரணத்தின் கட்டு
கள் என்னைச் சுற்றிப்பிடித்தது;
பேலியாளின் வாய்க்கால்கள் என்
னை அருக்கப்பண்ணிற்று. 6 நரக
த்தின் கட்டுகள் என்னைச் சூழ்ந்து
கொண்டு, மரணத்தின் கண்ணி
கள் எனக்கு நேரிட்டது. — 7 எ
னக்கு உண்டான நெருக்கத்திலே
கர்த்தரைத் தொழுதுகொண்டு,
என் பராபரனை நோக்கிக் கூப்பிட்
டேன்; தமது அரண்மனையிலி
ருந்து என் சத்தத்தைக் கேட்
டார்; என் கூப்பிடுதல் அவருக்கு
முன்பாக அவர் செவிகளில் ஏறி
ற்று.
8 அப்போது பூமி அசைந்து
அதிர்ந்து, பருவதங்களின் அஸ்தி
பாரங்கள் குலுங்கி அசைந்தது,
ஏனெனில் எரிச்சலானுர்.-9 புகை
அவர் நாசியாலும், பட்சிக்கிற அக்
கினி அவர் வாயாலும் எழும்பி,
அவரால் நெருப்புத் தணலாய் எ
ரிந்தது. — 10 வானங்களைத் தா
ழ்த்தி இறங்கினுர்; அவர் பாத
ங்களின் கீழே இருள் இருந்த
து. — 11 கேருபீனின்மேல் ஏ
றிப் பறந்து, காற்றின் செட்டை
கள் மீதில்பறந்தார். — 12 இரு
ளைத் தம்முடைய ஒளிப்பிடம் ஆக்

கினர்; அவரைச் சூழ்ந்த அவரு
டைய கூடாரம் தண்ணீர்களின்
இருட்டும் ஆகாசத்துக் கார்மேகங்
களும் ஆனது. — 13 அவர் முக
தாவின் பிரகாசத்தினல் அவரு
டைய மேகங்கள் பறிந்து விலகி,
கன்மழையும் நெருப்புத் தணல்
களும் விழுந்தது. — 14 கர்த்தர்
வானங்களிலே குமுறி, உன்னத
மானவர் தமது சத்தத்தைக்
காட்டினர்; கன்மழையும் நெருப்
புத் தணல்களும் விழுந்தது. —
15 தம்முடைய அம்புகளை அனுப்
பி, அவர்களைச் சிதற அடித்து,
மின்னல்களைத் திரளாக்கி, அவர்
களைக் கலங்கப்பண்ணினர். —
16 அப்போது, கர்த்தாவே, உம்
முடைய உதம்புதலாலும் உம்mு
டைய நாசியின் சுவாசக் காற்றின
லும் தண்ணீர்களின் பள்ளங்கள்
காணப்பட்டு, பூதலத்தின் அஸ்தி
பாரங்கள் திறவுண்டது.

17 உயரத்திலிருந்து கை நீட்டி
என்னைப் பிடித்து, திரள் தண்
ணீர்களில் இருக்கிற என்னைத்
தூக்கி விட்டார். — 18 என் வலு
சத்துருவுக்கும் என்னைப் பகைக்
கிறவர்களுக்கும் என்னை விலக்கி
விடுவிததார். ஏனெனில் என்னி
லும் பலத்திருந்தார்கள். - 19 என்
ஆபத்தின் நாளில் எனக்கு எதிரி
ட்டு மறித்தார்கள்; ஆனல் கர்த்தர்
எனக்கு ஆதரவாய் இருந்து, —
20 என்னை எடுத்து விசாலத்தி
லே வைத்து, என்னைத் தப்புவித்
தார்; ஏனெனில் என்மேல் பிரிய
மாய் இருந்தார். — 21 கர்த்தர்
என் நீதிக்குத் தக்கதாக எனக்
குப் பதில் அளித்தார்; என் கைக
ளுடைய சுத்தத்திற்குத் தக்கதா
க எனக்குச் சரிக்கட்டினர். —
22 அதேனென்றல் கர்த்தரு
டைய வழிகளைக் கைக்கொண்டு
வந்தேன்; நான் என் பராபரனை
விட்டு ஆகாமியஞ் செய்ததில்லை. -
23 ஏனெனில் அவருடைய நியா
யங்களை எல்லாம் எனக்கு முன்
பாக நிறுத்தினேன்; நான் அவரு
டைய பிரமாணங்களை என்னை
விட்டு அகற்றமல், — 24 அவர்
முன்பாக மன உண்மையாயிருந்
து, என் துர்க்குணத்திற்கு என்
னை விலக்கிக் காத்தேன். - 25 ஆ
கையால் கர்த்தர் என் நீதிக்குத்
தக்கதாகவும், தம்முடைய கண்க
ளுக்கு முன் இருக்கிற என் கைக
ளின் சுத்தத்திற்குத் தக்கதாக
வும் எனக்குச் சரிக்கட்டினர்.

26 சன்மார்க்கனுக்கு உம்மைச்
சன்மார்க்கமாகவும், மன உண்மை
யான மனுஷனுக்கு உம்மை மன
உண்மையாகவும், — 27 சுத்த
னுக்கு உம்மைச் சுத்தமாகவும்,
மாறுபாடானவனுக்கு உம்மைக்
கோணலாகவுங் காண்பிக்கிறீர். —
28 ஏனெனில் தேவரீர் சிறுமைப்
பட்ட சனத்தை இரட்சித்து, மே
ட்டிமையான கண்களைத் தாழ்த்
துகிறீர். — 29 அதேனெனில்
தேவரீர் என் விளக்கை வெளிச்ச
மாக்குகிறீர்; என் பராபரனுகிய
கர்த்தர் என் இருளைப் பிரகாசிப்
பிக்கிறர். — 30 உம்மாலே ஒரு
பரிவாரத்துக்குள் பாய்ந்து போ
வேன். என் பராபரனலே ஒரு
மதிலைத் தாண்டுவேன். — 31 பரா
பரனுடைய வழி உத்தமமானது;
கர்த்தருடைய வசனம் புடமிடப்

பட்டதாய் இருக்கிறது; தம்மை
நம்புகிற அனைவருக்கும் அவர்
கேடயமாய் இருக்கிறார். - 32 ஏ
னென்றால் கர்த்தரை அல்லாமல்
தேவன் ஆர்: நம்முடைய பராபர
னைத் தவிரக் கன்மலையும் ஆர்.
33 என்னைப் பலத்தால் அரை
கட்டி, என் வழியை உத்தமமாக்
குகிறவர் பராபரன். — 34 என்
கால்களை மான்களுடைய கால்க
ளைப்போல் ஆக்கி, என்னுடைய
உயர் தலங்களில் என்னை நிறுத்
துகிறார். — 35 வெண்கல - வில்
லும் என் புயங்களால் வளைய என்
கைகளை யுத்தத்திற்குப் பழக்கு
விக்கிறார். — 36 உம்முடைய
இரட்சிப்பின் கேடயத்தையும்
எனக்குத் தந்தீர்; உம்முடைய
வலது கரம் என்னைத் தாங்குகி
றது; நீர் என்னைச் சிறுமைப்படுத்
துகிறது என்னைப் பெரியவனாக்
கும். — 37 என் கணுக்கால்கள்
தள்ளாடாதபடி நான் நடக்கிற வ
ழியை அகலமாக்கினீர். - 38 என்
சத்துருக்களைப் பின்தொடர்ந்து,
அவர்களைப் பிடிப்பேன், அவர்க
ளை நிர்மூலமாக்கும் தனிலுந் திரு
ம்பேன். — 39 அவர்கள் எழுந்தி
ருக்கமாட்டாமல், என் பாதங்க
ளின் கீழ் விழத்தக்கவையாய் அ
வர்களை வெட்டுவேன். - 40 ஏனெ
னில் யுத்தத்திற்கு நீர் என்னைப்
பலத்தால் இடைகட்டி, என்
மேல் எழும்பினவர்களை என் கீழ்
மடங்கப் பண்ணி, — 41 நான்
என் பகைஞரைச் சங்கரிக்கும்படி
யாக, என் சத்துருக்களின் பிடரி
யை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.-
42 கூப்பிடுகிறார்கள், ஆனால் இ
ரட்சிக்கிறவர் இல்லை; கர்த்தரை
நோக்கிக் கூப்பிடுகிறார்கள், ஆனா
ல் அவர்களுக்கு அவர் உத்தரவு
கொடுக்க இல்லை. — 43 அவர்க
ளைக் காற்று முகத்திலே தூளாக
நருக்கி, தெருக்களின் சேற்றைப்
போலே அவர்களை ஒழித்துப்போ
டுவேன்.—
44 நீர் சனத்தின் சண்டைகளுக்
கு என்னைத் தப்பவிட்டு, என்
னைச் சாதிகளுக்குத் தலைவனாக்கு
கிறீர்; நான் அறியாத சனம் என்
னைச் சேவிக்கிறது. — 45 அவர்
கள் என் சத்தத்தைக் கேட்ட
உடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்
கள்; அந்நியரும் எனக்கு இச்சகம்
பேசி அடங்குகிறார்கள். - 46 அந்
நியர் முனை விழுந்துபோய், தங்
கள் அடைப்புகளில் இருந்து தத்
தளிப்பாய்ப் புறப்படுகிறார்கள்.—
47 கர்த்தர் சீவனுள்ளவரும்,
என் கன்மலை ஸ்தோத்திரிக்கப்
பட்டவருமாய் இருக்கிறார். —
48 என் இரட்சிப்பின் பராபரனு
ம், பழிக்குப்பழி வாங்குஞ் செயங்
களை எனக்கு அளித்து, சனங்களை
எனக்குக் கீழ்ப்படுத்தி, என் சத்
துருக்களுக்கு என்னை விலக்கி
விடுவிக்கிற பராபரனுமானவர்
உயர்ந்தவர்.— 49 என்னை எனக்
கு விரோதமாய் எழும்புகிறவர்கள்
மேலும் உயர்த்துகிறீர். கொடுமை
யான மனுஷனுக்கு என்னைத் தப்
புவிக்கிறீர். — 50 இதன் நிமித்
தம், கர்த்தாவே, சாதிகளுக்குள்
ளே உம்மை அறிக்கை பண்ணி,
உம்முடைய நாமத்திற்குச் சங்கீ
தம் பாடுவேன்.-51 தாம் வைத்த
இராசாவுடைய இரட்சிப்புகளை

அவர் பெரியவைகளாக்கி, தாம்
அபிஷேகம் பண்ணின தாவீதுக்
கும் அவன் வித்துக்கும் என்றெ
ன்றைக்கும் கிருபை செய்கிறார்.

19. சங்கீதம்.

கர்த்தருடைய வேதத்தின் பிரசித்த
மும் பலனும்.

இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.
2 வானங்கள் பராபரனுடைய
மகிமையைச் சொல்லுகிறது, ஆ
காச விரிவு அவருடைய கரங்க
ளின் கிரியையை அறிவிக்கிறது.
3 ஒருபகல் மறுபகலுக்கு வார்த்
தைகளைப் பொழிகிறது, ஒரு இரா
மறு இராவுக்கு அறிவைத் தெ
ரிவிக்கிறது. -- 4 அவைகளின்
சத்தம் கேள்விப்படாத பாஷை
யும் இல்லை, பேச்சுகளும் இல்லை.
5 அவைகளின் நூல் பூமி எங்கும்
அவைகளின் வசனங்கள் பூச்சக்க
ரத்துக் கடைசிமட்டும் புறப்பட்
டுப் போகிறது; சூரியனுக்கு அ
வைகளில் ஒரு கூடாரத்தைப்
போட்டார். - 6 அது தன் மணவ
றையிலிருந்து புறப்படுகிற மண
வாளனைப்போல் இருந்து, பராக்கி
ரமசாலியைப்போல் தன் பாதை
யில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது.
7 அது வானங்களின் இம்முனை
யிலிருந்து புறப்பட்டு, அவைக
ளின் அம்முனைகளுக்குச் சுற்றி
ஓடுகிறது; அதன் காந்திக்கு மறை
வானது ஒன்றும் இல்லை.
8 கர்த்தருடைய வேதம் குறை
யற்றதும், ஆத்துமத்தை உயிர்ப்
பிக்கிறதுமாய் இருக்கிறது; கர்த்
தருடைய சாட்சி சத்தியமும் பே
தையை ஞானியாக்குகிறதுமாய்
இருக்கிறது. —9 கர்த்தருடைய
கட்டளைகள் செம்மையும் இருத
யத்தைச் சந்தோஷிப்பிக்கிறது
மாய் இருக்கிறது; கர்த்தருடைய
கற்பனை துய்யதும் கண்களை வெ
ளிச்சமாக்குகிறதுமாய் இருக்கிற
து. —10 கர்த்தருக்குப் பயப்படு
தல் சுத்தமும் என்றென்றைக்
கும் நிற்கிறதுமாய் இருக்கிறது;
கர்த்தருடைய நியாயங்கள் உண்
மையும், அவைகள் அனைத்தும்
நீதியுமாய் இருக்கிறது. —11 அ
வைகள் பொன்னைப் பார்க்கிலும்
அநேகம் அபரஞ்சியைப் பார்க்கி
லும் இச்சிக்கப்படத் தக்கதும்,
தேனிலும் தேன்கூண்டொழுக
லிலும் மதுரமுமாய் இருக்கிறது.
12 உம்முடைய ஊழியக்கார
னும் அவைகளால் எச்சரிக்கப்படு
கிறான்; அவைகளைக் கைக்கொள்
ளுகிறதினால் திரளான பலன்
இருக்கிறது.

13 பிழைகளை உணருகிறவன்
ஆர்; மறைவானவைகளுக்கு என்
னை நீங்கலாக்கியருளும். -14 அகந்
தைக்காரர் என்னை ஆண்டுகொள்
ளாதபடி, அடியேனை அவர்களுக்கு
விலக்கிக் காரும். அப்போது
மன உண்மையும் மகா துரோகத்
திற்கு நீங்கலுமாய் இருப்பேன்.-
15 என் கன்மலையும் என் மீட்பரு
மாகிய கர்த்தாவே, உமக்கு முன்
பாக என் வாயின் வார்த்தைகளும்
என் இருதயத்தின் தியானமும்
பிரீதியாய் இருக்கக்கடவது.

20. சங்கீதம்.

பாடுபடப் போகிற மேசியாவின் உபத்
திரவம் இரட்சிப்பாக முடிய ஆசை
யாய் வேண்டிக்கொண்டது.

இராகத்தலைவனுக்குஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.
2 நெருக்கப்படுகிற நாளிலே
கர்த்தர் உமது செபத்தைக் கேட்
கக்கடவார்; யாக்கோபுடைய பரா
பரனின் நாமம் உமக்கு உயர்ந்த
அடைக்கலமாவதாக. — 3 அவர்
பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்
கு ஒத்தாசையை அனுப்பி, சீயோ
னிலிருந்து உம்மை ஆதரிக்கக்
கடவார். — 4 நீர் செலுத்துங் கா
ணிக்கைகளை எல்லாம் அவர் நினை
த்து, உம்முடைய சர்வாங்க தகன
பலியைப் பிரியமாக ஏற்றுக்கொ
ள்ளக் கடவார். சேலா.-5 அவர் உ
மது இருதயத்தினுடைய ஆசை
யின்படி உமக்குக் கொடுத்து, உ
மது ஆலோசனையை எல்லாம்
நிறைவேற்றக் கடவார்.— 6 நாங்
கள் உமது இரட்சிப்பினாலே கம்
பீரித்து, எங்கள் பராபரனுடைய
நாமத்திலே கொடியேற்றுவோம்.
உம்முடைய வேண்டுதல்களை எ
ல்லாம் கர்த்தர் நிறைவேற்றக்
கடவார்.
7 கர்த்தர் தாம் அபிஷேகம்
பண்ணினவரை இரட்சிக்கிறார்
என்கிறதை இப்போது அறிந்தி
ருக்கிறேன்; தமது வலதுகரத்தி
னுடைய இரட்சிப்பின் வல்லமை
களைக் காண்பித்து, தமது பரி
சுத்த வானங்களிலிருந்து அவ
ரைக் கேட்பார். — 8 அவர்கள்
இரதங்கள் மேலும், இவர்கள் கு
திரைகள் மேலும் நம்பிக்கையாய்
இருக்கிறார்கள்; நாங்களோ எங்
கள் பராபரனாகிய கர்த்தருடைய
நாமத்தை நினைத்திருப்போம்.—
9 அவர்கள் முறிந்து விழுந்தார்
கள், நாங்களோ எழுந்து நிற்கி
றோம்.— 10 கர்த்தாவே, இரட்
சியும். நாங்கள் கூப்பிடுகிற நாளி
லே இராசா எங்கள் செபத்தைக்
கேட்கக் கடவார்.

21. சங்கீதம்.

கிறிஸ்து உயர்த்தப்படுவதைப் பாடி
னது.

இராகத் தலைவனுக்கு ஒப்பு
விக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.
2 கர்த்தாவே, உம்முடைய வல்
லமையிலே இராசா மகிழ்ச்சியா
யிருந்து, உம்முடைய இரட்சிப்பி
னாலே எத்தனையாய்க் களிகூருகி
றார்.— 3 அவருடைய இருதயத்
தின் ஆசையின்படி நீர் அவருக்
குக் கொடுத்து, அவருடைய உ
தடுகளின் விண்ணப்பத்தைத்
தள்ளாதிருக்கிறீர். சேலா. — 4
ஏனெனில் நன்மையின் ஆசீர்வா
தங்களால் அவருக்கு நேரிட்டு, அ
வர் சிரசில் அபரஞ்சிக் கிரீடம் தரி
ப்பிக்கிறீர்.—5 உம்மைச் சீவனை
க்கேட்டார், அவருக்கு என்றென்
றைக்குமுள்ள சதாகாலங்களான
நாள் நீடிப்பை அளித்தீர்.-6 உம
து இரட்சிப்பினால் அவருடைய
கனம் பெரிதாயிருக்கிறது; மகி
மையையும் மகத்துவத்தையும் அ
வர் மேல் வைக்கிறீர். —7 ஏனெ
னில் அவரை என்றென்றைக்கும்

ஆசீர்வாதங்களாக வைக்கிறீர்; அ
வரை உம்முடைய சமுகத்திலே
மகிழ்ச்சியால் பூரிப்பாக்குகிறீர்.—
8 அதேனென்றால் இராசா கர்
த்தரின்மேல் நம்பிக்கையாய் இ
ருக்கிறார்; ஆகையால் உன்னத
மானவருடைய தயவினாலே அ
சைக்கப்படாதிருப்பார்.

9 உம்முடைய கை உம்முடை
ய சத்துருக்களை எல்லாம் கண்டு
பிடிக்கும்; உம்முடைய வலது க
ரம் உம்மைப் பகைக்கிறவர்களைக்
கண்டுபிடிக்கும்.— 10 உமது கோ
பத்தின் காலத்திலே அவர்களை
அக்கினிச் சூளையாக்கிப் போடு
வீர்; கர்த்தர் தமது கோபத்திலே
அவர்களை விழுங்குவார், அக்கினி
அவர்களைப் பட்சிக்கும்.- 11 அவர்
கள் கனியைப் பூமியில் இல்லா
மலும், அவர்கள் வித்தை மனுப்
புத்திரரில் இல்லாமலும் போகத்
தக்கதாக அழிப்பீர்.-12 ஏனெ
னில் உமக்கு விரோதமாகப் பொ
ல்லாப்பை நினைத்தார்கள்; தீவி
னையை எத்தனம் பண்ணினார்
கள்; ஆனால் மேற்கொள்ளாதே
போனார்கள். — 13 அவர்களை இ
லக்காக வைத்து, அவர்கள் முகத்
திற்கு நேரே உம்முடைய அம்பு
களை நாணேற்றி விடுவீர். - 14 கர்
த்தாவே, உம்முடைய பலத்தி
லே உயரும்; அப்போது உமது
வல்லமையைப் பாடி, கீர்த்தனம்
பண்ணுவோம்.

22. சங்கீதம்.

மேசியாவின் பாடுகளையும், அவ
ருடைய இராச்சியத்தின் பிரபலியத்
தையும் பற்றிய தீர்க்கதரிசனம்,

அதிகாலமே வேட்டையாடப்
பட்ட பெண்மானின் பேரிலே
பாடி, இராகத் தலைவனுக்கு ஒப்பு
விக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

2 என் பராபரனே, என் பரா
பரனே, நீர் என்னைக் கைவிட்ட
தேது; என் இரட்சிப்புக்கும் என்
கதறுதலின் வார்த்தைகளுக்கும்
என் தூரமாய் இருக்கிறீர்.-3 என்
பராபரனே, நான் பகலிலே கூப்
பிட்டும் உத்தரவு கொடீர்; இரா
விலே கூப்பிட்டும் எனக்கு அமை
தல் இல்லை.

4 இஸ்ரவேலின் துதிகளுக்கு
ள்ளே வாசமாகிய தேவரீரோ பரி
சுத்தர். — 5 உம்முடையமேல்
எங்கள் பிதாக்கள் நம்பிக்கையாய்
இருந்தார்கள்; நம்பின அவர்களை
விடுவித்தீர்.— 6 உம்மை நோக்
கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்;
உம்மை நம்பி வெட்கப்பட்டுப்
போகாதிருந்தார்கள். — 7 நானோ
மனுஷன் அல்லாத பூச்சியும், ம
னுஷருடைய நிந்தனையும், சனத்
தால் அசங்கிக்கப்பட்டவனுமாய்
இருக்கிறேன்.—8 என்னைப் பார்க்
கிறவர்கள் எல்லாரும் என்னைப்
பரிகாசம்பண்ணி, உதட்டைப் பி
துக்கி, தலையைத் துலுக்கி:- 9 க
ர்த்தர்மேல் நம்பிக்கையாய் இருந்
தானே, அவர் அவனை விடுவிக்க
ட்டும்; அவன்மேல் பிரியமாய் இ
ருக்கிறாரே, இப்போது அவனை
மீட்டுவிடட்டும் என்கிறார்கள்.—
10 தேவரீரோ என்னைக் கர்ப்பத்
திலிருந்து இழுத்தவர்; என் தா
யின் முலைகளிலே என்னை உம்மு
டைய பேரில் நம்பிக்கையாய் இ
ருக்கப் பண்ணினீர். — 11 கர்ப்

பத்திலிருந்து உம்முடைய சார்
பில் விழுந்தேன்; நான் என் தா
யின் வயிற்றிலே பிறந்ததுமுதல்
தேவரீர் என் பராபரன்.
12 என்னை விட்டுத் தூரமாகா
தேயும்; ஏனெனில் நெருக்கங்கிட்
டியிருக்கிறது, சகாயரும் இல்லை.
13 அநேகங்காளைகள் என்னைச்
சூழ்ந்து, பாசான் தேசத்து வலு
வான எருதுகள் என்னை வளைத்
துக்கொண்டது. — 14 பீறிக்
கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல்
என்மேல் தங்கள் வாயைத் திறக்
கிறார்கள்.-15 தண்ணீரைப்போல்
ஊற்றுண்டேன்; என் எலும்புகள்
எல்லாம் கட்டு விட்டது; என் இ
ருதயம் மெழுகுபோலாகி, என்
குடல்களின் நடுவே உருகிற்று.-
16 என் பலம் ஓட்டைப்போல் கா
ய்ந்துபோய், என் நாவு என் மேல்
வாயோடே ஒட்டிக்கொண்டது;
என்னை மரணத் தூளிலே போடு
கிறீர். — 17 ஏனெனில் நாய்கள்
என்னைச் சூழ்ந்து, பொல்லாதவர்
களின் கூட்டம் என்னைச் சுற்றிக்
கொண்டது; என் கைகளையும்
என் கால்களையும் உருவக் குத்தி
னார்கள்.-18 என் எலும்புகளை எல்
லாம் நான் எண்ணலாம்; அவர்கள்
என்னை நோக்கியிருந்து என்னி
லே தங்கள் ஆசையைப் பார்க்கி
றார்கள். — 19 என் வஸ்திரங்க
ளைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு,
என் உடையின் பேரில் சீட்டுப்
போடுகிறார்கள்.
20 ஆனால், கர்த்தாவே, தேவ
ரீர் தூரமாகாதேயும்; என் பலமே,
எனக்குச் சகாயம் பண்ணத் தீவி
ரித்துக் கொள்ளும்.-21 என் ஆத்
துமத்தைப் பட்டயத்திற்கும்,
என் தனிமையை நாய்களின் துஷ்
டத்திற்கும் தப்புவியும்; - 22 என்
னைச் சிங்கத்தின் வாய்க்கும் காண்
டாமிருகங்களின் கொம்புகளுக்
கும் விலக்கி இரட்சித்து, என்
விண்ணப்பத்தைக் கேட்டருளும்.
23 உம்முடைய நாமத்தை என்
சகோதரருக்கு அறிவித்து, நடுச்
சபையில் உம்மைத் துதிப்பேன்.-
24 கர்த்தருக்குப் பயப்படுகிறவர்க
ளே, அவரைத் துதியுங்கள்; யாக்
கோபின் வித்தாகிய நீங்கள் எல்
லாரும் அவரைக் கனம் பண்ணுங்
கள்; இஸ்ரவேலின் வித்தாகிய
நீங்கள் எல்லாரும் அவருக்கு அஞ்
சிக்கையாய் இருங்கள்.-25 ஏனெ
னில் சிறுமையானவனுடைய சி
றுமையை அவர் அசங்கதியாம
லும், அருவருக்காமலும், தம்மு
டைய முகத்தை அவனை விட்டு
மறைத்திராமலும், அவன் தம்மை
நோக்கிக் கூப்பிடுகையில் அவ
னைக் கேட்டார். — 26 உம்மைக்
குறித்துத் திரளான சபையில்
நான் துதி சொல்லுவேன்; அவரு
க்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்
பாக என் பொருத்தனைகளைச் செ
லுத்துவேன்.

27 சிறுமையானவர்கள் புசித்
துத் திருப்தி அடைவார்கள், கர்த்
தரைத் தேடுகிறவர்கள் அவரைத்
துதிப்பார்கள்; உங்கள் இருதயம்
என்றென்றைக்கும் வாழும். —
28 பூமியின் எல்லைகள் எல்லாம்
இதை நினைத்துக் கர்த்தரண்டை
திரும்பி, சாதிகளுடைய சந்ததி
கள் எல்லாம் உமக்கு முன்பாகப்
பணியக் கடவது. — 29 ஏனெ

னில் இராச்சியம் கர்த்தருடை
யது, அவர் சாதிகளை ஆளுகிறவர்.-
30 பூமியிலே தாலித்தவர்கள் அ
னைவரும் புசித்துப் பணிந்துகொ
ள்ளுவார்களாக; தூளில் இறங்கி,
தங்கள் சீவனைப் பிழைப்பூட்ட
மாட்டாதவர்கள் அனைவரும் அவ
ருக்கு முன்பாகக் குனிவார்களா
க.—31 அவருக்கு ஆராதனை
செய்யும் வித்து தலைமுறை தலை
முறையாக ஆண்டவருடையது
என்று எண்ணப்படும்.-32 இவை
களைச் செய்தார் என்று பிறக்கப்
போகிற சனத்திற்கு அவருடைய
நீதியை வந்து அறிவிப்பார்கள்.

23. சங்கீதம்.

பிரதான மேய்ப்பராகிய கிறிஸ்துவைப்
பற்றியது.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கி
றார், நான் தாழ்ச்சி அடையேன்.-
2 அவர் என்னைப் புல்லுள்ள ஸ்த
லங்களில் மேய்த்து, என்னை அ
மர்ந்த தண்ணீர்கள் அண்டை
கொண்டுபோய் விடுகிறார். - 3 அ
வர் என் ஆத்துமத்தைக் குளிரப்
பண்ணி, என்னைத் தம்முடைய
நாமத்தின் நிமித்தமாக நீதியின்
பாதைகளில் நடத்துகிறார். —
4 நான் மரண நிழலின் பள்ளத்
தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்
புக்குப் பயப்படேன்; ஏனெனில்
தேவரீர் என்னோடே கூட இருக்
கிறீர், உம்முடைய கோலும் உம்
முடைய தடியும் என்னைத் தேற்
றுகிறது. — 5 என் சத்துருக்க
ளுக்கு எதிரே நீர் எனக்கு முன்
பாக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்
தி, என் தலையை எண்ணெயால்
அபிஷேகம் பண்ணுகிறீர்; என்
பாத்திரம் நிரம்பியிருக்கிறது.—
6 என் சீவனுள்ள நாள் எல்லாம்
நன்மையும் கிருபையும் என்னைத்
தொடரும்; நான் கர்த்தருடைய
வீட்டிலே நீடித்த நாட்களாய்
நிலைத்திருப்பேன்.

24. சங்கீதம்.

மகிமையின் இராசாவாகிய மேசியா
வை ஏற்றுக்கொள்வதற்கான புத்தி.

தாவீதின் சங்கீதம்.

பூமியும் அதின் நிறைவும் பூச்
சக்கரமும் அதிலுள்ள குடிகளும்
கர்த்தருடையது. - 2 ஏனெனில்
அவரே அதைக் கடல்களிலும்
உயரமாகத் திடப்படுத்தினார்.
3 ஆர் கர்த்தருடைய பர்வதத்
தில் ஏறி, ஆர் அவருடைய பரி
சுத்த ஸ்தலத்திலே நிலைத்திருப்
பான்.
4 கைகளில் குற்றமில்லாதவ
னும், இருதயத்தில் சுத்தனுமாயி
ருந்து, தன் ஆத்துமத்தை மா
யைக்கு ஒப்புககொடாமலும் கப
டாய் ஆணையிடாமலும் இருக்கிற
னே,-5 அவன் கர்த்தரால் ஆசீர்
வாதத்தையும், தன் இரட்சிப்பின்
பராபரனால் நீதியையும் பெறு
வான்.—6 இதுவே அவருக்கா
கக் கேட்டு விசாரித்து, அவரு
டைய சமுகத்தைத் தேடுகிற
யாக்கோபு என்ற சந்ததி. சேலா.
7 வாசல்களே, மகிமையின் இ
ராசா உட்பிரவேசிப்பதற்கு உங்

கள் தலைகளை உயர்த்துங்கள்; அநா
தி வாசல்களே, உயருங்கள்.
8 ஆர் இந்த மகிமையின் இரா
சா; அவர் வல்லமையும் பராக்கிர
முமான கர்த்தர், அவர் யுத்தத்
தில் பராக்கிரமமான கர்த்தர் தா
னே.—9 வாசல்களே, மகிமை
யின் இராசா உட்பிரவேசிப்பதற்
கு உங்கள் தலைகளை உயர்த்துங்
கள்; அநாதி வாசல்களே, உயருங்
கள்.
10 ஆர் இந்த மகிமையின் இரா
சா; அவர் சேனைகளுடைய கர்த்
தரானவர்; அவரே மகிமையின்
இராசா. சேலா.

25. சங்கீதம்.

*தாவீது பராபரனிடத்திலே இரட்சிப்
பையும் சகாயத்தையும் தேடினது.*

தாவீதின் சங்கீதம்.

கர்த்தாவே, உம்மண்டை என்
ஆத்துமத்தை உயர்த்துகிறேன்.-
2 என் பராபரனே, உம்மை நம்பி
யிருக்கிறேன்; என் சத்துருக்கள்
என் பேரிலே களிகூராதபடி
நான் வெட்கப்பட்டுப் போகாதி
ருப்பேனாக.—3 உமக்குக் காத்தி
ருக்கிற ஒருவராகிலும் வெட்கப்
பட்டுப்போகாமல், முகாந்திரமில்
லாமல் துரோகம் பண்ணுகிறவர்
களே வெட்கப்பட்டுப் போவார்
கள்.—4 கர்த்தாவே, உம்முடை
ய வழிகளை எனக்குத் தெரிவியும்,
உம்முடைய பாதைகளை எனக்
குப் போதியும்.—5 என்னை உம்மு
டைய சத்தியத்திலே வழி நடத்
தி, என்னைப் போதியும்; ஏனெ
னில் தேவரீர் என் இரட்சிப்பின்
பராபரன்; தேவரீருக்கு நித்தங்
காத்திருக்கிறேன். — 6 கர்த்தா
வே, உம்முடைய இரக்கங்களையும்
உம்முடைய கிருபைகளையும் நி
னைத்திரும்; ஏனெனில் அவைகள்
அநாதிகாலந் துவக்கி இருக்கிற
து.—7 என் இளவயதின் பாவங்
களையும் என் மீறுதல்களையும் நி
னையாதேயும்; கர்த்தாவே, தேவ
ரீர் உம்முடைய தயவின்நிமித்தம்
என்னை உமது கிருபையின்படி
யே நினைத்தருளும்.
8 கர்த்தர் நல்லவரும் உத்தமரு
மாய் இருக்கிறார்; ஆகையால் பாவி
களை வழியிலே போதிக்கிறார்.—
9 சிறுமையானவர்களை நியாயத்
திலே நடத்தி, சிறுமையானவர்க
ளுக்குத் தமது வழியைப் போதிக்
கிறார். — 10 கர்த்தருடைய உ
டன்படிக்கையையும் அவருடைய
சாட்சிகளையுங் கைக்கொள்ளுகிற
வர்களுச்கு அவருடைய பாதை
கள்எல்லாம் கிருபையும் உண்மை
யுமானவைகள். - 11 கர்த்தாவே,
உம்முடைய நாமத்தின் நிமித்தம்
என் அக்கிரமத்தை மன்னியும்,
ஏனெனில் இது பெரியது. —
12 கர்த்தருக்குப் பயப்படுகிற ம
னுஷன் ஆர்; அவன் தெரிந்து
கொள்ளவேண்டிய வழியை அவ
னுக்குப் போதிப்பார்.- 13 அவன்
ஆத்துமம் நன்மையிலே தங்கி,
அவன் வித்து பூமியைச் சுதந்த
ரித்துக் கொள்ளும்.— 14 கர்த்
தருடைய இரகசியம் அவருக்குப்
பயந்தவர்களுக்குள் இருக்கிறது;
அவர்களுக்குத் தம்முடைய உ
டன்படிக்கையைத் தெரியப்படுத்
துவார்.

15 என் கண்கள் எப்போதும்
கர்த்தரின் மேல் வைக்கப்பட்டி
ருக்கிறது; ஏனெனில் அவரே
என் கால்களை வலைக்கு நீங்கலாக்கி
விடுவார். — 16 என் மேலே
நோக்கமாகி, எனக்கு இரங்கும்;
ஏனெனில் நான் தனித்தவனும்
சிறுமைப்பட்டவனுமாய் இருக்கி
றேன்.-17 என் இருதயத்தின் வி
யாகுலங்கள் பெருகியிருக்கிறது;
என்னை என் இடுக்கண்களுக்கு
நீங்கலாக்கி விடும்.-18 என் சிறு
மையையும் என் வருத்தத்தையும்
பார்த்து, என் பாவங்களை எல்
லாம் நீக்கிப்போடும். — 19 என்
சத்துருக்களைப் பாரும்; ஏனெ
னில் அவர்கள் பெருகியிருந்து,
அக்கிரமப் பகையாய் என்னைப்
பகைக்கிறார்கள். — 20 என் ஆத்
துமத்தைக் காப்பாற்றி, நான்
வெட்கப்பட்டுப் போகாதபடி என்
னை விடுவியும்; ஏனெனில் உம்
மை நம்பியிருக்கிறேன். - 21 உத்
தமமும் நிதானமும் என்னைக் காக்
கக் கடவது; ஏனெனில் உமக்குக்
காத்திருக்கிறேன். — 22 பராப
ரனே, இஸ்ரவேலை அதன் எல்
லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி
மீட்டு விடும்.

26. சங்கீதம்.

தன்னைத் தன் சத்துருக்களுக்கு விலக்கி நியாயம் விசாரிக்க, தாவீது பராபரனை வேண்டிக்கொண்டது.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தாவே, என்னை நியாயம்
விசாரியும்; ஏனெனில் நான் என்
உண்மையிலே நடக்கிறேன், நான்
கர்த்தரை நம்பியிருக்கிறேன்; ஆ
கையால் நான் தள்ளாடுவதில்லை.
2 கர்த்தாவே, என்னை ஆராய்ந்து
என்னைச் சோதியும்; என் உள்ளிந்
திரியங்களையும் என் இருதயத்தை
யும் புடமிட்டுப் பாரும்.-3 ஏனெ
னில் உம்முடைய கிருபை என்
கண்களுக்கு முன்பாக இருக்கிற
து; உம்முடைய சத்தியத்திலே ந
டந்து கொள்ளுகிறேன்.— 4 வீண்
மனுஷரோடு உட்காரேன், பதிவி
ருக்கிறவர்களிடத்தில் சேரேன்.-
பொல்லாதவர்களின் கூட்டத்
தைப் பகைக்கிறேன், ஆகாதவர்க
ளோடே உட்காரேன்.-6நான்
என் கைகளைக் குற்றமில்லாமை
யிலே கழுவி,-7 இப்படியே, கர்த்
தாவே, நான் துதியின் சத்தத்
தைத் தொனிக்கப்பண்ணி, உம்
முடைய அதிசயங்களை எல்லாம்
விவரிப்பதற்காக உம்முடைய பீ
டத்தைச் சுற்றி வருகிறேன்.—
8 கர்த்தாவே, உமது வீட்டின்
வாசஸ்தலத்தையும், உமது மகி
மையின் கூடார ஸ்தலத்தையும்
சிநேகிக்கிறேன். — 9 என் ஆத்
துமத்தைப் பாவிகளோடும், என்
சீவனை இரத்தப்பிரியரோடுங்
கூட வாரிக்கொள்ளாதேயும். —
10 அவர்கள் கைகளிலே தீவினை
இருக்கிறது; அவர்கள் வலது கை
பரிதானங்களால் நிறைந்திருக்கி
றது. — 11 நானோ என் உண்
மையிலே நடக்கிறேன்; என்னை
மீட்டுக்கொண்டு, என்மேல் இர
ங்கும். — 12 என் கால் செம்
மையான வழியிலே நிலைநிற்கும்;
சபைகளிலே கர்த்தரைத் துதிப்
பேன்.

27. சங்கீதம்.

பராபரன் தன் அடைக்கலமும், தெய்
வாராதனை தனக்கு ஆறுதலும் என்று
தாவீது அறிக்கை பண்ணினது.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தர் என் வெளிச்சமும் என்
இரட்சிப்புமானவர், ஆருக்குப் பய
ப்படுவேன்; கர்த்தர் என் சீவனின்
பெலனானவர், ஆருக்கு அருக்க
ளிப்பேன். — 2 எனக்கு இருக்கிற
என் சத்துருக்களும் என் பகைஞ
ருமாகிய பொல்லாதவர்கள் என்
மாமிசத்தைப் பட்சிக்க என்னண்
டை சேருகையில் அவர்களே இ
டறி விழுவார்கள்.— 3 எனக்கு
விரோதமாக ஒரு பாளையம்இறங்
கினாலும், என் இருதயம் பயப்ப
டாது; என் மேல் யுத்தம் எழும்
பினாலும், இதிலே நான் நம்பிக்
கையாய் இருக்கிறேன். — 4 ஒன்
றை நான் கர்த்தரிடத்திலே கேட்
டேன், அதையே தேடுவேன்;
நான் கர்த்தருடைய இன்பத்
தைப் பார்த்து, அவருடைய தெய்
வாலயத்தில் ஆராயும்படி, நான்
என் சீவனுள்ள நாள் எல்லாம்
கர்த்தருடைய வீட்டிலே தங்குவ
தைத்தானே — 5 ஏனெனில்
தீங்கு நாளில் என்னைத் தம்மு
டைய கூடாரத்தில் ஒளித்து,
என்னைத் தமது கூடார மறைவி
லே மறைத்து, என்னைக் கன்மலை
யின்மேல் உயர்த்துகிறார். —
6 இப்போதும் என்னைச் சுற்றி
லும் இருக்கிற என் சத்துருக்க
ளின்மேல் என் தலை உயர்த்தப்
படும்; அதன் நிமித்தம் அவரு
டைய கூடாரத்திலே நான் கம்பீ
ரப் பலிகளை இட்டு, கர்த்தரைப்
பாடி, அவரைக் கீர்த்தனம் பண்
ணுவேன்.
7 கர்த்தாவே, நான் கூப்பிடு
கிற என் சத்தத்தை நீர் கேட்டு
எனக்கு இரங்கி, எனக்கு உத்தர
வருளிச் செய்யும்.—8 நமது மு
கத்தைத் தேடுங்கள் என்றீரே
என்று என் இருதயம் உமக்குச்
சொல்லுகிறது; உம்முடைய மு
கத்தைத் தேடுகிறேன், கர்த்தா
வே.—9 எனக்கு உமது முகத்
தை மறைக்காதேயும், உமது அ
டியானைக் கோபமாய் விலக்காதே
யும்; நீர் என் சகாயரானவர். என்
இரட்சிப்பின் பராபரனே, என்
னை நெகிழாமலும் என்னைக் கை
விடாமலும் இரும்.—10 ஏனெ
னில் என் தகப்பனும் என் தாயும்
என்னைக் கைவிட்டார்கள்; ஆனால்
கர்த்தர் என்னைச் சேர்க்கிறார்.—
11 கர்த்தாவே, என் எதிராளிக
ளின் நிமித்தம் நீர் உமது வழியை
எனக்குப் போதித்து, செம்மை
யான பாதையில் என்னை நடத்
தும்.—12 என் சத்துருக்களின்
மனதுக்கு என்னை ஒப்புக்கொடா
தேயும்; ஏனெனில் பொய்ச் சாட்
சிகளும் ஆக்கிரமித்துச் சீறுகிற
வர்களும் எனக்கு விரோதமாக
எழும்பினார்கள்.-13 நானோ சீவ
னுள்ளோரின் தேசத்திலே கர்த்
தருடைய நன்மைகளைப் பார்ப்
பேன் என்று விசுவாசிக்கிறேன்.
14 கர்த்தருக்குக் காத்திரு;
பலத்துக்கொண்டு திடமனதாய்
இருந்து, கர்த்தருக்குக் காத்திரு.

28. சங்கீதம்.

பொல்லாதவர்களுக்கு விரோதமாக தாவீது செபித்து, கிருபையின் நிச்சயம் பெற்றது.

தாவீதின் சங்கீதம்.

என் கன்மலையாகிய கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு உத்தரவு கொடாததினால் நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடி எனக்கு மௌனமாய் இராதேயும்.- 2 நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு, என் கைகளை உம்முடைய பரிசுத்த சன்னிதிக்கு நேராக எடுக்கையில், என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேளும்.— 3 தங்களுக்கு அடுத்தவர்களோடே சமாதானமென்று சொல்லியும், பொல்லாப்பைத் தங்கள் இருதயங்களில் வைத்திருக்கிற ஆகாதவர்களோடும் அக்கிரமக்காரரோடும் என்னை இழுக்காதேயும்.- 4 அவர்கள் கிரியைகளுக்கும் அவர்கள் நடத்தைகளின் பொல்லாங்குக்குந் தக்கதாக அவர்களுக்குக் கொடும், அவர்கள் கைகளின் செய்கைக்குத் தக்கதாக அவர்களுக்கு அளியும்; அவர்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டும்.—5 ஏனெனில் கர்த்தருடைய கிரியைகளையும் அவர் கரங்களின் செய்கையையுங் கவனியார்கள்; அவர்களை நிர்மூலமாக்குவார், அவர்களைக் குடியேற்றார்.

6 கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்; ஏனென்றால் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார். — 7 கர்த்தர் என் பெலனும் என் கேடயமுமாய் இருக்கிறார்; அவரை என் இருதயம் நம்பியிருந்தது, அப்போது சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது, என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.— 8 கர்த்தர் அவர்களுடைய பெலன், அவரே தாம் அபிஷேகம்பண்ணுவித்தவனை இரட்சிக்கிற பெலன். — 9 தேவரீர் உமது சனத்தை இரட்சித்து, உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதித்து, அவர்களை மேய்த்து, அவர்களை என்றென்றைக்கும் உயர்த்தும்.

29. சங்கீதம்.

கர்த்தருடைய இராச்சியத்தில் விளங்கும் தேவ மகிமை.

தாவீதின் சங்கீதம்.

பலவான்களின் புத்திரரே, கர்த்தருக்கு மகிமையையும் பெலனையும் செலுத்துங்கள், கர்த்தருக்கு அதைச் செலுத்துங்கள்.— 2 கர்த்தருக்கு அவர் நாமத்தின் மகிமையைச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைப் பணிந்து கொள்ளுங்கள்.

3 கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின் மேலே கேட்கப்படும்; மகிமையின் பராபரனாகிய கர்த்தர் திரளான தண்ணீர்களின்மேலே குமுறுகிறார். — 4 கர்த்தருடைய சத்தம் வல்லமையும், கர்த்தருடைய சத்தம் மகத்துவமுமாய் முழங்குகிறது. — 5 கர்த்தருடைய சத்தம் கேதுருக்களை உடைக்கும்; கர்த்தர் லீபனோ

னின் கேதுருக்களை உடைத்து,-
6 அவைகளைக் கன்றுக் குட்டிக
ளைப் போலவும் லீபனோனையும்
சிரியோனையும் காண்டாமிருகக்
குட்டிகளைப்போலவும் சிமாளிக்
கப் பண்ணுகிறார். — 7 கர்த்தரு
டைய சத்தம் அக்கினிச் சுவாலை
களைப் போலே வெட்டுகிறது.—
8 கர்த்தருடைய சத்தம் வனாந்
தரத்தை அதிரப் பண்ணுகிறது;
கர்த்தர் காதேஸ் வனாந்தரத்தை
அதிரப்பண்ணுகிறார். — 9 கர்த்
தருடைய சத்தம் பெண்மான்
களை ஈனப்பண்ணி, காடுகளைத்
திறப்பாக்கும்; ஆனால் அவருடை
ய தெய்வாலயத்தில் ஒவ்வொருவ
னும் அவருக்கு மகிமை செலுத்
துகிறான்.— 10 கர்த்தர் சலப்பிர
ளயம் வரப்பண்ண உட்கார்ந்தார்;
கர்த்தர் என்றென்றைக்கும் இ
ராசாவாய் உட்கார்ந்திருக்கிறார்.
11 கர்த்தர் தமது சனத்துக்
குப் பெலன் கொடுப்பார், கர்த்தர்
தம்முடைய சனத்தைச் சமாதா
னந் தந்து ஆசீர்வதிப்பார்.

30. சங்கீதம்.

*தன்னை மகா இக்கட்டுக்கு விலக்கி விடு
வித்த பராபரனைத் தாவீது
ஸ்தோத்திரித்தது.*

வீட்டுப் பிரதிஷ்டையின் பா
ட்டாகிய தாவீதின் சங்கீதம்.
2 கர்த்தாவே, நீர் என் சத்து
ருக்களை என்பேரில் சந்தோஷப்
பட ஒட்டாமல், என்னைக் கை
தூக்கி எடுத்தபடியினாலே உம்
மை உயர்த்துவேன்.—3 என் பரா
பரனாகிய கர்த்தாவே, உம்மை
நோக்கிக் கூப்பிட்டேன், அப்
போது என்னைக் குணமாக்கி
னீர்.—4 கர்த்தாவே, நீர் என்
ஆத்துமத்தைப் பாதாளத்திலிரு
ந்து ஏறப்பண்ணி, நான் குழியில்
இறங்காதபடி என்னை உயிரோ
டே காத்தீர். — 5 கர்த்தருடைய
பரிசுத்தவான்களே, அவரைக்
கீர்த்தனம் பண்ணி, அவருடைய
பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக்
கொண்டாடுங்கள்.—6 ஏனெனில்
அவருடைய கோபம் ஒரு நிமிஷ
மும் அவருடைய தயவு நீடிய
வாழ்வுமாம்; சாயங்காலத்தில் அ
ழுகை தங்கும், காலமே கம்பீரம்
உண்டு.

7 என்றைக்கும் அசைக்கப்ப
டேன் என்று நான் என் சுகத்
திலே சொன்னேன். — 8 ஏனெ
னில், கர்த்தாவே, உம்முடைய
தயவினால் என் பருவத்தைத் தி
டமாய் நிற்கப் பண்ணியிருந்தீர்;
உமது முகத்தை நீர் மறைத்துக்
கொண்டபோதோ நான் கலங்கி
னவனானேன்.— 9 நான் குழியில்
இறங்குகையில் என் இரத்தத்
தால் என்ன ஆதாயம் உண்டு.
தூள் உம்மைத் துதித்து, உமது
சத்தியத்தை அறிவிக்குமோ என்
றும், 10 கர்த்தாவே, நீர் கேட்டு
என்மேல் இரங்கும், கர்த்தாவே,
எனக்கு அனுகூலராயிரும் என்
றும் சொல்லி,— 11 கர்த்தாவே,
உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்,
கர்த்தரை நோக்கிக் கெஞ்சினே
ன்.—12 என் புலம்பலை எனக்கு
ஆனந்தக் களிப்பாக மாறப்பண்
ணினீர்; என் மகிமை அமர்ந்திரா
மல் உம்மைக் கீர்த்தனம் பண்

ணும் பொருட்டாக, என் இரட்
டை எடுத்துப்போட்டு, என்னை
மகிழ்ச்சியால் இடைகட்டினீர்.—
13 என் பராபரனாகிய கர்த்
தாவே, உம்மை என்றென்றைக்
குந் துதிப்பேன்.

31. சங்கீதம்.

தாவீது மகா அவதியிலே பண்ணின விண்ணப்பம்.

இராகத் தலைவனுக்கு ஒப்பு
விக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.
2 கர்த்தாவே, உம்மை நம்பியி
ருக்கிறேன், நான் என்றைக்கும்
வெட்கப்பட்டுப் போகாதிருக்கட்
டும்; உமது நீதியின் நிமித்தம்
என்னை விடுவியும். – 3 என்னண்
டை உமது செவியைச் சாய்த்து,
சீக்கிரமாய் என்னைத் தப்புவியும்;
என்னை இரட்சிக்கும்படி எனக்
குப் பலத்த கன்மலையும் அரண்ம
னையுமாய் இரும். – 4 ஏனெனில்
தேவரீர் என் கன்மலையும் என்
கோட்டையுந் தானே, உமது நா
மத்தின் நிமித்தம் என்னை வழி
நடத்தும்.— 5 அவர்கள் எனக்கு
மறைவாய் வைத்த வலைக்கு என்
னை நீங்கலாக்கி விடும்; ஏனெ
னில் தேவரீர் என்னுடைய பெ
லன்.-6 உமது கையில் என் ஆவி
யை ஒப்புவிக்கிறேன்; சத்திய பர
னாகிய கர்த்தாவே, என்னை மீட்
டு விட்டீர்.– 7 வீண் மாயைகளைக்
கைக்கொள்ளுகிறவர்களை நான்
பகைத்து, கர்த்தரை நம்பியிருக்
கிறேன்.– 8 உமது கிருபையிலே
களிகூர்ந்து மகிழுவேன்; ஏனென்
றால் நீர் என் சிறுமையைப் பார்த்
து, நெருக்கங்களில் என் ஆத்து
மத்தை அறிந்துகொண்டு,-9 என்
னைச் சத்துருவின் கையில் ஒப்புக்
கொடுத்து விடாமல் என் பாதங்
களை விசாலத்திலே நிறுத்தினீர்.

10 எனக்கு இரங்கும், கர்த்தா
வே, ஏனெனில் நெருக்கப்படுகி
றேன்; சலிப்பினால் என் கண்ணு
ம் என் ஆத்துமமும் என் வயிறுங்
கூடக் கருகிப்போயிற்று.- 11 ஏ
னெனில் என் பிராணன் சஞ்ச
லத்தாலும் என் வருஷங்கள் தவி
ப்பினாலும் கழிந்து போயிற்று;
என் அக்கிரமத்தினாலே என் பெ
லன் விழுந்து, என் எலும்புகள்
உலர்ந்துபோயிற்று.—12 என்னு
டைய எல்லாச் சத்துருக்களின்
நிமித்தம் நான் என் அயலகத்தா
ருக்கு மகா நிந்தையும், எனக்கு
அறிமுகமானவர்களுக்குத் திகிலு
மானேன், வீதியிலே என்னைக்
காண்கிறவர்கள் என்னை விட்டு
ஓடிப்போகிறார்கள். – 13 செத்த
வனைப்போல் எல்லாராலும் மன
தார மறக்கப்பட்டேன், கெட்ட
பாத்திரத்தைப்போல் ஆனேன்.-
14 ஏனெனில் அநேகருடைய
அபதூறைக் கேட்டேன்; அவர்
கள் ஏகமாய் எனக்கு விரோதமா
க ஆலோசனை பண்ணுகிறதினா
லே திகில் என்னைச் சூழ்ந்துகொ
ண்டது; என் பிராணனை வாங்க நி
னைக்கிறார்கள்.–15 நானோவெனி
ல், கர்த்தாவே, உம்மை நம்பியிரு
க்கிறேன்; தேவரீர் என் பராபர
ன் என்கிறேன்.—16 என் காலங்
கள் உம்முடைய கரத்தில் இருக்
கிறது; என் சத்துருக்களின் கைக்
கும் என்னைப் பின்தொடருகிற

வர்களின் கைக்கும் என்னைத் தப்
புவியும். -- 17 நீர் உம்முடைய
முகத்தை உம்முடைய ஊழியக்
காரன் மேல் பிரகாசிக்கப் பண்
ணி, உமது கிருபையினலே என்
னை இரட்சியும்.--18 கர்த்தாவே,
நான் வெட்கப்பட்டுப் போகாதி
ருக்கட்டும், ஏனெனில் உம்மை
நோக்கிக் கூப்பிடுகிறேன்; ஆகாத
வர்கள் வெட்கப்பட்டுப் பாதாளத்
தில் மௌனமாய்ப் போகட்டும்.-

19 நீதிமான் மேல் பெருமை
யோடும் அசங்கதத்தோடுங் கடி
னமாய்ப் பேசுகிற பொய் உதடு
கள் கட்டுப்படுவதாக.

20 உமக்குப் பயந்தவர்களுக்கு
நீர் வைத்து வைத்ததும், உம்மை
நம்புகிறவர்களுக்கு நீர் மனுப்புத்
திரருக்கு எதிரே உண்டுபண்ணி
னதுமான உம்முடைய நன்மை
எத்தனை திரள். -- 21 அவர்களை
உமது முகத்தின் மறைவிலே ம
னுஷரின் இடும்புகளுக்கு இடை
ஞ்சலாய்க் காப்பாற்றி, அவர்களை
உமது கூடாரத்திலே நாவுகளின்
சண்டைக்கு ஒளிக்கிறீர். 22கர்த்
தர் ஸ்தோத்திரிக்கப் பட்டவர்,
ஏனெனில் என்னை அரணிப்பான
பட்டணத்தில் வைக்கிறதற்குச்
சரியாக, என்மேலே தம்முடைய
கிருபையை அதிசயமானதாக்கி
ஞர். -- 23 உம்முடைய கண்க
ளுக்கு முன்பாக இராதபடி வெட்
டுண்டேன் என்று நான் என் ம
னக் கலக்கத்திலே சொன்னேன்
ஆனல் நான் உம்மை நோக்கிக்
கூப்பிடுகையில் என் விண்ணப்
பங்களின் சத்தத்தைக் கேட்டீர்.

24 கர்த்தருடைய பரிசுத்தவா
ன்களாகிய நீங்கள் எல்லாரும் அ
வரைச் சிநேகியுங்கள்; உண்மை
யானவர்களைக் கர்த்தர் தற்காத்
து, பெருமை செய்கிறவனுக்குப்
பரிபூரணமாய்ப் பதில் செலுத்து
கிருர். -- 25 கர்த்தருக்குக் காத்
திருக்கிற நீங்கள் அனைவரும் ப
லத்துக்கொண்டு திடமனதாய்
இருங்கள்.

32. சங்கீதம்.

பாவமன்னிப்பின் பாக்கியத்தைப் பற்
றிய தப சங்கீதம்.

தாவீதின் போதக சங்கீதம்.

எவனுடைய மீறுதல் மன்னிக்
கப்பட்டு, எவனுடைய பாவம் மூ
டப்பட்டதோ, அவன் பாக்கிய
வான். -- 2 எவன் மேல் கர்த்தர்
அவன் அக்கிரமத்தைச் சுமத்தா
திருக்கிருரோ, எவனுடைய ஆவி
யில் கபடு இல்லாதிருக்கிறதோ
அந்த மனுஷன் பாக்கியவான்.
3 நான் அடக்கி வைத்த மட்
டும் நித்தம் என் கதறுதலினலே
என் எலும்புகள் உலர்ந்து போயி
ற்று.--4 ஏனெனில் இரவும் பக
லும் என்மேல் உம்முடைய கை
பாரமாயிருந்ததினலே என் சா
ரம் உஷ்ணகால வறட்சிகளைப்
போல் வறண்டு போயிற்று. சே
லா.- 5 நான் என் அக்கிரமத்தை
மறைக்காமல், என் பாவத்தை
உமக்கு அறிவித்தேன்; என் மீறு
தல்களைக் கர்த்தருக்கு அறிக்கை
யிடுவேன் என்றேன், அப்போது
தேவரீர் என் பாவத்தின் அக்கிர
மத்தை மன்னித்தீர். சேலா. --

6 இதற்காகச் சகாயம் கிடைக்
குங் காலத்திலே சகல சன்மார்க்
கனும் உம்மை நோக்கி விண்ணப்
பஞ் செய்வான்; அப்போது வெகு
தண்ணீர்களுடைய வெள்ளம் வந்
தும், அவனைச் சேராது.—7 தேவ
ரீர் எனக்கு மறைவிடமாயிருந்து,
இக்கட்டுக்கு என்னை விலக்கிக்
காத்து, விடுவித்தலின் கம்பீரங்
களால் என்னைச் சூழ்ந்து கொள்
ளுகிறீர். சேலா.
8 உனக்கு நாம் புத்தி படிப்
பித்து, உன்மேல் வைத்த நம்மு
டைய கண்ணினால் உனக்கு ஆ
லோசனை கொடுப்போம்.—9 உன்
கிட்ட சேராவிட்டால், வாராலுங்
கடிவாளத்தாலும் வாய் கட்டப்
படவேண்டிய குதிரையைப் போ
லவும் உணர்வற்ற கோவேறு க
ழுதையைப் போலவும் இராதே
யுங்கள்.-10 ஆகாதவனுக்கு அநே
கம் வேதனைகள் உண்டாம்; ஆ
னால் கர்த்தரை நம்பியிருக்கிறவ
னைக் கிருபை சூழ்ந்து கொள்
ளும். — 11 நீதிமான்களே, கர்த்
தருக்குள் மகிழ்ந்து களிகூருங்
கள் செம்மை இருதயத்தாரே,
நீங்கள் அனைவரும் கம்பீரியுங்கள்.

33. சங்கீதம்.

தயவுள்ள பராபரனைத் துதித்து, அவர்
மேல் நம்பிக்கை வைக்க எழுப்புகிற
சங்கீதம்.

நீதிமான்களே, கர்த்தருக்குள்
கம்பீரியுங்கள்; துதிக்கிறது செம்
மையானவர்களுக்கு அடுக்கும்.—
2 கர்த்தரைச் சுரமண்டலத்தி
னாலே துதித்து, அவரைத் தம்
புருவினாலும் பத்து நரம்பு வீணை
யினாலும் கீர்த்தனம் பண்ணுங்
கள். — 3 அவரைப் புதுப் பாட்
டாய்ப் பாடி, கம்பீரத்துடனே
நேர்த்தியாய்க் கொட்டுங்கள்.
4 என்னெனில் கர்த்தருடைய
வார்த்தை செம்மையும், அவரு
டைய செய்கைகள் எல்லாம் சத்
தியமுமாயிருக்கிறது. 5 நீதியை
யும் நியாயத்தையுஞ் சிநேகிக்கி
றார்; பூமி கர்த்தரின் கிருபையால்
நிறைந்திருக்கிறது. — 6 கர்த்த
ரின் வார்த்தையினாலே பரமண்
டலங்களும், அவருடைய வாயின்
ஆவியினாலே அவைகளின் எல்
லாச் சேனையும் உண்டாக்கப்பட்
டது.—7 அவர் சமுத்திர சலங்
களைக் குவியலாகக் கூட்டி, ஆழங்
களைப் பொக்கிஷ வைப்பாக வை
த்தார். -8 பூமி எல்லாம் கர்த்த
ருக்குப் பயப்பட்டு, பூச்சக்கரக் கு
டிகள் எல்லாம் அவருக்கு அஞ்சி
யிருப்பதாக. — 9 என்னெனில்
அவர் சொல்ல ஆகும், அவர் கட்ட
ளையிட நிற்கும்.—10 கர்த்தர் சாதி
களின் ஆலோசனையை அபத்த
மாக்கி, சனங்களுடைய நினைவு
களைத் தவிழ்க்கிறார். — 11 கர்த்
தருடைய ஆலோசனையோ நித்தி
யகாலமாகவும், அவர் இருதயத்
தின் நினைவுகள் தலைமுறை தலை
முறையாகவும் நிற்கும்.
12 கர்த்தர் தெய்வமாய் இருக்
கப்பட்ட சாதியும், அவர் தமக்குச்
சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட
சனமும் பாக்கியமானது. - 13 வா
னங்களிலிருந்து கர்த்தர் நோக்கிப்
பார்த்து, எல்லா மனுப்புத்திர
ரையுங் காண்கிறார்.- 14 தாம் வா
சமாயிருக்கிற தானத்திலிருந்து

பூமியின் குடிகள் எல்லார்மேலுங்
கண்ணேக்கமாய் இருக்கிறூர். —
15 அவர் இவர்கள் அனைவருடைய
இருதயத்தையும் உருவேற்படுத்
தி, அவர்கள் செய்கைகளை எல்
லாங் கவனித்திருக்கிறூர். - 16 இ
ராசா இராணுவத்திரளால் இரட்
சிக்கப்பட்டான்; சவுரியவான் பல
த்தின் மிகுதியாலே தப்பான். —
17 இரட்சிக்கப்படுவதற்குக் குதி
ரை விருதா; அது தன் பெரிய
வீரியத்தால் தப்புவியாது.

18 இதோ, தமக்குப் பயந்து,
தமது கிருபைக்குக் காத்திருக்கிற
வர்களின் ஆத்துமங்களை மரணத்
திற்கு விலக்கி விடுவிக்கவும், —
19 அவர்களைப் பஞ்சத்தில் உயி
ரோடே காக்கவும், கர்த்தருடை
ய கண் அவர்கள்மேலே வைக்கப்
பட்டிருக்கிறது. – 20 நம்முடைய
ஆத்துமம் கர்த்தருக்குக் காத்தி
ருக்கிறது; அவர் நம்முடைய ஒத்
தாசையும் நம்முடைய கேடயமும்
ஆனவர். – 21 ஏனெனில் அவ
ருடைய பரிசுத்த நாமத்தை நாம்
நம்பியிருக்கிறபடியால், நம்முடை
ய இருதயம் அவருக்குள் சந்தோ
ஷமாயிருக்கும். – 22 கர்த்தரே,
நாங்கள் உம்மை நம்பினபடி உம
து கிருபை எங்கள்மேல் இருக்கக்
கடவது.

34. சங்கீதம்.

தெய்வ தயவைப் பிரஸ்தாபித்து ஸ்தோத்திரித்தல்.

தாவீது தன் முக நாடியை அ
பிமேலேகுக்கு முன்பாக வேறுப
டுத்தினதினுலே, அவனால் துரத்
திவிடப்பட்டுப் போகையில் பா
டின சங்கீதம்.

2 கர்த்தரை எல்லாக் காலத்தி
லும் ஸ்தோத்திரிப்பேன்; அவர்
துதி எப்போதும் என் வாயில் இ
ருக்கும். – 3 கர்த்தருக்குள் என்
ஆத்துமம் மேன்மை பாராட்டும்;
சிறுமையானவர்கள் அதைக்கேட்
டு மகிழுவார்கள். – 4 என்னோ
டே கூடக் கர்த்தரை மகிமைப்
படுத்துங்கள்; நாம் ஒருமித்து அ
வர் நாமத்தை உயர்த்துவோம்.

5 நான் கர்த்தரைத் தேடின
போது அவர் எனக்கு மறு உத்த
ரவு கொடுத்து, என்னை என்னு
டைய எல்லாத் திகில்களுக்கும்
நீங்கலாக்கி விட்டார். - 6 அவரை
நோக்கி அவரண்டை ஓடி வருகிற
வர்களின் முகங்கள் வெட்கத்துக்
கு உள்ளாகாது – 7 இந்தச் சிறு
மையானவன் கூப்பிட்டான், அப்
போது கர்த்தர் கேட்டு, அவனை
அவன் நெருக்கங்களுக்கு எல்லாம்
நீங்கலாக்கி இரட்சித்தார். - 8 கர்த்
தருடைய தூதர் அவருக்குப் பயந்
தவர்களைச் சுற்றிலும் பாளயம்
போட்டு, அவர்களை விடுவிக்கிறூர்.
9 கர்த்தர் நல்லவர் என்கிறதை
ருசித்துப்பாருங்கள்; அவர் மேல்
நம்பிக்கையாயிருக்கிற மனுஷன்
பாக்கியவான். - 10 கர்த்தருடைய
பரிசுத்தவான்களே, அவருக்குப்
பயந்திருங்கள்; ஏனெனில் அவரு
க்குப் பயந்தவர்களுக்குக் குறை
வில்லை. – 11 சிங்கக் குட்டிகள்
தாழ்ச்சி அடைந்து பட்டினியாயி
ருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்
களுக்கோ ஒரு நன்மையும் குறை
வுபடாது.

12 பிள்ளைகளே, வந்து என்
னைக் கேளுங்கள், கர்த்தருக்குப்
பயப்படுதலை உங்களுக்குக்கற்றுக்
கொடுப்பேன். 13 சீவனை விரும்
பி, நன்மை காணும் நாட்களைச்
சிநேகிக்கிற மனுஷன் ஆர். —
14 உன் நாவைப் பொல்லாப்புக்
கும் உன் உதடுகளைக் கபட்டு வச
னிப்புக்கும் விலக்கமாய்க் கா.—
15 பொல்லாப்பை விட்டு விலகி
நன்மை செய், சமாதானத்தைத்
தேடி, அதைப் பின்தொடர்.
16 கர்த்தருடைய கண்கள்
நீதிமான்கள் மேல் வைக்கப்பட்டு
அவருடைய செவிகள் அவர்கள்
கூப்பிடுதலைக் கவனிக்கிறது.—
17 பொல்லாங்கு செய்கிறவர்
கள் பேரைப் பூமியிலிராமல் அற்
றுப்போகப் பண்ண கர்த்தருடை
ய முகம் அவர்களுக்கு விரோத
மாயிருக்கிறது. — 18 நீதிமான்
கள் கூப்பிடும்போது கர்த்தர் அவ
ர்களைக் கேட்டு, அவர்களை அவர்க
ளுடைய எல்லா நெருக்கங்களுக்
கும் நீங்கலாக்கி விடுகிறார்.—
19 இருதயம் நொறுங்குண்டவர்
களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்
து, ஆவி நருக்குண்டவர்களை இ
ரட்சிக்கிறார்.- 20 நீதிமானுக்கு வ
ருகிற தீங்குகள் அநேகமாயிருக்கி
றது; ஆனால் கர்த்தர் அவைகள்
எல்லாவற்றிற்கும் அவனை நீங்க
லாக்கி விடுகிறார். - 21 அவன் எ
லும்புகளை எல்லாங் காப்பாற்றுகி
றார்; இவைகளில் ஒன்றும் முறிக்
சப்படுகிறதில்லை.-22 தீங்கு ஆகா
தவனைக் கொல்லும்; நீதிமானைப்
பகைக்கிறவர்களே நேரஸ்தரா
வார்கள். - 23 கர்த்தர் தமது
ஊழியக்காரரின் ஆத்துமத்தை
மீட்டு விடுகிறார்; அவரை அண்
டிக் கொள்ளுகிறவர்கள் எல்லா
ரும் குற்றஞ் சுமராதிருப்பார்கள்.

35. சங்கீதம்.

தன் சத்துருக்களோடு பராபரன் தாமே
எதிர்த்து நிற்க, பாடுபடுகிற கிறிஸ்து
வின் முன்னடையாளமாய்த் தாவீது
வேண்டிக்கொண்டது.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தாவே, நீர் என் வழக்காளி
களோடே வழக்காடி, என்னோடு
யுத்தம் பண்ணுகிறவர்களோடு
யுத்தம் பண்ணும்.-2 நீர் கேடயத்
தையும் பரிசையையும் பிடித்து,
எனக்கு ஒத்தாசையாக எழும்
பி,—3 என்னைப் பின்தொடருகி
றவர்களோடு எதிர்த்துநிற்க, ஈட்
டியை ஓங்கி, அவர்களை மறித்து,
என் ஆத்துமத்துடனே: நாம்உன்
இரட்சிப்பு என்று சொல்லும்.—
4 என் பிராணனை வாங்கத் தேடு
கிறவர்கள் வெட்கி, இலச்சைய
டைந்து, பின்னிட்டுத் திரும்ப
வும்,—5 அவர்கள் காற்று முகத்
திலே பதரைப்போல் ஆகவும்
வேண்டும்; கர்த்தருடைய தூதன்
அவர்களைத் தள்ளுவானாக. —
6 அவர்கள் வழி இருளும் சறுக்க
லும் ஆகக்கடவது; கர்த்தருடைய்
தூதன் அவர்களைத் தொடருவா
னாக. - 7 ஏனெனில் முகாந்தர
மில்லாமல் குழிக்கு உட்படுத்தத்
தங்கள் வலையை எனக்கு ஒளித்
து வைத்தார்கள்; முகாந்தரமில்
லாமல் என் ஆத்துமத்துக்குக்
குழி வெட்டினார்கள்.

8 அவன் அறியாமல் பாழ்க்க
டிப்பு அவனுக்கு வந்து, அவன்
மறைவாய் வைத்த அவன் வலை
அவனையே பிடிக்கவும், அவனே
பாழ்க்கடிப்பால் அதிலே தான் வி
ழவும் வேண்டும். —9 அப்படியே
என் ஆத்துமம் கர்த்தருக்குள் களி
கூர்ந்து, அவருடைய இரட்சிப்பி
லே மகிழ்ந்திருக்கும். -- 10 சிறு
மையானவனை அவனிலும் பலவா
னுடைய கைக்கும், சிறுமையான
வனையும் எளியவனையும் அவனைக்
கொள்ளையிடுகிறவனுடைய கைக்
குந் தப்புவிக்கிற உம்மைப்போ
லே ஆர், கர்த்தாவே என்று என்
எலும்புகள் எல்லாம் சொல்லும்.

11 கொடுமையான சாட்சிகள்
எழும்பி, நான் அறியாததை என்
னைக் கேட்கிறார்கள்.— 12 எனக்கு
நன்மைக்குத் தீமை சரிக்கட்டி,
என் ஆத்துமம் முதலற்றுப் போ
கப் பார்க்கிறார்கள். — 13 அவர்
கள் வியாதியாய் இருந்தபோதோ
இரட்டு என் உடுப்பாயிருந்தது;
நான் உபவாசத்தால் என் ஆத்து
மத்தை உபத்திரவப்படுத்தினே
ன்; என் செபமும் என் மடியிலே
இரட்டித்தது. — 14 எனக்குச்
சிநேகிதனாகவும் எனக்குச் சகோ
தரனாகவும் பாவித்து நடந்து
கொண்டேன்; தாய்க்காகத் துக்
கிக்கிறவனைப்போல் துக்க வஸ்
திரம் தரித்து தலை கவிழ்ந்து நடந்
தேன்.—15 நான் ஆபத்துப் படு
கையிலோ, சந்தோஷப்பட்டுக் கூ
ட்டங் கூடுகிறார்கள்; நொண்டிக
ளும் நான் அறியாதவர்களும் எ
னக்கு விரோதமாக கூட்டங்கூடி
என்னைப் பீறி, அமராதிருக்கிறார்
கள்.—16 அப்பத்துக்காக மாய
மும் பரியாசமும் பண்ணுகிறவர்க
ளுக்குள் இருந்துகொண்டு என்
பேரிலே பற்கடிக்கிறார்கள்.

17 ஆண்டவரே, எந்தமட்டும்
அதைப்பாராதிருப்பீர்; என் ஆத்
துமத்தை அவர்கள் பாழ்க்கடிப்பு
களுக்கும், என் தனிமையைச்
சிங்கக் குட்டிகளுக்குந் தப்புவித்
துத் திருப்பும். — 18 உம்மைப்
பெரிய சபையிலே துதிப்பேன்,
திரளான சனத்துக்குள்ளே உம்
மைப் புகழுவேன்.—19 வீணாய்
எனக்குச் சத்துருக்களானவர்கள்
என் நிமித்தஞ் சந்தோஷியாம
லும், முகாந்தரமில்லாமல் என்
னைப் பகைக்கிறவர்கள் கண் சிமி
ட்டாமலும் இருப்பார்களாக. —
20 ஏனெனில் அவர்கள் சமாதா
னமாய்ப் பேசாமல், தேசத்திலே
அமர்ந்திருக்கிறவர்களுக்குவிரோ
தமாய்க் கபடான காரியங்களைத்
தியானித்து, — 21 எனக்கு வி
ரோதமாகத் தங்கள் வாயை விரி
வாய்த் திறந்து: ஆகா ஆகா, எங்
கள் கண் கண்டது என்கிறார்கள்.
22 கர்த்தாவே, நீர் அதைக்
கண்டீர், மௌனமாயிராதேயும்,
ஆண்டவரே, என்னை விட்டுத் தூ
ரமாகாதேயும். 23 என் பராபர
னே, என் ஆண்டவரே, என் நியா
யத்துக்கும் என் வழக்குக்கும் வி
ழித்து எழும்பும். — 24 என் பரா
பரனாகிய கர்த்தாவே, அவர்கள்
என் நிமித்தஞ் சந்தோஷியாத
படி, உம்முடைய நீதியின்படி
என்னை நியாயம் விசாரியும்.—

25 அவர்கள் தங்கள் இருதயத்தி
லே: எங்கள் ஆத்துமமே, ஆகா
என்றும், அவனை விழுங்கினோம்
என்றும் சொல்லாதிருப்பார்களா
க. -- 26 என் தீங்குக்காகச் சந்
தோஷிக்கிறவர்கள் ஏகமாய் வெட்
கி நாணி, எனக்கு விரோதமாய்ப்
பெருமைப்படுகிறவர்கள் வெட்
கத்தாலும் இலச்சையாலும் உடுத்
தப்படக் கடவார்கள். -- 27 என்
நீதியை விரும்புகிறவர்கள் கம்பீ
ரித்து மகிழ்ந்து: தமது ஊழியக்
காரனுடைய சமாதானத்தை வி
ரும்புகிற கர்த்தர் மகிமைப்படக்
கடவார் என்று எப்போதும் சொ
ல்லுவார்களாக. -- 28 என் நாவு
உமது நீதியையும், சகல நாளிலும்
உமது துதியையும் சொல்லுகிற
தாய் இருக்கும்.

36. சங்கீதம்.

தாவீது பொல்லாதவர்களுடைய ஆகாமியத்தைச் சிந்தித்து, கிருபையுள்ள பராபரனைத் தொழுதுகொண்டது.

இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட கர்த்தருடைய தாசனாகிய தாவீதின் சங்கீதம்.

2 ஆகாதவனுடைய துரோகப்
பேச்சு என் இருதயத்தின் உள்
ளத்துக்குத் தெரியும்; அவன் கண்
களுக்கு முன்பாகத் தெய்வ பயம்
இல்லை.—3 ஏனென்றால் தன்
துர்க்குணத்தை நிறைவேற்றவும்,
வர்மம் வைக்கவும், தனக்குத் தா
னே தன் பார்வைக்கு ஏற்றபடி
இச்சகம் பேசுகிறான். 4 அவன்
வாயின் வார்த்தைகள் அக்கிரம
மும் கபடமாயிருக்கிறது; நன்மை
செய்வதற்கான புத்தியைக் காக்
காமல் விட்டுவிட்டான். -5 அவன்
தன் படுக்கையின்மேல் அக்கிர
மத்தைச் சிந்தித்துக்கொண்டு,
நல்லதல்லாத வழியிலே நிலைத்
து, பொல்லாப்பை வெறுக்கா
திருக்கிறான்.

6 கர்த்தாவே, உமது கிருபை
வானங்களில் இருக்கிறது, உமது
சத்தியம் ஆகாயமண்டலங்கள்பரி
யந்தமும் எட்டுகிறது. - 7 உமது
நீதி வலு பருவதங்களைப் போல
வும், உமது நியாயங்கள் மகா ஆழ
மாகவும் இருக்கிறது; கர்த்தா
வே, மனுஷரையும் மிருகங்களை
யுங் காப்பாற்றுகிறீர். --- 8 பராப
ரனே உம்முடைய கிருபை எத்
தனை அருமையாயிருக்கிறது; அ
தனால் மனுப்புத்திரர் உமது செ
ட்டைகளின் நிழலிலே திடன்
கொண்டு தங்குகிறார்கள். - 9 உம
து வீட்டினுடைய சம்பூரணத்தி
னால் மஸ்தாகிறார்கள்; உமது செ
ல்வங்களின் ஆற்றினால் அவர்க
ளைத் தாகந் தீர்க்கிறீர். ---10 எ
னெனில் உம்மிடத்திலே சீவனு
டைய ஊற்று இருக்கிறது; உம்
முடைய வெளிச்சத்தில் வெளிச்
சத்தைக் காண்கிறோம்.

11 உம்மை அறிந்தவர்கள்மேல்
உமது கிருபையும், செம்மை
இருதயத்தார் மேல் உமது நீதி
யையும் நீட்டும். —12 பெருமைக்
காரரின் கால் என்மேல் வராம
லும், ஆகாதவர்களுடைய கை
என்னைப் பறக்கடிக்காமலும் இருப்
பதாக. ---13 அங்கே அக்கிரமக்
காரர் விழுந்து எழுந்திருக்கமாட்
டாமல் தள்ளுண்டு போகிறார்கள்.

37. சங்கீதம்.

பொல்லார் நல்லாரின் பிற்காரியம்
வெவ்வேறே என்று காண்பிப்பது.

தாவீதின் சங்கீதம்.

பொல்லாதவர்கள்மேல் எரிச்ச
லாகாதே, நியாயக்கேடு செய்கிற
வர்கள்மேல் பொறாமையாகாதே.-
2 ஏனென்றால் புல்லைப்போல் சீக்
கிரமாய் அறுப்புண்டு, பச்சையான
முளையைப்போல் உலருவார்கள்.-
3 கர்த்தரை நம்பியிருந்து நன்மை
செய், தேசத்தில் குடியிருந்து சத்
தியத்தை மேய்ந்துகொள்.-4 கர்த்
தர்பேரிலே மனமகிழ்ச்சியாயிரு;
அவர் உன் இருதயத்தின் வேண்டு
தல்களை உனக்குக் கொடுப்பார்.-
5 உன் வழியைக் கர்த்தருக்குச்
சாட்டிவிட்டு, அவர்மேல் நம்பிக்
கையாயிரு; அவரே காரியத்தை
நடப்பித்து,-6 உன் நீதியை வெ
ளிச்சத்தைப் போலேயும், உன் நி
யாயத்தைப் பட்டப்பகலைப் போ
லேயும் வெளிப்படப் பண்ணு
வார்.

7 கர்த்தரை நோக்கி அமர்ந்து,
அவருக்குக் காத்துக்கொண்டிரு;
தன் வழி வாய்க்கிறவன் மேலும்
தீவினைகளைச் செய்கிற மனு
ஷன் மேலும் எரிச்சலாகாதே.—
8 கோபத்தை நெகிழ்ந்து, உக்கி
ரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச்
செய்யவே இனமாகிய எரிச்சல்
உனக்கு வேண்டாம்.—9 ஏனெ
னில் பொல்லாதவர்கள் வேர்
அறுப்புண்டு போவார்கள்; ஆனால்
கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்
கள் பூமியைச் சுதந்தரித்துக்
கொள்ளுவார்கள். —10 இன்னம்
கொஞ்ச நேரந்தான், அப்போது
ஆகாதவன் இரான்; அவன் தா
னத்தை உற்று விசாரித்தாயா
னால், அவன் இல்லை.—11 மெத்
தனவுள்ளவர்களோ பூமியைச்
சுதந்தரித்துக்கொண்டு, மகா சமா
தானத்தினாலே மனமகிழ்ச்சியாய்
இருப்பார்கள்.

12 ஆகாதவன் நீதிமானுக்குத்
தீவினை நினைத்து, அவன் பேரி
லே பற்கடிக்கிறான். — 13 ஆண்
டவர் அவனை நகைக்கிறார்; ஏனெ
னில் அவன் நாள் வருகிறது
என்று காண்கிறார். — 14 சிறு
மையும் எளிமையுமானவனை மடி
விக்கவும் செம்மை மார்க்கத்தா
ரை விழப்பண்ணவும், ஆகாதவர்
கள் பட்டயத்தை உருவித் தங்கள்
வில்லை நாணேற்றுகிறார்கள். —
15 ஆனால் அவர்கள் பட்டயம்
அவர்களுடைய இருதயத்துக்குள்
போய், அவர்கள் வில்லுகள் முறி
யும்.

16 அநேகம் ஆகாதவர்களுக்கு
உள்ள திரட்சியைப் பார்க்கிலும்
நீதிமானுக்கு உள்ள கொஞ்சமா
னது நல்லது.—17 ஏனெனில் ஆ
காதவர்களுடைய புயங்கள் முறி
யும்; நீதிமான்களையோ கர்த்தர்
தாங்குகிறார்.

18 மன உண்மையானவர்களின்
நாட்களைக் கர்த்தர் அறிந்திருக்கி
றார்; அவர்கள் சுதந்தரம் என்றெ
ன்றைக்கும் இருக்கும்.—19 துர்க்
காலத்திலே வெட்கப்பட்டுப் போ
காதிருந்து, பஞ்ச காலத்திலே
திருப்தியடைவார்கள்.—20 ஆகா
தவர்களோ அழிவார்கள்; கர்த்தரு
டைய சத்துருக்கள் புல்லுள்ள ஸ்

தலங்களின் வடிப்பத்தைப்போல்
ஒழிந்து போவார்கள், புகையில்
ஒழிந்து போவார்கள். — 21 ஆகா
தவன் கடன் வாங்கிச் செலுத்தா
தேபோகிறான்; நீதிமானோ இரங்
கிக் கொடுக்கிறான். — 22 எனெ
னில் அவரால் ஆசீர்வதிக்கப்பட்ட
வர்கள் பூமியைச் சுதந்தரித்துக்
கொள்ளுவார்கள்; அவராலே சபி
க்கப்பட்டவர்களோ வேர் அறுப்
புண்டு போவார்கள்.

23 நல்ல மனுஷனுடைய நடை
கள் கர்த்தரால் உறுதிப்படும்;
அவனுடைய வழியின்மேல் அவர்
பிரியமாயிருக்கிறார். — 24 அவன்
விழுந்தால், தள்ளப்படுகிறதில்லை;
எனென்றால் கர்த்தர் அவன் கை
யைத் தாங்குகிறார். — 25 நான்
இளைஞனாயிருந்தேன், முதிர்வய
தும் ஆனேன்; ஆனால் நீதிமான்
கைவிடப்பட்டதையும், அல்லது
அவன் வித்து அப்பந் தேடுகிற
தையும் கண்டேன் இல்லை. —
26 நித்தம் இரங்கிக் கடன் கொ
டுக்கிறான்; அவன் வித்து ஆசீர்
வாதமாயிருக்கும்.

27 பொல்லாப்பை விட்டு விலகி
நன்மை செய்து என்றென்றைக்
கும் நிலைத்திரு. — 28 எனெனில்
கர்த்தர் நியாயத்தைச் சிநேகிக்கி
றவர், அவர் தம்முடைய சன்மார்க்
கரைக் கைவிடுவதில்லை; அவர்கள்
என்றென்றைக்கும் தற்காக்கப்
படுவார்கள். ஆனால் ஆகாதவர்க
ளின் வித்து வேர் அறுப்புண்டு
போம். — 29 நீதிமான்கள் பூமி
யைச் சுதந்தரித்துக்கொண்டு,
என்றென்றைக்கும் அதிலே வாச
மாயிருப்பார்கள்.

30 நீதிமானுடைய வாய் ஞா
னத்தை உரைத்து அவனுடைய
நாவு நியாயத்தைப் பேசும். —
31 அவனுடைய பராபரனின் வே
தம் அவன் இருதயத்தில் இருக்கி
றது; அவன் நடைகள் தள்ளாடுவ
தில்லை. — 32 நீதிமானை ஆகாத
வன் வேவு பார்த்து, அவனைக்
கொலை செய்ய வகை தேடுகிறா
ன். - 33 கர்த்தரோ அவனை இவன்
கையிலே விடுவதும் இல்லை, அ
வன் நியாயம் விசாரிக்கப்படுகை
யில், அவனை ஆகாதவனாகத் தீர்ப்
பதும் இல்லை. — 34 நீ கர்த்தருக்
குக் காத்திருந்து, அவருடைய
வழியைக் கைக்கொள்; அப்போது
நீ பூமியைச் சுதந்தரித்துக்கொள்
வதற்கு உன்னை உயர்த்துவார்;
ஆகாதவர்கள் வேர் அறுப்புண்டு
போவதைப் பார்ப்பாய்.

35 பலவந்தனும், முளைத்த நி
லத்தில் நிற்கிற பச்சைமரத்தைப்
போல் தழைத்தவனுமான ஒரு
ஆகாதவனைக் கண்டேன். — 36 ஆ
னால் ஒழிந்து போனான்; இதோ,
அவன் இல்லை. அவனைத் தேடி
னேன், ஆனால் அவன் காணப்பட்
டதில்லை. — 37 நீ உத்தமனை
நோக்கிச் செம்மையானவனைப்
பார்த்திரு; எனெனில் அம்மனு
ஷனுடைய பிற்காரியம் சமாதா
னம். — 38 துரோகிகளோ ஏக
மாய் அழிக்கப்படுவார்கள்; ஆகாத
வர்களின் பிற்காரியம் வேர் அறுப்
புண்ணுதல். - 39 ஆனால் நீதிமான்
களுடைய இரட்சிப்பும், இக்கட்
டுக்காலத்திலே அவர்கள் பெல
னும் கர்த்தரால் வரும். - 40 கர்த்
தர் அவர்களுக்கு ஒத்தாசை பண்

ணி, அவர்களை விடுவிப்பார்; அவர்
களை ஆகாதவர்களுடைய கைக்
குத் தப்புவித்து இரட்சிப்பார்;
ஏனெனில் அவரை நம்பியிருக்கி
றார்கள்.

38. சங்கீதம்.

பாவப் பாரத்தாலும் சத்துருக்களின் துன்பத்தாலும் வியாகுலப்பட்டுப் பண்ணின செபம்.

நினைப்பூட்டுதலாகப் பாடின
தாவீதின் சங்கீதம்.
2 கர்த்தாவே, உம்முடைய கடு
மையில் என்னைக் கடிந்துகொள்
ளாதேயும், உம்முடைய உக்கிரத்
தில் என்னைத் தண்டியாதேயும்.-
3 ஏனெனில் உம்முடைய அம்பு
கள் எனக்குட்பட்டது, உமது
கை என்மேல் இறங்கிற்று.
4 உமது சினத்தால் என் மாமி
சத்திலே ஆரோக்கியம் இல்லை;
என் பாவத்தினால் என் எலும்புக
ளில் சமாதானம் இல்லை.-5 ஏனெ
னில் என் அக்கிரமங்கள் என்
தலையின்மேல் ஏறி, பாரச்சுமை
யைப்போல் எனக்கு மிஞ்சின பா
ரமாயிற்று. -6 என் பைத்தியத்தி
னால் என் புண்கள் நாற்றம் எடுத்
து, அழுகிப்போயிற்று.– 7 மிகுதி
யாகவும் மடங்கி ஒடுங்கினேன்,
நாள் தோறும் சரிகறுத்துத் திரி
கிறேன். – 8 ஏனெனில் என்
குடல்கள் வெட்டையால் நிறைந்
திருக்கிறது; என் மாமிசத்திலே
ஆரோக்கியம் இல்லை. - 9 மிகுதி
யாகவும் பெலனற்றுப்போய் அலை
சடிபட்டேன், என் இருதயத்தின்
கொந்தளிப்பினால் கதறுகிறேன்.
10 ஆண்டவரே உமக்கு முன்
பாக என் ஏங்கல் எல்லாம் இருக்
கிறது; என் தவிப்பு உமக்கு
மறைக்கப்பட்டதல்ல. – 11 என்
இருதயம் குழம்பி அலைகிறது;
என் பெலன் என்னைவிட்டு, என்
கண்களின் வெளிச்சந்தானும்
என்னில் இல்லாதேபோயிற்று.–
12 என் சிநேகிதரும் என் தோழ
மாரும் என் வாதைக்கு எதிரே
நின்றிருந்து, என்னைச் சேர்ந்த
வர்கள் தூரமாய் நிற்கிறார்கள். –
13 என் பிராணனை வாங்கப் பார்க்
கிறவர்கள் எனக்குக் கண்ணிகளை
வைக்கிறார்கள்; எனக்குப் பொல்
லாப்பைத் தேடுகிறவர்கள் கேடு
பாடுகளைப் பேசி, நித்தங் கபடுக
ளைச் சிந்திக்கிறார்கள். - 14 நானோ
செவிடனைப் போல் கேளாதவ
னாகவும், தன் வாயைத் திறவாத
ஊமையனைப் போலவும் இருக்கி
றேன். – 15 கேளாமலும் தன்
வாயில் எதிர் உத்திரவுகள் இல்
லாமலும் இருக்கிற மனுஷனைப்
போல் ஆனேன்.

16 ஆதேனென்றால், கர்த்தா
வே, உமக்குக் காத்திருக்கிறேன்;
என் பராபரனாகிய ஆண்டவரே,
தேவரீர் மறு உத்தரவு கொடுப்
பீர்.-17 ஏனெனில் என் நிமித்
தஞ் சந்தோஷப்படாதிருப்பார்க
ளாக என்றேன்; என் கால் தள்ளா
டும்போது என்மேல் பெருமைப்
படுவார்களே.-18 ஏனெனில் நான்
தள்ளம்பாற இனமானவன்; என்
நோவு எப்போதும் எனக்குமுன்
பாக இருக்கிறது. - 19 ஏனென்
றால் என் அக்கிரமத்தை அறிக்
கையிட்டு, என் பாவத்தின் நிமித்

தம் விசாரப்பட்டிருக்கிறேன்.—
20 ஆனால் என் சத்துருக்கள் வாழ்ந்
து பலத்திருக்கிறார்கள்; முகாந்
தரமில்லாமல் என்னைப் பகைக்கி
றவர்கள் பெருத்திருக்கிறார்கள்.—
21 நன்மைக்குத் தீமை சரிக்கட்டு
கிறவர்கள் நான் நன்மையைப்
பின்பற்றுகிறபடியால், என்னை
விரோதிக்கிறார்கள். — 22 கர்த்
தாவே, என்னைக் கைவிடாதே
யும், என் பராபரனே எனக்குத்
தூரமாயிராதேயும். — 23 என்
இரட்சிப்பாகிய ஆண்டவரே, எ
னக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்
துக்கொள்ளும்.

39. சங்கீதம்.

*தாவீது இச்சீவனின் மாயையைத்
தியானித்து, பராபரனை ஆண்டிக்
கொண்டது.*

எதித்தூன் என்ற இராகத்
தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட
தாவீதின் சங்கீதம்.

2 நான் என் நாவினாலே பாவஞ்
செய்யாதபடி நான் என் வழிக
ளைக் காத்து, ஆகாதவன் எனக்கு
முன்பாக இருக்கு மட்டும் என்
வாயைக் கடிவாளத்தால் பத்திரப்
படுத்துவேன் என்றேன்.—3 நான்
மௌனப்பட்டு ஊமையனாயிருந்
து, நலமானதைப் பேசாமல் அ
மர்ந்தேன்; ஆனால் என் நோவு
அதிகத் துரிசாயிற்று. — 4 என்
இருதயம் எனக்குள் எரிந்ததினா
லே என் தியானத்தில் நெருப்பு
வேகிறதாயிருந்தது; அப்போது
என் நாவினால் விண்ணப்பம்
செய்தேன்.

5 கர்த்தாவே நான் எத்தனை
நிலையற்றவன் என்று உணர, என்
முடிவையும் என் நாட்களின் அள
வு எம்மாத்திரம் என்கிறதையும்
எனக்குத் தெரிவியும்.—6 இதோ,
நாலு விரற்கடைகளாய் என்
நாட்களை அளவிட்டீர், என் ஆயுசு
உமக்கு முன்பாக ஒன்றும் இல்
லாததுபோல் இருக்கிறது; ஆம்,
எந்த மனுஷனும் மாயையே என்
கிறது நிசம். சேலா.—7 வேஷ
மாகவே மனுஷன் திரிகிறான்,
மாயையாகவே அமளி பண்ணுகி
றார்கள்; சேர்க்கிறான், ஆனால் ஆர்
அவைகளை வாரிக்கொள்ளுவான்
என்று அறியான்.

8 இப்போதும் ஆண்டவரே,
எதற்கு எதிர்பார்ப்பேன், என் நம்
பிக்கை உம்முடையமேல் இருக்கி
றது. — 9 என்னை என் மீறுதல்
களுக்கெல்லாம் நீங்கலாக்கும்;
என்னைப் பைத்தியக்காரனுடைய
நிந்தையாக வைக்காதேயும். —
10 என் வாயைத் திறவாமல்
மௌனமாயிருக்கிறேன், எனெ
னில் தேவரீர் அதைச் செய்தீர்.—
11 உம்முடைய வாதையை என்
னிலிருந்து எடுத்துப் போடும்;
உமது கரத்தின் அடிகளால் நான்
தொய்ந்துபோனேன்.—12 நீர் அக்
கிரமத்தின் நிமித்தம் மனுஷ
னைக் கடிந்துகொண்டு தண்டிக்கி
றபோது, அவன் வடிவைப் பொட்
டரிப்பாய் அழியப் பண்ணுகிறீர்;
மெய்யாகவே எந்த மனுஷனும்
மாயை. சேலா.

13 கர்த்தாவே, என் செபத்
தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்
குச் செவி கொடும்; என் கண்ணீ

ருக்கு மௌனமாயிராதேயும்; ஏ
னெனில் உமக்கு முன்பாக நான்
என்னுடைய எல்லாப் பிதாக்க
ளைப்போலும் அரதேசியும் பர
தேசியுமாய் இருக்கிறேன். —
14 நான் இனி இராமல் போகும்
முன்னே இலகுவடைவதற்காக
என்னை விட்டு விலகும்.

40. சங்கீதம்.

மேசியாவின் குறைவற்ற கீழ்ப்படிதலையும், அதன் பலனையும் காண்பிக்கிற தீர்க்கதரிசனம்.

இராகத் தலைவனுக்கு ஒப்பு
விக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.
2 கர்த்தருக்குக் காக்கவே காத்
திருந்தேன். அப்போது அவர்
என்னண்டை சாய்ந்து, என் கூப்
பிடுதலைக் கேட்டு, — என்னைப்
பயங்கரமான குழியிலும் உளையா
ன சேற்றிலுமிருந்து ஏறப்பண்
ணி, என் கால்களைக் கன்மலையின்
மேல் நிறுத்தி, என் அடிகளை உ
றுதிப்படுத்தி,—4 எங்கள் பராபர
னைத் துதிக்கும் புதுப்பாட்டை
என் வாயிலே கொடுத்தார்; அநே
கர் அதைக் கண்டு பயந்து, கர்த்
தரை நம்புவார்கள். — 5 அகந்
தைக்காரரையும் பொய்க்குச் சாய்
கிறவர்களையும் நோக்காமல், கர்த்
தரைத் தன் நம்பிக்கையாக வைக்
கிற மனுஷன் பாக்கியவான்.
6 என் பராபரனாகிய கர்த்தா
வே, தேவரீர் எங்கள்மேல் உம்மு
டைய அதிசயங்களையும் உம்மு
டைய யோசனைகளையும் பெருகப்
பண்ணினீர்; தேவரீருக்கு ஒப்பிடு
தல் இல்லை. நான் அவைகளை அறி
வித்துச் சொல்லியும், அவைகள்
எண்ணிக்கைக்கு மேலானவை
கள். —7 பலியையுங் காணிக்கை
யையும் நீர் விரும்பாமல், செவி
களை எனக்கு ஆயத்தம் பண்ணி
னீர்; சர்வாங்க தகனபலியையும்
பாவம் போக்கும் பலியையும் நீர்
கேட்டதில்லை.—8 இதோ, வருகி
றேன் என்று அப்போது சொன்
னேன், புஸ்தகச் சுருளில் என்
னைக் குறித்து எழுதியிருக்கிறது.
9 என் பராபரனே, உமக்குப் பிரி
யமானதைச் செய்ய விரும்புகி
றேன்; உமது நியாயப்பிரமாணம்
என் உள்ளத்துக்குள் இருக்கிற
து. 10 திரளான சபையிலே நீதி
யைப் பிரசங்கிக்கிறேன்; இதோ,
கர்த்தாவே, என் உதடுகளை மூ
டேன் என்கிறதை நீர் அறிவீர்.—
11 உம்முடைய நீதியை என் இரு
தயத்துக்குள் மறையேன்; உமது
சத்தியத்தையும் உமது இரட்சிப்
பையுஞ் சொல்லுகிறேன்; உமது
கிருபையையும் உமது உண்மை
யையும் திரளான சபைக்கு அறிவி
யாதபடி ஒளியேன்.
12 கர்த்தாவே, தேவரீர் உம்மு
டைய இரக்கங்களை எனக்குக் கி
டையாமல் போகப் பண்ணாதே
யும்; உமது கிருபையும் உமது உ
ண்மையும் எப்போதும் என்னைக்
காப்பாற்றக் கடவது. - 13 ஏனெ
னில் எண்ணிக்கைக்கு அடங்காத
பொல்லாப்புகள் என்னைச் சூழ்ந்
து, என் பார்வைக்கு அடங்காத
என்னுடைய அக்கிரமங்கள் என்
னைத் தொடர்ந்து பிடித்தது; அ
வைகள் என் தலையின் மயிர்களிலு
ம் அதிகமாயிருக்கிறதினால் என்
இருதயம் என்னை விட்டுப் போ

யிற்று.-14 கர்த்தாவே, என்னை
விடுவித்தருளும்; கர்த்தாவே, எ
னக்குச் சகாயம் பண்ணத் தீவி
ரித்துக் கொள்ளும்.—15 என்
ஆத்துமத்தை அழிக்கத் தேடுகிற
வாகள் ஏகமாய் வெட்கி நாணி,
என் தீங்கை விரும்புகிறவர்கள்
பின்னிட்டு, இலச்சை அடையக்
கடவார்கள்.—16 என் பேரிலே:
ஆசா, ஆகா என்கிறவர்கள் தாங்
கள் அடையும் வெட்கமான பல
னாலே திடுச்கிடக் கடவார்கள்.—
17 உம்மைத் தேடுகிற அனைவ
ரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோ
ஷப்படுவார்களாக; உம்முடைய
இரட்சிப்பைச் சிநேகிக்கிறவர்கள்
எப்போதும்: கர்த்தர் மகிமைப்
படக் கடவார் என்பார்களாக. 18
நான் சிறுமையும் எளிமையுமான
வன், கர்த்தரோ எனக்காக நினை
வாயிருப்பார்; தேவரீரே என் து
ணையும் என்னை விடுவிக்கிறவரு
மாயிருக்கிறீர். என் பராபரனே,
தாமதியாதேயும்.

41. சங்கீதம்.

தாவீது தரித்திரனுக்கு இரங்குகிறவனின் பாக்கியத்தையும், யூதாவால்காட்டிக்கொடுக்கப்பட்ட கிறிஸ்துவின் பாடுகளுக்கு முன்னடையாளமான தன் பாடுகளையுங் குறித்துப் பாடினது.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

2 சிறுமைப்பட்டவன்மேல் கவ
னிப்பான சிந்தையுள்ளவன் பாக்கி
யவான்; கர்த்தர் அவனைத் தீங்கு
நாளிலே விடுவிப்பார்—3 கர்த்
தர் அவனைத் தற்காத்து, அவனை
உயிரோடே வைப்பார்; பூமியின்
மேலே பாக்கியவானாயிருப்பான்.
அவனை அவன் சத்துருக்களின்
மனதுக்கு ஒப்புக்கொடீர். 4 கட்
டிலின்மேல் பிணியாய்க் கிடக்கிற
அவனைக் கர்த்தர் தாங்குவார்; அ
வனுடைய வியாதியாலே அவன்
படுக்கையை எல்லாம் மாறப்பண்
ணுவீர்.

5 கர்த்தாவே, என் மேல் இரங்
கும், என் ஆத்துமத்தைக் குண
மாக்கும்; ஏனெனில் உமக்கு வி
ரோதமாகப் பாவஞ் செய்தேன்
என்று நான் சொன்னேன்.—
6 எப்போது சாவான், எப்போது
அவன் பேர் அழியும் என்று என்
சத்துருக்கள் எனக்குப் பொல்
லாப்பாய்ச் சொல்லுகிறார்கள்.—
7 என்னை ஒருவன் பார்க்கவந்தால்
அபத்தம் பேசுகிறான்; அவன் இரு
தயம் அக்கிரமத்தைப் பொறுக்
கிக்கொண்டு, வெளியே போய்,
அதைச் சொல்லுகிறான்.-8 என்
மேல் ஏகமாய் முணுமுணுக்கிறார்
கள்; என் பகைஞர் எல்லாரும்
எனக்கு விரோதமாயிருந்து, என
க்குப் பொல்லாப்பை நினைத்து-
9 பேலியாளின் கர்மம் அவனை
ஒட்டிக்கொண்டிருக்கிறது; கிடக்
கிற அவன் இனி எழுந்திருப்ப
தில்லை என்கிறார்கள்.— 10 என்
னோடே சமாதானமாயிருந்தவனு
ம், நான் நம்பினவனும், என்னு
டைய அப்பத்தைப் புசித்தவனு
மாகிய மனுஷனும் என்மேல் தன்
குதிகாலை மிகுதியும் எடுத்தான்.
11 ஆனால், கர்த்தாவே, தேவ
ரீர் எனக்கு இரங்கி, நான் அவர்க
ளுக்குச் சரிக்கட்ட என்னை எழுந்
திருக்கப் பண்ணும்.— 12 என்

சத்துரு என்மேல் கம்பீரிக்காமல்
போவதினாலே என்மேல் பிரிய
மாயிருக்கிறீர் என்கிறதை அறி
வேன்.—13 நான் மன உண்மை
யாய் இருக்கிறதினால் நீர் என்
னைத் தாங்கி, என்னை என்றென்
றைக்கும் உம்முடைய முகத்துக்
கு முன்பாக நிலைநிறுத்துவீர்.—
14 இஸ்ரவேலின் பராபரனாகிய
கர்த்தர் அனாதியாய் என்றென்
றைக்குமுள்ள சதாகாலங்களிலும்
ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆ
மேன். ஆமேன்.

42. சங்கீதம்.

தாவீது தெய்வ ஆராதனைக்குப்பங்கில்
லாத பரதேசியானதின் நிமித்தங்
கெஞ்சினது.

சோராகின் புத்திரரிலுள்ள இ
ராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்
பட்ட போதக சங்கீதம்.

2 மான் தண்ணீர் நதிகளின்
மேல் வாஞ்சையாய்க் கதறுமாப்
போலே என் ஆத்துமம் உமது
மேல் வாஞ்சையாய்க் கதறுகிறது,
பராபரனே.—3 என் ஆத்துமம்
சீவனுள்ள தெய்வமாகிய பராபர
ன்மேல் தாகமாயிருக்கிறது;நான்
எப்போது பிரவேசித்துப்பராபர
னுடைய சந்நிதியிலே காணப்பட
லாம்.—4 உன் பராபரன் எங்கே
என்று என்னுடனே நாள்தோறு
ஞ்சொல்லப்படுகையால், இரவும்
பகலும் என் கண்ணீர் எனக்குஅப்
பமாயிற்று.—5 இவைகளை நான்
நினைத்துக்கொண்டு, எனக்குள்
இருக்கும் என் ஆத்துமத்தைஊற்
றிப்போடுகிறேன்; ஏனெனில் முன்
தி நான் கூம்புக்குள்ளே நடந்து
வந்து, பண்டிகை ஆசரிக்கிற கூட்
டத்தின் கம்பீரமுந் துதியுமான
சத்தத்துடனே பராபரனுடைய
வீடு மட்டும் ஏகமாய் ஏகுவேனே.
6 என் ஆத்துமமே, ஏன் முறிந்
துபோய் என்னிலே கொந்தளிக்
கிறாய். பராபரனுக்குக் காத்துக்
கொண்டிரு; ஏனெனில் இன்னம்
அவரை அவர் சமுகத்தினுடைய
இரட்சிப்புகளின் நிமித்தந் துதிப்
பேன்.—7 என் பராபரனே, என்
னில் என் ஆத்துமம் முறிந்துகொ
ண்டிருக்கிறது; ஆகையால் யோர்
தான் தேசத்திலும் எர்மோன்
மலைகளிலும் சிறு மலையிலுமிருந்
து உம்மை நினைக்கிறேன்.—8 உம
து மதகுகளின் இரைச்சலால்
ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது;
உம்முடைய வெள்ளங்களும் உ
மது அலைகளும் எல்லாம் என்
மேல் புரளுகிறது.—9 ஆனால்
பகல் காலத்திலே கர்த்தர் தமது
கிருபையைக் கட்டளையிடுகிறார்;
இராக்காலத்தில் என் சீவனுடை
ய பராபரனை விண்ணப்பஞ்செய்
யும் அவருடைய பாட்டு என்னோ
டிருக்கும். 10 நான் என் கன்மலை
யாகிய பராபரனோடே: ஏன் என்
னை மறக்கிறீர்; சத்துரு என்னை
ஒடுக்குகிறதினால் நான் ஏன் கரிக
றுத்துத் திரியவேண்டும் என்கி
றேன். 11உன் பராபரன் எங்கே
என்று என் சத்துருக்கள் நாள்
தோறும் என்னோடே சொல்லி,
என்னை நிந்திக்கிறது என் எலும்
புகளை உருவும் வாதையாய் எனக்
கு இருக்கிறது.—12 என் ஆத்தும
மே, ஏன் முறிந்துகொண்டிருக்கி

ருய்; ஏன் என்னில் கொந்தளிக்கி
ருய், பராபரனுக்குக் காத்துக்
கொண்டிரு, ஏனெனில் இன்னம்
அவரை என் முகத்தின் குறை
வற்ற இரட்சிப்பு என்றும் என்
பராபரன் என்றுந் துதிப்பேன்.

43. சங்கீதம்.

முந்தினதற்கு ஒத்த சங்கீதம்.

பராபரனே, நீர் என்னை நியா
யம் விசாரித்து, சன்மார்க்கமில்
லாத சாதி என்னை விலக என்
வழக்கை வழக்காடி, சூதும் அநி
யாயமுமான மனுஷனுக்கு என்
னைத் தப்புவியும். - 2 ஏனெனில்
தேவரீர் என் பலமாகிய பராபர
ன்; ஏன் என்னைத் தள்ளிவிடுகி
றீர். சத்துரு என்னை ஒடுக்குகிற
தினல் நான் ஏன் கரிகறுத்துத்
திரிய வேண்டும். — 3 உமது வெ
ளிச்சத்தையும் உமது சத்தியத்
தையும் அனுப்பும்; அவைகள் என்
னை நடத்தி, என்னை உமது பரி
சுத்த பருவதத்திற்கும் உமது வா
சஸ்தலங்களுக்குங் கொண்டுபோ
கவும், — 4 நான் பராபரனுடைய
பீடத்தண்டைக்கும், என் களிகூ
ருதலான மகிழ்ச்சியின் பராபரன
ண்டைக்கும் பிரவேசித்து, என்
தெய்வமாகிய பராபரனே, உம்
மைச் சுரமண்டலத்தால் துதிக்க
வுந்தானே.

5 என் ஆத்துமமே, ஏன் முறிந்
துகொண்டிருக்கிருய், ஏன் என்
னில் கொந்தளிக்கிருய்; பரா
பரனை நம்பு, ஏனெனில் இன்னம்
அவரை என் முகத்தின் குறை
வற்ற இரட்சிப்பு என்றும் என்
பராபரன் என்றுந் துதிப்பேன்.

44. சங்கீதம்.

துன்பப்படுகிற சபை பராபரனுடைய
முந்தின கிருபைகளை நினைத்துக் கெஞ்
சினது.

கோராகின் புத்திரரில் இரா
கத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்
ட போதக சங்கீதம்.

2 பராபரனே, பூருவ நாட்களா
கிய தங்கள் நாட்களில் நீர் நடப்
பித்த கிரியையை எங்கள் பிதாக்
கள் எங்களுக்கு விவரித்தார்கள்;
அதை எங்கள் காதுகளாலேகேட்
டோம். — 3 தேவரீர் உம்முடைய
கையினலே சாதிகளைத் துரத்தி,
இவர்களை நாட்டி, சனசதளங்க
ளைத் துன்பப்படுத்தி, அவைக
ளைத் தள்ளிவிட்டீர். - 4 ஏனெ
னில் அவர்கள் தங்கள் பட்டயத்
தால் தேசத்தைக் கட்டிக்கொண்
டதில்லை; அவர்கள் புயமும் அல்ல,
உம்முடைய வலது கரமும் உம்மு
டைய புயமும் உம்முடைய முகத்
தின் வெளிச்சமும் அவர்களை இ
ரட்சித்தது. ஏனெனில் அவர்கள்
மேலே பிரியமாயிருந்தீர்.

5 பராபரனே, தேவரீரே என்
இராசாவானவர்; யாக்கோபின் கு
றைவற்ற இரட்சிப்பைக் கட்டளை
யிடும். — 6 உம்மாலே எங்கள் சத்
துருக்களை முட்டுவோம், எங்கள்
மேல் விழுகிறவர்களை உம்முடை
ய நாமத்தினலே மிதிப்போம்.—
7 ஏனெனில் என் வில்லை நம்பே
ன்; என் பட்டயம் என்னை இரட்
சிப்பதும் இல்லை. - 8 நீரோ எங்
கள் சத்துருக்களுக்கு எங்களை நீ
ங்கலாக்கி இரட்சித்து, எங்களைப்
பகைக்கிறவர்களை வெட்கப்படுத்

தினீர். — 9 பராபரனுக்குள் நித்
தம் மேன்மை பாராட்டுகிறோம்,
உம்முடைய நாமத்தை என்றென்
றைக்கும் துதிப்போம். சேலா.
10 இப்போதோ நீர் எங்கள் சே
னைகளுடனே புறப்படாமல், எங்
களைத் தள்ளிவிட்டு, நாணப்பண்
ணுகிறீர்.—11 எங்களைச் சத்து
ருவுக்கு இடைந்து பின்னிட்டுத்
திரும்பப் பண்ணுகிறீர்; எங்கள்
பகைஞர் தங்களுக்கென்று கொள்
ளையாடுகிறார்கள். — 12 நீர் எங்
களை ஆடுகளைப்போல் இரையாக
ஒப்புக்கொடுத்து, சாதிகளுக்குள்
ளே எங்களைச் சிதற அடிக்கிறீர்.-
13 உம்முடைய சனத்தை இலவ
சமாக விற்கிறீர், அவர்களைக் கிர
யப்படுத்துகிறதினாலே லாபப்ப
டாதே போகிறீர்.—14 எங்களை
எங்கள் அயலாருக்கு நிந்தையும்,
எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் ப
ரியாசமும் சக்கந்தமுமாக வைக்கி
றீர்.— 15 எங்களைச் சாதிகளுக்
குள்ளே பழமொழியாகவும், சனச
தளங்களுக்குள் தலை துலுக்குத
லாகவும் வைக்கிறீர் -16 சத்துரு
வையும் குரோதந் தீர்த்துக்கொள்
ளுகிறவனையுந் தொட்டு நிந்தித்
துத் தூஷணிக்கிறவனுடைய சத்
தத்தினாலே — 17 நித்தம் என்
இலச்சை எனக்கு முன்பாக இ
ருக்கிறது; என் முகத்தின் வெட்
கம் என்னை மூடுகிறது.
18 இதெல்லாம் எங்களுக்கு வந்
திருந்தும், உம்மை நாங்கள் மறந்
ததும் இல்லை, உம்முடைய உடன்
படிக்கைக்குத் திருக்குப் பண்ணி
னதும் இல்லை.-19 நீர் எங்களை வ
லுசர்ப்பங்களுள்ள ஸ்தலத்திலே
நசுக்கி, மரண நிழலினால் எங்களை
மூடியிருந்தும்,-20 எங்கள் இருத
யம் பின்வாங்கினதும், எங்கள் கா
லடி உம்முடைய பாதையை வி
ட்டு விலகினதும் இல்லை.- 21 நாங்
கள் எங்கள் பராபரனுடைய நா
மத்தை மறந்து எங்கள் உள்ளங்
கைகளை அந்நிய தேவனுக்கு வி
ரித்திருந்தோமானால், – 22 பரா
பரன் அதை ஆராய்ந்து விசாரியா
திருப்பாரோ; ஏனெனில் அவர்
இருதயத்தின் அந்தரங்கங்களை
அறிந்திருக்கிறார். — 23 ஆனால்
உம்முடைய நிமித்தம் நாங்கள்
நாள்தோறும் கொலை செய்யப்பட்
டு, அடிக்கப்படும் ஆடுகளைப்போ
லே எண்ணப்பட்டிருக்கிறோம்.
24 ஆண்டவரே, விழித்துக்
கொள்ளும்; ஏன் நித்திரை பண்
ணுகிறீர்; எங்களை என்றைக்குந்
தள்ளி விடாமல் எழும்பும்.—
25 ஏன் உம்முடைய முகத்தை ம
றைத்து, எங்கள் சிறுமையையும்
எங்கள் ஒடுங்குதலையும் மறப்பீர்.-
26 ஏனெனில் எங்கள் ஆத்துமம்
புழுதிமட்டாகக் குனியப்பட்டு,
எங்கள் வயிறு தரையோடு ஒட்டி
யிருக்கிறது. — 27 எங்களுக்கு
ஒத்தாசையாக எழுந்திருந்து, உம்
முடைய கிருபையின் நிமித்தம்
எங்களை மீட்டுவிடும்.

45. சங்கீதம்.

ஞான மணவாளனாகிய கிறிஸ்துவையும்
திருச்சபையாகிய ஞான மணவாளியை
யுங் காண்பிக்கிற தீர்க்கதரிசனம்.

ஆறு நரம்புக் கின்னாரத்திலே
வாசிக்கக் கோராகின் புத்திரரி

லுள்ள இராகத்தலைவனுக்கு ஒப்
புவிக்கப்பட்டசிநேகப்பாட்டாகிய
போதக சங்கீதம். உன்னதப் பா
ட்டு.

2 என் இருதயம் நல்ல விசே
ஷத்தை ஊற்றிவிடும்; நான் கவி
கட்டுகிறது இராசாவின் பேரிலே
தான் என்கிறேன்; என் நாவு தே
றின கணக்கனுடைய எழுத்தா
ணி.—3 எல்லா மனுப்புத்திரரி
லும் மகா அழகாயிருக்கிறீர்; கிரு
பை உம்முடைய உதடுகளில் ஊ
ற்றியிருக்கிறது; ஆகையால் பராப
ரன் உம்மை என்றென்றைக்கும்
ஆசீர்வதிக்கிறார்.

4 சௌரியவானே, உமது மகி
மையும் உமது மகத்துவமுமாகிய
உம்முடைய பட்டயத்தை நீர் உம்
முடைய அரையிலே கட்டிக்கொ
ண்டு,—5 சத்தியத்தின் நிமித்
தமாகவும் நீதியான சாந்தத்தின்
நிமித்தமாகவும் உமது மகத்துவத்
திலே செயமாய் ஏறிவாரும்; உம
து வலதுகரம் பயங்கரமானவை
களை உமக்குப் படிப்பிக்கும்.—
6 உம்முடைய அம்புகள் கூர்மை
யாயிருக்கிறது; சனசதளங்கள் உ
மக்குக் கீழ் விழுவார்கள்; அவை
கள் இராசாவுடைய சத்துருக்க
ளின் இருதயத்துக்குட்படும்.

7 பராபரனே, உம்முடைய இ
ராசாசனம் என்றென்றைக்குமு
ள்ள சதாகாலங்களாக நிற்கும்;
உமது இராச்சியத்தின் செங்
கோல் செம்மையான செங்கோ
லாய் இருக்கிறது.—8 நீதியைச்
சிநேகித்து, ஆகாமியத்தைப் ப
கைக்கிறீர்; ஆகையினால், பராபர
னே, உம்முடைய பராபரன் உம
து தோழரைப் பார்க்கிலும் உம்
மை மகிழ்ச்சியின் எண்ணெயினா
லே அபிஷேகம் பண்ணினார்.

9 நீர் மகிழ்ச்சி பொருந்திய தந்த
அரண்மனைகளிலிருந்து புறப்படு
கையில், உமது வஸ்திரங்கள் எல்
லாம் வெள்ளைப்போளம் சந்தனம்
காசியாவுமான வாசனையாயிருக்கி
றது. — 10 உமது நாயகிகளுக்
குள்ளே அரசனின் குமாரத்திகள்
உண்டு; இராசாத்தி உம்முடைய
வலது பாரிசத்திலே ஒப்பீரின்
தங்கம் அணிந்தவளாய் நிற்கிறாள்.
11 குமாரத்தியே, நீ கேட்டுப்பார்
த்து உன் செவியைச் சாய்த்து,
உன் சனத்தையும் உன் தகப்பன்
வீட்டையும் மறந்துபோ.-12 அப்
போது இராசா உன் அழகுக்கு
விருப்பமாவார்; ஏனென்றால் அவர்
உன்ஆண்டவராயிருக்கிறார்; ஆகை
யால் அவரைப் பணிந்துகொள்.-
13 அப்போது தீறுகுமாரத்தி
யும் சனத்தின் ஐசுவரியவான்க
ளும் வெகுமானங் கொண்டுவந்
து, உன் முகத்துக்கு முன்பாக
வருந்துவார்கள்.

14 இராசாவின் குமாரத்தி உள்
ளாக முற்றிலும் மகிமையானவள்;
அவள் உடுப்பு பொற்சரிகை அலங்
காரமானது.-15 சித்திரத் தை
யல் ஆடைகளுடனே இராசாவண்
டை கொண்டுவரப்படுவாள்; அவள்
தோழிகளாகிய கன்னியாஸ்திரி
கள் அவள் பிறகாலே வருவார்கள்;
அவர்கள் உன்னண்டை கூட்டிக்
கொள்ளப்படுவார்கள். — 16 மகி
ழ்ச்சிகளோடும் களிகூருதலோடும்
கொண்டுவரப்பட்டு, இராசாவின்
அரண்மனைக்குள் பிரவேசிப்பார்

கள்.—17 உன் பிதாக்களுக்குப்
பதிலாக உன் பிள்ளைகள் இருப்
பார்கள்; அவர்களைப் பூமி எங்கும்
பிரபுக்களாக வைப்பாய்.-18 உம
து நாமத்தை எல்லாத் தலைமு
றைகளிலும் பிரஸ்தாபப்படுத்து
வேன்; இவைகள் நிமித்தமாகச்
சனசதளங்கள் உம்மை என்றென்
றைக்குமுள்ள சதாகாலங்களிலுந்
துதிப்பார்கள்.

46. சங்கீதம்.

கர்த்தருடைய சபையின் பாதுகாப்பும் மீட்பும்.

அலாமோத்தில் வாசிக்கக் கோ
ராகின் புத்திரரிலுள்ள இராகத்
தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட
பாட்டு.
2 பராபரன் நமக்கு அடைக்கல
மும் பலமும் நெருக்கங்களில் பரி
பூரணமாய்க் கிடைக்கிற அநுகூ
லமுமானவர்.—3 ஆகையால் பூமி
நிலைமாறினாலும் மலைகள் நடுச்
சமுத்திரங்களில் சாய்ந்தாலும்,-
4 அவைகளின் சலங்கள் கொந்
தளித்துப் பொங்கி, அலைகள் பெ
ருகுகிறதினால் பருவதங்கள் அதிர்
ந்தாலும், பயப்படோம். சேலா.-
5 ஆறும் அதன் நீர்க்கால்களும்
பராபரனுடைய பட்டணத்தை
யும் உன்னதமானவருடைய கூ
டாரங்களின் பரிசுத்த ஸ்தலத்
தையும் சந்தோஷிப்பிக்கும்.-6 பரா
பரன் அதன் நடுவில் இருக்கிறார்,
அது அசையாது; விடியற்காலம்
வருகையில், பராபரன் அதற்குச்
சகாயம் பண்ணுவார்.—7 சாதி
கள் கொந்தளித்து, இராச்சியங்
கள் அசைந்தன; அவர் தமது முழக்
கத்தால் சத்தம் இடுகையில் பூமி
உருகும்.-8 சேனைகளுடைய கர்த்
தர் நம்மோடுகூட இருக்கிறார்; யாக்
கோபுடைய பராபரன் நமக்கு உய
ர்ந்த அடைக்கலமானவர். சேலா.
9 பூமியிலே பாழ்க்கடிப்பை
நடப்பிக்கிற கர்த்தருடைய செய்
கைகளை வந்து பாருங்கள்.-10 அ
வர் பூமியின் கடை முனைமட்டும்
யுத்தங்களை ஓயப்பண்ணுகிறவர்;
வில்லை ஒடித்து, ஈட்டியை முறிக்
கிறார்; இரதங்களை நெருப்பினால்
சுட்டெரிக்கிறார். — 11 நீங்கள்
ஓய்ந்திருந்து, நாம் பராபரன் என்
று அறியுங்கள்; சாதிகளுக்குள்
உயர்ந்திருப்போம், பூமியிலே உய
ர்ந்திருப்போம்.-12 சேனைகளின்
கர்த்தர் நம்முடனே கூட இருக்கி
றார்; யாக்கோபின் பராபரன் நமக்
கு உயர்ந்த அடைக்கலமானவர்.
சேலா.

47. சங்கீதம்.

பரமண்டலங்களுக்கு ஏறி, இராசரிக்கம் பண்ணும் கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனம்

கோராகின் புத்திரரிலுள்ள இ
ராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்
பட்ட சங்கீதம்.
2 சகல சனசதளங்களே, கை
கொட்டிப் பராபரனுக்குக் கம்பீர
சத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.- 3 ஏ
னெனில் உன்னதமானவராகிய
கர்த்தர் பயங்கரமானவரும், பூமி
யின் மீதெங்கும் பெரிய இராசா
வுமாயிருக்கிறார்.-4 நமக்குச் சன
சதளங்களையும், நம்முடைய கால்

களுக்குச் சாதிகளையுங் கீழ்ப்படுத்
துவார். – 5 நமக்குத் தாம் சிநே
கித்த யாக்கோபின் முக்கியமாகி
ய நம்முடைய சுதந்தரத்தைத்
தெரிந்து கொடுப்பார். சேலா.
6 பராபரன் ஆர்ப்பரிப்போடும்,
கர்த்தர் எக்காள சத்தத்தோடும்
ஏறுகிறார்.—7 பராபரனைக் கீர்த்
தனத்தின் மேல் கீர்த்தனம்பண்
ணுங்கள், நம்முடைய இராசா
வைக் கீர்த்தனத்தின்மேல் கீர்த்
தனம் பண்ணுங்கள்.— 8 ஏனெ
னில் பராபரன் பூமி அனைத்துக்
கும் இராசா; போதக சங்கீதத்
தால் அவரைக் கீர்த்தனம் பண்
ணுங்கள்.—9 பராபரன் சாதிகள்
மேல் இராசரிக்கம் பண்ணுகிறார்;
பராபரன் தம்முடைய பரிசுத்த
ஆசனத்தின் மீதில் உளுக்காருகி
றார்.– 10 சனசதளங்களில் பிர
புக்கள் ஆபிரகாமுடைய பராபர
னின் சனமாய்ச் சேர்க்கப்படுகி
றார்கள்; ஏனெனில் பூமியின்
கேடயங்கள் பராபரனுடையவை
கள், அவர் மிகுதியும் உயர்ந்தவர்.

48. சங்கீதம்.

கிறிஸ்துவின் சபை என்ற எருசலேமின் மகிமை.

கோராகின் புத்திரருக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதப்பாட்டு.

2 நமது பராபரனுடைய பட்ட
ணத்திலும் தம்முடைய பரிசுத்
த பருவதத்திலும் கர்த்தர் பெரிய
வரும், மிகுதியாய் ஸ்தோத்திரிக்
கப் பட்டவருமாயிருக்கிறார். —
3 சீயோன் பருவதமும் வடபுறங்
களிலுள்ள மகா இராசாவின் பட்
டணமும் வடிப்பமான நிலையும்
சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்
கிறது.—4 அதன் அரண்மனைக
ளில் பராபரன் உயர்ந்த அடைக்க
லமாக அறியப்பட்டிருக்கிறார்.
5 ஏனெனில், இதோ, இராசாக்
கள் கூடிக்கொண்டு, ஏகமாய்க் க
டந்து வந்தார்கள். — 6 ஆனால்
அவர்கள் அதைப் பார்க்குமளவில்
பிரமித்துக் கலங்கித் தீவிரமாய்த்
தெறித்துப் போனார்கள். 7 நடுக்க
மும் கர்ப்பவதியின் வேதனைக்குச்
சரியான வேதனையும் அங்கே அ
வர்களைப் பிடித்தது.— 8 கீழ்க்
காற்றினால் தர்சீசின் கப்பல்களை
உடைக்கிறீர்.—9 நாம் கேட்டிரு
க்கிறதற்குச் சரியாய்ச் சேனைகளு
டைய கர்த்தரின் பட்டணத்தி
லே கண்டோம், நமது பராபரனு
டைய பட்டணத்திலே தானே.
பராபரன் அதை என்றென்றைக்
கும் உறுதிப்படுத்துவார். சேலா.
10 பராபரனே, உமது தெய்வா
லயத்தின் நடுவிலே உமது கிரு
பையைச் சிந்தித்துக்கொண்டு இ
ருக்கிறோம்.–11 பராபரனே, உம
து நாமம் எப்படியிருக்கிறதோ
அப்படி உமது புகழ்ச்சியும் பூமியி
னுடைய கடையாந்தரங்கள் பரி
யந்தம் இருக்கிறது; உமது வலது
கரம் நீதியால் நிறைந்திருக்கிறது.
12 உம்முடைய நியாயத் தீர்ப்புக
ளின் நிமித்தம் சீயோன் பருவதம்
மகிழ்ந்து, யூதாவின் குமாரத்தி
கள் களிகூருவார்களாக.
13 சீயோனைச் சுற்றி அதை வ
ளைந்து வாருங்கள்; அதன் கொம்
மைகளை எண்ணுங்கள். – 14 நீங்
கள் பின் சந்ததிக்கு விவரிப்பதற்

காக, அதன் அலங்கத்தின் மேல்
உங்கள் மனதை வைத்து, அதன்
அரண்மனைகளை ஒவ்வொன்றாய்க்
கவனியுங்கள். — 15 ஏனெனில்
இந்தப் பராபரன் என்றென்றைக்
குமுள்ள சதாகாலங்களிலும் நம்மு
டைய பராபரனாயிருக்கிறார்; அவர்
நம்மை மரணத்தைக் கடக்க
அழைத்துக்கொண்டு போவார்.

49. சங்கீதம்.

நல்லவர்களை ஒடுக்குகிற பிரபஞ்சத்தா
ரின் வாழ்வும் மகிமையும் அநித்தியம்
என்பது.

கோராகின் புத்திரரிலுள்ள
இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட சங்கீதம்.

2 சனசதளங்களாகிய நீங்கள்
எல்லாரும் இதைக் கேளுங்கள்.-
3 சிறியோரும் பெரியோரும், ஐசு
வரியவான்களும் எளியவர்களுமா
கிய உலகக் குடிகளே, எல்லாரும்
ஏகமாய்ச் செவிகொடுங்கள். —
4 என் வாய் ஞானங்களைப் பேசும்,
என் இருதயத்தின் தியானம் புத்
தியுள்ளதாயிருக்கும். — 5 என்
செவியை உவமை மொழிக்குச்
சாய்த்து, என் புதைபொருளைச்
சுரமண்டலத்தால் வெளிப்படுத்
துவேன்.

6 தங்கள் ஆஸ்தியை நம்பி, தங்
கள் திரளான ஐசுவரியத்தினாலே
பெருமை பாராட்டி, — 7 என்னை
ஒடுக்குகிறவர்களுடைய அக்கிர
மம் என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற
தீங்கு நாட்களில் ஏன் பயப்படு
வேன். — 8 இனி என்றைக்கும்
அழிவைக் காணாமல் உயிரோடி
ருக்கும்படி, — 9 அவர்களில் யா
ரும் தன் சகோதரனை மீட்கவே
மீட்கவும், அவனை மீட்கும் பொ
ருளைப் பராபரனுக்குக் கொடுக்க
வும் மாட்டான்.— 10 ஏனெனில்
அவர்கள் ஆத்தும மீட்பு என்
றென்றைக்கும் நடவாதபடி விலை
உயர்த்தியாயிருக்கிறது.

11 ஏனென்றால் ஞானிகளும்
மரித்து, நிர்மூடனும் மிருகக்குண
முள்ளவனும் ஏகமாய் அழிந்து,
தங்கள் ஆஸ்தியை வேறே மனுஷ
ருக்குப் பின்வைத்துப் போகிற
தைக் காண்பான். — 12 தங்கள்
வீடுகள் நித்திய காலமாகவும் தங்
கள் வாசஸ்தலங்கள் தலைமுறை
தலைமுறையாகவும் இருக்கவேண்
டும் என்பது அவர்கள் உள்ளத்தின்
ஆசை. அவர்கள் தங்கள் நாமங்க
ளைப் பூமிகளுக்குத் தரிப்பிக்கிறார்
கள். — 13 ஆகிலும் அந்த முக்கி
யத்தோடு இருக்கிற மனுஷன்
அதிலே தங்கித் தரியாமல், அழிந்
துபோகிற மிருகங்களுக்குச் சமா
னமாயிருக்கிறான். — 14 அவர்க
ளுடைய இந்த வழி அவர்களு
டைய பைத்தியமாயிருக்கிறது;
அவர்கள் பின்னடியாரும் அவர்கள்
வாய்ப்பிறப்புக்குப் பிரீதிப்படுகி
றார்கள். சேலா. — 15 ஆடுகளைப்
போல் நரகத்திலே கிடத்தப்படு
கிறார்கள்; மரணம் அவர்களை
மேயும். ஆனால் செம்மையானவர்
கள் விடியற்காலத்திலே அவர்களை
ஆண்டு கொள்ளுவார்கள். அவர்
கள் தங்கள் வாசஸ்தலத்திலிருந்
து நிலைத்திருக்கக் கூடாத அவர்க
ளுடைய ரூபைப் பாதாளம் அழிக்
கும். — 16 ஆனால் என் ஆத்து

மத்தைப் பராபரன் நரகத்தின்
வலுமைக்குத் தப்புவித்து மீட்
பார்; எனெனில் என்னை அவர்
சேர்த்துக்கொள்ளுவார். சேலா.
17 ஒருவன் ஐசுவரியவானாகி,
அவன் வீட்டின் மகிமை பெருகும்
போது பயப்படாதே.—18 எனெ
னில் அவன் தன் மரணத்தில்
ஒன்றும் எடுத்துப் போவது இல்
லை; அவன் மகிமை அவனைப்பின்
சென்று இறங்குவதும் இல்லை.—
19 அவன் உயிரோடிருக்கையில்
தன் ஆத்துமத்தை ஆசீர்வதித்தா
லும், உனக்கு நீ நன்மை செய்கி
றாய் என்று மனுஷர் அவனைப்
புகழ்ந்தாலும், — 20 அது என்
றென்றைக்கும் வெளிச்சத்தைக்
காணாத தன் பிதாக்களின் சந்ததி
யைச் சேரும். — 21 முக்கியமுற்
றும் புத்தியற்றும் இருக்கிற மனு
ஷன் அழிந்துபோகும் மிருகங்க
ளுக்குச் சமானமாய் இருக்கிறான்.

50. சங்கீதம்.

மெய்பான தெய்வ ஆராதனையைப்
பற்றியது.

ஆசாப்பின் சங்கீதம்.

வல்லமையுள்ள பராபரனாகிய
கர்த்தர் வசனித்து, சூரியன் உதிக்
குந் திசை துவக்கி அது அஸ்த
மிக்குந் திசைமட்டுமுள்ள பூமி
யைக் கூப்பிடுகிறார். —2 பூரண
வடிவுள்ள சீயோனிலிருந்து பரா
பரன் பிரகாசிக்கிறார். — 3 நம்மு
டைய பராபரன் மௌனமாயிரா
மல் வருவார்; அவருக்கு முன்னா
லே அக்கினி எரிக்கும்; அவரைச்
சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்
பாயிருக்கும். — 4 அவர் தம்மு
டைய சனத்தை நியாயந் தீர்க்க,
உயர இருக்கும் வானங்களையும்
பூமியையும் கூப்பிடுவார். —5 பலி
யின்மேல் பண்ணப்பட்ட நம்மு
டைய உடன்படிக்கைக்கு உள்ளா
யிருக்கிற நம்முடைய பரிசுத்த
வான்களை நமக்குக் கூட்டுங்கள்
என்பார். — 6 அப்போது வானங்
கள் அவருடைய நீதியை அறிவிக்
கும்; எனெனில் பராபரனே நியா
யாதிபதி. சேலா.
7 நம்முடைய சனமே, கேள்;
நாம் பேசுவோம்; இஸ்ரவேலே
நாம் உனக்குள்ளே சாட்சிவிளங்
கப் பண்ணுவோம். உன் தேவ
னாகிய பராபரன் நாமே. —8 உன்
பலிகளின் நிமித்தம் உன்னைக்
கடிந்து கொள்ளோம்; எனெனில்
உன் சர்வாங்க தகனங்கள் எப்
போதும் நமக்கு முன்பாக இருக்
கிறது.—9 நாம் உன் வீட்டிலிருந்து
காளைகளையும் உன் தொழுவங்
களிலிருந்து ஆட்டுக் கடாக்களை
யும் வாங்கிக் கொள்வதில்லை. —
10 எனெனில் சகலகாட்டுச் சீவன்
களும், பருவதங்களில் ஆயிரங்க
ளாய்த் திரிகிற மிருகங்களும் நம்
முடையவைகளே. —11 மலைகளி
லுள்ள பறவை அனைத்தையும்
அறிவோம்; வெளியில் நடமாடுகி
றவைகள் நம்முடைய வசமே. —
12 பசியாயிருந்தோமானால், உனக்
குச் சொல்லோம்; எனெனில் பூச்
சக்கரமும் அதன் நிறைவும் நம்மு
டையதே. — 13 எருதுகளின்
மாமிசம் புசித்து, ஆட்டுக்கடாக்க
ளின் இரத்தங் குடிப்போமோ. —
14 நீ பராபரனுக்குஸ்தோத்திரத்

தைப் பலியிட்டு, உன்னதமானவ
ருக்கு உன் பொருத்தனைகளைச்
செலுத்தி, – 15 நெருக்கப்படுகிற
நாளிலே நம்மை நோக்கிக் கூப்
பிடு, அப்போது உன்னை விடுவிப்
போம், அதற்காக நீ நம்மை மகி
மைப் படுத்தக்கடவாய்.

16 ஆனல் ஆகாதவனுக்குப்பரா
பரன் சொல்லுகிறதாவது: நீ நம
து பிரமாணங்களைச் சொல்லவும்,
நமது உடன்படிக்கையை உன்
வாயில் வைக்கவும் உனக்கு என்ன
நியாயம் இருக்கிறது.-17 கடிந்து
கொள்ளுதலை நீ பகைத்து, நம்
முடைய வார்த்தைகளை உனக்
குப் பின்னுக எறிந்து போடுகிறு
யே. — 18 நீ திருடனைக் கண்
டால், அவனேடே ஒருமித்துப்
போகிருய்; விபசாரரோடும் உன
க்குப் பங்கு இருக்கிறது.–19 உன்
வாயைப் பொல்லாப்புக்குத் திறந்
து விடுகிருய், உன்நாவு சர்ப்பனை
யைப் பிணைக்கும். — 20 நீ உட்
கார்ந்து உன் சகோதரனுக்கு வி
ரோதமாய்ப் பேசி, உன்னுடைய
தாயின் மகனுக்கு அவதூறு உண்
டாக்குகிருய்.

21 இவைகளை நீ செய்யும்போ
து மௌனமாயிருந்தோம், உன்
னைப் போல் இருக்கவே இருப்
போம் என்று நினைவு கொண்டா
ய்; ஆனல் நாம் உனக்குத் தூண்
டிக் காட்டி, உன் கண்களுக்கு
முன்பாக ஒவ்வொன்ருக நிறுத்து
வோம். – 22 பராபரனை மறக்கி
றவர்களே, விடுவிக்கிறவன் இல்
லாமல் நாம் பீறிப்போடாதபடி,
இதை உணர்ந்து கொள்ளுங்க
ளேன்.

23 ஸ்தோத்திரத்தைப் பலியி
டுகிறவன் நம்மை மகிமைப்படுத்
துகிருன்; இப்படி வழியை ஆயத்
தப் படுத்துகிறவனுக்குப் பராபர
னுடைய இரட்சிப்பைக் காண்
பிப்போம்.

51. சஙகீதம்.

*தாவீதின் மெய் மனஸ்தாபத்தை வெ
ளிப்படுத்தும் தப சங்கீதம்.*

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

2 பத்சேபாளிடத்தில் பிரவே
சித்திருந்த அவனண்டை நாத்
தான் தீர்க்கதரிசி வந்தபோது
அவன் பாடினது.

3 பராபரனே, உமது கிருபை
யின்படி எனக்கு இரங்கி, உமது
மிகுந்த இரக்கங்களின்படியே
என் மீறுதல்கள் நீங்க என்னைச்
சுத்திகரியும். — 4 என் அக்கிர
மம் நீங்க என்னை மிகவும் கழுவி
என் பாவமற என்னைச் சுத்திகரி
யும். — 5 ஏனெனில் என் மீறு
தல்களை நான் அறிந்திருக்கிறேன்;
என் பாவம் எப்போதும் எனக்கு
முன்பாக நிற்கிறது. – 6 தேவரீர்
ஒருவருக்கு விரோதமாக நான்
பாவத்தை நடப்பித்து, உம்மு
டைய கண்களுக்கு முன்பாகப்
பொல்லாப்பானதைச் செய்தேன்
என்கிறதை நீர் உம்முடைய வச
னங்களில் நீதிவிளங்கவும், உமது
நியாயத்தீர்ப்பில் சுத்தம் விளங்க
வும் அறிக்கையிடுகிறேன்.

7 இதோ, துர்க்குணத்தில் உரு
வானேன்; என் தாய் என்னைப்
பாவத்திலே கர்ப்பந்தரித்தாள். –
8 இதோ, உள்ளத்தில் உண்மை

இருக்க நீர் விரும்புகிறீர்; இரகசி
யத்திலே ஞானத்தை எனக்குத்
தெரியப்படுத்துவீராக. – 9 நான்
சுத்தமாவதற்கு நீர் ஈசோப்பால்
என்னைப் பாவமறப்பண்ணி, நான்
உறைந்த மழையிலும் வெண்மை
யாவதற்கு என்னைக் கழுவுவீ
ராக.-10 எனக்குச் சந்தோஷமும்
மகிழ்ச்சியும் கேட்கப்பண்ணும்;
அப்போது நீர் நொறுக்கின எலும்
புகள் களிகூரும்.-11 என் பாவங்க
ளைப் பாராதபடி நீர் உமது முகத்
தை மறைத்து, என் மீறுதல்களை
எல்லாம் நீக்கும். – 12 சுத்த இரு
தயத்தை எனக்குச் சிருஷ்டியும்,
பராபரனே; நிலைவரமான ஆவி
யை என் உள்ளத்தில் புதிதாய்
உண்டாக்கும். – 13 உம்முடைய
முகத்தைவிட்டு என்னைத் தள்
ளாமலும், உமது பரிசுத்த ஆவி
யை என்னிடத்திலிருந்து எடுத்
துக்கொள்ளாமலும் இரும். —
14 உம்முடைய இரட்சிப்பின் சந்
தோஷத்தை எனக்குத் திரும்பக்
கட்டளையிடும், உற்சாகமான ஆவி
என்னைத் தாங்கட்டும்.

15 அப்போது பாதகருக்கு உம
து வழிகளை உபதேசிப்பேன்;
பாவிகள் உம்மண்டை திரும்பு
வார்கள். –16 என் இரட்சிப்பின்
தேவனாகிய பராபரனே, இரத்தப்
பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி
விடுவியும், அப்போது என் நாவு
உம்முடைய நீதியைக் கம்பீரித்
துப் பாடும். –– 17 ஆண்டவரே,
என் உதடுகளைத் திறவும், அப்
போது என் வாய் உம்முடைய
துதியை அறிவிக்கும். -18 ஏனெ
னில் பலியை விரும்பீர், மற்றப்
படி அதைச் செலுத்துவேன்; சர்
வாங்க தகனபலி உமக்குப் பிரிய
மானதல்ல. – 19 பராபரனுக்கு
ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட
ஆவிதான்; பராபரனே, நொறுங்
குண்டதும் நருங்குண்டதுமான
இருதயத்தைப் புறக்கணியீர்.

20 சீயோனுக்கு உமது பிரியத்
தின்படி நன்மை செய்யும்; எருச
லேமின் மதில்களைக் கட்டுவீ
ராக. – 21 அப்போது சர்வாங்க
தகனமும் முழுத் தகனமுமான
நீதியின் பலிகளுக்குப் பிரியப்படு
வீர்; அப்போது உம்முடைய பீ
டத்தின் மேலே காளையெருதுக
ளைப் பலியிடுவார்கள்.

52. சங்கீதம்.

*அவதூறுக்காரரைக் கண்டிக்குஞ்
சங்கீதம்.*

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் போதக சங்
கீதம்.

2 தாவீது அகிமெலேக்கின் வீட்
டுக்கு வந்தான் என்று ஏதோமிய
னாகிய தோவேக் வந்து சவுலுக்கு
அறிவித்தபோது பாடினது.

3 பலவானே, பொல்லாப்பைச்
செய்து, ஏன் பெருமை பாராட்டு
கிறாய்; பராபரனுடைய கிருபை
நாள்தோறும் உள்ளது. — 4 கூர்
மையாக்கப்பட்டு கபடு செய்கிற
சவரகன் கத்தியைப்போலே உன்
நாவு கேடுபாடுகளை எத்தனம்பண்
ணுகிறது. 5 நன்மையைப் பார்க்
கத் தின்மையையும் நிதானம்பே
சுகிறதைப் பார்க்கப் பொய்யை
யும் சிநேகிக்கிறாய். சேலா. —

6 விழுங்குகிறதற்கான சகல வா
ர்த்தைகளையும் கபட்டு நாவையும்
சிநேகிக்கிறாய்.
7 பராபரன் உன்னையும் என்
றென்றைக்கும் நிர்மூலமாக்கு
வார்; அவர் உன்னைப் பிடித்து,
உன்னைக் கூடாரத்திலிருந்து பி
டுங்கி, உன்னைச் சீவனுள்ளோரு
டைய பூமியில் இராதபடி வேரற்
றுப்போகப்பண்ணுவார். சேலா.-
8 அதை நீதிமான்கள் கண்டு,
பயந்து, அவனை நகைத்து:- 9 இ
தோ, பராபரனைத் தன் பெலனாக
வைக்காமல், தன் ஐசுவரியத்
திரட்சியை நம்பி, தன் தீவினையி
லே பலத்துக்கொண்ட மனுஷன்
என்பார்கள்.
10 நானோ பராபரனுடைய வீட்
டிலே பச்சையான ஒலீவ மரத்
தைப்போல் இருப்பேன். பராபர
னுடைய கிருபையை எப்போதும்
என்றென்றைக்கும் நம்பியிருக்கி
றேன்.— 11 நீர் அதைச் செய்
தீர் என்று உம்மை நான் என்
றென்றைக்குந் துதித்து, உம்மு
டைய பரிசுத்தவான்களுக்கு முன்
பாக உமது நாமத்திற்குக் காத்தி
ருப்பேன், ஏனெனில் அது நல
மானது.

53. சங்கீதம்.

பதினாலாம் சங்கீதத்துக்கு ஒத்தது.

பலவீனத்திலே பாடி, இராசத்
தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட
தாவீதின் போதக சங்கீதம்.
2 பராபரன் இல்லை என்று
பைத்தியக்காரன் தன் இருதயத்
தில் சொல்லுகிறான்; தங்களைக்
கெடுத்து, நியாயக் கேட்டினால்
அருவருப்பாக்கினார்கள்; நன்று
செய்கிறவன் இல்லை.— 3 பராப
ரனைத் தேடுகிற உணர்வுள்ளவன்
உண்டோ என்று பார்க்கப் பராப
ரன் பரமண்டலங்களிலிருந்து ம
னுப்புத்திரரைக் கண்ணோக்கி
னார். — 4 அவர்கள் எல்லாரும்
வழி விலகி ஏகமாய்க் கெட்டுப்
போனார்கள்; நன்று செய்கிறவன்
ஒருவனாகிலும் இல்லை.
5 அப்பத்தைப் பட்சிக்கிறது
போலே நம்முடைய சனத்தைப்
பட்சிக்கிற அக்கிரமக்காரருக்கு
அறிவுதானும் இல்லையோ; பராப
ரனை நோக்கிக் கூப்பிட்டார்கள்
இல்லை. — 6 திகிலில்லாத அவ்
விடத்திலே மெத்தவுந் திகில் அ
டைந்தார்கள்; ஏனெனில் உனக்கு
விரோதமாய்ப் பாளையம் இறங்கி
னவனுடைய எலும்புகளைப் பரா
பரன் சிதற அடித்தார். அவர்களை
வெட்கப்படுத்தினாய், ஏனெனில்
பராபரன் அவர்களை வெறுத்துப்
போட்டார்.— 7 ஆ, சீயோனிலி
ருந்து இஸ்ரவேலுடைய இரட்சிப்
புகள் வந்தால், தாவீளே; பராப
ரன் தம்முடைய சனத்தின் சிறை
யிருப்பைத் திருப்பும்போது, யாக்
கோபுக்குக் களிப்பும் இஸ்ரவே
லுக்கு மகிழ்ச்சியும் உண்டாம்.

54. சங்கீதம்.

சத்துருக்களின் பொல்லாப்பைத் தடு
க்க, தாவீது பராபரனை நம்பிக்கையாய்
வேண்டிக்கொண்டது.

கின்னாரங்களில் வாசிக்க இரா
சத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்
ட தாவீதின் போதக சங்கீதம்.

2 தாவீது எங்களிடத்தில் ஒளி
த்துக்கொண்டிருக்கிறானே என்
று சிப்பூரார் வந்து சவுலுக்குச்
சொன்னபோது பாடினது.
3 பராபரனே, நீர் உம்முடைய
நாமத்தின் நிமித்தமாக என்னை
இரட்சித்து, உம்முடைய வல்ல
மையினாலே எனக்கு நியாயஞ்
செய்யும்.— 4 பராபரனே, என்
செபத்தைக் கேளும், என் வா
யின் வார்த்தைகளுக்குச் செவி
கொடும். — 5 ஏனெனில் அந்நி
யர் எனக்கு விரோதமாய் எழும்
பி, பலவான்கள் என் பிராணனை
வாங்கத் தேடுகிறார்கள்; பராபர
னைத் தங்களுக்கு முன்பாக நிறுத்
தி நோக்கார்கள். சேலா.
6 இதோ, பராபரன் எனக்குச்
சகாயர்; ஆண்டவர் என் ஆத்து
மத்தை ஆதரிக்கிறவர்களுக்குள்
இருக்கிறார்.— 7 அவர் என் சத்
துருக்களுக்குத் தீமையைச் சரிக்
கட்டுவார்; உமது சத்தியத்தின்
நிமித்தமாக அவர்களைச் சங்கரி
யும்.— 8 உற்சாகமாய் உமக்குப்
பலி செலுத்துவேன்; கர்த்தாவே,
உமது நாமத்தைத் துதிப்பேன்,
ஏனெனில் அது நலமானது.—
9 ஏனென்றால் எல்லா நெருக்கத்
தையும் நீக்கி, என்னை விடுவிப்
பார்; என் கண் என்னுடைய சத்
துருக்களில் நீதி சரிக்கட்டுதலைக்
காணும்.

55. சங்கீதம்.

துன்பத்தின் நிமித்தமும், சிநேகிதனு
டைய துரோகத்தின் நிமித்தமும் தா
வீது புலம்பினது.

கின்னாரங்களில் வாசிக்க இ
ராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்
பட்ட தாவீதின் போதகசங்கீதம்.
2 பராபரனே, நீர் என் விண்
ணப்பத்திற்கு மறைந்திராமல்,
என் செபத்திற்குச் செவிகொடும்.—
3 என்னைக் கவனித்திரும், எனக்கு
உத்தரவு அருளிச் செய்யும்; நான்
சத்துருவினுடைய கூக்குரலின்
நிமித்தமும் ஆகாதவன் செய்யும்
இடுக்கத்தின் நிமித்தமும் என்
செபத்தியானத்திலே புலம்பிக்
கதறுகிறேன். — 4 ஏனெனில்
என்மேல் அக்கிரமத்தைச் சாட்
டிக் குரோதத்தினால் என்னைப்
பகைக்கிறார்கள்.
5 என் இருதயம் எனக்குள் வே
தனைப் பட்டிருக்கிறது; மரணத்
திகில்கள் என்மேல் விழுந்தன.—
6 பயமும் நடுக்கமும் எனக்கு வந்
து, அருக்களிப்பு என்னை மூடிற்
று.— 7 ஆ, எனக்குப் புறாவைப்
போல் செட்டைகள் இருந்தால்
தாவினை என்றேன்: அப்போது
பறந்துபோய் எங்கேயாகிலுந் தரி
த்திருப்பேன்.— 8 இதோ, தூர
மாய் அகன்று, வனாந்தரத்திலே
தங்குவேன். சேலா.— 9 பெருங்
காற்றுக்கும் புசலுக்குந் தப்பத்
தீவிரித்துக் கொள்ளுவேன்.
10 ஆண்டவரே, அவர்களை வி
ழுங்கும்; அவர்கள் நாவைப் பிரிந்
துப்போகப் பண்ணும், ஏனெனில்
கொடுமையும் சண்டையும் ஊரி
லே காண்கிறேன்.— 11 அவை
கள் இரவும் பகலும் அதன் மதில்
களில் அதைச் சுற்றுகிறது; அக்கி
ரமமும் வாதிப்பும் அதன் நடுவில்
இருக்கிறது.— 12 கேடுபாடுகள்

அதன் நடுவில் இருக்கிறது; தந்தி
ரமும் சபடும் அதின் வீதியை
விட்டு விலகாது.
13 ஏனெனில் என்னை நிந்
தைப்படுத்துகிறவன் சத்துருவா
யிருந்தவன் அல்ல, மற்றப்படி
அதைச் சகிப்பேன்; எனக்கு வி
ரோதமாய்ப் பெருமையாகிறவன்
என்னைப் பகைத்தவன் அல்ல,
மற்றப்படி அவனுக்கு மறைந்தி
ருப்பேன்.- 14 எனக்கு இராசியா
ன மனுஷனும் என் வழிகாட்டி
யும் எனக்கு அறிமுகமானவனுமா
கிய நீயே அவன். - 15 நாம் ஒரு
மித்து, இன்பமும் இரகசியமுமா
ய் யோசித்துப் பராபரனுடைய
வீட்டுக்கு ஏகமாய்ப்போனோமே.-
16 மரணம் அவர்கள்மேல் தண்
டல்காரனாய்விழுவதாக; உயிரோ
டே பாதாளத்திற்கு இறங்கக்கட
வார்கள். ஏனெனில் அவர்கள் சஞ்
சரிப்பிலும் அவர்கள் உள்ளத்தி
லும்பொல்லாப்புகள் இருக்கிறது.
17 நானோ பராபரனை நோக்
கிக் கூப்பிடுவேன்; கர்த்தர் என்
னை இரட்சிப்பார். — 18 அந்தி
சந்தி மத்தியானத்திலும் கெஞ்
சிக்கதறுவேன், என் சத்தத்தைக்
கேட்பார். — 19 எனக்கு வந்த
போரை நீக்கி, என் ஆத்துமத்
தைச் சமாதானமாக மீட்டுவிடுகி
றார்; ஏனெனில்திரளான கூட்ட
மாய் என்னோடு எதிர்க்கிறார்கள்.-
20 பராபரன் கேட்டு அவர்களைத்
தாழ்த்துவார், ஆதிமுதலாய் நியா
யத்திற்கு உட்கார்ந்திருக்கிறார்.
சேலா. ஏனெனில் அவர்களிடத்
திலே குணமாறுதல் இல்லை; பரா
பரனுக்குப் பயப்படார்கள்.

21 தன்னோடே சமாதானமாய்
இருந்தவர்கள் மீதில் தன் கைக
ளைப் போட்டுத் தன் உடன்படிக்
கையைக் குலைத்துப்போடுகிறான்.
22 அவன் வாயின் சொற்கள் வெ
ண்ணெயைப்போல் மெதுவான
வைகள், அவன் இருதயமோ யுத்
தம். அவன் வார்த்தைகள் எண்
ணெயிலும் மிருதுவானவைகள்,
ஆனால் அவைகளே உருவின பட்
டயங்கள்.
23 கர்த்தர்மேல் உன் பாரத்
தைப் போடு, அவர் உன்னைப் பரா
மரிப்பார்; நீதிமானை என்றென்
றைக்குந் தள்ளாட ஒட்டார். —
24 பராபரனே, தேவரீர்அவர்களை
அழிவின் குழியில் இறங்கப்பண்
ணுவீர்; இரத்தப் பிரியரும் சூதுள்
ள மனுஷரும் தங்கள் ஆயுளின்
நாட்களுக்கு வந்து சேருவதில்லை;
நானோ உம்மை நம்புவேன்.

56. சங்கீதம்.

*துன்பத்தில் தாவீது தன்னை நம்பிக்கை
யோடு பராபரனுக்கு ஒப்புக்கொடுத்
தது.*

பெலிஸ்தியர் தாவீதைக் காத்
ஊரிலே பிடிக்கையில், அவன்
தூரமாயிருக்கிறவர்களுக் குள்ளே
ஊமையாயிருக்கிற புறாவின்பேரி
லே பாடினதும், இராகத் தலைவ
னுக்கு ஒப்புவிக்கப்பட்டதுமான
பொற்பணதி கீதம்.
2 பராபரனே, எனக்கு இரங்
கும், ஏனெனில் மனுஷன் என்னை
விழுங்கப் பார்க்கிறான், நாள்தோ
றும் போர்செய்து என்னை ஒடுக்கு
கிறான். — 3 நாள்தோறும் என்

சத்துருக்கள் என்னை விழுங்கப்
பார்க்கிறார்கள்; ஏனெனில்உயரத்
திலிருந்து எனக்கு விரோதமாய்ப்
போர் செய்கிறவர்கள் அநேகர்.
4 நான் பயப்படுகிற நாளிலே
உம்மை நம்புவேன். – 5 பராபர
னை அவருடைய வார்த்தையின்
நிமித்தந் துதிப்பேன், பராபரனை
நம்பியிருக்கிறேன், நான் பயப்ப
டேன்; மாமிசம் எனக்கு என்ன
செய்யும்.

6 நித்தம் என் வார்த்தைகளைப்
புரட்டுகிறார்கள்; அவர்கள் நினைவு
களெல்லாம் எனக்கு விரோதமா
ய் எனக்குப் பொல்லாப்புச் செய்
வதற்கு இருக்கிறது. — 7 கூடிச்
சேர்ந்து பதிவிருக்கிறார்கள்; அவர்
கள் என் பிராணனை வாங்க ஆசை
யாய் என் அடியைப் பிடித்து வரு
கிறார்கள்.—8 தங்கள் அக்கிரமத்
திலே தப்புவார்களோ; பராபர
னே, உம்முடைய கோபத்திலே
சனசதளங்களைக் கீழே தள்ளும்.-
9 என் அலைதலைத் தேவரீர் எண்
ணியிருக்கிறீர்; என் கண்ணீரை
உம்முடைய துருத்தியிலே வை
யும்; அவைகள் உம்முடைய கணக்
கில் அல்லோ இருக்கிறது.
10 நான் உம்மை நோக்கிக் கூப்
பிடும் நாளில் என் சத்துருக்கள்
பின்னிட்டுத் திரும்புவார்கள்;
பராபரன் எனக்காக இருக்கிறார்
என்கிறதை அறிவேன்.-11 பராப
ரனை அவருடைய வார்த்தையின்
நிமித்தந் துதிப்பேன், கர்த்தரை
அவருடைய வார்த்தையின் நிமித்
தந் துதிப்பேன்.—12 பராபரனை
நம்பியிருக்கிறேன். நான் பயப்ப
டேன்; மனுஷன் எனக்கு என்ன
செய்வான். — 13 பராபரனே,
உமக்குச் சொன்ன பொருத்தனை
கள் என்மேல் இருக்கிறது; ஸ்
தோத்திரங்களை நான் உமக்குச்
செலுத்துவேன். — 14 ஏனெ
னில் பராபரனுக்கு முன்பாக
நான் சீவனுள்ளோருடைய வெ
ளிச்சத்திலே நடக்கும்படி, என்
ஆத்துமத்தை மரணத்திற்கும்
என் கால்களை இடறலுக்கும் அல்
லோ தப்புவித்தீர்.

57. சங்கீதம்.

குரூர சத்துருக்களின் நிமித்தம் தா
வீது பராபரனை ஆதரவாகப் பிடித்தது.

தாவீது சவுலுக்குத் தப்பி ஓடி,
கெபியில் ஒதுங்குகையில், தான்
கெட்டுப்போகாதபடி பாடினதும்
இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்டதுமான பொற்பணதி
கீதம்.
2 எனக்கு இரங்கும், பராபர
னே, எனக்கு இரங்கும், ஏனெ
னில் உம்மை என் ஆத்துமம்
அண்டிக் கொள்ளுகிறது; விக்கி
னங்கள் கடந்துபோகுமட்டும் உம்
முடைய செட்டைகளின் நிழலி
லே வந்து அடைவேன்.–3 எனக்
காக யாவையுஞ் செய்து முடிக்கப்
போகிற தேவனாகிய உன்னத
மான பராபரனை நோக்கிக் கூப்பி
டுவேன். — 4 என்னை விழுங்கப்
பார்க்கிறவன் என்னை நிந்திக்கை
யில், அவர் பரமண்டலங்களிலி
ருந்து ஒத்தாசை அனுப்பி என்
னை இரட்சிப்பார். சேலா. பராப
ரன்தமது கிருபையையும் தமது
சத்தியத்தையும் அனுப்புவார்.

5 என் ஆத்துமம் சிங்கங்களின்
நடுவில் இருக்கிறது; தீயை இறை
க்கிற மனுப்புத்திரருக்குள்ளே
கிடக்கிறேன்; அவர்கள் பல்லுகள்
ஈட்டியும் அம்புகளும், அவர்கள்
நாக்கு கருக்கான பட்டயமுமாயி
ருக்கிறது.
6 பராபரனே, வானங்களின்
மேல் உயரும்; உம்முடைய மகி
மை பூமி அனைத்தின்மேலும்
உயர்வதாக.- 7 என் காலடிகளுக்
கு வலையை முஸ்திப்புப் பண்ணி
னார்கள்; என் ஆத்துமத்தை மடங்
கடித்தான்; எனக்கு முன்பாகக்
குழியை வெட்டி அதின் நடுவிலே
விழுந்தார்கள். சேலா. — 8 என்
இருதயம் ஆயத்தமாயிருக்கிறது,
பராபரனே, என் இருதயம் ஆயத்
தமாயிருக்கிறது; நான் பாடிக்
கீர்த்தனம் பண்ணுவேன்.- 9 என்
மகிமையே, விழி; தம்புரே, சுர
மண்டலமே, விழி; அதிகாலமே
விழிப்பேன். — 10 ஆண்டவரே,
உம்மைச் சனசதளங்களுக்குள்
ளே துதிப்பேன், சாதிகளுக்குள்
ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணு
வேன்.—11 ஏனெனில் உமது
கிருபை வானங்கள் பரியந்தமும்,
உமது சத்தியம் ஆகாயமண்டலங்
கள் பரியந்தமும் பெரிதாயிருக்கி
றது.—12 பராபரனே, வானங்க
ளின்மேல் உயரும்; உம்முடைய
மகிமை பூமியனைத்தின் மேலும்
உயர்வதாக.

58. சங்கீதம்.

சத்துருக்களுடைய அநியாயத்தின் நிமித்தம் தாவீது செய்த விண்ணப்பம்.

தான் கெட்டுப்போகாதபடி தாவீது பாடினதும், இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்டதுமான பொற்பணதி கீதம்.

2 மனுப்புத்திரரே, நீங்கள் ஊ
மையாயிருக்கக்கொள்ள மெய்
யாய் நீதியைச் சொல்லுவீர்க
ளோ, நிதானமாய் நியாயந் தீர்ப்
பீர்களோ.-3 மனதாரத்தானே நி
யாயக்கேடுகளைச் செய்கிறீர்கள்,
பூமியிலே உங்கள் கைகளின் கொ
டுமையை நிறுத்துக்கொடுக்கிறீர்
கள்.—4 ஆகாதவர்கள் கர்ப்பமாய்
உற்பவித்தது முதற்கொண்டு பே
தலிக்கிறார்கள்; பொய் பேசுகிற
வர்கள் தாயின் வயிற்றில் பிறந்
தது முதற்கொண்டு வழிதப்புகி
றார்கள்.—5 சர்ப்ப விஷத்துக்கு
ஒப்பான விஷம் அவர்களில் இருக்
கிறது. - 6 முணுமுணுக்கிறவர்க
ளும் விந்தையுள்ள தம்பனக்கார
னும் இடுகிற சத்தத்தைக் கேளா
தபடி தன் காதை அடைக்கிற
செவிடான விரியன் பாம்பைப்
போல் இருக்கிறார்கள்.
7 பராபரனே, அவர்கள் வா
யில் இருக்கிற அவர்கள் பல்லுக
ளைத் தகர்த்துப்போடும்; கர்த்தா
வே, சிங்கக் குட்டிகளின் கடை
வாய்ப் பல்லுகளை நொறுக்கிப்
போடும். — 8 தானாய்க் கடந்து
ஓடுகிற தண்ணீரைப்போலே அவ
ர்கள் கழிந்து போகட்டும்; தங்கள்
அம்புகளை அவர்கள் நாணேற்றி
னால் அவைகள் தறிப்புண்டவைக
ளாகக் கடவது. — 9 கரைந்து
போகிற நத்தையைப் போலே
போகக் கடவார்கள்; கர்ப்பம்விழுந்
துபோகிற ஸ்திரீயின் முதிராப்

பிண்டத்தைப்போலே சூரியனைக்
காணாதிருப்பார்களாக. -10 உண
ருகிறதற்கு முன் உங்கள் முள்ளு
கள்முள்ளுக்காடாயிற்று; அதைப்
பச்சையோடுதானே உக்கிரமான
புசலினால் அடித்துக்கொண்டு
போவார்.
11 நீதி சரிக்கட்டுதலை நீதிமான்
காணும்போது மகிழுவான்; தன்
பாதங்களை ஆகாதவனுடைய இர
த்தத்திலே கழுவுவான். 12 அப்
போது மனுஷன்: மெய்யாய் நீதி
மானுக்குப் பலன் உண்டு என்றும்
மெய்யாய் பூமியில் நியாயஞ் செய்
கிற பராபரன் உண்டு என்றுஞ்
சொல்லுவான்.

59. சங்கீதம்.

குரூர சத்துருக்களின் சதிசர்ப்பனைக
ளைக் கண்டு பண்ணின செபம்.

தாவீதைக் கொல்வதற்காகச்
சவுல் அவன் வீட்டைக் காவல்
காப்பவர்களை அனுப்புகையில், அ
வன் தான் கெட்டுப் போகாதபடி
பாடினதும் இராகத்தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்டதுமான பொற்
பணதி கீதம்.

2 என் பராபரனே, என் சத்து
ருக்களுக்கு என்னைத் தப்புவியும்.
என் மேல் எழும்புகிறவர்களுக்கு
என்னை விலக்கி, உயர்ந்த அடைக்
கலத்திலே வையும் -- 3 அக்கிர
மக்காரருக்கு என்னைத் தப்புவித்
து, இரத்தப் பிரியரான மனுஷ
ருக்கு என்னை விலக்கி இரட்சி
யும்.
4 ஏனெனில், இதோ, என்பிரா
ணனுக்குப் பதிவிருக்கிறார்கள்;
கர்த்தாவே, என்னிடத்தில் மீறு
தலும் பாவமும் இல்லாதிருந்தும்,
பலவான்கள் எனக்கு விரோத
மாய்க் கூட்டங் கூடுகிறார்கள்.—
5 என்னிடத்தில் அக்கிரமம் இல்
லாதிருந்தும், ஓடித்திரிந்து ஆயத்
தமாகிறார்கள்; எனக்கு நேராக
விழித்துப் பாரும்.— 6 சேனைக
ளின் பராபரனாகிய கர்த்தாவே,
இஸ்ரவேவின் பராபரனே, தேவ
ரீர் சகல சாதிகளையும் விசாரிக்க
எழும்பும்; ஆங்காரமாய்த் துரோ
கஞ் செய்கிற ஆருக்கும் இரங்கா
தேயும். சேலா.—7 அவர்கள் சா
யங்காலத்திலே திரும்பிவந்து,
நாய்களைப்போலே குலைத்து, ஊ
ரைச் சுற்றி ஓடுகிறார்கள்.
8 இதோ, தங்கள் வாயினால்
வாதாடுகிறார்கள்; அவர்கள் உதடு
களில் பட்டயங்கள் உண்டு; ஏனெ
னில்: அதைக் கேட்கிறவன் ஆர்
என்கிறார்கள் -9 ஆனால், கர்த்தா
வே, தேவரீர் அவர்களை நகைப்
பீர், சகல சாதிகளையும் பரியாசம்
பண்ணுவீர்.—10 அவன் வல்ல
மையைக் கண்டு உமக்குக் காத்தி
ருப்பேன்; ஏனெனில் பராபரன்
எனக்கு உயர்ந்த அடைக்கலம்.—
11 கிருபையுள்ள என் பராபரன்
எனக்கு நேரிட்டு வருவார்; பராப
ரன் என்னை என் சத்துருக்களில்
நீதி சரிக்கட்டுதலைக் காணப்பண்
ணுவார்.
12 எங்கள் கேடயமாகிய ஆண்
டவரே, என் சனம் அதை மற
வாதபடி அவர்களை நீர் கொன்று
போடாமல், அவர்களை உமது
பலத்தினாலே அலையப்பண்ணித்
தாழ்த்தும்.—13 அவர்கள் உத
டுகளின் பேச்செல்லாம் அவர்கள்

வாயில் பாவமாயிருக்கிறது; ஆகை
யால் தங்கள் பெருமையிலும் தாங்
கள் சொல்லுகிற சர்ப்பனையின்
நிமித்தமும் பொய்யின் நிமித்த
மும் அவர்கள் பிடிபடட்டும். —
14 பராபரன் யாக்கோபிலே பூமி
யின் எல்லைகள் பரியந்தமும் ஆளு
கிறவர் என்று அவர்கள் அறிவத
ற்கு, அவர்களை உம்முடைய உக்
கிரத்திலே நிர்மூலமாக்கும்; இனி
இல்லாதபடி அவர்களை நிர்மூல
மாக்கும். சேலா. — 15 அவர்கள்
சாயங்காலத்திலே திரும்பிவந்து,
நாய்களைப் போலே குலைத்து, ஊ
ரைச் சுற்றி ஒடக் கடவார்கள். —
16அவர்கள் திருப்தியாகாதேபோ
னால், சாப்பிடுகிறதற்கு அலைந்து
திரிந்து, முறுமுறுக்கக் கடவார்
கள்.

17 நானோ உம்முடைய வல்ல
மையைப் பாடிக் காலமே உம்மு
டையகிருபையைக் கம்பீரமாய்ப்
புகழுவேன்; ஏனெனில் எனக்கு
நெருக்கம் உண்டான நாளிலே எ
னக்கு உயர்ந்த அடைக்கலமும் ஒ
துக்குமானீர். —என் பலமே,உம்
மைக் கீர்த்தனம் பண்ணுவேன்;
ஏனெனில் பராபரன் எனக்கு உ
யர்ந்த அடைக்கலமும் என் கிரு
பையுள்ள பராபரனுமாயிருக்கி
றார்.

60. சங்கீதம்.

நெருக்கத்திற்குப்பின் அடைந்த செயங்களுக்காகப் பராபரனை ஸ்தோத்திரித்தது.

தாவீது மெசொபொத்தாமியா
தேசத்துச் சூரியரோடும் சோபா
தேசத்துச் சூரியரோடும் யுத்தம்
பண்ணினபோதும், யோவாப் தி
ரும்பி உப்புப் பள்ளத்தாக்கிலே
ஏதோமியரில் பன்னீராயிரம் பே
ரை வெட்டினபோதும்,-2அவன்
சாட்சியை விளக்குவிக்கும் ஆறு
நரம்புக் கின்னரத்திலே போ
திப்புக்காகப் பாடினதும், இரா
கத் தலைவனுக்கு ஒப்புவித்தது
மான பொற்பணதி கீதம்.

3பராபரனே, எங்களை ஒழித்து
விட்டு, எங்களைத் தகர்த்துப்
போட்டுக் கோபமாயிருந்தீர், திரு
ம்ப எங்கள் புறமாய்த் திரும்பும்.-
4 பூமியை அதிரப்பண்ணி, அ
தை வெடிப்பாக்கினீர்; அதின்
வெடிப்புகளைக் கட்டும்; ஏனெ
னில் அசைகிறது. — 5 உம்மு
டைய சனத்திற்குக் கடினமானகா
ரியத்தைக் காணப்பண்ணினீர்;
தத்தளிப்பின் மதுபானத்தை எங்
களுக்குக் குடிக்கக் கொடுத்தீர். -
6ஆனால் உம்முடைய பிரியர் விடு
விக்கப்படும்படி, ஏற்றுங் கொடி
யை உமக்குப் பயந்தவர்களுக்குச்
சத்தியத்தின் நிமித்தமாகத் தந்
தீர். சேலா. -7 உமது வலது
கரத்தினாலே இரட்சித்து, எங்
கள் செபத்தைக் கேளும்.

8 பராபரன் தமது பரிசுத்த
ஸ்தலத்திலே விளம்பினதைப்
பற்றிக் களிகூருவேன், சீகே
மைப் பங்கிட்டுச் சுக்கோத்தின்
பள்ளத்தாக்கை அளந்து கொள்
ளுவேன். — 9 கீலேயாத் என்
னுடையது, மனாசேயும் என்னு
டையது, எப்பிராயீம் என் தலை
யின் பெலன், யூதா என் நியாய
நெறியாளன். — 10 மோவாப்
நான் கழுவுகிற பாத்திரமாயிருக்

கும், ஏதோமின் மேல் என் பாத
ரட்சையை நீட்டுவேன்; பெலிஸ்
தேயாவே, என்னைப் பார்த்துக்
கம்பீரி.
11 என்னை அரணான பட்ட
ணத்திற்குள் வழிவிடுபவர் ஆர்,
என்னை ஏதோம்மட்டுங் கொண்டு
போபவர் ஆர். - 12 பராபரனே,
எங்கள் சேனைகளோடே புறப்ப
டாமல், எங்களை ஒழித்துவிட்டி
ருந்த பராபரனானவர் தேவரீர்
அல்லவோ. — 13 இக்கட்டுக்குத்
தப்ப எங்களுக்குச் சகாயம் கட்ட
ளையிடும்; ஏனெனில் மனுஷ இ
ரட்சிப்பு அபத்தம்.
14 பராபரனாலே பலம் செய்
வோம்; அவரே எங்கள் சத்துருக்
களை மிதித்துப்போடுவார்.

61. சங்கீதம்.

மகா ஆபத்திலே தாவீது பராபரன் ம
றைவில் விசுவாசமாய் ஒதுங்கினது.

கின்னாரங்களில் வாசிக்க இரா
கத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்
ட தாவீதின் சங்கீதம்.
2 பராபரனே, என் கூப்பிடுத
லைக் கேட்டு, என் விண்ணப்பத்
திற்குக் கவனியும். — 3 என் இ
ருதயம் தொய்யும்போது, பூமி
யின் கடையாந்தரத்திலிருந்து
உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்;
நான் நிற்கிறதிலும் உயரமான
கன்மலையில் என்னைக் கொண்டு
போய்விடும்.-4 ஏனெனில் சத்து
ருவுக்கு எதிரே எனக்கு அடைக்
கலமும் பலத்த துர்க்கமுமானீர்.-
5 சதாகாலங்களாக உம்முடைய
கூடாரத்திலே தங்குவேன்; உம
து செட்டைகளின் மறைவிலே
வந்தடைவேன். சேலா.
6 ஏனெனில், பராபரனே, தே
வரீர் என் பொருத்தனைகளைக்
கேட்டீர்; உம்முடைய நாமத்துக்
குப் பயந்தவர்களின் சுதந்தரத்
தை எனக்குத் தந்தீர். —7 இரா
சாவுடைய நாட்களோடே நாட்க
ளைக் கூட்டுவீர்; அவன் வருஷங்
கள் தலைமுறை தலைமுறையாக
இருக்கும். - 8 பராபரனுக்கு முன்
பாக என்றென்றைக்கும் நிலைத்தி
ருப்பான்; அவனைத் தற்காக்கக்
கிருபையையும் உண்மையையுங்
கட்டளையிடும். — 9 இப்படியே
தினமும் என் பொருத்தனைகளை
நான் செலுத்தும்படியாய் உமது
நாமத்தை என்றென்றைக்குங்
கீர்த்தனம் பண்ணுவேன்.

62. சங்கீதம்.

தாவீது சத்துருக்களின் தீவினைகளைக்
கண்டு, பராபரனுடைய அடைக்கலத்
தில் ஒதுங்கினது.

எதித்தூன் என்ற இராகத்த
லைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தா
வீதின் சங்கீதம்.
2 பராபரனையே நோக்கி என்
ஆத்துமம் அமர்ந்திருக்கிறது; அ
வரால் என் இரட்சிப்பு வரும். -
3 அவரே என் கன்மலையும் என்
இரட்சிப்பும் என் உயர்ந்த அடை
க்கலமுமாய் இருக்கிறார்; நான்
மெத்தவும் அசைக்கப்படுவதில்
லை. - 4 எந்தமட்டும் ஒரே மனுஷ
னுக்குப் பொல்லாப்பு உண்டாக்
கப் பார்ப்பீர்கள்; நீங்கள் அனைவ
ரும் கொலையுண்ணப்பட்டுச்சாய்ந்

த மதிலுக்கும் இடிந்த சுவருக்
குஞ் சரியாவீர்கள். --5 ஆகிலும்
அவர்கள் அவனை அவன் மேன்
மையிலிருந்து விழத்தள்ள ஆலோ
சனைபண்ணி, அபத்தம் பேச வி
ரும்புகிறார்கள்; தங்கள் வாயினா
லே ஆசீர்வதித்துத் தங்கள் உள்
ளத்திலே சபிக்கிறார்கள். சேலா.
6 ஆனால், என் ஆத்துமமே,
பராபரனை நோக்கி அமர்ந்திரு; ஏ
னெனில் நான் நம்புகிறது அவ
ராலே வரும். -- 7 அவரே என்
கன்மலையும் என் இரட்சிப்பும்
என் உயர்ந்த அடைக்கலமுமாய்
இருக்கிறார்; நான் அசைக்கப்படு
வதில்லை. - 8 பராபரனிடத்தில்
என் இரட்சிப்பும் என் மகிமை
யும் இருக்கிறது; என் பெலனான
கன்மலையும் என் அடைக்கலமும்
பராபரனுக்குள் இருக்கிறது.—
9 சனமே, எந்தக்காலத்திலும் அ
வரை நம்பி, அவருக்கு முன்பாக
உங்கள் இருதயத்தை ஊற்றிப்
போடுங்கள்; பராபரன் நமக்கு அ
டைக்கலமாயிருக்கிறார். சேலா.
10 ஆனால் மனுப்புத்திரர் மா
யையும் துரைமக்கள் பொய்யுந்தா
னே; தராசிலே அவர்கள் ஏகமாய்
மாயையிலும் இலேசாய் ஏறுகிற
தற்கானவர்கள். — 11 கொடுமை
யையுங் கொள்ளையையும் நம்பாம
லும், வீணாய் உப்பாமலும் இருங்
கள்; ஆஸ்தி வளர்ந்தால், இருத
யத்தை அதன் மேல் வைக்காதே
யுங்கள். — 12 பராபரன் ஒன்று
சொன்னார், அதை இரண்டொரு
தரங்கேட்டேன்: வல்லமை பரா
பரனுடையது என்பதைத்தா
னே. — 13 கிருபையும் உம்மு
டையது, ஆண்டவரே, ஏனெ
னில் தேவரீர் அவனவனுக்கும்
அவன் செய்கைக்குத் தக்கதா
கச் செலுத்துவீர்.

63. சங்கீதம்.

தெய்வ ஆராதனைக்குப் பங்குள்ளவனாக
வாஞ்சையாய் தாவீது செய்த செபம்

தாவீது யூதாவின் வனாந்தரத்
தில் இருக்கையிலே பாடின சங்
கீதம்.
2 பராபரனே, தேவரீர் என்னு
டைய பராபரன்; அதிகாலையில்
உம்மைத் தேடுகிறேன்; வறண்ட
தும் விடாய்த்ததும் தண்ணீரற்
றதுமான பூமியில் என் ஆத்து
மம் உம்முடைய மேல் தாகமாயி
ருக்கிறது; என் மாமிசம் உம்மை
வாஞ்சிக்கிறது.—3 உமது வல்ல
மையையும் உம்முடைய மகிமை
யையுங் காணும்படி, நான் பரி
சுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்
க்க இத்தனை ஆசை உண்டு.-4 ஏ
னென்றால் சீவனைப் பார்க்கிலும்
உமது கிருபை நல்லது; என் உதடு
கள் உம்மைத் துதித்துக்கொண்
டிருக்கும். -5 இப்படியே நான் சீ
வனுள்ளமட்டும் உம்மை ஸ்தோத்
திரித்து, உமது நாமத்தில் என்
கைகளை ஏறெடுப்பேன்.-6 நிணத்
தையும் கொழுப்பையும் உண்ட
துபோலே என் ஆத்துமம் திருப்
தியாகும்; நான் என் மெத்தை
யின்மேல் உம்மை நினைக்கிற
போது, என் வாய் கம்பீரிப்பான
உதடுகளால் உம்மைப் போற்றும்.
7 சாமங்களில் உம்மைத் தியா
னிக்கிறேன்.-8 ஏனெனில் நீர் எ
னக்குத் துணையாய் இருந்ததினா

ல், உமது செட்டைகளின் நிழலி
லே கம்பீரிப்பாய் இருக்கிறேன்.-
9 என் ஆத்துமம் உம்மை ஒட்டிக்
கொண்டு தொடருகிறது; என்னை
உமது வலது கரம் தாங்குகிறது.-
10 ஆனால் என் ஆத்துமத்தைப்
பாழாக்கத் தேடுகிறவர்கள் பூமி
யின் பாதாள ஸ்தலங்களில் போ
வார்கள்.- 11 அவர்கள் பட்டயத்
தால் விழுவார்கள். நரிகளின் பங்
காவார்கள்.-12 இராசாவோ பரா
பரனுக்குள் மகிழுவான்; அவர்பே
ரில் சத்தியம் பண்ணுகிறவன்
எல்லாம் மேன்மை பாராட்டு
வான்; ஏனெனில் பொய்பேசுகிற
வர்களின் வாய் அடைக்கப்படும்.

64. சங்கீதம்.

*சத்துருக்களுக்குத் தன்னை விலக்கி இ
ரட்சிக்க, தாவீது வேண்டிக்கொண்
டது.*

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

2 பராபரனே, என் கெஞ்சுதலி
லே என் சத்தத்தைக் கேளும்;
சத்துருவால் வருந் திகிலை நீக்கி,
என் பிராணனைக் காப்பாற்றும்.-
3 என்னைப் பொல்லாதவர்களின்
இரகசிய ஆலோசனைக்கும் அக்கி
ரமக்காரருடைய அமளிக்கும் இ
டைஞ்சலாக மறையும்.

4 அவர்கள் தங்கள் நாவைப் ப
ட்டயத்தைப்போல் கூர்மையாக்
குகிறார்கள்.-5 மறைவுகளில் உத்
தமனை எய்யக் கசப்பான வார்த்
தைகளைத் தங்கள் அம்புகளாக்கி,
நாணேற்றுகிறார்கள்; அவனை அ
சுப்பிலே எய்து பயப்படாதிருக்கி
றார்கள்.-6 அவர்கள் பொல்லாத
விசேஷத்தை உறுதி பண்ணிக்
கொண்டு, கண்ணிகளை மறைவாய்
வைப்பதைப்பேசி: அவைகளை ஆர்
காண்பான் என்கிறார்கள்.—7 நி
யாயக் கேடுகளைத் தேடி எத்த
னம் பண்ணுகிறார்கள்; கெட்டோ
ம்; ஆய்ந்துதேடி எத்தனம் பண்
ணுகிறார்கள், அதுவே அவனவனு
டைய உள்ளம்; அவர்கள் இருத
யம் ஆழமுமாயிருக்கிறது.-8 ஆ
னால் பராபரன் அவர்களை எய்
வார்; தீவிரமாய் அம்புபட்டது
போல் அவர்கள் வாதைகள் இருக்
கும்.—9 அவர்கள் நாவுகள் அவர்
களைத் தானே விழப்பண்ணும்; அ
வர்களில் நீதி சரிக்கட்டுதலைப்
பார்க்கிற யாவரும் ஓடிப்போவார்
கள்.—10 எல்லா மனுஷரும் ப
யந்து பராபரனுடைய கிரியை
யை அறிவித்து, அவர் செயலை உ
ணருவார்கள்.—11 நீதிமான் கர்த்
தருக்குள் மகிழ்ந்து அவரை நம்பு
வான்; செம்மை இருதயத்தார் அ
னைவரும் மேன்மை பாராட்டுவார்
கள்.

65. சங்கீதம்.

தயவுள்ள பராபரனைத் துதித்தது.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதமாகிய
பாட்டு.

2 பராபரனே, சீயோனில் உம்
மை நோக்கி அமர்ந்திருந்து துதிக்
கிறார்கள்; உமக்குப்பொருத்தனை
செலுத்தப்படும்.–3 செபத்தைக்
கேட்கிறவரே, உம்மண்டை சக
ல மாமிசமும் வருவதாக.–4 அக்கி
ரமங்களின் விசேஷங்கள் என்

மேல் மிஞ்சி வல்லமை கொண்ட
து; ஆனால் எங்கள் மீறுதல்களைத்
தேவரீர் நிவிர்த்தியாக்குகிறீர். —
5 உம்முடைய பிரகாரங்களில் வா
சமாயிருக்க நீர் தெரிந்துகொண்டு
சேர்க்கிறவன் பாக்கியவான்; உம்
முடைய பரிசுத்த தெய்வாலயமா
கிய உமது வீட்டின் நன்மையால்
திருப்தியாவோம்.- 6 பூமியின் க
டையாந்தரங்களும் தூரத்திலுள்
ள கடற்கரைகளும் எல்லாம் நம்
பும் நம்பிக்கையாகிய எங்கள் இ
ரட்சிப்பின் பராபரனே, நீர் பயங்
கரமான காரியங்களைச் செய்கிற
தினால் எங்களுக்கு நீதியுள்ள மறு
உத்தரவை அருளுகிறீர்.- 7 உம்
முடைய பலத்தினாலே பருவதங்
களை உறுதிப்படுத்தி, வல்லமை
யை இடைகட்டிக் கொண்டிருந்
து,- 8 சமுத்திரங்களின் மும்மு
ரத்தையும் அவைகளுடைய அலை
களின் மும்முரத்தையும் சனசத
ளங்களின் அமளியையும் அமர்த்
துகிறவராய் இருக்கிறீர்.- 9 கடை
யாந்தர இடங்களில் குடியிருக்கிற
வர்களும் உம்முடைய அடையா
ளங்களின் நிமித்தம் பயப்படுகிறார்
கள்; விடியற்காலத்திலுஞ் சாயங்
காலத்திலும் புறப்படுகிறவைக
ளைக் கம்பீரிக்கப் பண்ணுகிறீர்.-
10 தேவரீர் பூமியை விசாரித்துப்
பார்த்து, அதற்குத் தவனம் உண்
டாக்கின பின், அதை மிகவுஞ்
சம்பூரணப்படுத்துகிறீர். பராப
ரனுடைய வாய்க்கால் தண்ணீர்
நிரம்பியிருக்கிறது; நீர் இப்படி அ
தைத் திருத்தின பின் அவர்களுக்
குத் தானியத்தை விளைவிக்கிறீர்.-
11 அதன் வரப்புகள் தணியத்தக்
களையாய் அதன் படைச்சால்களு
க்குத் தண்ணீர் இறைத்து, அ
தை மழைகளால் கரையப்பண்
ணி, அதன் பயிரை ஆசீர்வதிக்கி
றீர். — 12 வருஷத்தை உம்மு
டைய நன்மையால் முடிசூட்டுகி
றீர்; உமது பாதைகள் நெய்யாய்ப்
பொழிகிறது. — 13 வனாந்தரத்
தாபரங்கள் மீதில் பொழிகிறது;
மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்
கிறது.- 14 மேய்ச்சல் வெளிகள்
ஆடுகளைப் பூண்டிருக்கிறது; பள்
ளத்தாக்குகள் தானியத்தால் மூடி
யிருக்கிறது; அதன் நிமித்தங் கம்
பீரித்துப் பாடுகிறார்கள்.

66. சங்கீதம்.

பராபரனுடைய அதிசயமான கிரியை
களின் நிமித்தம் அவரைத் துதித்தது.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட சங்கீதமாகிய பாட்டு.
பூமியின் குடிகளே, எல்லாரும்
பராபரன் முன்பாகக் கம்பீரியுங்
கள்.— 2 அவர் நாமத்தின் மகி
மையைக் கீர்த்தனம் பண்ணி, அ
வர் துதியைக் கனமானதாக்குங்
கள்.— 3 பராபரனுடனே: உமது
கிரியைகளில் எத்தனை பயங்கர
மாயிருக்கிறீர் என்று சொல்லுங்
கள்; உமது வல்லமையினுடைய
திரட்சியின் நிமித்தமாக உம்மு
டைய சத்துருக்கள் உமக்கு வணக்
கமாய்ப் பேசுவார்கள். — 4 பூமி
அனைத்தும் உம்மைப் பணிந்து
கொண்டு, உம்மைக் கீர்த்தனம்
பண்ணக் கடவது; அவர்கள் உம்
முடைய நாமத்தைக் கீர்த்தனம்
பண்ணக் கடவார்கள். சேலா.

5 வந்து, பராபரனுடைய செய்
கைகளைப் பாருங்கள்; அவர் மனுப்
புத்திரரிடத்தில் நடப்பிக்குங் கிரி
யையில் பயங்கரமானவர். - 6 கட
லை வெட்டாந்தரையாக மாற்றி
னார்; ஆற்றைக் கால் நடையாய்க்
கடந்தார்கள்; அங்கே அவரால்
மகிழ்ச்சி அடைந்தோம். - 7 அவர்
தம்முடைய வல்லமையினால் என்
றென்றைக்கும் ஆளுகிறவர்; அவ
ருடைய கண்கள் சாதிகள்மேல்
நோக்கமாயிருக்கிறது; முரட்டா
ட்டக்காரர் தங்களை உயர்த்தா
திருப்பார்களாக. சேலா.
8 சனசதளங்களே, நம்முடைய
பராபரனை ஸ்தோத்திரித்து,
அவர் துதியின் சத்தத்தைக் கேட்
கப்பண்ணுங்கள். — 9 அவர் நம்
முடைய கால்களைத் தள்ளாட
ஒட்டாமல், நம்முடைய ஆத்துமத்
தை உயிரோடே வைக்கிறார். —
10 ஏனென்றால், பராபரனே, எங்
களைச் சோதித்தீர், வெள்ளியைப்
புடமிடுகிறதுபோலே எங்களைப்
புடமிட்டீர். - 11 எங்களை வலைக்
குட்படுத்தி, எங்கள் இடுப்புகளின்
மேல் வருத்தமான பாரத்தைப்
போட்டீர். — 12 மனுஷரை எங்
கள் தலையின்மேல் ஏறிப்போகப்
பண்ணினீர்; தீக்குந் தண்ணீருக்
கும் உள்ளானோம், ஆனால் சம்பூ
ரணம் அடைய எங்களை அதற்கு
நீங்கலாக்கிப் புறப்படப் பண்ணி
னீர்.
13 சர்வாங்க தகனங்களோடே
உமது வீட்டுக்குள் பிரவேசிப்
பேன். — 14 என் இக்கட்டில்
என் உதடுகள் திறவுண்டு, என்
வாய் சொன்ன என்னுடைய பொ
ருத்தனைகளை உமக்குச் செலுத்து
வேன். — 15 உமக்குக் கொழுப்
பான தகனபலிகளை இட்டு, ஆட்
டுக் கடாக்களின் நிணப்புகையை
யுங் காட்டுவேன், மாடுகளையும்
கடாக்களையும் படைப்பேன். சே
லா.
16 பராபரனுக்குப் பயந்தவர்
களே, எல்லாரும் வந்து கே
ளுங்கள், அவர் என் ஆத்துமத்
துக்குச் செய்ததைச் சொல்லு
வேன், — 17 அவரை நோக்கி
என் வாயினாலே கூப்பிட்டேன்;
என் நாவினால் உயர்த்தப்பட்டார்.
18 என் இருதயத்தில் அக்கிரம
நோக்கமாய் இருந்தேனானால், ஆ
ண்டவர் என்னைக் கேளார். —
19 மெய்யாய்ப் பராபரன் என்
னைக் கேட்டு, என் செபத்தின் சத்
தத்தைக் கவனித்தார். – 20 என்
செபத்தை அல்லத்தட்டாமலும்,
தமது கிருபையை என்னை விட்டு
விலக்காமலும் இருந்த பராபரன்
ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

67. சங்கீதம்.

பராபரன் தம்முடைய இராச்சியத்தைச் சாதிகளுக்குள் பரம்பப் பண்ணி அதை ஆசீர்வதிக்கச் சபை செய்யும் செபம்.

கிண்ணரங்களில் வாசிக்க இரா
கத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்
பட்ட பாட்டாகிய சங்கீதம்.
2 பூமியில் உம்முடைய வழி
யும், எல்லாச் சாதிகளிலும் உம்மு
டைய இரட்சிப்பும் அறியப்படப்
3 பராபரன் எங்களுக்கு இரங்கி,
எங்களை ஆசீர்வதித்து, தம்மு
டைய முகத்தை எங்கள்மேல் பிர

காசிக்கப்பண்ணக் கடவார். சே
லா. — 4 பராபரனே, சனசத
ளங்கள் உம்மைத் துதிப்பதாக,
எல்லாச் சனசதளங்களும் உம்
மைத் துதிப்பதாக. — 5 சாதிகள்
மகிழ்ந்து கம்பீரிப்பதாக; ஏனெ
னில் சனசதளங்களை நிதானமாய்
நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள சாதி
களை நடத்துவீர். சேலா. — 6 பரா
பரனே, சனசதளங்கள் உம்மைத்
துதிப்பதாக, எல்லாச் சனசதளங்
களும் உம்மைத் துதிப்பதாக. —
7 பூமி தன் பலனைத் தரக் கட
வது; எங்கள் தேவனாகிய பராப
ரன் எங்களை ஆசீர்வதிக்கக் கட
வார். — 8 பராபரன் எங்களை
ஆசீர்வதிக்கக் கடவார்; பூமியின்
எல்லைகள் எல்லாம் அவருக்குப்
பயந்திருப்பதாக.

68. சங்கீதம்.

கிறிஸ்துவின் செயத்தையும் வல்லமை
யையுங் காண்பிக்கிற திர்க்கதரிசனம்.

இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் பாட்டாகிய
சங்கீதம்.

2 பராபரன் எழுந்திருப்பார்,
அவருடைய சத்துருக்கள் சித
றுண்டு, அவரைப் பகைக்கிறவர்
கள் அவருக்கு முன்பாக ஓடிப்போ
வார்கள். - 3 புகை காற்றால் தள்ளப்
படுமாப்போலே அவர்களைத் தள்
ளுவீர்; நெருப்பின் முன் மெழுகு
உருகுமாப் போலே ஆகாதவர்கள்
பராபரன் சந்நிதியால் அழிவார்
கள். — 4 ஆனால் நீதிமான்கள்
பராபரனுக்கு முன்பாக மகிழ்ந்து
களிகூர்ந்து சந்தோஷமாய்க் க
ளிப்பார்கள்.

5 பராபரனைப் பாடி, அவரு
டைய நாமத்தைக் கீர்த்தனம்
பண்ணுங்கள்; வனாந்தரங்களிலே
ஏறிவருகிறவருக்கு வழியைச் சம
னாக்குங்கள்; அவருடைய நாமம்
கர்த்தர், அவருக்கு முன்பாகக்
களிகூருங்கள். — 6 அவர் திக்கற்ற
வர்களுக்குப் பிதாவும், விதவை
களுக்கு நியாயம் விசாரிக்கிறவரு
மாய்த் தம்முடைய பரிசுத்த
வாசஸ்தலத்தில் இருக்கிற பரா
பரன். — 7 அவர் தனிமையான
வர்களை வீட்டிலே வாசமாயிருக்
கப்பண்ணி, கட்டுண்டவர்களைச்
சரியான வேளைகளில் நீக்கிவிடு
விக்கிற பராபரன். முரட்டாட்
டக்காரரோ வறண்ட ஸ்தலத்தி
லே தங்குவார்கள்.

8 பராபரனே, நீர் உம்முடைய
சனத்தின் முன்னாலே புறப்பட்டு,
அவாந்தர வெளியிலே நடந்து
வருகையில், சேலா. - 9 பூமி அதிர்ந்
தது; வானங்களும் பராபரனுக்கு
முன்பாகப் பொழிந்தது; இந்தச்
சீனாய் இஸ்ரவேலின் தேவனாகிய
பராபரனுக்கு முன்பாக இப்படி
யானது. — 10 பராபரனே, சம்
பூரண மழையைப் பெய்யப்பண்
ணுவீர், இளைத்ததாகிய உமது
சுதந்தரத்தைத் தேவரீர் திடப்
படுத்துவீர்.

11 அதிலே உம்முடைய மந்தை
தங்கியிருக்கிறது; பராபரனே,
சிறுமையானவனுக்கு அதை உம்
முடைய தயவினால் பக்குவமாக்
குவீர். - 12 ஆண்டவர் வசனந் தரு
வார், சுவிசேஷகிகளின் திரள்
சேனை உண்டாயிருக்கும். - 13 சே
னைகளின் இராசாக்கள் சுற்றிச்

சுற்றித் திரிவார்கள்; வீட்டிலே
வாசமாயிருக்கிறவளோ கொள்ளை
யைப் பங்கிடுவாள். — 14 நீங்கள்
இருபுறப் படை வகுப்புகளுக்குள்
ளே இருக்கையில், வெள்ளியாலே
மூடப்பட்ட புறாச்செட்டைக
ளின் சாயலாகவும், தங்கநிறமாகிய
அதன் இறகுகளின் சாயலாகவுங்
காணுகிறது. —15 சர்வத்துக்கும்
வல்லவர் அதில் இராசாக்களை
இங்கும் அங்கும் வைத்தால், காரி
ருளிலேவெளிச்சமாம். – 16 பரா
பரனுடைய பருவதம் பாசான்
பருவதத்தைப்போல் இருக்கிறது,
அது பாசான் பருவதத்தைப்
போல் மேடுகள் உள்ளது.-17 பரு
வதங்களே, மேடுகளே, என் விம்
மியிருக்கிறீர்கள்; இந்தப் பருவ
தத்திலே வாசமாயிருக்கப் பராப
ரன் விரும்பினார், ஆம், கர்த்தர்
அதிலே என்றென்றைக்கும் வாச
மாயிருப்பார்.

18 பராபரனுடைய இரதங்கள்
பதினாயிரங்களும் ஆயிரத்து ஆயி
ரங்களும் ஆனது; ஆண்டவர் பரி
சுத்த ஸ்தலமான சீனாயிலிருந்த
வண்ணமாய் அவர்களுக்குள் இருக்
கிறார். — 19 தேவரீர் உன்னதத்
திற்கு ஏறிச் சிறையாக்குதலைச்
சிறையாக்கிப்போட்டு, வரங்களை
மனுஷருக்குள்ளும் முரட்டாட்
டஞ் செய்தவர்களுக்குள்ளுங் கூ
டப் பங்கிடுவதற்கும், இப்படியே
பராபரனாகிய கர்த்தர் அவர்களுக்
குள் வாசமாயிருப்பதற்குமாக
வாங்கிக் கொண்டீர்.

20 ஆண்டவர் எந்நாளும் ஸ்
தோத்திரிக்கப்பட்டவர்; நம்மு
டைய மேல் பாரஞ்சுமத்துகிறார்,
ஆனால் அவரே நம்முடைய இரட்
சிப்பான பராபரன். சேலா. —
21 பராபரன் நமக்கு இரட்சிப்பு
களை அருளுகிற பராபரனாயிருக்
கிறார்; ஆண்டவராகிய கர்த்தரால்
மரணத்துக்கு நீங்கும் போக்குகள்
உண்டு.–22 மெய்யாகவே பராப
ரன் தம்முடைய சத்துருக்களின்
சிரசையும், தன் தோஷங்களில்
நடந்து கொண்டிருக்கிறவனுடை
ய மயிருள்ள உச்சியையும் உடைப்
பார். — 23 சத்துருக்களில் அவ
னவனுடைய இரத்தத்திலே உம்
முடைய கால் பதியும்படியாகவும்
உம்முடைய நாய்களின் நாக்கு
அதை நக்கும்படியாகவும், —
24 ஆண்டவர் பாசானிலிருந்து
நம்முடைய சனத்தைத் திரும்ப
அழைத்து வருவோம் என்றும்,
அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்
து திரும்ப அழைத்து வருவோம்
என்றும் சொன்னார்.

25 பராபரனே, உம்முடைய
நடைகளைக் காண்பார்கள்; என்
பராபரனும் என் இராசாவும் பரி
சுத்த ஸ்தலத்திலே நடந்து வரு
கிற நடைகளைத் தானே.-26 முன்
னாகப் பாடுவாரும் பின்னாக மே
ளஞ் சேவிக்கிற கன்னியாஸ்திரீ
களுக்குள்ளே கிண்ணாரங்களை வா
சிப்பாரும் நடப்பார்கள். 27 ஆண்
டவராகிய பராபரனை இஸ்ரவேலி
னுடைய ஊற்றின் நிமித்தமாகச்
சபைகளில் ஸ்தோத்திரியுங்கள்
என்பார்கள். — 28 அங்கே அவர்
களை ஆளுகிற சின்ன பென்யமீ
னும், யூதாவின் பிரபுக்களும், அ
வர்கள் கூட்டமும், செபுலோனின்

பிரபுக்களும், நப்தலியின் பிரபுக்
களும் உண்டு.
29 உமது பராபரன் உம்மு
டைய பலத்தைக் கட்டளையிட்
டார்; பராபரனே, நீர் எங்களுக்கு
உண்டுபண்ணினதைத் திடப்ப
டுத்தும். —30 எருசலேமிலுள்ள
உம்முடைய தெய்வாலயத்துக்
காக இராசாக்கள் உமக்குக் காணி
க்கைகளைக் கொண்டுவருவார்கள்.
31 நாணலில் தங்கும் மிருகத்தை
யும், வெள்ளித் துண்டுகளின் நி
மித்தம் மிதித்துப்போட்டு, சன
சதளங்கள் என்ற கன்றுக் குட்டி
களுக்குள் இருக்கிற வலுவான
எருதுகளின் கூட்டத்தையும் உ
தம்பும். யுத்தங்களை விரும்புகிற
சனசதளங்களைச் சிதறடிப்பார். -
32 பிரபுக்கள் எகிப்திலிருந்து வரு
வார்கள், எத்தியோப்பியா தன்
கைகளைப் பராபரனண்டை எடுக்
கத் தீவிரிக்கும்.

33 பூமியின் இராச்சியங்களே,
பராபரனைப்பாடி, ஆண்டவரைக்
கீர்த்தனம்பண்ணுங்கள். சேலா.-
34 ஆதி வானங்களுடைய வானங்
களின் மேல் ஏறியிருக்கிறவரைப்
பாடுங்கள்; இதோ, தமது சத்தத்
தால் வலுமுழக்கத்தைக் கேட்கப்
பண்ணுகிறார். -35 பராபரனுக்கு
வல்லமையைச் செலுத்துங்கள்;
அவருடைய மகிமை இஸ்ரவே
லின் மீதிலும் அவருடைய வல்ல
மை ஆகாயமண்டலங்களிலும் உள்
ளது.— 36 பராபரனே, உமது
பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பய
ங்கரமாய் விளங்குகிறீர்; சனத்
துக்குப் பெலனையுஞ் சத்துவங்க
ளையுங் கொடுக்கிறவர் இஸ்ரவே
லின் பராபரன் தானே. பராபரன்
ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

69. சங்கீதம்.

பாடுபடுகிற மேசியாவின் செபம்.

ஆறு நரம்புக்கின்னாரத்திலே
வாசிக்க இராகத் தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்
கீதம்.
2 பராபரனே, என்னை இரட்சி
யும்; ஏனெனில் தண்ணீர்கள் ஆத்
துமமட்டும் வருகிறது.- 3 நிலை
யாத ஆழத்தின் உளையில் அமிழ்ந்
தித் தண்ணீர்களின் பாதாளங்க
ளுக்கு உள்ளானேன்; நீரோட்டங்
கள் என்மேல் புரண்டு போகிற
து. — 4 நான் கூப்பிடுகிறதினு
லே இளைத்தேன்; என் தொண்
டை கம்மிப்போயிற்று; என் பரா
பரனுக்கு நான் காத்திருக்கை
யால், என் கண்கள் பூத்துப்போ
யிற்று. — 5 முகாந்தரமில்லாமல்
என்னைப் பகைக்கிறவர்கள் என்
தலையின் மயிர்களிலும் அதிகமா
யிருக்கிறார்கள்; எனக்கு வீண் சத்
துருக்களாய் என்னைச் சங்கரிக்கி
றவர்கள் பலத்திருக்கிறார்கள்;
அது நான் கொள்ளையிடாததைத்
திரும்பக் கொடுக்குங் காலம்.
6 பராபரனே, நீர் என் பைத்தி
யத்தை அறிந்திருக்கிறீர், என்
குற்றங்கள் உமக்கு ஒளிந்திராது.-
7 சேனைகளின்கர்த்தராகிய ஆண்
டவரே, உம்மை நம்புகிறவர்கள்
என்னாலே வெட்கப்பட்டுப் போ
காமலும், இஸ்ரவேலின் பராபர
னே, உம்மைத் தேடுகிறவர்கள்
என்னாலே நாணமடையாமலும்

இருப்பார்களாக. — 8 ஏனெனில்
உம்முடைய நிமித்தம் நிந்தையை
உத்தரிக்கிறேன்; இலச்சை என்
முகத்தை மூடுகிறது. — 9 என்
சகோதரருக்கு வேற்று மனுஷ
னும், என் தாயின் பிள்ளைகளுக்கு
அந்நியனுமானேன். — 10 ஏனெ
ன்றால் உம்முடைய வீட்டுக்காக
இருக்கிற பத்தி வைராக்கியம்
என்னைப் பட்சித்தது; உம்மை நிந்
திக்கிறவர்களுடைய நிந்தனைகள்
என்மீதில் விழுந்தது. — 11 என்
ஆத்துமத்தின் உபவாசத்திலே
அழுதேன்; ஆனால் அது எனக்கு
நிந்தனைகளாயிற்று. — 12 இரட்
டை என் உடுப்பாக்கினேன், ஆ
னால் அவர்களுக்குப் பழமொழி
ஆனேன். — 13 வாசலில் உட்
கார்ந்திருக்கிறவர்கள் என்னைக்
குறித்துப் பேசுகிறார்கள். மதுபா
னம் குடிக்கிறவர்களின் பாடல்
ஆனேன்.

14 நானோவென்றால், கர்த்தா
வே, பிரியமான காலத்திலே உம்
மை நோக்கி என் விண்ணப்பத்
தைச் செய்கிறேன்: பராபரனே,
உமது மிகுந்த கிருபையினாலும்
உமது இரட்சிப்பின் சத்தியத்தி
லும் என் விண்ணப்பத்தைக்கேட்
டருளும். —15 நான் அமிழ்ந்திப்
போகாதபடி என்னைச் சேற்றுக்கு
நீங்கலாக்கிவிடும்; நான் என்னைப்
பகைக்கிறவர்களையும் தண்ணீர்க
ளின் ஆழங்களையும் விட்டு நீங்கட்
டும். — 16 நீரோட்டங்கள் என்
மேல் புரளாமலும், ஆழம் என்னை
விழுங்காமலும், துரவு என்மேல்
தன் வாயை அடைக்காமலும் இ
ருப்பதாக. - 17 கர்த்தாவே,என்
விண்ணப்பத்தைக் கேட்டருளும்;
ஏனெனில் உம்முடைய கிருபை
நலமாயிருக்கிறது; உம்முடைய
மிகுந்த இரக்கங்களின்படியே எ
ன்னை நோக்கிப்பாரும்.-18 உமது
முகத்தை உமமுடைய ஊழியக்
காரனுக்கு மறைக்காதேயும், ஏ
னெனில் எனக்கு நெருக்கம் உண்
டு; தீவிரமாய் என் விண்ணப்பத்
தைக் கேட்டருளும். — 19 நீர்
என் ஆத்துமத்தைக் கிட்டி, அதை
விடுவித்துக்கொள்ளும்; என் சத்
துருக்களின் நிமித்தம் என்னை
மீட்டு விடும்.

20 தேவரீர் என் நிந்தையையும்
என் வெட்கத்தையும் என் அவ
மானத்தையும் அறிந்திருக்கிறீர்;
என் சத்துருக்கள் அனைவரும்
உமக்கு எதிரே இருக்கிறார்கள்.-
21 நிந்தை என் இருதயத்தை மு
றிக்கிறது; மிகவும் பலக்கேடா
னேன். யாதொருவன் பரிதாபப்
படுவானோ என்று காத்திருந்தே
ன், ஒருவனும் இல்லை; தேற்றரவு
பண்ணுகிறவர்களுக்கு காத்திருந்
தேன், ஆரையுங் காணேன். —
22 எனக்குப் பிச்சு உண்கத் தந்
து, என் தாகத்திலே எனக்குக்
காடி குடிக்கக் கொடுக்கிறார்கள்.-
23 அவர்களுடைய பந்தி அவர்க
ளுக்கு முன்பாகச் சுருக்கும் சரிக்
கட்டுதலான கண்ணியுமாகக் கட
வது. — 24 அவர்களுடைய கண்
கள் காணாதபடி அந்தகாரப்படக்
கடவது; அவர்கள் இடுப்புகளை எப்
போதுந் தள்ளாடப் பண்ணும். —
25 உம்முடைய சினத்தை அவர்
கள் மேல் ஊற்றும். உம்முடைய
கோபத்தின் உக்கிரம் அவர்களைத்

தொடர்ந்து பிடிப்பதாக. - 26 அ
வர்கள் வீடுவாசல் பாழாகக் கட
வது; அவர்களுடைய கூடாரங்க
ளில் குடியில்லாமல் போவதாக.
27 ஏனெனில் தேவரீர் அடித்த
வனை அவர்கள் துன்பப்படுத்தி,
தேவரீரால் காயப்பட்டவர்களை
நோகப் பேசுகிறார்கள். — 28 அ
வர்கள் உமது நீதிக்கு வராதபடி
அவர்களுடைய அக்கிரமத்தின்
மேல் அக்கிரமம் சேரட்டும். —
29 அவர்கள் நீதிமான்களோடே
எழுதப்படாமல், சீவபுஸ்தகத்தில்
கிறுக்கப்படக் கடவார்கள்.

30 நானோவெனில் சிறுமையும்
நோயுமுள்ளவன். பராபரனே, உம்
முடைய இரட்சிப்பு எனக்கு உ
யர்ந்த அடைக்கலமாவதாக. - 31 ப
ராபரனுடைய நாமத்தைப் பாட்
டினாலே துதித்து, அவரை ஸ்
தோத்திரத்தினாலே மகிமைப்ப
டுத்துவேன். - 32 கொம்பும் விரிசற்
குளம்புமுள்ள மாட்டையும் காளை
யையும் எருதையும் பார்க்க அது
வே கர்த்தருக்குப் பிரியமாயிருக்
கும். — 33 சிறுமையானவர்கள்
அதைக் கண்டு சந்தோஷப்படு
வார்கள். பராபரனைத் தேடுகிற
வர்களே, உங்கள் இருதயம் வா
ழும். — 34 ஏனெனில் கர்த்தர்
எளியவர்களைக் கேட்கிறவர், கட்
டுண்ட தம்முடையவர்களை அவர்
புறக்கணியார். - 35 வானங்களும்
பூமியும் சமுத்திரங்களும் அவைக
ளில் அசைவாடுகிற யாவும் அவ
ரைத் துதிக்கக் கடவது. - 36 ஏ
னெனில் பராபரன் சீயோனை இ
ரட்சித்து, யூதாவின் பட்டணங்க
ளைக் கட்டுவார்; அப்போது அங்
கே குடியிருந்து, அதைச் சுதந்த
ரித்துக் கொள்வார்கள். - 37 அவரு
டைய ஊழியக்காரரின் வித்தார்
அதைச் சுதந்தரித்துக்கொள்வார்
கள்; அவருடைய நாமத்தைச்
சிநேகிக்கிறவர்கள் அதிலே வாச
மாயிருப்பார்கள்.

70. சங்கீதம்.

தன்னை விடுவித்துச் சத்துருக்களுக்கு இலச்சையும் விசுவாசிகளுக்கு மகிழ்ச்சியும் வரப்பண்ண, தாவீது பராபரனை வேண்டிக்கொண்டது.

நினைப்பூட்டுதலாகப் பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

2 பராபரனே, என்னைத் தப்பு
விக்கவும், கர்த்தாவே, எனக்குச்
சகாயஞ் செய்யவுந் தீவிரியும். —
3 என் பிராணனை வாங்கத் தேடு
கிறவர்கள் வெட்கி நாணுவார்க
ளாக; என் தீங்கை விரும்புகிறவர்
கள் பின்னிட்டுத் திரும்பி இலச்
சை அடைவார்களாக. — 4 ஆகா,
ஆகாஎன்கிறவர்கள்தாங்கள் அடை
யும் வெட்கமான பலனாலே பின்
னிடைந்துபோகக் கடவார்கள். —
5 உம்மைத் தேடுகிற அனைவரும்
உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்
படுவார்களாக; உம்முடைய இரட்
சிப்பைச் சிநேகிக்கிறவர்கள் எப்
போதும்: பராபரன் மகிமைப்ப
டக் கடவார் என்பார்களாக. - 6 நா
னோவெனில் சிறுமையும் எளிமை
யுமாய் இருக்கிறேன்; பராபரனே,
எனக்குச் சகாயம் பண்ணத் தீவிரி
யும், என் துணையும் என்னை விடு

விக்கிறவரும் தேவரீர். கர்த்தா
வே, தாமதியாதேயும்.

71. சங்கீதம்.

*முதிர்ந்த வயதாகிற தாவீது தன்
பெரிய துன்பங்களில் பராபரன் மேல்
வைத்த நம்பிக்கையைக் காண்பித்தது.*

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்
கிறேன்; நான் என்றைக்கும் வெ
ட்கப்பட்டுப் போகாதிருக்கட்டும்.
2 உம்முடைய நீதியின் நிமித்த
மாக என்னைத் தப்புவித்து விடு
விப்பீராக; என்னண்டை உம்
முடைய செவியைச் சாய்த்து,
என்னை இரட்சியும்.—3 எனக்கு
நான் எப்போதும் வந்தடையுங்
கன்மலையாக இரும்; என்னை இரட்
சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; ஏ
னெனில் தேவரீர் என் கன்மலை
யும் கோட்டையுந்தானே.- 4 என்
பராபரனே, என்னை ஆகாதவ
னுடைய கைக்கும், நியாயக்கேடுந்
துஷ்டாட்டமு மானவனுடைய
கைக்குந் தப்புவியும். 5 ஏனெனில்,
கர்த்தராகிய ஆண்டவரே, தேவ
ரீர் என்னுடைய நோக்கமும் என்
சிறுவயது துவக்கி என் நம்பிக்கை
யுமாயிருக்கிறீர். - 6 நான் கர்ப்பத்
திலிருந்தது முதல் உம்முடைய
மேல் சார்ந்துகொண்டேன்; தேவ
ரீர் என்னை என் தாயின் குடல்க
ளிலிருந்து இழுத்தவர்; உம்மு
டைய பேரில் எப்போதும் துதி
சொல்லுவேன்.

7 அநேகருக்கு ஒரு அற்புதம்
போல்ஆனேன்;தேவரீரோவென்
றால் எனக்குப் பலத்த அடைக்
கலம்.—8 என் வாய் உம்முடைய
துதியினாலும் நாள்தோறும் உமது
மகத்துவத்தினாலும் நிறைவதாக.
9 முதிர்ந்த வயதிலே என்னைத்
தள்ளிவிடாமலும் என் பெலன்
ஒடுங்கும்போது என்னைக் கைவி
டாமலும் இருப்பீராக.- 10 ஏனெ
னில் என் சத்துருக்கள் எனக்கு
விரோதமாய்ப் பேசி, என் ஆத்து
மத்துக்குக் காவலிருக்கிறவர்கள்
ஏகமாய் ஆலோசனை பண்ணி:—
11 பராபரன் அவனைக் கைவிட்
டார்; அவனைத் தொடர்ந்து பிடி
யுங்கள்; ஏனெனில் விடுவிப்பார்
இல்லை என்கிறார்கள். — 12 பரா
பரனே, எனக்குத் தூரமாக இரா
தேயும்; என் பராபரனே, எனக்
குச் சகாயம் பண்ணத் தீவிரியும்.-
13 என் ஆத்துமத்தை விரோதிக்
கிறவர்கள் வெட்கி அழியவும், எ
னக்குப் பொல்லாப்பைத் தேடு
கிறவர்கள் நிந்தையாலும், இலச்
சையாலும் மூடப்படவுங் கடவார்
கள்.

14 நானோ எப்போதும் நம்பி,
உம்முடைய எல்லாத் துதியின்
மேலுந் துதியைக் கூட்டுவேன்.-
15 என் வாய் உமது நீதியையும்
நாள்தோறும் உமது இரட்சிப்பை
யும் சொல்லும்; ஏனெனில் அவை
களின் தொகையை அறியேன்.
16 கர்த்தராகிய ஆண்டவருடைய
வல்லமைகளில் உட்பிரவேசிப்
பேன், உம்முடைய நீதியை மாத்
திரமே நினைப்பேன். - 17 பராபர
னே, என் சிறுவயது துவக்கி என்
னைப் போதித்துவந்தீர்; இந்நேரம்
மட்டுக்கும் உம்முடைய அதிசயங்
களை அறிவிக்கிறேன். — 18 இப்

போதும், பராபரனே, நான் உமது
புயத்தை இச்சந்ததிக்கும், உமது
வல்லமையை வரப்போகிற யாவ
ருக்கும் அறிவிக்குமளவும், முதிர்
ந்த வயதும் நரையுமட்டாக என்
னைக் கைவிடீராக.–19 *பெரிதா
னவைகளைச் செய்த பராபரனே,
உம்முடைய நீதி உயரமட்டுஞ்
சேருகிறது; பராபரனே, உம்
மைப்போலே ஆர்.
20 அநேக இக்கட்டுகளையும்
கொடிதானவைகளையும் என்னைப்
பார்க்கப் பண்ணின நீர் திரும்ப
என்னை உயிர்ப்பித்துத் திரும்ப
என்னைப் பூமியின் பாதாளங்களி
லிருந்து ஏறப் பண்ணுவீராக.—
21 என் முக்கியத்தைப் பெருகப்
பண்ணி, என்னை மறுபடியுந் தேற்
றுவீராக.-22 என் பராபரனே, நா
னும் தம்புரினாலே உம்மையும் உம்
முடைய சத்தியத்தையுந் துதிப்
பேன்; இஸ்ரவேலருடைய பரி
சுத்தரே, உம்மைச் சுரமண்டலத்
தால் கீர்த்தனம் பண்ணுவேன்.-
23 என் உதடுகளும் நீர் மீட்டு
விட்ட என் ஆத்துமமும் கம்பீரிக்
கும்; ஏனெனில் உம்மைக் கீர்த்
தனம் பண்ணுவேன்.—24 என்
நாவு நாள்தோறும் உமது நீதி
யைக் கொண்டாடும்; ஏனென்
றால் எனக்குப் பொல்லாப்பைத்
தேடுகிறவர்கள் வெட்கி இலச்
சைப்பட்டுப் போனார்கள்.

72. சங்கீதம்.

பரம சாலொமோனாகிய மேசியாவினு
டைய இராச்சியத்தின் பாக்கியப்
பெருக்கம்.

சாலொமோனுடையது.

பராபரனே, இராசாவுக்கு உம்
முடைய நியாயத் தீர்ப்புகளையும்
இராசாவின் குமாரனுக்கு உம்மு
டைய நீதியையுங் கட்டளையிடும்.
2 அவர் உம்முடைய சனத்தை
நீதியும் உம்முடைய சிறுமையான
வர்களை நிதானமுமாய் நியாயம் வி
சாரிப்பார். — 3 பருவதங்கள்
சனத்துக்குச் சமாதானத்தைத்
தரும்; மேடுகள் நீதியின் விளை
வோடு இருக்கும்.- 4 அவர் சனத்
தில் சிறுமையானவர்களை நியாயம்
விசாரித்து, எளியவன் பிள்ளை
களை இரட்சித்து, இடுக்கஞ் செய்
கிறவனை நசுக்குவார்.—5 சூரிய
னும் சந்திரனுமுள்ளமட்டும் உமக்
குத் தலைமுறை தலைமுறையாகப்
பயந்திருப்பார்கள்.— 6 புல்லறுப்
புண்ட வெளியின்மேல் இறங்கு
கிற மழையைப் போலவும் பூமி
யை நனைக்கிற தூற்றல்களைப்
போலவும் இறங்குவார். - 7 அவ
ருடைய நாட்களில நீதிமான் செ
ழிப்பான்; சந்திரன் இல்லாமல்
போகுமட்டும் மிகுதியான சமா
தானம் இருக்கும்.- 8 ஒரு சமுத்
திரந் துவக்கி மற்றச் சமுத்திரம்
மட்டாகவும் ஆறு துவக்கிப் பூமி
யின் எல்லைகள் மட்டாகவும் ஆளு
வார். — 9 அவருக்கு முன்பாக
வனாந்தரத்தார் குனிவார்கள்; அவ
ருடைய சத்துருக்கள் மண்ணை
நக்குவார்கள். — 10 தர்சீசின்
இராசாக்களும் தீவுகளின் இரா
சாக்களும் காணிக்கைகளைச் செ
லுத்த வருவார்கள்; சபெயா செபா
என்ற தேசங்களின் இராசாக்கள்

வெகுமானங்களைக்கொண்டு வரு
வார்கள். — 11 சகல இராசாக்க
ளும் அவரைப் பணிந்துகொள்ளு
வார்கள்; சகல சாதிகளும் அவ
ரைச் சேவிப்பார்கள்.—12 ஏனெ
னில் கூப்பிடுகிற எளியவனையும்
சிறுமையானவனையும் உதவியற்ற
வனையும் விடுவிப்பார்.-13 தரித்
திரரும் எளிமையுமானவனைத்
தப்புவித்து, எளியவர்களின் ஆத்
துமங்களை இரட்சிப்பார்.—14 அ
வர்கள் ஆத்துமங்களைத் தந்திரத்
திற்கும் கொடுமைக்குந் தப்பவிடு
வித்துக் கொள்ளுவார்; அவர்கள்
இரத்தம் அவருடைய பார்வைக்
கு அருமையானது.—15 அவர் பி
ழைப்பார்; அவருக்குச் சபெயா
வின பொன்னில் கொடுக்கப்படும்;
எப்போதும் அவரை வேண்டிச்
செபம் பண்ணப்படும்; எந்நாளும்
ஸ்தோத்திரிக்கப்படுவார்.-16 பூமி
யில் பருவதங்களின் கொடுமுடியி
லே விதைக்கப்பட்ட ஒரு பிடி
தானியம் போலே இருக்கும்; அ
தன் விளைச்சல் லீபனோனைப்போ
லே அசையும்; நிலத்தின் பூண்டு
களைப் போலே பட்டணத்திலி
ருந்து பூப்பார்கள்; — 17 அவரு
டைய நாமம் என்றென்றைக்கும்
இருக்கும்; சூரியன் உள்ள மட்டும்
அவருடைய நாமம சந்தான பாரம்
பரையாய் இருக்கும்; எல்லாச் சா
திகளும் அவருக்குள் ஆசீர்வதித்
துக்கொண்டு, அவரைப் பாக்கிய
முடையவர் என்பார்கள்.

18 ஒருவராய் அதிசயங்களைச்
செய்கிற இஸ்ரவேலின் தம்பிரா
னுயிருக்கிற பராபரனாகிய கர்த்தர்
ஸ்தோத்திரிக்கப்பட்டவரும், —
19 அவருடைய மகிமையான நா
மம் என்றென்றைக்கும் ஸ்தோத்
திரிக்கப்பட்டதுமாமே; அவரு
டைய மகிமையால் பூமி அனைத்
தும் நிறையப்படுவதாக. ஆமென்;
ஆமென்.

20 ஈசாயின் குமாரனாகிய தாவீ
தின் செபங்கள் முடிந்தன.

73. சங்கீதம்.

பொல்லாருடைய வாழ்வைப் பார்த்து
இடறல் அடையாதபடி பாடியது.

ஆசாப்பின் சங்கீதம்.

இஸ்ரவேலுக்கு, அதாவது இரு
தயத்திலே சுத்தமானவர்களுக்
குப் பராபரன் நல்லவர் தானே.-
2 என்னுடைய கால்களோவென்
றால் சாயவும், என் அடிகள் சறுக்
கவும் சற்றுத் தப்பிற்று,- 3 ஏனெ
னில் ஆகாதவர்களின் சாங்கோ
பாங்கத்தை நான் காண்கையில்,
வீம்புக்காரர்மேல் பொறாமையா
னேன்.

4 அதேனென்றால் தங்கள் மர
ணம் மட்டும் அவாகளுக்கு இடுக்
கண்களில்லாமல் அவர்களுடைய
பெலன் புஷ்டியாயிருக்கிறது.—
5 நரசீவ வருத்தத்தில் அகப்பட்
டிரார்கள்; வேறே மனுஷரோடே
உபாதை அடையார்கள்,-6 ஆகை
யால் பெருமை அவர்களை ஒரு
சரப்பளியைப்போலே பூணும்; அ
வர்கள் கொடுமை அவர்களை ஆடை
யாபரணத்தைப்போலே மூடும்.-
7 அவர்கள் கண்கள் நிணத்திலி
ருந்து பார்க்கிறது; அவர்கள் மன
வேகங்கள் நடந்தேறுகிறது. —

8 பிறரைத் தொய்யப்பண்ணி ஆங்
காரமாய் இடுக்கஞ் செய்வதைப்
பேசுகிறார்கள்; உயரத்திலிருந்து
பேசுகிறார்கள்.—9 தங்கள் வாயை
வானத்திலே வைக்கிறார்கள்;
அவர்கள் நாவின்படியே பூமியில்
நடக்கும்.—10 ஆனபடியால் அவர்
களுடைய சனம் இந்த வழியாக
வே திரும்பும்; தண்ணீர்கள் அவர்
களுக்குப் பரிபூரணமாகச் சுரந்து
வரும்.—11 அவர்கள் பராபரன்
அதை எப்படி அறிவார், உன்னத
மானவரில் அதன் அறிவு உண்
டோ என்கிறார்கள்.—12 இதோ,
இவர்கள் ஆகாதவர்களாமே; ஆகி
லும் என்றுஞ் சுக ஜீவிகளாயிருந்
து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணு
கிறார்கள்.

13 நான் விருதாவாகவே என்
இருதயத்தைச் சுத்தம்பண்ணி,
என் கைகளைக் குற்றமில்லாமை
யிலே கழுவினேன்.—14 நான்
நித்தம் வாதிக்கப்படுகிறவனாமே;
என் தண்டனைகள் காலைமாறு
திரும்புமே.—15 இப்படிச் சொல்
லுவேன் என்றேனேயாகில் இ
தோ, உம்முடைய பிள்ளைகளின்
சந்ததிக்குத் துரோகியாவேன்.—
16 இதை அறியும்படி யோசித்
தேன்.—17 ஆனால் நான் பராபர
னுடைய பரிசுத்த ஸ்தலங்களுக்
குள் பிரவேசித்து, அவர்கள்
கடைசிக் காரியத்தைக் கவனித்
து உணருமளவும், அது என் பார்
வைக்கு விசனமாயிருந்தது.

18 சறுக்கல்களிலே அவர்களை
நிறுத்தி, அவர்களைப் பாழ்க்கடிப்பு
களில் விழப்பண்ணுகிறீர். —
19 ஒரு நிமிஷத்திலே எத்தனை
யாய்ப் பாழாவார்கள்; பயங்கரங்க
ளாலே அழிந்து நிர்மூலமாவார்
கள்.—20 ஆண்டவரே நித்திரை
தெளிந்த உடனே சொப்பனம்
ஒழியுமாப்போலே, அவர்கள் வே
ஷத்தைப் பட்டணத்தில் ஈன
மாய்ப் போகப்பண்ணுவீர்.

21 என் நெஞ்சு வர்மித்து,
நான் என் உள்ளிந்திரியங்களில்
குத்துருவப்படுகிறவனாய் இருக்
கக்கொள்ள, — 22 நான் காரியத்
தை அறியாத மூடனும், உமக்கு
முன்பாக மிருகக் குணமுமாயிருந்
தேன். — 23 ஆகையால் நான்
எப்போதும் உம்மண்டையிலே
தரிப்பேன்; என் வலது கையைப்
பிடித்துத் தாங்குவீர்.—24 உம்
முடைய யோசனையின்படி என்
னை நடத்திக் கடைசியிலே என்
னை மகிமையில் ஏற்றுக்கொள்ளு
வீராக.—25 பின்னை ஆர் எனக்
குப் பரமண்டலங்களில் இருக்கி
றார்; உம்மோடே நான் இருக்கை
யில், பூமியில் எனக்கு வேறே
விருப்பம் இல்லை.—26 என் மாமி
சமும் என் இருதயமும் மாளும்
போது, பராபரன் என்றென்
றைக்கும் என் இருதயத்தின்
கன்மலையும் என் பங்குமாய் இருக்
கிறார்.

27 ஏனெனில், இதோ, உம்மை
விட்டுத் தூரமாகிறவர்கள் அழி
வார்கள்; உம்மை விட்டுச் சோரம்
போகிற அனைவரையுஞ் சங்கரிப்
பீர்.—28 எனக்கோ பராபரனை
அண்டிக்கொண்டிருக்கிறதே நல்
லது; நான் உமது கிரியைகளை எல்
லாம் சொல்லி வரும்படி, கர்த்த

ராகிய ஆண்டவர் மேல் என் நம்
பிக்கையை வைத்திருப்பேன்.

74. சங்கீதம்.

பாழாக்கப்பட்ட சபை செய்யும் விண்
ணப்பம்.

ஆசாப்பின் போதக சங்கீதம்.

பராபரனே, ஏன் எங்களை என்
றைக்கும் தள்ளிவிடுகிறீர், ஏன் உ
மது கோபம் உம்முடைய மேய்ச்ச
லின் ஆடுகள்மேல் புகைகிறது.—
2 நீர் பூர்வகாலந்துவக்கிச் சம்பா
தித்துக்கொண்ட உமது சபையை
யும், நீர் மீட்டுக்கொண்ட உமது
சுதந்தரமான கோத்திரத்தை
யும், நீர் வாசமாயிருந்த சீயோன்
பருவதத்தையும் நினைவுகூரும்.—
3 நித்திய பாழ்க்கடிப்புகளுக்கு
உம்முடைய பாதங்களை எழுந்தரு
ளப் பண்ணும்; சத்துரு பரிசுத்த
ஸ்தலத்தில் அனைத்தையுங் கெ
டுத்துப் போட்டான்.

4 உம்முடைய சத்துருக்கள்
உம்முடைய ஆலயங்களின் உட்
புறத்திலே கர்ச்சித்துத் தங்கள்
அடையாளங்களை அடையாளங்க
ளாக வைத்தார்கள். — 5 மரங்க
ளின் அடர்த்தியில் வெட்டக் கோ
டாரிகளை ஓங்கி எடுக்கிறவன் என்
று அவனவன் பேர்போனான். —
6 இப்போதும் அதன் சித்திரவே
லைகளை ஏகமாய் வாச்சியாலும் சுத்
திகளாலுந் தகர்த்தார்கள்.-7 உம்மு
டைய பரிசுத்த ஸ்தலத்தை அக்
கினிக்கு இரையாக்கி, உம்முடை
ய நாமத்தின் வாசஸ்தலத்தைத்
தரையாக்கி, பரிசுத்தத்தைக் கு
லைத்துப் போட்டார்கள்.-8 அவர்
களை ஏகமாய் நிர்த்தூளியாக்கு
வோம் என்று தங்கள் இருதயத்
தில் சொல்லி, தேசத்திலுள்ள
பராபரனுடைய ஆலயங்களை எல்
லாம் சுட்டெரித்தார்கள்.-9 எங்
கள் அடையாளங்களைக் காணோம்;
தீர்க்கதரிசி அப்புறம் இல்லை; எந்
தமட்டும் என்று அறிகிறவன் எங்
களிடத்திலும் இல்லை.

10 பராபரனே, எந்தமட்டும்
சத்துரு நிந்திப்பான்; பகைஞன்
என்றைக்கும் உம்முடைய நாமத்
தைத் தூஷணிப்பானோ.-11 ஏன்
உமது கையையும் உமது வலது
கரத்தையும் முடக்கிக்கொள்ளுகி
றீர்; அதை உமது மடியிலிருந்து
எடுத்து நீட்டிக்கொண்டிரும். —
12 ஏனெனில் பூமியின் நடுவிலே
இரட்சிப்புகளைச் செய்கிற பரா
பரன் ஆதிகால முதலாய் என்னு
டைய இராசா.--13 தேவரீர் உம்
முடைய வல்லமையால் சமுத்தி
ரத்தை இரண்டாகப் பிளந்து,
தண்ணீர்களில் வலுசர்ப்பங்க
ளின் தலைகளை உடைத்தீர். —
14 தேவரீர் முதலைகளின் தலைக
ளை நருக்கிப்போட்டு, அதை வனாந்
தரத்தாராகிய சனத்துக்குப் போ
சனமாகக் கொடுத்தீர்.—15 தே
வரீர் ஊற்றையும் ஆற்றையும் பி
ளந்து பிறக்கப்பண்ணினீர்; தேவ
ரீர் வலுநதிகளை வற்றிப்போகவும்
பண்ணினீர்.—16 பகலும் உம்மு
டையது, இராவும் உம்முடையது;
தேவரீர் வெளிச்சத்தையும் சூரிய
னையும் படைத்தீர்.—17 தேவரீர்
பூமியின் எல்லைகளை எல்லாந் திட்
டம் பண்ணினீர்; கோடைகாலத்

தையும் மாரிகாலத்தையுந் தேவ
ரீர் உண்டாக்கினீர்.
18 சத்துரு கர்த்தராகிய தேவ
ரீரை நிந்திக்கிறதையும், பைத்தி
யங்கொண்ட சனம் உம்முடைய
நாமத்தை தூஷணிக்கிறதை
யும் நினைத்திரும். — 19 உம்மு
டைய காட்டுப்புறாவின் ஆத்துமத்
தை மிருகத்துக்கு ஒப்புக்கொடா
தேயும்; உம்முடைய சிறுமையா
னவர்களின் பிராணனை என்றை
க்கும் மறந்திராதேயும்.—20 உம்
முடைய உடன்படிக்கையை நினை
த்தருளும்; ஏனெனில் பூமியில்
இருளான இடங்கள் கொடுமைக்
குடியிருப்புகளால் நிறைந்திருக்கி
றது. — 21 நொறுங்குண்டவன்
நாணத்தோடே திரும்பாமல், சிறு
மையானவனும் எளிமையானவ
னும் உம்முடைய நாமத்தைத்
துதிப்பார்களாக.-22 பராபரனே,
நீர் எழும்பி உம்முடைய வழக்கை
வழக்காடும்; பைத்தியக்காரனாலே
நாள்தோறும் உமக்கு வரும் நிந்
தையை நினையும். — 23 உம்மு
டைய சத்துருக்களின் கூக்குரலை
மறவாதேயும்; உமக்கு விரோத
மாய் எழும்புகிறவர்களின் அமளி
எப்போதும் அதிகரிக்கிறது.

75. சங்கீதம்.

பெருமைக்காரரைத் தாழ்த்தித் தாழ்
மையானவர்களை உயர்த்துகிற பராபர
னுடைய மகத்துவம்.

தான் கெட்டுப்போகாதபடி பா
டினதும் இராகத் தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்டதுமான ஆசாப்
பின் சங்கீதமாகிய பாட்டு.

2 உம்மைத் துதிக்கிறோம், பரா
பரனே, உம்மைத் துதிக்கிறோம்;
உம்முடைய நாமம் சமீபமாயிருக்
கிறது; உம்முடைய அதிசயங்க
ளைச் சொல்லி வருகிறார்கள். —
3 நியமிக்கப்பட்டதை நான் அடை
யும்போது, நான் உத்தம நிதான
மாய் நியாயந் தீர்ப்பேன். - 4 பூமி
யும் அதன் எல்லாக் குடிகளும்
இளகிப்போனாப்போலேஆயிற்று;
நான் அதன் தூண்களை நிலைநிறுத்
துவேன். சேலா.

5 வீம்புக்காரருடனே: வீம்பு
சொல்லாதேயுங்கள் என்றும், ஆ
காதவர்களுடனே: கொம்புகளை
ஏறெடுக்காதேயுங்கள் என்றுஞ்
சொன்னேன்.- 6 உங்கள் கொம்
புகளை உயரமாய் எடுக்காதேயுங்
கள், பெருமைக் கழுத்தினால் கடி
னமாய்ப் பேசாதேயுங்கள். - 7 ஏ
னெனில் கிழக்கிலாகிலும் மேற்கி
லாகிலும் மலைகளின் வனாந்தரத்
திசையிலாகிலும் இருந்து உங்க
ளுக்குச் செயம் வராது என்றேன்.
8 ஏனென்றால் பராபரனே நியா
யாதிபதி; இவனைத் தாழ்த்தி, அ
வனை உயர்த்துகிறார். - 9 ஏனெ
னில் மிகுதியும் கலங்கிப் பொங்கு
கிற மதுபானத்தினாலே நிறைந்த
பாத்திரம் கர்த்தருடைய கையில்
இருக்கிறது; அதிலிருந்து வார்க்கி
றார்; ஆனால் பூமியிலுள்ள ஆகாத
வர்கள் அனைவரும் அதன் வண்
டல்களை உறிஞ்சிக் குடிப்பார்கள்.
10 நானோ என்றென்றைக்கும்
இதை அறிவித்து, யாக்கோபுடை
ய பராபரனைக் கீர்த்தனம் பண்
ணி, - 11 ஆகாதவர்களின் கொம்
புகளை எல்லாம் வெட்டுவேன்;

நீதிமானுடைய கொம்புகளோ
உயர்த்தப்படும்.

76. சங்கீதம்.

ஜெயத்தைக் கட்டளையிட்ட பராபரனை
மகிமைப்படுத்தினது.

கிண்ணாரங்களிலே வாசிக்க இ
ராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்
பட்ட ஆசாப்பின் சங்கீதமாகிய
பாட்டு.
2 யூதாவில் பராபரன் அறியப்
பட்டவர்; இஸ்ரவேலில் அவரு
டைய நாமம் பெரியது.-3 சாலே
மில் அவருடைய கூடாரமும், சீ
யோனில் அவருடைய வாசஸ்தல
மும் இருக்கிறது. – 4 அங்கே
இருந்து வில்லின் அம்புகளையும்,
கேடயம் பட்டயம் யுத்தத்தையும்
முறிக்கிறார். சேலா.
5 மகத்துவமானவரே, கொள்
ளையிடுகிற மலைகளைப் பார்க்கிலும்
தேவரீரே பிரகாசம் உள்ளவர்.—
6 வீரிய நெஞ்சுள்ளவர்கள் கொள்
ளையாய்ப் போனார்கள்; தங்கள் நித்
திரையை அடைந்து அசந்தார்கள்;
வல்லமையுள்ள எல்லா மனுஷரு
டைய கைகளும் அவர்களுக்குக்
கவைக்கு வராதே போயிற்று.—
7 யாக்கோபின் பராபரனே, உம்
முடைய உதம்புதலால் இரதங்க
ளும் குதிரைகளும் உறங்கி விழுந்
தன. - 8 நீர், நீரே பயங்கரமான
வர்; உமது கோபம் பற்றியெரிகிற
து முதல் ஆர் உமக்கு முன்பாக
நிற்பான். — 9 வானங்களிலிருந்
து நியாயத் தீர்ப்பைக் கேட்கப்
பண்ணினீர். — 10 பூமியிலுள்ள
எல்லாச் சிறுமையானவர்களையும்
இரட்சிக்கப் பராபரன் நியாயம்
விசாரிப்பதற்கு எழும்புகையில்,
பூமி பயந்து அமர்ந்தது. சேலா.
11 எனெனில் மனுஷனுடைய
உக்கிரம் உமது மகிமையை விளங்
கப்பண்ணும்; இன்னம் அதிக உக்
கிரங்களால் இடை கட்டிக்கொள்
ளுவீர்.-12 உங்கள் பராபரனாகிய
கர்த்தருக்குப் பொருத்தனைகளைச்
சொல்லிச் செலுத்துங்கள்; அவ
ரைச் சூழ்ந்திருக்கிற அனைவரும்
பயங்கரமானவருக்குக் காணிக்கை
களைக் கொண்டுவரக் கடவார்கள்.-
13 பிரபுக்களின் ஆவியைத் தறிக்
கிறார்; பூமியின் இராசாக்களுக்கு
அவர் பயங்கரமானவர்.

77. சங்கீதம்.

பராபரன் முன் செய்த அதிசயங்களை
நினைவுகூர்ந்து உபத்திரவத்தில் ஆறு
தல் அடைவது.

எதித்தூன் என்ற இராகத்தலை
வனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாப்
பின் சங்கீதம்.
2 நான் பராபரனுக்கு நேராக
என் சத்தத்தை உயர்த்திக் கூப்
பிடுகிறேன், என் சத்தத்தைப்
பராபரனண்டை உயர்த்துகிறே
ன், அவர் எனக்குச் செவி கொடுக்
கிறார். — 3 என் நெருக்கத்தின்
நாளிலே ஆண்டவரைத் தேடி
னேன்; என் கை இராக்காலத்
தில் ஒழிந்திராமல் விரிக்கப்பட்டி
ருந்தது; என் ஆத்துமம் ஆறுதல்
அடைந்துகொள்ளாதே போயிற்
று.-4 நான் பராபரனை நினைக்
கும்போது அலறினேன்; நான் யோ
சிக்கும்போது என் ஆவி தொய்ந்

து போயிற்று. சேலா. — 5 என்
கண்களின் இமைகளைப் பிடித்தி
ருந்தீர்; நான் பேசமாட்டாதபடி
மன முறிச்சலாய் இருந்தேன்.
6 பூருவ நாட்களையும் ஆதி கா
லத்து வருஷங்களையுஞ் சிந்தித்
தேன். — 7 நான் இராக்காலத்
தில் என் கின்னாரங்களை நினைத்
து, என் இருதயத்தோடே சம்பா
ஷித்துக்கொண்டேன்; என் ஆவி
ஆராய்ந்ததாவது: — 8 ஆண்டவர்
இனி அப்புறந் தயவுசெய்யாமல்,
நித்திய காலங்களாக ஒழித்துவிடு
வாரோ; - 9 அவருடைய கிருபை
என்றென்றைக்கும் அற்று, வாக்
குத்தத்தமானது தலைமுறை த
லைமுறைக்கும் ஒழிந்து போயிற்
றோ; - 10 பராபரன் இரங்க மறந்
தாரோ, தம்முடைய இரக்கங்க
ளைக் கோபத்தினால் அடைத்துப்
போட்டாரோ என்றேன். சேலா.
11 இதுவோ பலவீனப்படும் வ
கை; காரியத்தின் மாறுதல் உன்
னதமானவருடைய வலது கரத்தி
லிருக்கிறது என்று சொல்லிக்—
12 கர்த்தருடைய செயல்களை நி
னைவு கூர்ந்தேன்; உம்முடைய
பூருவகாலத்து அதிசயங்களைத்
தானே நான் நினைவுகூர்ந்து, —
13 உம்முடைய எல்லாக் கிரியை
களையுந் தியானித்து, உம்முடைய
செயல்களை யோசித்தேன்.
14 பராபரனே, உமது வழி பரி
சுத்த ஸ்தலத்தில் உள்ளது. பரா
பரனைப்போல் பெரிய தேவன்
ஆர்,- 15 அதிசயங்களைச் செய்கிற
பராபரன் தேவரீரே; சனசதளங்
களுக்குள்ளே உம்முடைய வல்ல
மையைத் தெரியப்பண்ணினீர்.-
16 யாக்கோபு, யோசேப்பு என்ற
வர்களின் புத்திரராகிய உம்மு
டைய சனத்தை உமது புயத்தி
னாலே மீட்டுக்கொண்டீர். சேலா.-
17 சலங்கள் உம்மைக் கண்டது;
பராபரனே, சலங்கள் உம்மைக்
கண்டு தத்தளித்தது; ஆழங்களும்
குலுங்கிற்று.-18 மேகங்கள் சலங்
களைப் பொழிந்து விட்டது; ஆகா
ய மண்டலங்கள் முழக்கமிட்டது;
உம்முடைய அம்புகளும் தெறிப்
புண்டு பறந்தது.— 19 உம்முடை
ய குமுறலின் சத்தம் வட்டமிட்டு
முழங்கிற்று; மின்னல்கள் பூச்சக்
கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி
குலுங்கி அதிர்ந்தது.- 20 உம்மு
டைய வழி கடலிலும் உமது பா
தைகள் வலு தண்ணீர்களிலும்
இருந்தது; உமது காலடிகள் தெ
ரியப்படாதே போயிற்று. —
21 மோசே, ஆரோன் என்றவர்
களின் கையால் உமது சனத்தை
ஒரு ஆட்டு மந்தையைப் போலே
வழி நடத்தினீர்.

78. சங்கீதம்.

பராபரன் செய்த உபகாரங்களையும், சனத்தில் கண்ட நன்றியறியாமையையுங் காண்பித்தது.

ஆசாப்பின் போதக சங்கீதம்.
என் சனமே, என் உபதேசத்
திற்குக் கேள்விகொடுத்து, என்
வாயின் வசனங்களுக்கு உங்கள்
செவிகளைச் சாயுங்கள். — 2 என்
வாயை உவமைகளால் திறப்பேன்,
பூருவ காலம் முதல் புதை
பொருளானவைகளை வெளிப்படுத்
துவேன். — 3 நாங்கள் கேட்ட
தும் அறிந்ததும் எங்கள் பிதாக்கள்

எங்களுக்குச் சொல்லி வந்தது
மான விசேஷங்களை - 4 நாங்கள்
அவர்களுடைய பிள்ளைகளுக்கு
மறைக்காமல், கர்த்தரின் துதிக
ளையும் அவருடைய பலத்தையும்
அவர் செய்த அவருடைய அதிச
யங்களையும் பின் சந்ததிக்கு விவ
ரிப்போம்.

5 ஏனெனில் அவர் யாக்கோபி
லே சாட்சியை ஏற்படுத்தி, இஸ்ர
வேலிலே வேதத்தை ஸ்தாபித்து,
அதைத் தங்கள் பிள்ளைகளுக்கு
அறிவிக்க, நம்முடைய பிதாக்க
ளுக்குக் கற்பித்தார்.- 6 பிறக்கப்
போகிற பிள்ளைகளாகிய பின்
சந்ததி அதை அறிந்துகொண்டு,
எழும்பி, தங்கள் பிள்ளைகளுக்குஞ்
சொல்லவும், — 7 பராபரன் மே
லே தங்கள் நம்பிக்கையை வைத்
துப், பராபரனுடைய செயல்களை
மறவாமல், அவர் கற்பனைகளைக்
கைக்கொள்ளவும்,- 8 முரட்டாட்
டமும் கலகமுமுள்ள சந்ததியா
கிய தங்கள் பிதாக்களுக்கு ஒப்பா
காதிருக்கவுந்தானே. அவர்கள் தங்
கள் இருதயத்தைச் செம்மைப்
படுத்தாத சந்ததியாய் இருந்தார்
கள்; அவர்களுடைய ஆவி பராபர
னுடனே உண்மையாய் இருந்த
தில்லை.

9 ஆயுதம் அணிந்த விற்காரரா
ன எப்பிராயீம் புத்திரர் யுத்த நா
ளிலே முதுகைக் காட்டினார்கள்.-
10 பராபரனுடைய உடன்படிக்
கையைக் கைக்கொள்ளாமல், அ
வர் நியாயப்பிரமாணத்திலே நடக்
கமாட்டோம் என்று,— 11 அவர்
செயல்களையும், அவர் தங்களுக்
குக் காண்பித்த அவருடைய அதி
சயங்களையும் மறந்தார்கள்.- 12 அ
வர்களுடைய பிதாக்களின் முன்
பாக எகிப்து தேசத்துச் சோகா
ன் பட்டண வெளியிலே அதிசய
ங்களைச் செய்தார்.— 13 கடலைப்
பிளந்து, அவர்களைக் கடக்கப்
பண்ணி, சலங்களைக் குவியலாக
நிறுத்தி,- 14 அவர்களைப் பகல்
காலத்திலே மேகத்தாலும், இரா
முழுவதும் அக்கினி வெளிச்சத்
தாலும் வழிகாட்டி அழைத்தார்.-
15 வனாந்தரத்தில் கன்மலைகளைப்
பிளந்து, அவர்களுக்கு மகா ஆழங்
களுக்குச் சரியான தண்ணீர்க
ளால் தாகந்தீர்த்து,- 16 கன்மலை
யிலிருந்து நதிகளைப் புறப்படப்
பண்ணி, தண்ணீர்களை ஆறுக
ளாய் இறங்கி ஓட விட்டார்.

17 ஆனால் அவர்கள் அப்புறம்
அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்
செய்யவும், உன்னதமானவருக்கு
வறண்ட வெளியிலே கோபம்
மூட்டவுந் தொடர்ந்து,- 18 தங்
கள் மனதுக்கு ஏற்கும் போசனத்
தைக் கேட்கிறதினால் பராபர
னைத் தங்கள் இருதயங்களில் பரீ
ட்சை பார்த்து: - 19 பராபரன்
வனாந்தரத்திலே பந்தியை ஆயத்
தப்படுத்தக் கூடுமோ என்றும்,
20 இதோ அவர் கன்மலையை அ
டித்ததினால் தண்ணீர்கள் புறப்
பட்டு, நதிகளாய்ப் புரண்டு வந்த
து, அப்பத்தையுங் கொடுக்கமாட்
டுவாரோ, தம்முடைய சனத்திற்
கு மாமிசத்தையும் ஆயத்தப்படுத்
துவாரோ என்றும் பராபரனுக்கு
விரோதமாய்ப் பேசினார்கள்.

21 ஆகையால் கர்த்தர் கேட்டு
உக்கிரமானார்; யாக்கோபுக்கு வி

ரோதமாய் அக்கினி பற்றியெரிந்
தது. — 22 அவர்கள் பராபரன்
மேல் விசுவாசியாமலும், அவர் இ
ரட்சிப்பை நம்பாமலும் போனதி
னாலே, இஸ்ரவேலுக்கு விரோத
மாகக் கோபம் எழும்பிற்று. —
23 அவர் உயர இருக்கும் ஆகாய
மேகங்களுக்குக் கற்பித்து, வா
னங்களின் கதவுகளைத்திறந்து,-
24 அவர்கள்மேல் மன்னாவை ஆ
காரமாக வருஷிக்கப்பண்ணி வா
னதானியத்தை அவர்களுக்குக்
கொடுத்தார்.–25 வல்லவர்களின்
அப்பத்தை அவனவன் சாப்பிட்
டான்; அவர்களுக்குப் பரிபூரண
ஆகாரத்தை அனுப்பினார்.

26 ஆகாயத்திலே கீழ்க்காற்
றை வரப்பண்ணித் தம்முடைய
வல்லமையினாலே தென்றலையும்
எடுத்துவந்து,–27 அவர்கள் மீதி
ல் மாமிசத்தைத் தூளத்தனை
யும், செட்டையுள்ள பட்சிகளைக்
கடற்கரை மணலத்தனையுமாய்
வருஷிக்கப்பண்ணி, - 28 அவை
களை அவர்கள் நடுப் பாளயத்
திலே அவர்கள் கூடாரங்களைச்
சுற்றிலும் இறங்கப்பண்ணினார்.
29 அவர்கள் புசித்து, மிகவுந்
திருப்தியானார்கள்; அவர்களு
டைய இச்சையை அவர்களுக்கு
நிறைவேற்றினார்.

30 அவர்கள் தங்கள் இச்சை
யை வெறுக்காதிருந்தார்கள். அ
வர்களுடைய போசனம் இன்ன
ம் அவர்கள் வாயில் இருக்கக்கொ
ள்ளப்–31 பராபரனுடைய கோப
ம் அவர்கள் மேல் எழும்பி, அவர்
களில் கொழுத்தவர்களுக்குள்ளே
அவர் சங்காரஞ்செய்து, இஸ்ர
வேலில் தெரிந்துகொள்ளப்பட்ட
வர்களை மடியப் பண்ணினார்.

32 இப்படி எல்லாம் இருந்தும்,
அவர்கள் இன்னம் அவருடைய
அதிசயங்களை நம்பாமல் பாவஞ்
செய்தார்கள்.-33 ஆனது கொண்
டு அவர்கள் வருஷங்களைப் பயங்
கரத்திலுங் கழியப்பண்ணினார்.

34 தங்களை அவர் கொல்லும்
போது அவர்கள் அவருக்காக
விசாரித்துத் திரும்பிக்கொண்டு
பராபரனைக் காலமே தேடிப்—
35 பராபரன் தங்கள் கன்மலை
என்றும், உன்னதமான பராபர
ன் தங்கள் மீட்பர் என்றும் நினை
வு கூர்ந்து, —36 தங்கள் வாயினா
லே அவருக்கு இச்சகம் பேசித்
தங்கள் நாவுகளினாலே பொய்
சொன்னார்கள்.—37 ஏனெனில்
அவர்கள் இருதயம் அவரோடே
நிலைவரமாய் இருந்ததில்லை; அவ
ருடைய உடன்படிக்கையில் அவர்
கள் உண்மையாயிருக்க இல்லை.

38 அவரோ இரக்கமாயிருந்து,
அவர்களை அழிக்காதபடி அவர்கள்
அக்கிரமத்தை மூடி, தம்முடை
ய எல்லா உக்கிரத்தையும் எழுப்
பாமல், அநேகந்தரம் தமது கோ
பத்தை விலக்கி:-39 இவர்கள் மா
மிசமும் திரும்பிவராமல் அகலு
கிற காற்றுமாய் இருக்கிறார்கள்
என்று நினைவுகூர்ந்தார்.

40 எத்தனை விசை அவருக்கு
வனாந்தரத்திலே கோபம் மூட்டி,
அவாந்தர வெளியிலே அவருக்கு
நோக நடந்தார்கள்.–41 அடிக்கடி
பராபரனைப் பரீட்சை பார்த்து,
இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்
டுத் திட்டப்படுத்தினார்கள். —

42 அவருடைய கரத்தையும்,
அவர் எகிப்திலே தம்முடைய
அடையாளங்களையும், சோகான்
பட்டண வெளியில் தம்முடைய
அற்புதங்களையுஞ் செய்து,-43 தங்
களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்
ட நாளையும் இவர்கள் நினையாதே
போனார்கள்.-44 அவர்களுடைய
நதிகளையும் அவர்களுடைய ஆறு
களையும் அவர்கள் அவைகளில் கு
டிக்கக்கிடையாதபடி இரத்தமாக
மாற்றினார்.-45 அவர்களைத் தின்
னும் வண்டு சாதிகளையும் அவர்
களைக் கெடுக்குந் தவளைகளை
யும் அவர்களுக்குள் அனுப்பி, —
46 அவர்கள் பலனைப் பச்சைப்
புழுக்களுக்கும் அவர்கள் பிரயா
சத்தை வெட்டுக்கிளிகளுக்குங்
கொடுத்தார்.-47 அவர்களுடைய
கொடிமுந்திரிகைச் செடிகளைக்
கன்மழைகளினாலும், அவர்கள்
முசுக்கட்டை மரங்களை ஆலங்
கட்டியினாலும் அழித்து,-48 அவர்
கள் மிருகசீவன்களைக் கன்மழைக்
கும், அவர்கள் ஆடுமாடுகளை அடி
களுக்கும் ஒப்புக்கொடுத்தார். —
49 தமது கோபத்தின் உக்கிரத்
தையும், மூர்க்கத்தையும், சினத்
தையும், நெருக்கத்தையும், தீங்கு
செய்ய விடப்பட்ட தூதர்களையும்
அவர்களுக்குள் அனுப்பினார். —
50 தம்முடைய கோபத்துக்கு வழி
யைச் சரிபிடித்தார்; அவர்கள் ஆத்
துமத்தை அவர் மரணத்திற்கு
விலக்கிக் காக்காமல், அவர்கள்
சீவனை அவர் பெருவாரிக் காய்ச்ச
லுக்கு ஒப்புக்கொடுத்துக்-51 கா
மின் கூடாரங்களாகிய எகிப்திலே
தலைச்சன்களாயிருந்த முதல்பே
றுயாவையும் அழித்து,—52 தம்
முடைய சனத்தை ஆடுகளைப்
போலே புறப்படப்பண்ணி, அவர்
களை வனாந்தரத்திலே மந்தை
யைப்போலே கூட்டிக்கொண்டு
வந்து,—53 அவர்களைப் பத்திர
மாய் பயப்படாதபடி நடத்தி
னார். ஆனால் அவர்கள் சத்துருக்
களைக் கடல் மூடிப்போட்டது.—
54 அவர்களைத் தம்முடைய பரி
சுத்த எல்லைமட்டுக்கும், தம்மு
டைய வலது கரம் சம்பாதித்த
இந்தப் பருவதம் மட்டுக்கும், அ
ழைத்துவந்து,-55 அவர்கள் முகத்
துக்கு முன்பாகச் சாதிகளைத் து
ரத்திவிட்டு, இவர்கள் தேசத்தைச்
சீட்டுப்போட்டுப் பங்கிடுவித்து,
இஸ்ரவேலின் கோத்திரங்களை இ
வர்களுடைய கூடாரங்களில் குடி
யேற்றினார்.-56 ஆகிலும் அவர்கள்
உன்னதமான பராபரனைப் பரீட்
சை பார்த்து, அவருக்குக் கோபம்
மூட்டி, அவருடைய சாட்சிகளைக்
கைக் கொள்ளாமல்போய்,-57 தங்
கள் பிதாக்களைப் போலே வழிவி
லகித் துரோகம்பண்ணி, மோசம்
போக்கும் வில்லைப்போல் துவண்
டு,—58 அவருக்குத் தங்கள் மே
டைகளாலே கோபத்தையும் தங்
கள் சுரூபங்களால் எரிச்சலையும்
உண்டாக்கினார்கள்.

59 பராபரன் அதைக்கேட்டு
உக்கிரமாகி, இஸ்ரவேலை மிகவும்
வெறுத்து,-60 தாம் மனுஷருக்
குள் தங்கப் போட்ட கூடாரமா
கிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்
தை நெகிழ்ந்து, — 61 அவர்கள்
பலத்தைச் சிறையிருப்பிலும், அ
வர்கள் மகிமையைச் சத்துருவின்

கையிலும் ஒப்புக்கொடுத்துத் —
62 தம்முடைய சனத்தைப் பட்ட
யத்திற்கு இரையாக்கி விட்டு,
தமது சுதந்தரத்திற்கு விரோத
மாய் உக்கிரமானார். — 63 அவர்
கள் இளைஞரை அக்கினி பட்சித்
தது; அவர்கள் கன்னியாஸ்திரிகள்
வாழ்க்கைப்படாதிருந்தார்கள். —
64 அவர்கள் ஆசாரியர்கள் பட்ட
யத்தால் விழுந்தார்கள்; அவர்கள்
விதவைகள் அழுததில்லை.

65 அப்போது ஆண்டவர் நித்
திரை தெளிந்தவனைப்போலும்
மதுபானத்தால்கம்பீரிக்கிறபராக்
கிரமசாலியைப் போலும் விழித்
துத் - 66 தம்முடைய சத்துருக்
களைப் பின் புறமாக அடிப்படுத்
தி, அவர்களுக்கு நித்திய நிந்தை
யை வரப்பண்ணினார்.

67 ஆனால் அவர் யோசேப்
பின் கூடாரத்தைப் புறக்கணித்
து, எப்பிராயீம் கோத்திரத்
தைத் தெரிந்து கொள்ளாமல்,—
68 தாம் சிநேகித்த சீயோன் பரு
வதம் இருக்கிற யூதாக் கோத்தி
ரத்தைத் தெரிந்து கொண்டு, —
69 தமது பரிசுத்த ஸ்தலத்தை
உயர்ந்த மேடுகளாகவும், என்
றைக்கும் நிற்கத் தாம் அஸ்திபா
ரப்படுத்தின பூமியைப் போலாக
வுங் கட்டி, — 70 தமது தாசனா
கிய தாவீதைத் தெரிந்து, அவனை
ஆட்டுத் தொழுவங்களிலிருந்து
எடுத்துக் கொண்டார். — 71 கற
வலாடுகளின் பிறகாலே நடந்த
அவனைத் தமது சனமாகிய யாக்
கோபையும் தம்முடைய சுதந்தர
மாகிய இஸ்ரவேலையும் மேய்ப்ப
தற்காக அழைத்துக்கொண்டு வந்
தார். — 72 இவன் அவர்களைத்
தன் இருதயத்தினுடைய உண்
மையின்படியே மேய்த்து, அவர்
களைத் தன் கைகளின் விவேகத்
தால் நடத்தினான்.

79. சங்கீதம்.

எருசலேமைப் பாழ்க்கடித்த சத்து
ருக்களின் நிமித்தம் சபை செய்யும்
விண்ணப்பம்.

ஆசாப்பின் சங்கீதம்.

பராபரனே, புறச்சாதியார் உம்
முடைய சுதந்தரத்தில் வந்து,
உமது பரிசுத்த தெய்வாலயத்
தைத் தீட்டுப்படுத்தி, எருசலே
மை மண்மேடுகளாக்கிப் போட்
டார்கள். — 2 உம்முடைய ஊழி
யக்காரரின் பிரேதங்களை ஆகா
யத்துப் பறவைகளுக்கும், உமது
பரிசுத்தவான்களின மாமிசத்
தைப் பூமியின் மிருகங்களுக்கும்
இரையாகக் கொடுத்தார்கள். —
3 எருசலேமைச் சுற்றிலுந் தண்
ணீரைப் போல் அவர்களுடைய
இரத்தத்தைச் சிந்திப்போட்டார்
கள்; அடக்கம்பண்ணுவாரும் இல்
லை.— 4 எங்கள் அயலாருக்கு நிந்
தையும் எங்கள் சுற்றுப்புறத்தா
ருக்குப் பரியாசமும் சக்கந்தமும்
ஆனோம்.–5 எந்தமட்டும், கர்த்தா
வே, என்றென்றைக்கும் கோப
மாயிருப்பீரோ; எந்தமட்டும் உம்
முடைய எரிச்சல் அக்கினியைப்
போல் எரியும். — 6 உம்மை அறி
யாத சாதிகள் மேலும், உமது நா
மத்தைத் தொழுதுகொள்ளாத
இராச்சியங்கள் மேலும் உம்மு

டைய உக்கிரத்தை ஊற்றிப்போ
டும். — 7 ஏனெனில் யாக்கோ
பைப் பட்சித்து அவன் குடியிருப்
பைப் பாழாக்கினார்கள்.

8 எங்கள் முந்தின அக்கிரமங்
களை நினையாதேயும்; தீவிரமாய்
உம்முடைய இரக்கங்கள் எங்க
ளுக்கு நேரிட்டு வரக் கடவது; ஏ
னெனில் மெத்தவுங் குறுகிப்போ
னோம். — 9 எங்கள் இரட்சிப்
பின் பராபரனே, நீர் உமது நாமத்
தினுடைய மகிமையின் நிமித்த
மாக எங்களுக்கு ஒத்தாசை செய்
து, எங்களைத் தப்புவித்து, உமது
நாமத்தின் நிமித்தமாக எங்கள்
பாவங்களை நிவிர்த்தியாக்கும். —
10 அவர்களுடைய பராபரன் எங்
கே என்று புறச்சாதிகள் சொல்
லுவானேன்; உமது ஊழியக்
காரருடைய சிந்துண்ட இரத்தத்
தின் பழிவாங்குதல் சாதிகளுக்
குள்ளே எங்கள் கண்களுக்கு முன்
பாகத் தெரியப்படக்கடவது.

11 கட்டுண்டவனுடைய பெரு
மூச்சு உமக்கு முன்பாக வரட்டும்;
கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை
நீர் உமது புயபலத்தினுடைய பெ
ருக்கத்தின்படியே உயிரோடே கா
ரும். — 12 ஆண்டவரே, எங்கள்
அயலார் உம்மை நிந்தித்த நிந்தை
யை அவர்களுக்கு எழத்தனையாக
அவர்கள் மடியிலே திருப்பப் பண்
ணும். — 13 அப்படியே உம்முடைய
சனமும் உம்முடைய மேய்ச்சலின்
ஆடுகளுமாகிய நாங்கள் உம்மை
என்றென்றைக்கும் புகழுவோம்;
தலைமுறை தலைமுறையாக உமது
துதியைச் சொல்லிவருவோம்.

80. சங்கீதம்.

சபையின் நிர்ப்பந்த நிலைமையைத் தொட்டுக் கெஞ்சிச் செய்த விண்ணப்பம்.

சாட்சியை விளங்குவிக்கும் ஆறு நரம்பிலே பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாபின் சங்கீதம்.

2 இஸ்ரவேலின் மேய்ப்பரே,
செவிகொடும்; யோசேப்பை ஆட்டு
மந்தையைப்போல் நடத்துகிறவ
ரே, கேருபீன்களின்மேல் வாசம்
பண்ணுகிறவரே, பிரகாசியும். — 3
எப்பிராயீமுக்கும் பென்யமீனுக்
கும் மனாசேக்கும் முன்பாக நீர்
உமது வல்லமையை எழுப்பி, எங்
களுக்கு இரட்சிப்பாக வாரும். —
4 பராபரனே, எங்களைத் திருப்
பிக்கொண்டு வந்து, உமது முகத்
தைப் பிரகாசிக்கப்பண்ணும்; அப்
போது இரட்சிக்கப்படுவோம்.
5 சேனைகளின் பராபரனாகிய
கர்த்தாவே, எந்தமட்டும் உமது
சனத்தின் செபத்துக்கு விரோத
மாய்ப் புகைவீர். — 6 கண்ணீரின்
அப்பத்தை அவர்களுக்குப் புசிக்க
வுங், கண்ணீரை மகா பெரிய அள
வாக அவர்களுக்குக் குடிக்கவுங்
கொடுத்தீர். — 7 எங்களை எங்கள்
அயலாருக்கு வழக்காக வைக்கிறீர்;
எங்கள் சத்துருக்கள் தங்களுக்குள்
ளே பரியாசம் பண்ணுகிறார்கள். —
8 சேனைகளின் பராபரனே, எங்க
ளைத் திருப்பிக்கொண்டு வந்து,
உம்முடைய முகத்தைப் பிரகா
சிக்கப் பண்ணும்; அப்போது
இரட்சிக்கப்படுவோம்.

9 ஒரு கொடிமுந்திரிகையை
எகிப்திலிருந்து எடுத்துவந்தீர்; சா
திகளைத் துரத்திவிட்டு அதை நாட்
டினீர். 10 அதற்கு முன்பாக இட
மாக்கி அதை வேர் தரிக்கப் பண்
ணினீர்; அது தேசத்தைச் சூழ்ந்து
கொண்டது. – 11 அதன் நிழலால்
பருவதங்கள் மூடப்பட்டது; அ
தன் கொம்புகள் பராபரனுடைய
கேதுருக்களைப்போல் ஆயிற்று.—
12 தன் கொடிகளைச் சமுத்திரமட்
டாகவும், தன் கிளைகளை நதிமட்
டாகவும் விட்டது. — 13 இப்போ
தும் வழி நடக்கிறயாவரும் அதை
ஒடிக்க அதன் அடைப்புகளை என்
தகர்த்துப்போட்டீர். - 14 காட்டுப்
பன்றி அதை உழுதுபோட்டு, வெ
ளியின் மிருகங்கள் அதைப் பட்டி
மேய்ந்தது.

15 சேனைகளின் பராபரனே,
திரும்பி வாருமேன்; நீர் வானங்க
ளிலிருந்து கண்ணோக்கிப் பார்த்
து, இந்தக் கொடிமுந்திரிகைச் செ
டியையும், — 16 உம்முடைய வல
துகரம் நாட்டின கிளையையும் உம
க்கு நீர் திடப்படுத்தின குமாரனி
ன் நிமித்தம் விசாரியும். —17 அக்
கினியால் சுடப்பட்டும் வெட்டுண்
டும் போயிற்று; உம்முடைய முகத்
தின் உதம்புதலால் அழிந்து போ
கிறார்கள். - 18 உமது கரம் வலது
பாரிசத்துப் புருஷன் மீதிலும்,
உமக்கு நீர் திடப்படுத்தின மனு
ஷகுமாரன் மீதிலும் இருப்பதாக.

19 அப்போது உம்மை விட்டு
விலகோம்; எங்களை உயிர்ப்பியும்,
அப்போது உமது நாமத்தைத்
தொழுதுகொள்ளுவோம். - 20 சே
னைகளின் பராபரனாகிய கர்த்தா
வே, எங்களைத் திருப்பிக்கொண்டு
வாரும், உமது முகத்தைப் பிரகா
சிக்கப்பண்ணும்; அப்போது இரட்
சிக்கப்படுவோம்.

81. சங்கீதம்.

சனத்தின் கீழ்ப்படியாமையைக் குறித்துப் பராபரன் முறையிட்டது.

கித்தீத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட ஆசாப்பின் சங்கீதம்.

2 நம்முடைய பெலனாகிய பரா
பரனைக் கம்பீரித்துப்பாடி, யாக்
கோபின் பராபரனுக்கென்று ஆர்
ப்பரியுங்கள். – 3 கீதம் எடுத்து,
மேளத்தையும் இன்ப ஓசையான
சுரமண்டலத்தையும் தம்புரோ
டுங் கூடத் தாருங்கள். – 4 மாதப்
பிறப்பிலும் நம்முடைய திட்ட
மான பண்டிகை நாளிலும் எக்கா
ளம் ஊதுங்கள்.

5 ஏனெனில் அது இஸ்ரவே
லுக்குப் பிரமாணமும், யாக்கோபு
டைய பராபரனின் நியாயமுமாயி
ருக்கிறது. - 6 நாம் அறியாத பா
ஷையைக் கேட்ட எகிப்து தே
சத்துக்கு விரோதமாக அவர் எ
ழும்பிப் புறப்படுகையில், யோ
சேப்பிலே அதைச் சாட்சியாக
ஏற்படுத்தினார்.

7 அவன் தோளைச் சுமைக்கு
விலக்கினேன்; அவன் கைகள் கூ
டைக்கு நீங்கலாய்ப் போயிற்று.—
8 நெருக்கத்திலே கூப்பிட்டாய்
அப்போது உன்னைத் தப்புவித்
தோம்; குமுறலின் மந்தாரத்திலி
ருந்து உனக்கு மறுஉத்தரவு அரு

ளிச்செய்தோம், மேரிபாவின் தண்
ணீர்களிடத்திலே உன்னைச் சோதி
த்து அறிந்தோம், சேலா.– 9 நம
முடைய சனமே, கேள், உனக்
குள் சாட்சியிடுவோம்; இஸ்ரவே
லே, நீ நம்முடைய சொல்கேட்
டால் தாவிளை. – 10 உனக்குள்
வேற்றுத் தேவன் உண்டாயிருக்க
வேண்டாம்; நீ அந்நிய தேவனை
நமஸ்கரிக்கவும் வேண்டாம்; –
11 உன்னை எகிப்து தேசத்திலி
ருந்து ஏறப்பண்ணின உன் பரா
பரனாகிய கர்த்தர் நாமே; உன்வா
யை விரிவாய்த்திற, நாம் அதை
நிரப்புவோம் என்றோம்.-12 ஆனா
ல் நம்முடைய சனம் நம்முடைய
சத்தத்தைக் கேட்டதில்லை.- 13
ஆகையால் அவர்களை அவர்கள்
இருதயத்தின்கடினத்திற்கு விட்
டோம், தங்கள் யோசனைகளிலே
நடந்தார்கள்.

14 ஆ, நமது சனம் நம்முடைய
சொல் கேட்டு, இஸ்ரவேல் நம்மு
டைய வழிகளில் நடந்தால் தா
விளை. - 15 நாம் கொஞ்சக் கா
லத்திலே அவர்கள் எதிராளிக
ளைத் தாழ்த்தி, நம்முடைய கை
யை அவர்கள் சத்துருக்களுக்கு
விரோதமாகத் திருப்புவோம்.-
16 அப்போது கர்த்தரைப் பகைக்
கிறவர்கள் அவர்களுக்கு இதம்
பேசி அடங்குவார்கள்; அவர்கள்
காலம் என்றென்றைக்கும் இருக்
கும்.- 17 கோதுமையின் புஷ்டி
யால் அவர்களைப் போஷிப்பார்;
கன்மலையின் தேனினாலே உன்
னைத் திருப்தியாக்குவோம்.

82. சங்கீதம்.

நியாயாதிபதிகளின் அநீதத்தைப் பரா
பரன் விசாரிப்பார் என்பது.

ஆசாப்பின் சங்கீதம்.

பராபரன் தேவசபையிலே நின்
றிருக்கிறார். தேவர்களின் நடுவி
லே அவர் விசாரிக்கிற நியாயமா
வது: – 2 எந்தமட்டும் நீதிகே
டாய் நியாயந்தீர்த்து, ஆகாதவர்க
ளின் முகமாட்டம் பார்ப்பீர்கள்.
சேலா.– 3 தரித்திரனுக்கும் திக்
கற்றவனுக்கும் நியாயம் பண்ணி,
சிறுமையானவனுக்கும் ஏழைக்
கும் நீதி செய்யுங்கள்.-4 தரித்தி
ரனையும் எளியவனையும் விடுவித்
து, அவர்களை ஆகாதவர்களின்
கைக்குத் தப்புவியுங்கள்.

5 அறியாமலும் உணராமலும்
இருக்கிறார்கள்; அந்தகாரத்திலே
நடக்கிறார்கள்; தேசத்தின் அஸ்தி
பாரங்களெல்லாம் அசைகிறது.-
6 நீங்கள் தேவர்கள் என்றும், நீங்
கள் அனைவரும் உன்னதமானவ
ரின் மக்கள் என்றும் நாம் சொன்
னோம்.— 7 ஆகிலும் நீங்கள் மனு
ஷரைப்போலே செத்து, லோ
கப் பிரபுக்களில் ஒவ்வொருவ
னைப் போலும் விழுந்துபோவீர்
கள் என்றார்.

8 பராபரனே, எழுந்திருந்து,
பூமியைநியாயந்தீரும்; ஏனெனில்
தேவரீர் எல்லாச் சாதிகளையுஞ்
சுதந்தரமாக ஆண்டிருப்பவர்.

83. சங்கீதம்.

சத்துருக்கள் யாவரும் தனக்கு விரோ
தமாகப்பண்ணின ஒப்பந்தத்தின் நிமித்
தம் சபை செய்கிற விண்ணப்பம்.

ஆசாப்பின் சங்கீதமாகிய பாட்டு.
2 பராபரனே, சும்மா இராதே
யும், பராபரனே, மௌனமும் அம
ரிக்கையுமாயிராதேயும்.
3 ஏனெனில், இதோ, உம்மு
டைய சத்துருக்கள் கொந்தளித்
து, உம்முடைய பகைஞர் தலை
எடுக்கிறார்கள். — 4 அவர்கள் உ
மது சனத்திற்கு விரோதமாகச்
சர்ப்பனை யோசனையாயிருந்து, உ
மது மறைவிலிருக்கிறவர்களுக்கு
விரோதமாக ஆலோசனைபண்ணு
கிறார்கள்.-5 அவர்கள் ஒரு சாதியா
யிராமலும், இஸ்ரவேலின் பேர்
இனி நினைக்கப்படாமலும் போவ
தற்காக, நாம் அவர்களை அதம்
பண்ணுவோம் வாருங்கள் என்கி
றார்கள்.-6 அதேனெனில் ஏதோ
மின் கூடாரத்தாரும், இஸ்மவே
லரும், மோவாபும், ஆசாரியரும்,-
7 கேபாலும், அம்மோனும், ஆம
லேக்கும், தீருவின் குடிகளோ
டே கூடப் பெலிஸ்தரும், -8 ஏக
மன நிர்ணயமாய் ஆலோசனை
பண்ணி, உமக்கு விரோதமாக
ஒப்பந்தம் பண்ணினார்கள். -9 அ
சூரியரும் அவர்களோடே கூடக்
கலந்து, லோத்தின் புத்திரருக்
குப் புயபலமானார்கள். சேலா.
10 மீதியானியருக்கும், கீசோன்
என்ற ஆற்றண்டை எந்தோரி
லே அழிக்கப்பட்டு,-11 பூமிக்கு எ
ருவாய்ப்போன சிசெராவுக்கும்
யாபீனுக்கும் செய்ததுபோலே
அவர்களுக்குச் செய்யும்.-12 அவர்
களையும் அவர்கள் அதிபதிகளையும்
ஒரேபுக்கும் சேபுக்கும், அவர்கள்
பிரபுக்களை எல்லாம் சேபாருக்
கும் சல்முனாவுக்கும் சரியாக்கும்.-
13 ஏனெனில்: பராபரனுடைய
வாசஸ்தலங்களை நாங்கள் எங்க
ளுக்குச் சுதந்தரமாகக் கட்டிக்
கொள்ளுவோம் என்றார்கள்.—14
என் பராபரனே, அவர்களைச் சு
ழல்காற்றின் புழுதிக்கும், காற்று
கொண்டுபோகுந் துரும்புக்கும் ச
ரியாக்கும்.- 15 காட்டை நெருப்பு
சுடுகிறதுபோலேயும், மலைவனங்
களை அக்கினிச்சுவாலை எரித்துப்
போடுகிறதுபோலேயும், - 16 நீர்
அவர்களை உமது புசலினாலே தொ
டர்ந்து, உமது பெருங்காற்றினா
லே அவர்களைக் கலங்கப்பண்
ணும்.— 17 கர்த்தாவே, அவர்கள்
உமது நாமத்தைத் தேடும்படிஅ
வர்கள் முகங்களை கனவீனத்தா
லே மூடும்.—18 தேவரீர் ஒருவர்
உம்முடைய நாமத்தின்படியே
கர்த்தரும், பூமி அனைத்தின் மே
லும் உன்னதமானவரும் என்
கிறதை அவர்கள் உணர, — 19
அவர்கள் என்றைக்கும் வெட்கிக்
கலங்கவும், நாணவும், அழியவுங்
கடவார்கள்.

84. சங்கீதம்.

பராபரனுடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்களின் பாக்கியம்.

கித்தீத்தில் வாசிக்கக் கோரா
கின் புத்திரரிலுள்ள இராகத்தலை
வனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீ
தம்.
2 சேனைகளின் கர்த்தாவே,
உமது வாசஸ்தலங்கள் எத்தனை
இன்பமானவைகள்.- 3 என் ஆத்

துமம் கர்த்தருடைய பிரகாரங்
களின்மேல் வாஞ்சையும் தவன
முமாயிருக்கிறது; என் இருதய
மும் என் மாமிசமும் சீவனுள்ள
பராபரனை நோக்கிக் கம்பீர சத்த
மிடுகிறது. — 4 அடைக்கலான்
குருவிக்கு முதலாய் வீடும், தகை
விலான் குருவிக்குத் தன் குஞ்சு
களை வைக்குங் கூடும் கிடைக்கும்;
என் இராசாவும் என் பராபரனு
மாகிய சேனைகளின் கர்த்தாவே,
உம்முடைய பீடங்களையே வாஞ்
சித்திருக்கிறேன்.-5 உம்முடைய
வீட்டிலே வாசமாயிருந்து, எப்
போதும் உம்மைத் துதிக்கிறவர்
கள் பாக்கியவான்கள். சேலா. —
6 உம்மிலே பெலன்கொள்ளுகிற
மனுஷனும், தங்கள் இருதயங்
களில் வழிகளைச் செவ்வையாக்
கினவர்களும் பாக்கியவான்கள்.—
7 அழுகையின் பள்ளத்தாக்கை
உருவ நடந்து, அதை நீரூற்றாக்
கிக் கொள்ளுகிறார்கள்; போதக
னும் ஆசீர்வாதங்களால் மூடப்
படுகிறான்.—8 பராபரனுக்கு முன்
பாகச் சீயோனிலே வந்து காணப்
படும் மட்டும் பலத்திலிருந்து
பலத்துப் போகிறார்கள்.

9 சேனைகளின் பராபரனாகிய
கர்த்தாவே, என் விண்ணப்பத்
தைக்கேளும், யாக்கோபின் பரா
பரனே, செவி கொடும். சேலா.-
10 எங்கள் கேடயமாகிய பராபர
னே, கண்ணோக்கமாயிரும், நீர்
அபிஷேகம் பண்ணினவரின் மு
கத்தைப் பாரும். — 11 ஏனெ
னில் ஆயிரம் நாளைப் பார்க்கிலும்
உம்முடைய பிரகாரங்களில் ஒரே
நாள்நல்லது; ஆசாமியக் கூடாரங்
களில்வாசமாகஇருப்பதைப்பார்க்
கிலும் என் பராபரனுடைய வீட்
டின் வாசற்படியில் காப்பதையே
தெரிந்துகொள்ளுவேன்.- 12 அ
தேனென்றால் பராபரனாகிய கர்த்
தர் சூரியனும் கேடயமுமானவர்;
கர்த்தர் கிருபையையும் மகிமை
யையும் அளிப்பார்; மன உண்மை
யாய் நடக்கிறவர்களுக்கு நன்மை
யை வழங்காதிரார். - 13 சேனைக
ளின் கர்த்தாவே, உம்மை நம்பி
யிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

85. சங்கீதம்.

பராபரனுடைய கிருபைக்காகச் சபை
செய்யும் விண்ணப்பம்.

கோராகின் புத்திரரிலுள்ள இ
ராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்
பட்ட சங்கீதம்.

2 கர்த்தாவே, உமது தேசத்
தின் மேல் பிரியம் வைத்து, யாக்
கோபின் சிறையிருப்பைத் திருப்
பினீர்.-3 உம்முடைய சனத்தின்
அக்கிரமத்தை மன்னித்து, அவர்
கள் பாவத்தை எல்லாம் மூடினீர்.
சேலா.— 4 உம்முடைய உக்கிரத்
தை எல்லாம் வாங்கிக்கொண்டு,
உம்முடைய கோபத்தின் எரிச்
சலை விட்டுத் திரும்பினீர்.

5 எங்கள் இரட்சிப்பின் பராபர
னே, நீர் எங்களைத் திருப்பிக்
கொண்டுவந்து, எங்கள்மேலுள்ள
உமது தாங்கலை ஆறப்பண்ணும்.-
6 என்றென்றைக்கும் எங்கள்
மேல் கோபமாயிருப்பீரோ, தலை
முறை தலைமுறையாக உமது
கோபத்தை நீடித்திருக்கப்பண்

ணுவீரோ.—7 உம்முடைய சனம் உம்மில் மகிழ்ந்திருப்பதற்குத் தேவரீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிப்பதில்லையோ. -8 கர்த்தாவே; உம்முடைய கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உம்முடைய இரட்சிப்பை எங்களுக்குக் கட்டளையிடும்.

9 கர்த்தராகிய பராபரன் என்ன விளம்புகிறார் என்று கேட்பேன்; ஏனெனில் அவருடைய சனமும் அவருடைய சன்மார்க்கரும் மதிகேட்டுக்குத் திரும்பாதபடி, அவர்களுக்குச் சமாதானந் தருவார். —10 ஆம், மகிமை நம்முடைய தேசத்தில் வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது. - 11 கிருபையும் உண்மையும் ஒன்றுக்கொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றுக்கொன்று முத்தி செய்யும்.—12 உண்மை பூமியிலிருந்து முளைக்கும், நீதி வானங்களிலிருந்து தாழப் பார்க்கும்.—13 கர்த்தர் நன்மையுங் கொடுப்பார்; எங்கள் தேசம் தன் பலனையுந் தரும். - 14 நீதி அவருக்கு முன்னாலே போம்; தமது அடிகளை வழியிலே வைப்பார்.

86. சங்கீதம்.

தாவீது மகா உபத்திரவங்களில் பராபரனை அண்டிக்கொண்டு பண்ணின செபம்.

தாவீதின் விண்ணப்பம்.

கர்த்தாவே, உம்முடைய செவியைச் சாய்த்து என் விண்ணப்பத்தைக் கேளும்; ஏனெனில் நான் சிறுமையும் எளிமையுமானவன்.—2 என் ஆத்துமத்தைத் தற்காரும், ஏனெனில் நான் பரிசுத்தன்; என் பராபரனே, உம்மை நம்பியிருக்கிற உமது அடியானைத் தேவரீர் இரட்சியும். —3 ஆண்டவரே, எனக்கு இரங்கும்; ஏனெனில் நாள் தோறும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்.—4 உமது அடியானுடைய ஆத்துமத்தை மகிழ்ச்சியாக்கும்; ஏனெனில் ஆண்டவரே, உம்மண்டை என் ஆத்துமத்தை ஏறப்பண்ணுகிறேன்.—5 ஏனெனில், ஆண்டவரே, தேவரீர் நல்லவரும் மன்னிக்கிறவரும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்.—6 கர்த்தாவே, என் செபத்துக்குச் செவிகொடுத்து, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கவனியும்.—7 நான் நெருக்கப்படுகிற நாளிலே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; ஏனெனில் எனக்கு மறுமொழி கொடுக்கிறீர்.

8 ஆண்டவரே, தேவர்களுக்குள்ளே உமக்கு நிகரும் இல்லை; உம்முடைய கிரியைகளுக்கு ஒப்பும் இல்லை.—9 ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லாச் சாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்துக்கு மகிமை செலுத்துவார்கள்.-10 ஏனெனில் தேவரீர் பெரியவரும் அதிசயங்களைச் செய்கிறவருந்தானே; தேவரீர் ஒருவரே தேவன்.-11 கர்த்தாவே, நான் உமது சத்தியத்திலே நடப்பதற்கு, உமது வழியை

எனக்குப் போதிவியும்; உமது
நாமத்திற்குப் பயந்திருப்பதற்கே
என் இருதயத்தை ஒருமுகமாக்
கும்.-12 என் பராபரனாகிய ஆண்
டவரே, உம்மை என் முழு இரு
தயத்தினாலுந் துதித்து, உமது
நாமத்தை என்றென்றைக்கும்
மகிமைப்படுத்துவேன்.-13 எனெ
னில் உம்முடைய கிருபை என்
மேல் பெரியது; என் ஆத்துமத்
தை நரக பாதாளத்துக்குத் தப்பு
வித்தீர்.

14 பராபரனே, அகந்தைக்கா
ரர் எனக்கு விரோதமாய் எழும்பி,
பலவந்தருடைய கூட்டம் என்
பிராணனை வாங்கத் தேடி, உம்
மைத் தங்களுக்கு முன்பாக நிறுத்
தி நோக்காதிருக்கிறார்கள். —
15 ஆனால் ஆண்டவரே, தேவரீர்
மன உருக்கமும் இரக்கமும் நீண்
ட சாந்தமும், கிருபையிலும் உண்
மையிலும் பெருக்கமுமான தே
வன்.—16 என்மேல் நோக்கமாகி,
எனக்கு இரங்கும்; உமது பெல
னை உமது அடியானுக்குக் கட்ட
ளையிட்டு, உமது அடியாளின்
குமாரனை இரட்சியும்.-17 கர்த்
தாவே நீர் எனக்கு ஒத்தாசை
செய்து, என்னைத் தேற்றரவு
பண்ணுகிறீர் என்று என் பகை
ஞர் கண்டு வெட்கும்படியாக
என்னிடத்தில் எனக்கு நலமாக
ஒரு அடையாளஞ் செய்யும்.

87. சங்கீதம்.

சகல சாதிகளையும் சேர்க்குங் கிறிஸ்து
வின் இராச்சியத்தைப் பற்றிய தீர்க்க
தரிசனம்.

கோராகின் புத்திரருக்கு ஒப்பு
விக்கப்பட்டபாட்டாகிய சங்கீதம்.
அதன் அஸ்திபாரம் பரிசுத்த
பருவதங்களில் இருக்கிறது. —
2 கர்த்தர் யாக்கோபுடைய வாச
ஸ்லதங்களை எல்லாம் பார்க்கி
லும், சீயோனின் வாசஸ்தலங்க
ளைச் சிநேகிக்கிறார்.-3 பராபரனு
டைய பட்டணமே, மகிமையான
விசேஷங்கள் உன்னில் வசனிக்
கப்படும். சேலா.

4 நம்மை அறிந்தவர்களுக்குள்
ளே இராகாபையும் பாபேலையும்
நினைக்கப்படப் பண்ணுவோம்;
இதோ, பெலிஸ்தியரிலும் தீரியரி
லும் எத்தியோப்பியரிலுங் கூட:
இன்னான் அங்கே பிறந்தான் என்
றும்,-5 இவன், அவன் அதிலே
பிறந்தான் என்றும் சீயோனைக்
குறித்துச் சொல்லப்படும். உன்
னதமானவர்தாமே அதைத் திடப்
படுத்துவார்.—6 கர்த்தர் சனங்க
ளை எழுதும்போது, இன்னார்
அதிலே பிறந்தார்கள் என்று அ
வர்களை எண்ணுவார். சேலா. —
7 பாடுவார்கள் துள்ளிக் களிகூரு
கிறவர்களைப்போல் இருப்பார்கள்;
நம்முடைய ஊற்றுகள் எல்லாம்
உன்னில் இருக்கும்.

88. சங்கீதம்.

பாடுபடுகிற கிறிஸ்துவைக் காண்பிக்
குந் தீர்க்கதரிசனம்.

நோயாயிருக்கிற பலவீனத்தின்
பேரிலே பாடி, கோராகின் புத்தி
ரரிலுள்ள இராகத் தலைவனுக்கு
ஒப்புவிக்கப்பட்ட எஸ்ராகியனான
ஏமானின் போதக சங்கீதம்.

2 என் இரட்சிப்பின் பராபர
ஞகிய கர்த்தாவே, பகல் காலத்தி
லும் இராக்காலத்திலும் உமக்கு
முன்பாகக் கூப்பிடுகிறேன். —
3 என் விண்ணப்பம் உம்முடைய
முகத்திற்கு முன்பாக வரட்டும்;
என் கூப்பிடுதலுக்கு உமது செ
வியைச் சாயும்.

4 ஏனெனில் என் ஆத்துமம்
தீங்குகளால் நிறைந்தது; என்
ஜீவன் பாதாளத்துக்குச் சமீப
மாய்ச் சேர்ந்தது.- 5 நான் குழி
யில் இறங்குகிறவர்களோடு எண்
ணப் பட்டுத் திடனற்ற புருஷ
னைப் போல் ஆனேன்.- 6 மரித்த
வர்களில் ஒருவனைப்போல் இருக்
கிறேன். நீர் அப்புறம் நினையாமல்
உமது கையால் அறுப்புண்டு போ
னவர்களும் பிரேதக் குழிகளிலே
கிடக்கிறவர்களுமாகிய வெட்டுண்
டவர்களைப் போலே நெகிழப்பட்
டிருக்கிறேன்.— 7 என்னைப் பா
தாளக் குழியிலும், இருளிலும் ஆ
ழங்களிலும் வைத்தீர். — 8 உம்
முடைய உக்கிரம் என்னை இருத்
துகிறது; உம்முடைய வெள்ளங்
களால் எல்லாம் என்னை இடுக்கப்
படுத்துகிறீர். சேலா.- 9 எனக்கு
அறிமுகமானவர்களை எனக்குத்
தூரமாக விலக்கி, என்னை அவர்க
ளுக்கு அருவருப்பாக்கினீர்; நான்
புறப்படக் கூடாதபடி அடைபட்
டிருக்கிறேன். — 10 நோயினால்
என் கண் தொய்ந்து போயிற்று;
கர்த்தாவே, அனுதினமும் நான்
உம்மை நோக்கிக் கூப்பிட்டு, உ
மக்கு நேராய் என் கைகளை விரிக்
கிறேன்.

11 மரித்தவர்களில் அதிசயங்
களைச் செய்வீரோ, செத்த இ
ராட்சதர் எழுந்து உம்மைத் து
திப்பார்களோ. சேலா.- 12 பிரே
தக் குழியில் உமது கிருபையும்,
அழிவில் உமது உண்மையும்
விவரிக்கப்படுமோ.- 13 இருளில்
உமது அதிசயங்களும், மறதியின்
பூமியில் உமது நீதியும் அறியப்
படுமோ.— 14 கர்த்தாவே, நான்
உம்மை நோக்கிக் கூப்பிடுகி
றேன்; காலமே என் விண்ணப்
பம் உமக்கு நேரிடும்.

15 கர்த்தாவே, ஏன் என் ஆத்
துமத்தை ஒழித்து விட்டு உம்மு
டைய முகத்தை எனக்கு மறைக்
கிறீர். — 16 சிறுவயது துவக்கி
நான் சிறுமையானவனும் மாண்
டு போகிறவனுமாயிருக்கிறேன்;
உம்மால் வருந் திகில்களைச் சுமந்
து அஞ்சிக்கையாயிருக்கிறேன்:-
17 உம்முடைய எரிச்சல்கள் என்
மேல் கடக்கிறது; உம்முடைய
பயங்கரங்கள் என்னைச் சங்கரிக்
கிறது.— 18 அவைகள் என்னை
நாள்தோறும் தண்ணீர்களைப்போ
லே சூழ்ந்து, ஏகமாய் என்னை வ
ளைந்துகொள்ளுகிறது.- 19 சிநே
கிதரையும் தோழரையும் எனக்
குத் தூரமாக விலக்கினீர், எனக்
கு அறிமுகமானவர்கள் அந்தரங்
கமானார்கள்.

89. சங்கீதம்.

தாவீதுக்குப் பராபரன் கிருபை பண்ணின உடன்படிக்கையை அவன் தன் உபத்திரவ நாட்களில் அவருக்கு நினைப்பூட்டின விண்ணப்பம்.

எஸ்ராகியனான ஏத்தானின்
போதக சங்கீதம்.

2 கர்த்தரின் கிருபைகளை என்
றென்றைக்கும் பாடுவேன், உம்
முடைய உண்மையைத் தலை
முறை தலைமுறையாக என் வாயி
னால் அறிவிப்பேன். — 3 எனெ
னில்: என்றென்றைக்கும் உன்
வித்தை நிலைப்படுத்தித் தலை
முறை தலைமுறையாக உன் இரா
சாசனத்தைக் கட்டுவோம் என்
று,— 4 நாம் நம்மால் தெரிந்து
கொள்ளப்பட்டவனுக்கு உடன்ப
டிக்கை பண்ணி, நம்முடைய தா
சனாகிய தாவீதுக்கு ஆணையிட்
டோம் என்றீர். சேலா.- 5 இந்தக்
கிருபை என்றென்றைக்குந் திட
மாக்கப்பட்டிருக்கும்; வானங்களி
ல் தானும் உமது உண்மையை
உறுதியாக்கிக் கொண்டிருக்கிறீர்
என்பேன்.

6 இது நிமித்தம், கர்த்தாவே,
வானங்கள் உம்முடைய அதிசயத்
தைத் துதிக்கும், பரிசுத்தவான்க
ளின் சபையில் உம்முடைய உண்
மையும் விளங்கும். — 7 எனெ
னில் ஆகாய மண்டலத்தில் கர்த்
தருக்கு நிகரானவர் ஆர், பலவான்
களுடைய குமாரர்களில் கர்த்த
ருக்கு ஒப்பானவர் ஆர். - 8 பரா
பரன் பரிசுத்தருடைய பெரிய
ஆலோசனைச் சங்கத்திலே பயங்
கரமானவரும், தம்மைச் சுற்றிலு
மிருக்கிற அனைவர் மேலும் பயப்
படத் தக்கவருந் தானே.- 9 சே
னைகளின் பராபரனாகிய கர்த்தா
வே, கர்த்தராயிருக்கிற உம்மைப்
போல் வல்லமையுள்ளவர் ஆர்;
உம்முடைய உண்மை உம்மைச்
சுற்றியிருக்கிறது.— 10 தேவரீர்
சமுத்திரத்துப் பெருமையின்
மேல் ஆளுகையாயிருக்கிறவர்; அ
தன் அலைகள் எழும்பினால், தே
ரீர் அவைகளை அடைக்கிறீர். —
11 தேவரீர் ராகாபை வெட்டுண்
டவனைப் போலே நசுக்கி, உமது
வல்லமையான புயத்தினால் உம்
முடைய சத்துருக்களைச் சிதற
டித்தீர்.— 12 வானங்கள் உம்மு
டையது, பூமியும் உம்முடையது,
பூச்சக்கரமும் அதன் நிறைவுந்
தானே; தேவரீர் அவைகளை அஸ்
திபாரப்படுத்தினீர்.- 13 தேவரீர்
வடக்கையும் தெற்கையும் சிருஷ்
டித்தீர்; தாபோரும் எர்மோனும்
உம்முடைய நாமம் விளங்கக்
கம்பீரிக்கும்.— 14 உமக்கு வல்ல
மையுள்ள புயம் இருக்கிறது; உம்
முடைய கை பலத்ததும், உம்மு
டைய வலது கரம் உயர்ந்ததுமா
னது.— 15 நீதியும் நியாயமும்
உம்முடைய ஆசனத்தின் அஸ்தி
பாரமாயிருக்கிறது, கிருபையும்
உண்மையும் உம்முடைய முகத்
துக்கு முன்னாக நடக்கிறது.

16 கம்பீரத்தை அறிந்த சனம்
பாக்கியமுள்ளது; கர்த்தாவே,
உம்முடைய முகத்தின் வெளிச்
சத்திலே நடப்பார்கள்.- 17 அவர்
கள் உம்முடைய நாமத்தின் பேரி
லே நாள்தோறும் களிகூர்ந்து, உம்
முடைய நீதியால் உயருவார்கள்.-
18 எனெனில் அவர்கள் பலத்தி
னுடைய மகிமை தேவரீர் தா
னே; உம்முடைய தயவினாலே
எங்கள் கொம்பு உயரும்.- 19 எ
னெனில் கர்த்தரால் எங்களுடை

யகேடயமும், இஸ்ரவேலின் பரி
சுத்தரால் எங்களுடைய இராசா
வும் உண்டு.

20 அப்போது நீர் தரிசனத்தி
லே உம்முடைய பரிசுத்தவானைக்
குறித்து விளம்பினதாவது: ஒரு
சவுரியவான் மேலே சகாயம்
பண்ணுஞ் சத்தியை வைத்
தோம், சனத்தில் தெரிந்துகொ
ள்ளப்பட்டவனை உயர்த்தினோம்.-
21 நம்முடைய தாசனாகிய தாவீ
தைக் கண்டுபிடித்தோம், நம்மு
டைய பரிசுத்த எண்ணெயினால்
அவனை அபிஷேகம் பண்ணி
னோம்.— 22 அவனோடே நம்மு
டைய கை உறுதியாயிருக்கும், நம்
முடைய புயம் அவனைத் திடப்
படுத்தும்.- 23 சத்துரு அவனை
எத்துவதில்லை, நியாயக்கேட்டின்
மகன் அவனை ஒடுக்குவதில்லை.—
24 அவன் சத்துருக்களை அவ
னுக்கு முன்பாக நருக்கி, அவன்
பகைஞரை வெட்டுவோம். —
25 நம்முடைய உண்மையும் நம்மு
டைய கிருபையும் அவனோடிருக்
கும், நம்முடைய நாமத்திலே
அவன் கொம்பு உயரும். — 26 அ
வன் கையைச் சமுத்திரத்தையும்,
அவன் வலது கரத்தை ஆறுகளை
யும் ஆள வைப்போம்.- 27 அவன்
நம்மை: தேவரீர் என் பிதாவும்,
என் பராபரனும், என் இரட்சிப்
பின் கன்மலையும் என்று அழைப்
பான்.— 28 நாமும் அவனை முதற்
பேறானவனும், பூமியின் இரா
சாக்களைப் பார்க்க உன்னதமான
வனுமாக வைப்போம்.— 29 என்
றென்றைக்கும் நமது கிருபையை
அவனுக்குக் காப்போம்; நமது உ
டன்படிக்கை அவனுக்குக் கெட்
டியாயிருக்கும். — 30 அவன் வித்
தை என்றென்றைக்கும், அவன்
இராசாசனத்தை வானங்கள் உள்
ளமட்டும் நிலைப்படுத்துவோம்.

31 அவன் குமாரர் நம்முடைய
நியாயங்களில் நடவாமல், நமது
வேதத்தை விட்டு, — 32 நம்மு
டைய கற்பனைகளைக் கைக்கொள்
ளாமல், நமது பிரமாணங்களைக்
குலைத்துப்போட்டால்,- 33 அவர்
கள் மீறுதலை மிலாறினாலும், அ
வர்கள் அக்கிரமத்தை வாதைகளா
லும் விசாரிப்போம். - 34 ஆனால்
நம்முடைய கிருபையை அவனை
விட்டு விலக்காமலும், நம்முடைய
உண்மையிலே பிசகாமலும் இருப்
போம்.— 35 நம்முடைய உடன்
படிக்கையைக் குலைத்துப்போடா
மலும், நம்முடைய உதடுகள் வி
ளம்பினதை மாற்றாமலும் இருப்
போம்.- 36 தாவீதுக்குப் பொய்
சொல்லோம் என்று ஒரு விசை
நம்முடைய பரிசுத்தத்தின் மே
லே ஆணையிட்டோம்.- 37 அவன்
வித்து என்றென்றைக்கும் இருக்
கும், அவன் இராசாசனம் சூரிய
னைப்போல நமக்கு முன்பாக நிற்
கும்.— 38 அது சந்திரனைப்போ
ல என்றென்றைக்கும் உறுதி
யும், ஆகாயமண்டலத்துச் சாட்சி
யைப் போல உண்மையுமாயிருக்
கும் என்றீர். சேலா.

39 ஆனால் தேவரீர் எங்களை
ஒழித்து விட்டு வெறுத்தீர், நீர்
அபிஷேகம் பண்ணுவித்தவன்
மேல் உக்கிரமானீர்.- 40 நம்மு
டைய தாசனுக்குப் பண்ணின

உடன்படிக்கையை அருவருத்து,
அவன் கிரீடத்தைத் தரையிலே
தள்ளிப் பரிசுத்தக் குலைச்சலாக்
கினீர்.-41 அவன் மதில்களை எல்
லாம் தகர்த்துப்போட்டு, அவன்
அரணிப்புகளை இடிதலாக்கினீர்.-
42 வழிநடக்கிற அனைவரும் அவ
னைக் கொள்ளையிட்டார்கள்; தன்
அயலாருக்கு நிந்தையானான்.—
43 அவன் சத்துருக்களின் வலது
கையை உயர்த்தி, அவன் விரோ
தக்காரர் அனைவருக்கும் சந்தோ
ஷம் உண்டாக்கினீர்.-44 அவனை
யுத்தத்திலே தரிகொள்ளப் பண்
ணாமல், அவன் பட்டயத்தின்
கருக்கையும் மழுக்கிப்போட்டீர்.-
45 அவன் துப்புரவை அற்றுப்
போகப்பண்ணி, அவன் இராசா
சனத்தைத் தரையிலே தள்ளி
னீர். – 46 அவன் வாலவயதின்
நாட்களைக் குறுக்கி, அவனை வெட்
கத்தால் மூடினீர். சேலா.

47 கர்த்தாவே, எந்த மட்டும்,
என்றென்றைக்கும் மறைந்திருப்
பீரோ; எந்தமட்டும் உமது மூர்க்
கம் அக்கினியைப்போல் எரியும்.-
48 என் சீவன் எத்தனை நிலையற்
றது என்கிறதை நினைத்தருளும்;
ஏன் சகலமான மனுப்புத்திரரை
யும் விருதாவாய்ச் சிருஷ்டித்திரு
ப்பீர்.–49 எந்த மனுஷன் மர
ணத்தைக் காணாமல் உயிரோடி
ருந்து, தன் ஆத்துமத்தைப் பா
தாள வல்லடிக்கு விலக்கி விடுவிப்
பான். சேலா.—50 ஆண்டவரே,
நீர் தாவீதுக்கு உம்முடைய உண்
மையைக் கொண்டு சத்தியம்பண்
ணின உமது முந்தின கிருபைகள்
எங்கே.-51 ஆண்டவரே, உம்மு
டைய சத்துருக்கள் உம்முடைய
ஊழியக்காரரையும், நீர் அபிஷே
கம் பண்ணினவனின் காலடிக
ளையும் நிந்திக்கிறதும்,-52 நான்
மகா சனசதளங்களை எல்லாம்
என் மடியில் சுமத்துகிறதினால்
உண்டானதுமான என் நிந்தை
யை நினையும், கர்த்தாவே.- 53
கர்த்தர் என்றென்றைக்கும் ஸ்
தோத்திரிக்கப்பட்டவர், ஆமேன்.
ஆமேன்.

90. சங்கீதம்.

சனசங்காரங்கள் பராபரனுடைய கோ
பாக்கினை என்று அறிக்கையிட்டுச்
செய்த விண்ணப்பம்.

பராபரனுடைய மனுஷனாகிய
மோசேயின் செபம்.

ஆண்டவரே, தேவரீர் தலை
முறை தலைமுறையாக எங்களுக்
கு அடைக்கலமானவர்.-2 பருவ
தங்கள் தோன்றும் முன்னும், நீர்
பூமியையும் பூச்சக்கரத்தையும்
உருவாக்கும் முன்னும், தேவரீர்
அநாதியாய் என்றென்றைக்கும்
பராபரனாயிருக்கிறீர். - நீர் மனு
ஷரை நிர்த்தூளியாக்கி, மனுப்
புத்திரரே, திரும்பி வாருங்கள்
என்கிறீர்.- 4 ஏனென்றால் ஆயி
ரம் வருஷம் உமது பார்வைக்கு
நேற்றுக் கழிந்த நாளும் இராச்
சாமமும் போல் இருக்கிறது. –
5 அவர்களைப் பெரு வெள்ளமாய்
அடித்துக்கொண்டு போகிறீர்; நித்
திரைக்கு ஒத்திருக்கிறார்கள், கா
லமே அவர்கள் ரூபு மாறிய புல்
லுக்கு ஒப்பானவர்கள். – 6 அது

காலமே பூத்து ரூபுமாறி, சாயங்
காலத்தில் அறுப்புண்டு உலரும்.-
7 ஏனெனில் உமது கோபத்தால்
அழிந்து, உம்முடைய உக்கிரத்
தால் கலங்கிப் போனோம்.-8 எங்
கள் அக்கிரமங்களை உமக்கு முன்
பாகவும், எங்கள் அந்தரங்கமான
தை உம்முடைய முகத்தின் வெ
ளிச்சத்திலும் நிறுத்தினீர்.-9 ஆ
கையால் எங்கள் நாட்கள் எல்லாம்
உம்முடைய சினத்தால் போய்
விட்டது; எங்கள் வருஷங்களை
ஒரு கதையைப்போல் கழித்துப்
போட்டோம்.—10 எங்கள் ஆயுசு
நாட்களில் எழுபது வருஷமும்,
வெகு பலத்திருந்தால், எண்பது
வருஷமும் உண்டு; அவைகளில்
மேன்மையானதோவென்றால்பி
ரயாசமும் வீணுந்தானே. ஏனெ
னில் கடுகே அறுப்புண்டு பறந்து
போகிறோம்.— 11 உமது கோ
பத்தின் பெலனையும் உமது சி
னத்தையும் உமக்குப் பயப்படத்
தக்க பயமாய் அறிந்து கொள்ளு
கிறவன் ஆர்.-12 நாங்கள் ஞான
முள்ள இருதயத்தைத் தரித்துக்
கொள்ளும்படியாக, எங்கள் நாட்
களை எண்ணும் அறிவை எங்க
ளுக்குக் கட்டளையிடும்.

13 கர்த்தாவே, திரும்பி வா
ரும், எந்தமட்டுங் கோபமாயிருப்
பீர்; உமது அடியாருக்காகப் பரித
பியும்.—14 நாங்கள் எங்கள் நாட்
களில் எல்லாங் கம்பீரித்து மகி
ழக் காலமே எங்களை உமது கிரு
பையால் திருப்தியாக்கும்.-15தே
வரீர் எங்களை சிறுமைப்படுத்தின
நாட்களுக்கும், நாங்கள் தீங்கைக்
கண்ட வருஷங்களுக்கும் ஈடாக
எங்களை மகிழ்ச்சியாக்கும்.-16உம்
முடைய கிரியை உம்முடைய ஊ
ழியக்காரருக்கும், உம்முடைய ம
கிமை அவர்கள் பிள்ளைகளுக்கும்
காணப்படுவதாக. — 17 எங்கள்
பராபரனாகிய ஆண்டவரின் இன்
பம் எங்கள்மேல் இருக்கக் கட
வது. எங்கள் கைகளின் கிரியை
யை எங்களிடத்தில் உறுதிப்படுத்
தும்; ஆம், எங்கள் கைகளின் கிரி
யையை எங்களிடத்தில் உறுதிப்
படுத்தும்.

91. சங்கீதம்.

தெய்வ பாதுகாப்பைப் பற்றிய பாட்டு.

உன்னதமானவரின் மறைவில்
இருக்கிறவன் சர்வ வல்லவருடை
ய நிழலில் இராத்தங்குவான்.—
2 கர்த்தரை என் அடைக்கலமும்
என் கோட்டையும், நான் நம்பியி
ருக்கிற என் பராபரனும் என்கி
றேன்.-3 ஏனெனில் அவர் உன்
னைக் குருவி பிடிக்கிறவனுடைய
கண்ணிக்கும் விக்கினமான பெரு
வாரிக் காய்ச்சலுக்கும் தப்புவிப்
பார். — 4 தமது சிறகுகளாலே
உன்னை மூடுவார்; அவர் செட்
டைகளின் கீழே திடன்கொண்டு
தங்குவாய்; அவருடைய உண்மை
பரிசையும் கேடயமுமாம்.-5 இரா
வின் அருக்களிப்பும் பகலில்
பறக்கும் அம்புக்கும்,— 6 இரு
ளில் நடமாடும் பெருவாரிக் காய்ச்
சலுக்கும், மத்தியானத்தில் பாழ்க்
கடிக்குஞ் சங்காரத்திற்கும் பயப்
படாதிருப்பாய்.— 9 உன் பக்கத்
தில் ஆயிரம் பேரும், உன் வலது

புறத்தில் பதினாயிரம் பேரும் வி
ழுந்தாலும், அது உன்னண்டைக்
குச் சேராது.-8 உன் கண்களால்
மாத்திரம் அதைப்பார்த்து, ஆகா
தவர்களுக்கு வருஞ் சரிக்கட்டு
தலைக் காண்பாய்.

9 ஏனெனில், கர்த்தாவே, தே
வரீர் என் அடைக்கலமாயிருக்கி
றீர். உன்னதமானவரை உனக்
குத் தாபரமாக வைத்தாய். —
10 பொல்லாப்பு உனக்கு வராம
லும், வாதை உன் கூடாரத்தை
அணுகாமலும் இருக்கும்.- 11 ஏ
னெனில் உன் வழிகளில் எல்
லாம் உன்னைக் காக்கும்படி, உனக்
காகத் தம்முடைய தூதர்களுக்
குக் கற்பிப்பார்.-12 உன் பாதம்
கல்லில் இடறாதபடி கைகளில்
உன்னை ஏந்திக்கொண்டு போவா
ர்கள்.—13 சிங்கத்தின் மீதிலும்
விரியன் பாம்பின் மீதிலும் நடந்
து, சிங்கக் குட்டியையும் வலுசர்ப்
பத்தையும் மிதித்துப்போடுவாய்.

14 நம்முடைய மேல் அவன்
வாஞ்சையாய் இருக்கிறபடியினா
லே, அவனை விடுவிப்போம்; நம
து நாமத்தை அவன் அறிந்திருக்
கிறபடியினாலே, அவனை உயர்ந்த
அடைக்கலத்திலே வைப்போம்.-
15 நம்மை நோக்கிக் கூப்பிடுவா
ன், நாம் அவனுக்கு மறு உத்தரவு
அருளிச்செய்வோம்; நெருக்கத்தி
லே நாம் அவனோடிருந்து, அவ
னைத் தப்புவித்து, அவனை மகி
மைப்படுத்துவோம்.- 16 நீடித்த
நாட்களால் அவனைத் திருப்தி
யாக்கி, நமது இரட்சிப்பை அவ
னுக்குக் காண்பிப்போம்.

92. சங்கீதம்.

துஷ்ட நிக்கிரகத்தின் நிமித்தமும், சிஷ்ட பரிபாலனத்தின் நிமித்தமும் பராபரனைத் துதிப்பது.

ஓய்வு நாளின் பாட்டாகிய சங்
கீதம்.

2 பத்து நரம்பு வீணையாலும்
தம்பூராலும் சுரமண்டலத்தில்
வாசிக்குந் தியானத்தாலும், —
3 கர்த்தரைத் துதிக்கிறதும், உன்
னதமானவரே, உமது நாமத்
தைக் கீர்த்தனம் பண்ணுகிற
தும், — 4 காலமே உம்முடைய
கிருபையையும், இராமாறு உம்
முடைய உண்மையையும் அறிவிக்
கிறதும் நலமாயிருக்கும். — 5 ஏ
னெனில், கர்த்தாவே, உமது
செய்கைகளால் என்னை மகிழ்ச்சி
யாக்கினீர்; உமது கரங்களுடைய
கிரியைகளின் நிமித்தம் கம்பீரிக்
கிறேன்.

6 கர்த்தாவே, உமது கிரியை
கள் எத்தனை பெரியவைகள், உம
து சிந்தனைகள் மகா ஆழமானவை
கள். — 7 மிருகக்குண மனுஷன்
இதை அறியான், மூடன் இதை
உணரான். 8 ஆகாதவர்கள் புல்
லைப்போலே செழித்துச் சகல
அக்கிரமக்காரரும் பூக்கும்போது,
அது அவர்களை என்றென்றைக்
கும் அழிப்பதற்கு ஆகிறது. —
9 ஆனால், கர்த்தாவே, நீர் என்
றென்றைக்கும் உயர்ந்தவர்.

10 ஏனெனில் இதோ, கர்த்
தாவே, உம்முடைய சத்துருக்கள்
அழிவார்கள்; சகல அக்கிரமக்கார
ரும் சிதறுண்டுபோவார்கள்.—

11 ஆனால் என் கொம்பைக்
காண்டாமிருகத்தினுடையதைப்
போல் உயர்த்துவீர்; புது எண்
ணெயால் அபிஷேகம் பண்ணப்
படுகிறேன்.— 12 என் சத்துருக்
களிலும், என்மேல் எழும்புகிற
பொல்லாதவர்களிலும் நடக்குஞ்
சரிக்கட்டுதலை என் கண் கண்டு,
என் காதுகள் கேட்கும்.
13 நீதிமான் பனையைப்போல்
செழித்து, லீபனோனிலுள்ள கே
துருவைப்போல் வளருவான்.—
14 கர்த்தருடைய வீட்டிலே நாட்
டப்பட்டவர்கள் எங்கள் பராபர
னுடைய முற்றங்களில் செழித்
திருப்பார்கள். —15 என் கன்மலை
யாகிய கர்த்தர் உத்தமர் என்
றும், அவரில் அநியாயப் பிசகு
இல்லை என்றும் அறிவிப்பதற்
காக, —16 அவர்கள் நரைவயதில்
இன்னம் கனிதந்து, புஷ்டியும்
பச்சையுமாயிருப்பார்கள்.

93. சங்கீதம்.

*கிறிஸ்துவினுடைய இராச்சியத்தின்
உறுதியும் மேன்மையும் பரிசுத்தமும்.*

கர்த்தர் இராசரிக்கம் பண்ணி,
மகத்துவத்தை அணிந்துகொண்
டார்; கர்த்தர் அதை அணிந்து,
பலத்தினாலே அரை கட்டிக்
கொண்டார், ஆனது கொண்டு
பூச்சக்கரம் அசையாதபடி உறுதி
ப்படும்.— 2 உம்முடைய இராசா
சனம் அப்போது முதலாய் உறுதி
யானது; தேவரீர் அநாதியாக இ
ருக்கிறீர். — 3 நதிகள் எழெடுக்
கும், கர்த்தாவே, நதிகள் தங்கள்
இரைச்சலை எழெடுக்கும், நதிகள்
தங்கள் அலைகளை ஏழெடுக்கும்.—
4 திரளான தண்ணீரின் இரைச்
சலைப் பார்க்கிலும், சமுத்திரத்
தின் வீரியமான அலைகளைப்
பார்க்கிலும் கர்த்தர் உன்னதத்
தில் வீரியமானவர். — 5 உமது
சாட்சிகள் மகா உண்மையான
வைகள்; கர்த்தாவே, பரிசுத்தம்
நித்திய நாளாக உம்முடைய வீட்
டின் அலங்காரமாயிருக்கிறது.

93. சங்கீதம்.

*அகந்தைக்காரர் செய்கிற துன்பமும்,
கர்த்தருடைய ஆதரிப்பும்.*

நீதியைச் சரிக்கட்டுகிற பராப
ரனாகிய கர்த்தாவே, நீதியைச்
சரிக்கட்டுகிற பராபரனே, பிரகா
சியும்.— 2 பூமியின் நியாயாதிபதி
யே, நீர் உயர்ந்து பெருமைக்கா
ரருக்குப் பதிலைச் சரிக்கட்டும்.

3 கர்த்தாவே, ஆகாதவர்கள்
எந்தமட்டும் களிகூர்ந்து, ஆகாத
வர்கள்தானே எந்தமட்டும் களி
கூர்ந்திருப்பார்கள். - 4 சகல அக்
கிரமக்காரரும் வாயாடிக் கடின
மாய்ப்பேசிப் பெருமை பாராட்டு
கிறார்கள். — 5 கர்த்தாவே, அவர்
கள் உமது சனத்தை நொறுக்கி,
உமது சுதந்தரத்தை ஒடுக்கி, —
6 விதவையையும் பரதேசியையுங்
கொன்று, திக்கில்லாதவர்களைக்
கொலைப்படுத்திக்: — 7 சர்த்தர்
பாரார் என்றும், யாக்கோபின்
பராபரன் உணரார் என்றும்
சொல்லுகிறார்கள்.

8 சனத்தில் மிருகக் குணத்தா
ரே, உணர்வுள்ளவர்களாயிருங்கள்; பயித்
தியக்காரரே, எப்போது புத்தி
மான்களாவீர்கள். -9 காதை நாட்
டுகிறவர் கேளாரோ, கண்ணை உ
ருவாக்குகிறவர் காணாரோ. - 10
சாதிகளைத் தண்டிக்கிறவர் கடிந்
து கொள்ளாரோ மனுஷனுக்கு
அறிவைப் போதிக்கிறவர் அறி
யாரோ. – 11 கர்த்தர் மனுஷனு
டைய நினைவுகளை அவைகள்
மாயை என்று அறிவார்.

12 கர்த்தாவே, ஆகாதவனுக்
குக் குழி வெட்டப்படும் மட்டுக்
கும் நீர் தீங்கு நாட்களில் அமர்ந்
திருக்கப் பண்ணிப் புத்தி சொல்
லி, — 13 உம்முடைய வேதத்
தால் போதிக்கிற மனுஷன் பாக்
கியவான், – 14 ஏனெனில் கர்த்
தர் தம்முடைய சனத்தை நெகி
ழாமலும், தம்முடைய சுதந்தரத்
தைக் கைவிடாமலும் இருப்பார்.-
15 அதேனென்றால் நியாயம் நீதி
யாகத் திரும்பும்; செம்மை இரு
தயத்தார் அனைவரும் அதைப்
பின் செல்லுவார்கள்.

16 என்னோடே கூடப் பொல்
லாதவர்களுக்கு எதிராய் எழும்
புபவன் ஆர், என்னோடே கூட
அக்கிரமக்காரருக்கு எதிராய் நிற்
பவன் ஆர்.-17 கர்த்தர் எனக்குத்
துணையாயிராதிருந்தாராகில்,
என் ஆத்துமம் மவுனத்தில் வா
சமாவதற்குக் கொஞ்சம் தப்புவ
தாயிருக்கும்.– 18 என் கால் தள்
ளாடும் என்று நான் சொன்ன
போதோ, கர்த்தாவே, உமது கி
ருபை என்னைத் தாங்கிற்று. -19
என் உள்ளத்தில் என்னுடைய
விசாரங்கள் பெருகுகையில், உம்
முடைய தேற்றுதல்கள் என் ஆத்
துமத்தைத் துளிர்க்கப்பண்ணிற்
று. – 20 பிரமாணத்துக்கு மிஞ்
சின பாரத்தை உண்டுபண்ணு
கிற கேடுபாடான ஆசனம் உமக்
கு ஒத்துவருமோ. –21 அவர்கள்
நீதிமானுடைய ஆத்துமத்துக்கு
விரோதமாகக் கும்பு கூடிக் குற்ற
மில்லாத இரத்தத்தைக் குற்றப்
படுத்துகிறார்கள். – 22 ஆனால்
கர்த்தர் எனக்கு உயர்ந்த அடை
க்கலமும், என் பராபரன் நான்
நம்பிய கன்மலையுமாயிருக்கிறார்.-
23 இவர் அவர்கள் அக்கிரமத்
தை அவர்கள்மேல் திருப்பி, அவர்
கள் பொல்லாப்பின் நிமித்தம்
அவர்களைச் சங்கரிப்பார், நம்மு
டைய பராபரனாகிய கர்த்தர்
அவர்களைச் சங்கரிப்பார்.

95. சங்கீதம்.

பணிந்த கீழ்ப்படிதலுக்கும் புத்திக்கும்
ஏவினது.

கர்த்தரைக் கம்பீரித்துப்பாடி,
நம்முடைய இரட்சிப்பின் கன்
மலையைச் சங்கீர்த்தனம் பண்
ணக் கடவோம், வாருங்கள். – 2
துதியோடே அவர் சந்நிதிக்கு
முன்பாக வந்து, சங்கீதங்களால்
அவரை ஆர்ப்பரித்துப்பாடக் கட
வோம்.— 3 ஏனெனில் கர்த்தர்
பெரிய தேவனும், எல்லாத் தே
வர்களின் மேலும் பெரிய இரா
சாவுமாயிருக்கிறார். — 4 அவர்
கையில் பூமியின் அந்தரங்கங்கள்
இருக்கிறது; பருவதங்களின் உய

ரங்களும் அவருடையவைகள். —
5 சமுத்திரம் அவருடையது, அ
வரே அதை உண்டாக்கினார்; வெ
ட்டாந்தரையை அவருடைய கரங்
கள் உருவாக்கிற்று.

6 நாம் பணிந்து குனிந்து, நம்
மை உண்டாக்கின கர்த்தருக்கு
முன்பாக முழங்கால்படியிடக் கட
வோம், வாருங்கள். — 7 ஏனெ
னில் அவர் நம்முடைய பராபர
னும், நாம் அவருடைய மேய்ச்ச
லின் சனமும், அவருடைய கரத்
தின் ஆடுகளுமாமே. இன்று அவ
ருடைய சத்தத்தைக் கேட்டீர்க
ளாகில், — 8 வனாந்தரத்திலே
சண்டை மூட்டுதலிலும் சோதனை
யின் நாளிலும் நடந்தது போல்,
உங்கள் இருதயத்தைக் கடினப்
படுத்தாதேயுங்கள். — 9 அங்கே
உங்கள் பிதாக்கள் நம்மைச் சோ
தித்து, நம்மைப் பரீட்சைபார்த்
து, நம்முடைய கிரியையையுங்
கண்டார்கள். — 10 நாற்பது வரு
ஷமாக நாம் அந்தச் சந்ததியை
அரோசித்து, அவர்கள் மனந் தப்
பி நடக்கிற சனம் என்றும், அவர்
கள் நம்முடைய வழிகளை அறியா
தே போகிறவர்கள் என்றும்
சொல்லி, 11 அவர்கள் நம்முடை
ய ஓய்வுக்குள் பிரவேசிப்பதில்லை
என்று நம்முடைய கோபத்திலே
ஆணையிட்டோம்.

96. சங்கீதம்.

பராபரனை அவர் மகத்துவத்தின் நிமித்
தமாகவும், புதிய ஏற்பாட்டினுடைய
கிருபையின் நிமித்தமாகவும் துதிக்க
ஏவினது.

கர்த்தரைப் புதுப்பாட்டாய்ப்
பாடுங்கள், பூமியின் குடிகளே,
எல்லாரும் கர்த்தரைப் பாடுங்
கள். — 2 கர்த்தரைப்பாடி, அவரு
டைய நாமத்தை ஸ்தோத்திரித்து,
நாளுக்கு நாள் அவருடைய இரட்
சிப்பைச் சுவிசேஷமாய் அறிவி
யுங்கள். — 3 சாதிகளுக்குள் அவரு
டைய மகிமையையும், எல்லாச்
சனசதளங்களுக்குள்ளும் அவரு
டைய அதிசயங்களையும் விவரியுங்
கள். — 4 ஏனெனில் கர்த்தர் பெ
ரியவரும் மிகுதியாய் ஸ்தோத்தி
ரிக்கப்பட்டவருமானவர்; அவர்
எல்லாத் தேவர்களின் மீதிலும்
பயங்கரமாயிருக்கிறார். — 5 ஏ
னென்றால் எல்லாச் சனசதளங்க
ளுடைய தேவர்களும் விக்கிரகங்
கள்தானே, கர்த்தரோ வானங்களை
உண்டாக்கினார். — 6 மகிமையும்
கனமும் அவருக்கு முன்பாகவும்,
வல்லமையும் மகத்துவமும் அவர்
பரிசுத்த ஸ்தலத்திலும் இருக்
கிறது.

7 சனசதளங்களின் வமிசங்க
ளே, கர்த்தருக்கு மகிமையையும்
பெலனையும் செலுத்துங்கள், கர்த்
தருக்கு அதைச் செலுத்துங்கள்.
8 கர்த்தருக்கு அவருடைய நாமத்
தின் மகிமையைச் செலுத்திக் கா
ணிக்கைகளைக் கொண்டுவந்து, அ
வருடைய பிரகாரங்களுக்குள் பிர
வேசியுங்கள். — 9 கர்த்தரைப் பரி
சுத்த அலங்காரத்துடனே பணி
யுங்கள்; பூமியின் குடிகளே எல்
லாரும் அவருக்கு முன்பாக நடுங்
குங்கள். — 10 கர்த்தர் இராசரிக்கம்
பண்ணுகிறார்; ஆனதுகொண்டு:

பூச்சக்கரம் அசையாதபடி உறு
திப்படும் என்றும், சனசதளங்
களை நிதானமாய் நியாயந் தீர்ப்
பார் என்றும் சாதிகளுக்குள்ளே
சொல்லுங்கள். — 11 வானங்கள்
மகிழ்ந்து, பூமி பூரிப்பாகிச் சமுத்
திரமும் அதன் நிறைவும் முழங்
குவதாக.— 12 நாடும் அதில் உள்
ளதனைத்தும் களிகூருவதாக; அப்
போது கர்த்தருக்கு முன்பாக எல்
லாக் காட்டு விருட்சங்களும் கம்
பீரிக்கும்.— 13 ஏனெனில் அவர்
வருகிறார், ஏனெனில் அவர் பூமி
யை நியாயந்தீர்க்க வருகிறார்; பூச்
சக்கரத்தை நீதியாகவும், சனசத
ளங்களை உண்மையாகவும் நியாயந்
தீர்ப்பார்.

97. சங்கீதம்.

இராசாவாகிய மேசியாவினுடைய மகத்துவமும், அவருடைய நியாயத் தீர்ப்புகளால் நல்லவர்கள் மகிழுகிற சந்தோஷமும்.

கர்த்தர் இராசரிக்கம் பண்ணு
கிறார்; பூமி பூரிப்பாகி, திரளான
தீவுகள் மகிழக்கடவது.
2 மேகமும் மந்தாரமும் அவ
ரைச் சுற்றிலும் இருக்கிறது, நீதி
யும் நியாயமும் அவருடைய இரா
சாசனத்தின் மூலமானது.-3 அக்
கினி அவர் முன்னாலே நடந்து,
சுற்றிலும் இருக்கிற அவருடைய
சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது.
4 அவருடைய மின்னல்கள் பூச்
சக்கரத்தைப் பிரகாசிப்பிக்கிறது;
பூமி அவைகளைக் கண்டு அதிரும்.
5 கர்த்தரின் பிரசன்னத்தினாலே
பருவதங்கள் மெழுகைப்போல்
உருகும், சர்வ பூமியினுடைய
ஆண்டவரின் பிரசன்னத்தினாலே
தானே. — 6 வானங்கள் அவரு
டைய நீதியை அறிவிக்கும்; எல்
லாச் சனசதளங்களும் அவருடை
ய மகிமையைக் காண்பார்கள்.
7 சுரூபங்களை வணங்கி, விக்கி
ரகங்கள் பேரிலே பெருமை பா
ராட்டுகிற யாவரும் வெட்கக் கட
வார்கள்; எல்லாத் தேவர்களே,
அவரைப் பணியுங்கள்.
8 சீயோன் கேட்டு மகிழும்,
கர்த்தாவே, உம்முடைய நியாயத்
தீர்ப்புகளாலே யூதாவின் குமாரத்
திகள் களிகூருவார்கள்.— 9 ஏ
னென்றால் கர்த்தாவே, தேவரீர்
சர்வ பூமியின் மீதிலும் உன்னத
மானவர், எல்லாத் தேவர்கள் மீதி
லும் மிகுதியும் உயர்ந்திருக்கிறீர்.
10 கர்த்தரைச் சிநேகிக்கிறவர்
களே, பொல்லாப்பைப் பகையுங்
கள்; அவர் தம்முடைய பரிசுத்த
வான்களின் ஆத்துமங்களைக் காப்
பாற்றி, அவர்களை ஆகாதவர்க
ளின் கைக்குத் தப்புவிக்கிறார்.
11 நீதிமானுக்கு வெளிச்சமும்,
செம்மை இருதயத்தாருக்கு ம
கிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கி
றது.— 12 நீதிமான்களே, கர்த்
தருக்குள் மகிழ்ந்து, அவருடைய
பரிசுத்தம் பிரஸ்தாபமாகும் படி
யாகத் துதியுங்கள்.

98. சங்கீதம்.

கிறிஸ்துவைக்கொண்டு பராபரன் செய்யும் இரட்சிப்பின் நிமித்தம் அவரைத் துதிக்க ஏவினது.

சங்கீதம்.

கர்த்தரைப் புதுப்பாட்டாய்ப்
பாடுங்கள், ஏனெனில் அதிசயங்
களைச் செய்கிறார்; அவருடைய
வலது கரமும் அவருடைய பரி
சுத்த புயமும் அவருக்கு இரட்சிப்
புண்டாக்குகிறது.

2 கர்த்தர் தம்முடைய இரட்
சிப்பைப்பிரஸ்தாபமாக்கித்தமது
நீதியைச் சாதிகளுடைய கண்க
ளுக்கு முன்பாக விளங்கப்பண்ணு
கிறார்.– 3 அவர் இஸ்ரவேல் வீட்
டுக்காகத் தமது கிருபையையும்
தமது உண்மையையும் நினைக்கி
றார். பூமியின் எல்லைகள் எல்லாம்
நமது பராபரனுடைய இரட்சிப்
பைக் காணுகிறது.

4 பூமியின் குடிகளே, எல்லா
ரும் கர்த்தருக்கென்று ஆர்ப்பரி
யுங்கள், முழங்கிக் கம்பீரித்துப்
பாடுங்கள்.— 5 கர்த்தரைச் சுர
மண்டலத்தால் கீர்த்தனம் பண்
ணுங்கள், சுரமண்டலத்தாலும்
கீத சத்தத்தாலுந்தானே.-6 கர்த்
தராகிய இராசாவுக்கு முன்பாகப்
பூரிகைகளாலும் எக்காள சத்தத்
தாலுங் கம்பீரியுங்கள். - 7 சமுத்
திரமும் அதன் நிறைவும், பூச்சக்
கரமும் அதில் குடியிருக்கிறவர்க
ளும் முழங்குவார்களாக.-8கர்த்த
ருக்கு முன்பாக ஆறுகள் கை
கொட்டவும், பருவதங்கள் ஏக
மாய்க் கம்பீரிக்கவுங் கடவது.
9 ஏனெனில் அவர் பூமியை நியா
யந்தீர்க்க வருகிறார், பூச்சக்கரத்
தை நீதியோடும் சனசதளங்களை
மகா நிதானத்தோடும் நியாயந்
தீர்ப்பார்.

99. சங்கீதம்.

கர்த்தராகிய இராசாவைப் பணிந்து
ஸ்தோத்திரிக்க ஏவினது.

கர்த்தர் இராசரிக்கம் பண்ணு
கிறார்,சனசதளங்கள் தத்தளிக்கக்
கடவது; கேருபீன்கள்மேல் வாச
மாயிருக்கிறவர் இராசரிக்கம்பண்
ணுகிறார், பூமி அசைவதாக.—
2 கர்த்தர் சீயோனில் பெரியவர்,
அவர் எல்லாச் சனசதளங்கள் மே
லும் உயர்ந்தவர்.- 3 உம்முடைய
மகத்துவமும் பயங்கரமுமான நா
மத்தைத் துதிப்பார்கள், ஏனெ
னில் அது பரிசுத்தமானது. –
4 நியாயத்தைச்சிநேகிக்கிற இரா
சாவின் பலத்தையுந் துதிப்பார்
களாக; தேவரீர் நிதானங்களை நிலை
நிறுத்துகிறீர்; தேவரீர்யாக்கோபி
லே நியாயமும் நீதியும் செய்கிறீர்.
5 நம்முடைய பராபரனாகிய கர்த்
தரை உயர்த்தி, அவர் பாதபடியி
லே பணியுங்கள், ஏனெனில் பரி
சுத்தராயிருக்கிறார். – 6 அவரு
டைய தாசருக்குள்ளே மோசே
யும் ஆரோனும், அவர் நாமத்தை
நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்குள்
ளே சாமுவேலும் செய்ததுபோ
லத் தானே. கர்த்தரை நோக்கிக்
கூப்பிட்டார்கள், அப்போதுஅவர்
களுக்கு மறு உத்தரவு அருளிச்
செய்தார்.-7 மேகத்தூணில் அவர்
களோடே பேசினார்; அவருடைய
சாட்சிகளையும் அவர் தங்களுக்
குக் கொடுத்த பிரமாணத்தையும்
கைக் கொண்டார்கள்.- 8 எங்கள்
பராபரனாகிய கர்த்தாவே, தேவ
ரீர் அவர்களுக்கு உத்தரவு அரு

ளிச்செய்தீர்; அவர்களுக்கு மன்
னிக்கிறவரும் அவர்கள் செய்கை
களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற
வருமான தேவனாயிருந்தீர்.-9 நம்
முடைய பராபரனாகிய கர்த்தரை
உயர்த்தி, அவருடைய பரிசுத்த
பருவதத்திற்கு நேராகப் பணியுங்
கள்; ஏனெனில் நம்முடைய பரா
பரனாகிய கர்த்தர் பரிசுத்தராயி
ருக்கிறார்.

100. சங்கீதம்.

தெய்வ ஸ்தோத்திரத்துக்கு ஏவினது.

துதி சங்கீதம்.

பூமியின் குடிகளே, எல்லாரும்
கர்த்தரை ஆர்ப்பரியுங்கள்.-2கர்த்
தருக்கு மகிழ்ச்சியோடே ஆரா
தனை செய்து, கம்பீரசத்தத்தோ
டே அவர் முன்பாக வாருங்கள்.
3 கர்த்தரே பராபரன் என்று
அறியுங்கள்: நாம் அல்ல, அவரே
நம்மைத் தமக்குச்சனமும் தமது
மேய்ச்சலின் ஆடுகளுமாக்கினார்.
4 அவர் வாசல்களில் துதியோடும்
அவர் பிரகாரங்களில் புகழ்ச்சி
யோடும் பிரவேசித்து, அவரைத்
துதித்து அவருடைய நாமத்தை
ஸ்தோத்திரியுங்கள். – 5 ஏனெ
னில் கர்த்தர் நல்லவர்; அவரு
டைய உண்மை தலைமுறை தலை
முறையாகவும் உள்ளது.

101. சங்கீதம்.

தான் ஆளப்போகிற நீதியைத் தாவீது காண்பித்தது.

தாவீதின் சங்கீதம்.

கிருபையையும் நியாயத்தீர்ப்
பையுங் குறித்துப் பாடுவேன்;
கர்த்தாவே, உம்மைக் கீர்த்தனம்
பண்ணுவேன்.– 2 உத்தமமான
வழியிலே விவேகியாயிருப்பேன்;
எப்போது என்னண்டைக்கு வரு
வீர். என் மன உண்மையாய்
என் வீட்டுக்குள் நடந்துகொள்ளு
வேன். - 3 நான் பேலியாளின் வி
சேஷத்தை என் கண்களுக்கு
முன்பாக வைப்பதில்லை; வழி வி
லகுகிறவர்களின் செய்கையைப்
பகைக்கிறேன், அது என்னோடு
ஒட்டிக் கொள்ளாது. - 4 மாறுபா
டான இருதயம் என்னை விட்டு அ
கல வேண்டும், பொல்லாதவனை
நான் அறிவதில்லை. – 5 தனக்கடுத்
தவனை அந்தரங்கத்திலே அவது
று பண்ணுகிறவனைச் சங்கரிப்
பேன்; மேட்டிமைக் கண்ணனை
யும் பெரு நெஞ்சுள்ளவனையும்
பொறுக்கமாட்டேன்.-6 என்னோ
டே வாசம்பண்ண என் கண்கள்
தேசத்தில் உண்மையானவர்க
ளைப் பார்க்கும்; உத்தமமான வழி
யில் நடக்கிறவனே என்னைச் சே
விப்பான். - 7 கபடு செய்கிறவன்
என் வீட்டுக்குள் இருப்பதில்லை,
பொய்களைச் சொல்லுகிறவன்
என் கண்களுக்கு முன்பாக நிலைப்
பதில்லை.-8 எல்லா அக்கிரமக்கா
ரரையும் கர்த்தருடைய பட்டணத்
தில் இராதபடி வேர் அறுக்க, தே
சத்தில் ஆகாதவர்களை எல்லாம்
அதிகாலமே சங்கரிப்பேன்.

102. சங்கீதம்.

சபையின் சிறுமையினாலே துக்கப்பட்டுக் கெஞ்சிப் பராபரன் அதை இனி மகிமைப் படுத்துவார் என்று நம்பி, மனதைத் தேற்றிக்கொண்டது.

சிறுமையானவன் தொய்ந்து,
கர்த்தருக்கு முன்பாகத் தன்
கெஞ்சுதலை ஊற்றிச் செய்யும்
விண்ணப்பம்.

2 கர்த்தரே, என் விண்ணப்பத்
தைக்கேளும், என் கூப்பிடுதல்
உம்மண்டைசேருவதாக.-3 எனக்
கு நெருக்கமுண்டாகிய நாளிலே
உமது முகத்தை எனக்கு மறைக்
காதேயும்; உமது செவியை என்
னண்டை சாயும்; நான் கூப்பிடு
கிற நாளிலே எனக்குத் தீவிர
மாய் உத்தரவு அருளிச் செய்யும்.

4 ஏனெனில் என் நாட்கள் பு
கையைப்போலே பறிந்தது, என்
எலும்புகள் ஒரு கொள்ளியைப்
போலே எரியுண்டது. — 5 என்
இருதயம் ஒரு பூண்டைப்போலே
வெட்டுண்டு உலர்ந்தது; ஆகை
யால் என் அப்பத்தைப் புசிக்க
மறக்கிறேன். — 6 என் பெருமூச்
சின் சத்தத்தினால் என் எலும்பு
கள் என் மாமிசத்தோடே ஒட்டிக்
கொள்ளுகிறது. — 7 வனாந்தர நா
ரைக்கு ஒப்பானேன், பாழுந் தலங்
களில் தங்கிய ஆந்தையைப்போல்
ஆனேன். - 8 நான் நித்திரையில்
லாமல், வீட்டின்மேல் தனித்
திருக்குங் குருவியைப்போல் இ
ருக்கிறேன். — 9 நாள்தோறும்
என் சத்துருக்கள் என்னை நிந்திக்
கிறார்கள்; எனக்கு விரோதமாய்ப்
பெருமை பாராட்டுகிறவர்கள் என்
பேரில் ஆணையிடுகிறார்கள். - 10 ஏ
னெனில் உமது சினத்தாலும்
உமது கடுங் கோபத்தாலும் நான்
சாம்பலை அப்பமாகப் புசித்து என்
பானங்களை அழுகையோடே கலக்
கிறேன். — 11 ஏனெனில் என்
னைத் தூக்கித் தாழத் தள்ளினீர்.

12 என் நாட்கள் சாய்ந்து போ
கிற நிழலைப்போலானது; நான்
ஒரு பூண்டைப்போல் உலருகி
றேன். — 13 ஆனால், கர்த்தாவே,
தேவரீர் என்றென்றைக்கும் இ
ருக்கிறீர்; உம்முடைய பேர் பிரஸ்
தாபம் தலைமுறை தலைமுறையாக
நிற்கும். — 14 தேவரீர் எழுந்தரு
ளிச் சீயோனுக்கு இரங்குவீராக;
ஏனெனில் அதன்மேல் தயவாகி
றதற்குக் காலமாம், அதேனென்
றால் அதுக்காகக் குறித்த நேரம்
வந்தது. — 15 ஏனென்றால் உம்
முடைய ஊழியக்காரர் அதன்
கல்லுகள் மேல் ஆசையை வைத்
து, அதன் மண்ணுக்குப் பரிதபிக்
கிறார்கள்.

16 கர்த்தர் சீயோனைக் கட்டி,
தமது மகிமையில் வெளிப்பட்டுச்
17 சகாயமற்றவனுடைய விண்
ணப்பத்தை அசட்டைபண்ணா
மல், அவர்கள் செபத்தை நோக்
கிப் பார்க்கும்போது, - 18 சாதிகள்
கர்த்தருடைய நாமத்திற்கும், பூ
மியிலுள்ள இராசாக்கள் எல்லாம்
உம்முடைய மகிமைக்கும் பயப்
படுவார்கள். — 19 இது பின் சந்த
திக்கு எழுதப்படும். - 20 கர்த்தர்
கட்டுண்டவர்களின் பெருமூச்
சைக் கேட்கவும், கொலைக்கு நிய
மிக்கப்பட்டவர்களை விடுதலையாக்
கவும், - 21 தம்முடைய பரிசுத்த
உயரத்திலிருந்துபார்த்து, வானங்
களிலிருந்து பூமியின்மேல் கண்
ணோக்கினார் என்கிறதின் நிமித்
தம் சிருஷ்டிக்கப்படப்போகிற
சனம் கர்த்தரைத் துதிக்கும். —

22 கர்த்தருக்கு ஆராதனை செய்
யச் சனசதளங்களும் இராச்சியங்
களும் ஏகமாய்க் கூடிக்கொள்ளு
கையில், — 23 சீயோனிலே கர்த்
தருடைய நாமத்தையும், எருச
லேமிலே அவருடைய துதியை
யும் விவரிப்பார்கள்.

24 என் பெலனையோ வழியி
லே ஒடுக்கி, என் நாட்களைக் கு
றுக்குகிறார். — 25 என் பராபர
னே, என்னை என் ஆயுளின் பா
தியில் எடுத்துக்கொள்ளாதேயும்
என்கிறேன்; உம்முடைய வரு
ஷங்கள் தலைமுறை தலைமுறைக
ளாக இருக்கும். — 26 பூர்வத்தி
லே பூமியை அஸ்திபாரப்படுத்தி
னீர்; வானங்கள் உம்முடைய கை
களின் கிரியையாயிருக்கிறது. —
27 அவைகள் அழிந்துபோகும், நீ
ரோ நிலைநிற்பீர்; அவைகள் எல்
லாம் வஸ்திரம்போல் பழசாய்ப்
போகும், அவைகளை ஒரு சால்வை
யைப்போல் மாற்றுவீர்.-28 நீரோ
வென்றால் இருக்கிற பிரகாரமாக
இருக்கிறீர்; உம்முடைய வருஷங்
கள் முடிந்து போவதில்லை. —
29 உமது அடியாரின் பிள்ளைகள்
நிலைகொண்டிருப்பார்கள்; அவர்
கள் வித்து உமக்கு முன்பாக
உறுதிப்படும்.

103. சங்கீதம்.

தயாபரரை ஸ்தோத்திரித்தல்.

தாவீதின் சங்கீதம்.

என் ஆத்துமமே, கர்த்தரை
யும் என் முழு உள்ளமே, அவரு
டைய பரிசுத்த நாமத்தையும் ஸ்
தோத்திரி. — 2 என் ஆத்துமமே,
கர்த்தரை ஸ்தோத்திரி, அவர்
செய்த சகல உபகாரங்களையும்
மறவாதே. — 3 அவர் உன் அக்
கிரமங்களை எல்லாம் மன்னித்து,
உன் நோக்காட்டை எல்லாம் கு
ணமாக்கி, — 4 உன் பிராணனை
அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்
னைக் கிருபையாலும் இரக்கங்க
ளாலும் முடி சூட்டி, — 5 உன்
வாயை நன்மையால் திருப்தியாக்
குகிறதினாலே கழுகுக்குச் சமான
மாய் உன் வயது திரும்ப வால
வயதுபோலாகிறது.

6 ஒடுக்கப்பட்ட யாவருக்கும்
கர்த்தர் நீதியும் நியாயமும் செய்
கிறார். — 7 அவர் தமது வழிகளை
மோசேக்கும், தமது கிரியைகளை
இஸ்ரவேல் புத்திரருக்குந் தெரி
யப்பண்ணினார். — 8 கர்த்தர் மன
உருக்கமும் இரக்கமும் நீண்ட
சாந்தமும் மிகுந்த கிருபையும்
உள்ளவர். — 9 நித்திய காலமாக
வழக்காடார், என்றைக்கும் கோ
பம் வைக்கார். — 10 அவர் நம்மு
டைய பாவங்களுக்குத் தக்கதாக
நமக்குச் செய்யாமலும், நம்முடை
ய அக்கிரமங்களுக்குத் தக்கதாக
நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்
கிறார். — 11 ஏனெனில் பூமியின்
மேல் வானம் இருக்கும் உயரம்
போல் அவருடைய கிருபை அவ
ருக்குப் பயந்தவர்கள் மேல் வல்ல
பமாயிருக்கிறது. — 12 மேற்குக்
கும் கிழக்குக்கும் இருக்குந் தூர
மாக நம்முடைய மீறுதல்களை நம்
மை விட்டு விலக்குகிறார்.- 13 த
கப்பன் பிள்ளைகளுக்கு இரங்கு
வதுபோல் கர்த்தர் தமக்குப்
பயந்தவர்களுக்கு இரங்குகிறார்,

14 ஏனென்றால் நாம் இன்ன
உருவென்று அவர் அறிவார்; நாம்
மண்ணென்று நினைவுகூருகிறார்.-
15 மனுஷன் தன் நாட்களில் புல்
லுக்கு ஒப்பாயிருக்கிறான், வெளி
யின் புஷ்பத்தைப் போல் பூக்கி
றான். – 16 ஏனெனில் காற்று
அதன்மேல் வீசிக் கடந்த உட
னே அது போயிற்று, அதன்
தலம் அப்புறம் அதை அறிந்தி
ராது.–17 ஆனால் கர்த்தருடைய
கிருபை அவருக்குப் பயந்தவர்கள்
மேலும், அவருடைய நீதி அவர்
கள் பிள்ளைகளுடைய பிள்ளைக
ளின்மேலும் அனாதியாய் என்
றென்றைக்கும் உள்ளது.-18 அவ
ருடைய உடன்படிக்கையைக்
கைக்கொண்டு, அவருடைய கட்
டளைகளை அவைகளின்படி செய்
யும்படியாக நினைக்கிறவர்களின்
மேலே தானே.

19 கர்த்தர் வானங்களில் தம்மு
டைய ஆசனத்தை உறுதிப்படுத்
தினார்; அவருடைய இராசரிக்கம்
சகலத்தையும் ஆளுகிறது. –
20 கர்த்தருடைய சொற்படி
கேட்டு, அவருடைய வசனத்தின்
படி செய்கிற பலத்த சௌரிய
வான்களாகிய அவருடைய தூதர்
களே, அவரை ஸ்தோத்திரியுங்
கள்.–21 கர்த்தருக்குப் பிரியமா
னதைச் செய்து, அவர் வேலை
யாட்களாயிருக்கிற அவருடைய
எல்லாச் சேனைகளே, அவரை
ஸ்தோத்திரியுங்கள். – 22 கர்த்
தர் ஆளுகிற எவ்விடங்களிலும்
உள்ள அவருடைய எல்லாக் கிரி
யைகளே, அவரை ஸ்தோத்திரி
யுங்கள். என் ஆத்துமமே, கர்த்த
ரை ஸ்தோத்திரி.

104. சங்கீதம்.

சர்வத்தையும் சிருஷ்டித்தவரும் விசாரிக்கிறவருமாகிய பராபரனைப் பாடின துதி.

என் ஆத்துமமே, கர்த்தரை
ஸ்தோத்திரி. என் பராபரனாகிய
கர்த்தாவே, மிகவும் பெரியவரா
யிருக்கிறீர்; மகிமையையும் கனத்
தையும் அணிந்துகொண்டிருக்கி
றீர்.–2 வெளிச்சத்தை வஸ்திரம்
போல் உடுத்தி, வானங்களைத்
திரையைப் போல் விரித்திருக்கி
றார். –3 தமது மேல்வீடுகளைத்
தண்ணீர்களால் மச்சுப்பாவி, மே
கங்களைத் தமது இரதமாக்கிக்
காற்றினுடைய செட்டைகளின்
மேலே நடக்கிறார்.-4 தம்முடைய
தூதரை ஆவிகளும், தமது வே
லைக்காரரை அக்கினிக்கொழுந்து
களுமாக்குகிறார்.

5 பூமியை அதன் மூலங்களின்
மேல் அது நித்தகாலமும் என்
றைக்கும் அசையாதபடி அஸ்தி
பாரப்படுத்தினார்.–6 அதை உடுப்
பினால் மூடுவது போல் ஆழத்
தால் மூடினீர்; பருவதங்களின்
மேல் தண்ணீர்கள் நின்றது. –
7 அவைகள் உம்முடைய உதம்பு
தலால் விலகி ஓடி, உமது குமுற
லின் சத்தத்தால் முறிந்துபோ
யிற்று. –– 8 மலைகள் வளர்ந்து,
பள்ளத்தாக்குகள் நீர் அவைக
ளுக்கு அஸ்திபாரப்படுத்தின இட
மாய்த் தாழ்ந்தது.–9 அவைகள்

பூமியை மூடத் திரும்பாதபடிக்கு
அவைகள் கடவாதிருக்கும் எல்
லையை வைத்தீர்.-10 மலைகளுக்கு
நடுவாய் ஓடப் பள்ளத்தாக்குக
ளில் ஊற்றுகளை வரவிடுகிறீர்.–
11 அவைகள் வெளியின் ஜீவன்க
ளுக்கு எல்லாம் தண்ணீர் காட்
டும்; அங்கே காட்டுக் கழுதைகள்
தங்கள் தாகத்தைத் தீர்க்கும். –
12 அவைகளின் ஓரமாய் ஆகாயத்
துப் பறவைகள் சஞ்சரித்துக்
கிளைகளுக்குள் இருந்து சத்தங்
காட்டும்.–13 பருவதங்களுக்குத்
தம்முடைய மேல்வீடுகளிலிருந்து
தண்ணீர் இறைக்கிறார்; உமது
கிரியைகளின் பலனாலே பூமி
திருப்தியாகும்.

14 மிருகங்களுக்குப் புல்லையும்,
மனுஷருக்கு ஆகாரமாகப் பயிர்
வகைகளையும் முளைப்பித்துப் பூமி
யிலிருந்து அப்பத்தை வரப்பண்
ணுகிறார். – 15 கொடிமுந்திரிப்
பழரசம் மனுஷனுடைய இருத
யத்தை, முகக்களை எண்ணெ
யாய் விளங்க மகிழ்ச்சியாக்கும்;
அப்பம் மனுஷனுடைய இருத
யத்தை ஆதரிக்கும்.–16 கர்த்த
ருடைய விருட்சங்களும், அவர்
நாட்டின லீபனோனின் கேதுருக்
களும், இரசனை நிரம்பிப்போகும்.
17 அங்கே குருவிகள் கூடுகட்டும்;
பாய்மர விருட்சங்கள் கொக்குக
ளின் குடியிருப்பு. —18 உயர்ந்த
பருவதங்கள் காட்டாடுகளுக்கு
ஆனது; கன்மலைகள் குழி முசல்
களுக்கு அடைக்கலம்.

19 சந்திரனைக் காலக் குறிப்பு
களுக்காகப் படைத்தார்; சூரியன்
தன் அஸ்தமிப்பை அறியும். —
20 இராத்திரியாகும்படி இருளைக்
கட்டளையிடுகிறீர்; அதிலே சகல
காட்டுச் ஜீவன்களும் நடமாடும். –
21 சிங்கக்குட்டிகள் இரைக்கும்,
பராபரனால் தங்கள் ஆகாரத்
தைத் தேடுகிறதற்கும் கர்ச்சிக்
கும்.—22 சூரியன் உதிக்கையில்
அவைகள் ஒதுங்கித் தங்கள் தா
பரங்களில் படுத்துக்கொள்ளும். –
23 அப்போது மனுஷன் தன்
வேலைக்கும் தன் பண்ணைக்கும்
சாயங்காலம் மட்டாகப் புறப்படு
கிறான்.

24கர்த்தாவே, உமது கிரியை
கள் எத்தனை திரள், அவைகளை
எல்லாம் ஞானமாய்ப்படைத்தீர்;
பூமி உமது பொருட்களால் நி
றைந்திருக்கிறது. — 25 இந்தப்
பெரியதும் விஸ்தாரமுமான ச
முத்திரமுந்தானே; அங்கே சிறி
யவைகளும் பெரியவைகளுமாய்
அசைவாடுகிறஎண்ணிக்கைக்குள்
அடங்காத ஜீவன்கள் உண்டு. –
26 அங்கே கப்பல்களும், அதில்
விளையாட நீர் உருவாக்கின திமிங்
கிலங்களும் நடமாடும். –27 தங்க
ளுடைய ஆகாரத்தை ஏற்றவே
ளையிலே தர அவைகள் எல்லாம்
உம்மை நம்பியிருக்கும்.-28 அவை
களுக்கு நீர் கொடுக்க, வாங்கிக்
கொள்ளும்; நீர் உம்முடைய கை
யைத் திறக்க, நன்மையால் தி
ருப்தியாகும்.–29 நீர் உமது முகத்
தை மறைக்கத் திகைக்கும்; நீர்
அவைகளின் சுவாசத்தை வாங்
கிக்கொள்ள, அவைகள் மாண்டு,
தங்கள் தூளுக்குத் திரும்பும். —
30 நீர் உம்முடைய ஆவியை

அனுப்பும்போது, சிருஷ்டிக்கப்ப
டும்; பூமியின் ரூபையும் புதிதாக்
குகிறீர்.
31 கர்த்தருடைய மகிமை என்
றென்றைக்கும் இருப்பதாக; கர்த்
தர் தம்முடைய கிரியைகளா
லே மகிழுவாராக.- 32 அவர் பூமி
யை நோக்கிப் பார்க்கிறபோது
அதிரும், அவர் பருவதங்களைத்
தீண்டுகிறபோது புகையும். —
33 நான் உயிரோடிருக்கையில்
என் கர்த்தாவைப் பாடுவேன்;
நான் இருக்கும் மட்டும் என் பரா
பரனைக் கீர்த்தனம் பண்ணு
வேன்.- 34 அவர்மேல் இருக்கிற
என் தியானம் இனிதாயிருக்கும்;
நான் கர்த்தருக்குள் மகிழுவேன்.-
35 பாவிகள் பூமியிலிருந்து நிர்
மூலமாகி, ஆகாதவர்கள் இனி
இராமல் போகக்கடவார்கள். என்
ஆத்துமமே, கர்த்தரை ஸ்தோத்
திரி. அல்லேலூயா.

105. சங்கீதம்.

*கோத்திரப் பிதாக்களுக்கும் இஸ்ரவே
லருக்கும் பராபரன் செய்த உபகாரங்
களை நினைவுகூருதல்.*

கர்த்தரைத் துதித்து, அவரு
டைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்
குங்கள், அவருடைய செய்கைக
ளைச் சனசதளங்களுக்குள்ளே அ
றிவியுங்கள்.- 2 அவரைப்பாடி, அ
வரைக் கீர்த்தனம் பண்ணி, அவ
ருடைய அதிசயங்களை எல்லாந்
தியானித்துப் பேசுங்கள்.- 3 அவ
ருடைய பரிசுத்த நாமத்துக்காக
மேன்மை பாராட்டுங்கள்; கர்த்
தரைத் தேடுகிறவர்களின் இரு
தயம் மகிழ்வதாக.- 4 கர்த்தருக்
காகவும் அவர் வல்லமைக்காகவும்
விசாரித்துக் கேட்டு, நித்தம் அவர்
சமுகத்தைத் தேடுங்கள்.- 5 அவ
ருடைய தாசனாகிய ஆபிரகாமின்
வித்தே, அவரால் தெரிந்துகொள்
ளப்பட்டவர்களாகிய யாக்கோபி
ன் புத்திரரே,-6 அவர் செய்த அவ
ருடைய அதிசயங்களையும், அற்பு
தங்களையும், அவர் வாக்கின் நியா
யத் தீர்ப்புகளையும் நினையுங்கள்.
7 அவரே நம்முடைய பராபர
னாகிய கர்த்தர், பூமி எங்கும் அவ
ருடைய நியாயத்தீர்ப்புகள் விளங்
கும்.- 8 அவர் ஆயிரந் தலைமுறை
களுக்குக் கட்டளையிட்ட வார்த்
தையாக ஆபிரகாமோடே பண்
ணின தமது உடன்படிக்கையை
யும்,-9 ஈசாக்குக்கு இட்ட தமது
ஆணையையும் என்றென்றைக்கும்
நினைக்கிறார்.— 10 இதை யாக்
கோபுக்குத் தீர்மானமாகவும்,
இஸ்ரவேலுக்கு நித்திய உடன்
படிக்கையாகவும் உறுதிப்படுத்தி,
11 உங்கள் சுதந்தரத்தின் வீத
மாகிய கானான் சீமையை உனக்
குக் கொடுப்போம் என்று, —
12 அவர்கள் அதிலே கொஞ்சத்
தொகைக்கு உட்பட்ட பேரும் பர
தேசிகளுமாயிருக்கையில் சொன்
னார்.- 13 அவர்கள் ஒரு சாதியை
விட்டு மறு சாதியண்டைக்கும்,
ஒரு இராச்சியத்தை விட்டு மறு
சனத்தண்டைக்கும் நடந்துபோ
னார்கள்.-14 ஒருவரும் அவர்களை
ஒடுக்க ஒட்டாதிருந்தார்.- 15 நாம்
அபிஷேகம் பண்ணினவர்களை நீங்
கள் தொடாமலும், நம்முடைய

77130
Qb:417 N20

தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்
யாமலும் இருங்கள் என்று அவர்
கள் நிமித்தம் இராசாக்களைக்
கடிந்துகொண்டார். – 16 அவர்
தேசத்தின்மேல் பஞ்சத்தை வர
வழைத்து, அப்பம் என்ற ஆதாரவு
கோலை எல்லாம் முறித்தார்.

17 அவர்களுக்கு முன்னாலே
ஒரு புருஷனை அனுப்பினார், யோ
சேப்பு சிறையாக விற்றுப்போடப்
பட்டான். -18 அவர் சொன்னது
வரும் காலமட்டாக அவன் கால்
களை விலங்குபோட்டு ஒடுக்கினார்
கள்; அவன் பிராணன் இரும்பில்
அடைபட்டது.-19 கர்த்தருடைய
வசனம் அவனைப் புடமிட்டது.—
20 இராசா அனுப்பி அவனைக்
கட்டவிழ்க்கச் சொன்னான்; சன
சதளங்களின் அதிபதி அவனை
விடுதலை பண்ணினான். —21 தன்
பிரபுக்களை அவன் மனதின்படி
கட்டவும், தன் மூப்பர்களை ஞானி
களாக்கவும், -22 அவனைத் தன்
வீட்டுக்கு ஆண்டவனும், தன்
ஆஸ்திக்கு எல்லாம் அதிபதியு
மாக்கினான்.

23 அப்போது இஸ்ரவேல் எகிப்
திலே வந்தான், யாக்கோபு காம்
தேசத்திலே பரதேசியாயிருந்
தான். — 24 தமது சனத்தை
மெத்தவும் பலுகவும், அதின் சத்
துருக்களைப் பார்க்கிலும் அதைப்
பலக்கவும் பண்ணினார்.-25 அவர்
கள் இருதயம் அவருடைய சனத்
தைப் பகைக்கவும், அவருடைய
ஊழியக்காரரைச் சர்ப்பனை செய்
யவும் மாறிப்போயிற்று.-26 தமது
தாசனாகிய மோசேயையும் தாம்
தெரிந்துகொண்ட ஆரோனையும்
அனுப்பினார்.—27 இவர்கள் அவர்
களுக்குள் காம் தேசத்திலே அவர்
சொன்ன அடையாளங்களையும்
அற்புதங்களையுஞ் செய்தார்கள்.
28 இருளை அனுப்பி அந்தகாரம்
உண்டாக்கினார்; அவருடைய
வார்த்தைகளுக்கு எதிர்ப்பார் இல்
லை.-29 அவர்களுடைய தண்ணீர்
களை இரத்தமாக மாற்றி, அவர்
கள் மச்சங்களைச் சாகப்பண்ணி
னார்.-30 அவர்கள் தேசம் தவளை
களைத் திரளாய்ப் பிறப்பித்தது,
அவர்களுடைய இராசாக்களின்
அறைவீடுகளிலும் உண்டாகத்
தானே.-31 அவர் விளம்பின
போது, அவர்கள் எல்லைகளில்
எங்கும் வண்டுச் சாதிகளும் பேன்
களும் வந்தது. — 32 அவர்கள்
மழைகளைக் கன்மழையாக்கி, அவர்
கள் தேசத்திலே சுவாலைவிட்டு
எரியும் அக்கினியைக் கட்டளை
யிட்டு,-33 அவர்களுடைய கொடி
முந்திரிச் செடிகளையும், அவர்
கள் அத்திமரங்களையும் அழித்து,
அவர்கள் எல்லைகளிலுள்ள மரங்
களை முறித்தார்.-34 அவர் விளம்
பினபோது, எண்ணிமுடியாத
வெட்டுக்கிளிகளும் பச்சைக்கிளி
களும் வந்து, — 35 அவர்கள்
தேசத்திலுள்ள சகல பூண்டை
யும் அரித்து, அவர்கள் நிலத்தின்
கனியைத் தின்றுபோட்டது. —
36 அவர்கள் தேசத்திலே அவர்
முதற்பேறு அனைத்தையும், அவர்
களுடைய பலத்தில் எல்லாந் தலை
மையானவைகளையுஞ் சங்கரித்
தார்.—37 அபபோது இவர்களை
வெள்ளியோடும் பொன்னோடும்
புறப்படப் பண்ணினார்; இவர்கள்

கோத்திரங்களில் இடறினவனும்
இல்லை.— 38 இவர்கள் புறப்படு
கையிலே எகிப்து மகிழ்ந்தது,
ஏனெனில் இவர்கள் பயம் அவர்
கள் மேலே விழுந்தது.-39 மறை
விடமாக ஒரு மேகத்தையும், இர
வை வெளிச்சமாக்குகிறதற்காக
அக்கினியையும் விரித்தார். —
40 கேட்டார்கள், அப்போது கா
டைகளை வரப்பண்ணினார், வான
அப்பத்தாலும் அவர்களைத் திருப்
தியாக்கினார். –41 கன்மலையைத்
திறந்தார். அப்போது தண்ணீர்
கள் புறப்பட்டு, வறண்ட வெளி
களில் ஆறாய் ஓடிற்று.

42 ஏனெனில் அவர் தம்மு
டைய பரிசுத்த வார்த்தையை
யும், தம்முடைய தாசனாகிய ஆபி
ரகாமையும் நினைத்து,- 43 தம்மு
டைய சனத்தைக் களிப்போடும்,
தாம் தெரிந்துகொண்டவர்களைக்
கம்பீரத்தோடும் புறப்படப்பண்
ணி, –44 அவர்கள் தமது பிரமா
ணங்களைக்காத்து நடப்பதற்கும்,
தமது நியாயநெறிகளைக் கைக்
கொள்ளுவதற்கும், -45 அவர்க
ளுக்குச் சாதிகளின் தேசங்களைக்
கொடுத்தார்; சனசதளங்களின்
பிரயாசத்தைச் சுதந்தரித்துக்
கொண்டார்கள். அல்லேலுயா.

106. சங்கீதம்.

*தயாபரருக்கு விரோதமாய் இஸ்ரவே
லர் பண்ணின முரட்டாட்டங்களை
நினைவு கூருதல்.*

அல்லேலூயா, கர்த்தரைத்
துதியுங்கள், ஏனெனில் அவர் நல்
லவர், அவர் கிருபை என்றும்
உள்ளது.— 2 கர்த்தருடைய வல்
லமைகளைச் சொல்லி, அவரு
டைய துதியை எல்லாம் பிரஸ்
தாபமாக்கத் தக்கவன் ஆர். —
3 எல்லாக் காலத்திலும் நியாயத்
தைக் கைக்கொண்டு, நீதியைச்
செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

4 கர்த்தாவே, நான் உம்மால்
தெரிந்துகொள்ளபட்டவர்களின்
நன்மையைக் கண்டு, உம்முடைய
சாதியின் மகிழ்ச்சியால் மகிழ்ந்து,
உம்முடைய சுதந்தரத்தோடுங்
கூட மேன்மை பாராட்டும்படி,–
5 நீர் உம்முடைய சனத்தின்மேல்
உள்ள கிருபையின்படி என்னை
நினைத்து, உமது இரட்சிப்பினால்
என்னைச் சந்தித்தருளும்.

6 எங்கள் பிதாக்களோடுங் கூட
நாங்கள் பாவஞ்செய்து, அக்கிர
மம் நடப்பித்து, ஆகாமியம் பண்
ணினோம். – 7 எங்கள் பிதாக்கள்
எகிப்திலே உம்முடைய அதிசயங்
களை உணராமலும், உம்முடைய
கிருபைகளின் திரட்சியை நினை
யாமலும் போய், நாணல் கடலா
கிய சமுத்திரத்து ஓரத்தில் கல
கம் பண்ணினார்கள். – 8 ஆனால்
அவர் தமது வல்லமையை அறி
யப்பண்ணும்படி, அவர்களைத் தம்
முடைய நாமத்தின் நிமித்தமாக
இரட்சித்து, – 9 நாணல் கடலை
உதம்பினார்; அது வறண்டு போ
யிற்று; அப்போது அவர் வெட்
டாந்தரையைப் போலான ஆழங்
களில் அவர்களை நடக்கப்பண்ணி,
10 அவர்களைப் பகைஞன் கைக்கு
விலக்கி இரட்சித்துச் சத்துரு
வின் கைக்கு அவர்களை விலக்கி
மீட்டார்.-11 ஆனால் அவர்கள் சத்

துருக்களைத் தண்ணீர்கள் மூடிற்
று; அவர்களில் ஒருவனும் மீந்த
தில்லை. – 12 அப்போது அவரு
டைய வார்த்தைகளின் பேரிலே
விசுவாசித்து, அவருடைய துதி
யைப் பாடினார்கள். – 13 ஆனால்
சீக்கிரமாய் அவருடைய கிரியை
களை மறந்தார்கள். அவர்கள் அவ
ருடைய ஆலோசனைக்குக் காத்தி
ராமல், – 14 வனாந்தரத்தில் இச்
சையுள்ளவர்களாகிப் பராபரனை
அவாந்தர வெளியிலே பரிட்சை
பார்த்தார்கள். – 15 அப்போது
அவர்கள் கேட்டதை அவர்களுக்
குக் கொடுத்தார்; ஆனால் அவர்
கள் ஆத்துமங்களில் இளைப்பை
அனுப்பினார்.

16 அவர்கள் மோசேயின் மே
லும் கர்த்தருடைய பரிசுத்தனா
கிய ஆரோனின் மேலும் பாளை
யத்தில் பொறாமையானார்கள். –
17 பூமி திறவுண்டு, தாத்தானை
விழுங்கி, அபிராமின் கும்பை
மூடிப்போட்டது. – 18 அவர்கள்
கும்பிலே அக்கினி பற்றி யெரிந்
தது; அக்கினிச் சுவாலை ஆகாத
வர்களைச் சுட்டுப் போட்டது.

19 அவர்கள் ஓரேப்பிலே ஒரு
கன்றுக் குட்டியை உண்டாக்கி,
வார்க்கப்பட்ட விக்கிரகத்தைப்
பணிந்துகொண்டு, – 20 தங்கள்
மகிமையைப் புல்லைத் தின்னும்
மாட்டின் சாயலாக மாற்றினார்
கள். 21 காம் தேசமாகிய எகிப்தி
லே பெரிய கிரியைகளையும் அதி
சயங்களையும், நாணல் கடல் அண்
டையிலே பயங்கரங்களையுஞ்
செய்தவராகிய-22 தங்கள் இரட்
சிப்பின் பராபரனைமறந்தார்கள். -
23 ஆனபடியினாலே அவரால் தெ
ரிந்துகொள்ளப்பட்ட மோசே
அவருடைய உக்கிரத்தை அவர்
களை அழிக்காதபடி திருப்ப, அவ
ருக்கு முன்பாக இடிதலிலே நில்
லாதிருந்தானாகில், அவர்களை நா
சம் பண்ணுவோம் என்றார்.

24 அவருடைய வார்த்தையை
விசுவாசியாமல், இச்சிக்கப்படத்
தக்க தேசத்தை அசட்டை பண்
ணினார்கள். – 25 கர்த்தருடைய
சத்தத்துக்குச் செவிகொடாமல்,
தங்கள் கூடாரங்களில் முறு
முறுத்தார்கள். – 26 ஆகையினா
லே அவர்களை வனாந்தரத்திலே
மடிவிக்கவும், அவர்கள் வித்தை
சாதிகளுக்குள்ளே மடிவிக்கவும்,
அவர்களைத் தேசங்களில் சிதற
டிக்கவும், – 27 தம்முடைய
கையை அவர்களுக்கு விரோத
மாக எடுத்தார்.

28 அவர்களால் பாகால் பெ
யோருக்கு உடந்தையாகிச் சீவ
னில்லாதவைகளுக்கு இட்ட பலி
களைப் புசித்து, – 29 தங்கள் கிரி
யைகளால் அவருக்குக் கோபம்
உண்டாக்கினார்கள்; ஆகையால்
சங்காரம் அவர்களுக்குள் புகுந்
தது.- 30 அப்போது பினெகாஸ்
எழுந்து நின்று நியாயஞ் செய்
தான்; அதனால் சங்காரம் நிறுத்
தப்பட்டது.- 31 அது அவனுக்கு
என்றுமுள்ள தலைமுறை தலை
முறைக்கும் நீதியாக எண்ணப்
பட்டது.

32 மேரிபாவின் தண்ணீர்கள்
இடத்திலும் அவருக்குக் கடுங்
கோபம் உண்டாக்கினார்கள், அவர்
கள் நிமித்தமாக மோசேக்கும்

பொல்லாப்பு வந்தது.- 33 ஏனெ
னில் அவர்கள் அவன் ஆவிக்குக்
கோபம் மூட்டினதினாலே தன்
உதடுகளால் பதறிப்பேசினான்.
34 கர்த்தர் தங்களுக்குச் சொன்
னபடி அவர்கள் சனசதளங்களை
அழிக்காமல், — 35 சாதிகளுட
னே கலந்து, இவர்கள் கிரியை
களைக் கற்று,- 36 இவர்களுடைய
விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்
தார்கள்; இப்படியே அவர்களுக்கு
இவர்கள் சுருக்கானார்கள். —
37 அவர்கள் தங்கள் குமாரரையும்
தங்கள் குமாரத்திகளையும் பிசாசு
களுக்குப் பலியிட்டு,— 38 குற்ற
மில்லாத இரத்தத்தைச் சிந்தி
னார்கள்; தாங்கள் கானானின் விக்
கிரகங்களுக்குப் பலியிட்ட தங்
கள் குமாரர் குமாரத்திகளுடைய
இரத்தத்தைத்தானே. சிந்தின
இரத்தங்களால் அவர்கள் தேசம்
தீட்டுப்பட்டது. — 39 அவர்கள்
தங்கள் கிரியைகளால் அழுக்காகித்
தங்கள் செய்கைகளால் சோரம்
போனார்கள்.

40 ஆகையால் கர்த்தருடைய
கோபம் அவருடைய சனத்தின்
மேல் மூண்டது; அவர் தமது
சுதந்தரத்தை அருவருத்து, —
41 அவர்களைச் சாதிகளுடைய கை
யிலே ஒப்புக்கொடுத்தார். அப்
போது அவர்கள் பகைஞர் அவர்
களை ஆண்டு, — 42 அவர்கள் சத்
துருக்கள் அவர்களை ஒடுக்கினார்
கள்; இவர்கள் கையின் கீழ்த்
தாழ்த்தப்பட்டார்கள்.- 43 அநே
கந்தரம் அவர்களை விடுவித்தார்;
அவர்களோ தங்கள் யோசனை
யால் அவருக்கு விரோதமாய்க் கல
கம்பண்ணித் தங்களுடைய அக்கிர
மத்தால் சிறுமைப்படுத்தப் பட்
டார்கள்.— 44 அவர்கள் கூப்பிடு
தலை அவர் கேட்கும்போதோ,
அவர்களுக்கு உண்டான இடுக்
கத்தை அவர் கண்ணோக்கி, —
45 அவர்களுக்காகத் தம்முடைய
உடன்படிக்கையை நினைத்துத்
தம்முடைய மிகுந்த கிருபையின்
படி மனஸ்தாபப்பட்டு, - 46 அவர்
களைச் சிறைபிடித்த யாவருக்கு
முன்பாகவும் அவர்களுக்கு இரக்
கங்களைக் கிடைக்கப் பண்ணினார்.
47 எங்கள் பராபரனாகிய கர்த்
தாவே, நாங்கள் உம்முடைய பரி
சுத்த நாமத்தைப் போற்றி,
உமது துதிக்காக மேன்மை பா
ராட்டும்படி எங்களை இரட்சித்து,
எங்களைச் சாதிகளிலிருந்து சே
ரும்.— 48 இஸ்ரவேலின் பராபர
னாகிய கர்த்தர் அநாதியாய் என்
றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்
பட்டவர், சனம் எல்லாம் ஆமே
ன், அல்லேலூயா என்பதாக.

107. சங்கீதம்.

பராபரனைத் துதிக்கவும், அவருடைய
அதிசயமான செயல்களை உணரவும்
எழுப்பினது.

கர்த்தரைத் துதியுங்கள், ஏ
னெனில் அவர் நல்லவர், அவர்
கிருபை என்றும் உள்ளது. —
2 கர்த்தர் சத்துருவின் கைக்கு
நீங்கலாக்கி மீட்டுப்-3 பல தேசங்
களாகிய கிழக்கிலும் மேற்கிலும்,
வடக்கிலும், தெற்கிலுமிருந்து
சேர்ந்தவர்கள் அப்படிச் சொல்லக்
கடவார்கள்.

4 தாபரிக்க ஊரைக் காணுமல்,
வனந்தரத்தில் அவாந்தர வழி
யாய்ப் – 5 பசியாகவும் தாகமாக
வும் ஆத்துமம் தொய்ந்ததாகவும்
அலைந்து திரிந்து, – 6 தங்கள்
ஆபத்திலே கர்த்தரை நோக்கிக்
கூப்பிடுகையில், இவர் தங்கள்
இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி விடு
வித்துத் – 7 தாபரிக்கும் ஊருக்
குப் போய்ச்சேரச் செம்மையான
வழியிலே நடத்தினுரே.- 8 அவர்
கள்: தவனமான ஆத்துமத்தைக்
கர்த்தர் திருப்தியாக்கிப் பசியான
ஆத்துமத்தை நன்மையால் நிரப்
பினுர் என்று, – 9 அவரை மனு
ஷருக்கு முன்பாக அவருடைய
கிருபையின் நிமித்தமும் அவரு
டைய அதிசயங்களின் நிமித்தமுந்
துதிக்கக் கடவார்கள்.

10 பராபரனுடைய வார்த்தை
களுக்கு விரோதமாய்க் கலகம்
பண்ணி, உன்னதமானவருடைய
ஆலோசனையை அசட்டை பண்
ணினபடியினுலே, – 11 இருளி
லும் மரண நிழலிலும் வைக்கப்
பட்டிருந்து, ஒடுக்கத்திலும் இரும்
பிலுங் கட்டுண்டு கிடந்து,- 12 இப்
படியே அவர் தங்கள் இருதயத்
தை வருத்தத்தால் தாழ்த்தின
தினுலே சகாயரில்லாமல் விழுந்
திருந்து, – 13 தங்கள் ஆபத்தி
லே கர்த்தரை நோக்கிக் கூப்பிடு
கையில், இவர் தங்கள் இக்கட்டு
களுக்குத் தங்களை நீங்கலாக்கி
இரட்சித்து, – 14 இருளிலும்
மரண நிழலிலுமிருந்து தங்களை
வெளிப்படப்பண்ணித் தங்கள் கட்
டுகளை அறுத்தாரே. – 15 அவர்
கள்: கர்த்தர் வெண்கலக் கதவு
களை உடைத்து, இருப்புத் தாழ்ப்
பாள்களை முறித்தார் என்று,—
16 அவரை மனுஷருக்கு முன்
பாக அவருடைய கிருபையின் நி
மித்தமும் அவருடைய அதிசயங்
களின் நிமித்தமுந் துதிக்கக் கட
வார்கள்.

17 நிர்மூடராயிருந்து, தங்கள்
பாதக மார்க்கத்தாலும், தங்
கள் அக்கிரமங்களாலும் நோய்
கொண்டு ஒடுங்கிச் — 18 சகல
போசனத்தையும் மனவெறுப்பாய்
அரோசித்து, மரணவாசல்கள்
பரியந்தஞ் சமீபித்தவர்களாகித்
19 தங்கள் ஆபத்திலே கர்த்தரை
நோக்கிக் கூப்பிடுகையில், இவர்
தங்கள் இக்கட்டுகளுக்குத் தங்
களை நீங்கலாக்கி இரட்சித்து,—
20 தம்முடைய வசனத்தை அ
னுப்பித் தங்களைக் குணமாக்கித்
தங்கள் அழிவுக்குத் தப்புவித்தா
ரே. — 21 அவர்கள் கர்த்தரை
மனுஷருக்கு முன்பாக அவரு
டைய கிருபையின் நிமித்தமும்
அவருடைய அதிசயங்களின் நி
மித்தமுந் துதித்து, - 22 ஸ்தோத்
திரபலிகளைச் செலுத்தி, அவரு
டைய கிரியைகளைக் கம்பீரத்
தோடே விவரிக்கக் கடவார்கள்.

23 சமுத்திரத்துக்கு இறங்கிப்
போய்க் கப்பலில் ஏறிப் பெருந்
தண்ணீர்களில் தொழில் பண்ணு
கிறுர்களே.- 24 அவர்கள் கர்த்தரு
டையகிரியைகளையும், ஆழத்திலே
அவருடைய அதிசயங்களையுங்
காண்கிறுர்கள்.-25 தாம் சொல்ல
அதன் அலைகளை உயரப்பண்ணும்
பெருங்காற்றை எழுப்புவார். —
26 ஆகாயத்திற்கு ஏறித் தாழ்வு

களுக்கு இறங்குவார்கள்; அவர்
கள் ஆத்துமம் விக்கினத்தினாலே
கரைந்துபோம். — 27 வெறித்த
வனைப்போலே அலைந்து தளம்பு
வார்கள்; அவர்களுடைய ஞானம்
எல்லாம் முழுகிப்போகும். —
28 ஆனால் தங்கள் ஆபத்திலே
அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்
பிடுகையில், இவர் அவர்களைத்
தங்கள் இக்கட்டுகளுக்கு நீங்க
லாக்கி, இரட்சித்துக்— 29 கொந்
தளிப்பை அமர்ந்து நிற்கப்பண்ணு
வார்; அவைகளின் அலைகள் மௌ
னம் அடையும். — 30 அப்போது
அவைகள் தணிந்து போயிற்று
என்றும், தாங்கள் நாடின குடாக்
கடலுக்கு அவர்களைக் கொண்டு
வருகிறார் என்றுஞ் சந்தோஷப்
படுவார்கள். - 31 ஆகையால் அவர்
கள்: கர்த்தரை மனுஷருக்கு முன்
பாக அவருடைய கிருபையின் நி
மித்தமும் அவருடைய அதிசயங்
களின் நிமித்தமும் துதித்து, —
32 சனத்தின் சபையிலே அவரை
உயர்த்தி, முதிர்ந்தவர்கள் உட்
கார்ந்திருக்கும் இடத்திலே அவ
ரைப் போற்றக் கடவார்கள்.

33 அவர் ஆறுகளை வெட்டாந்
தரையாகவும், நீரூற்றுகளை வ
றண்ட ஸ்தலமாகவும், — 34 செ
ழித்த தேசத்தை அதன் குடிக
ளுடைய பொல்லாப்பின் நிமித்
தம் உவர் நிலமாகவும், மாற்று
கிறார். - 35 அவர் வெட்டாந்தரை
யைத் தண்ணீர்த் தடாகங்களாக
வும், வறண்ட நிலத்தை நீரூற்று
களாகவும் மாற்றிப்— 36 பசித்த
வர்களை அங்கே குடியேற்றுகிறார்;
அவர்கள் குடியிருக்கும் ஊரைக்
கட்டி, — 37 வயல்களை உண்டாக்
கி, விதைத்து, கொடிமுந்திரித்
தோட்டங்களை நாட்டுகிறார்கள்,
அவைகள் வரத்துள்ள பலனைத்
தரும். - 38 அவர்களை ஆசீர்வதிக்
கிறார்; மிகுதியும் பெருகுகிறார்
கள்; அவர்களுடைய மிருகஜீவன்
களைக் குறுகப்பண்ணாதிருக்கிறார்.
39 திரும்பவும் கொஞ்சமாகித் தீங்
கினுடைய முற்றுகையாலுஞ் சஞ்
சலத்தாலுந் தாழுகிறார்கள். —
40 அவர் பிரபுக்களின் மேல்
அசட்டையைச் சொரிந்து, அவர்
களை வழியில்லாத அவாந்தரத்தி
லே திரியப்பண்ணி, — 41 எளிய
வனையோ சிறுமையை விட்டெ
டுத்து, உயர்ந்த அடைக்கலத்தி
லே வைத்து, அவன் வமிசங்களை
மந்தையைப்போல் ஆக்குகிறார். —
42 செம்மையானவர்கள் அதைக்
கண்டு மகிழுகிறார்கள்; ஆனால்
நியாயக்கேடு எல்லாம் தன் வா
யை மூடும். — 43 எவன் ஞான
முள்ளவனோ அவன் இவைகளைக்
கவனித்திருக்கக் கடவான்; அப்ப
டிக்கொத்தவர்கள் கர்த்தருடைய
கிருபைகளை உணர்ந்து கொள்ளு
வார்கள்.

108. சங்கீதம்.

பராபரன் சத்துருக்களின்மேல் ஜெயம்
அளிப்பார் என்று நம்பிப் பாடினது.

தாவீதின் சங்கீதமாகிய பாட்டு.
2 பராபரனே, என் இருதயம்
ஆயத்தமாயிருக்கிறது; நான் பா
டிக் கீர்த்தனம் பண்ணுவேன்;
என் மகிமையுங் கூடத்தானே. —

3 தம்புருவே, சுரமண்டலமே,
விழி; அதிகாலமே விழிப்பேன்.—
4 கர்த்தாவே, உம்மை சனசத
ளங்களுக்குள்ளே துதிப்பேன்,
சாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்
தனம் பண்ணுவேன், - 5 ஏனெ
னில் உமது கிருபை வானங்களுக்
கு மேலாகவும், உமது சத்தியம்
ஆகாய மண்டலங்கள் பரியந்தமும்
பெருகியிருக்கிறது.- 6 பராபர
னே, வானங்களின்மேல் உய
ரும்; உம்முடைய மகிமை பூமி
அனைத்தின் மேலும் உயர்வதாக.-
7 உம்முடைய பிரியர் விடுவிக்கப்
படும்படி, நீர் உமது வலது கரத்
தினாலே இரட்சித்து, எங்கள்
செபத்தைக் கேளும்.

8 பராபரன் தம்முடைய பரி
சுத்த ஸ்தலத்தில் சொன்ன உத்
தரவிலே களிகூருவேன்; சீகே
மைப் பங்கிட்டுச் சுக்கோத்தின்
பள்ளத்தாக்கை அளந்து கொள்ளு
வேன்.— 9 கீலெயாத் என்னு
டையது, மனாசேயும் என்னுடை
யது, எப்பிராயீம் என் தலையின்
பெலன், யூதா என் நியாயநெறி
யாளன்.— 10 மோவாப் நான்
கழுவுகிற பாத்திரமாயிருக்கும்;
ஏதோமின் மேல் என் பாதரட்
சையை நீட்டுவேன்; பெலிஸ்தே
யாவின்மேல் ஆர்ப்பரிப்பேன்.

11 என்னை அரணான பட்ட
ணத்துக்குள் வழிவிடுபவர் ஆர்;
என்னை ஏதோம் மட்டும் அழைத்
துப்போபவர் ஆர்.— 12 பராபர
னே எங்கள் சேனைகளோடே
புறப்படாமல், எங்களைத் தள்ளி
விட்டிருந்த பராபரனாகிய தேவரீ
ரே அல்லவோ.— 13 இக்கட்டுக்
குத் தப்ப எங்களுக்குச் சகாயங்
கட்டளையிடும், ஏனெனில் மனு
ஷ இரட்சிப்பு அபத்தம்.- 14 பரா
பரனால் பெலன் செய்வோம்;
அவரே எங்கள் சத்துருக்களை
மிதித்துப் போடுவார்.

109. சங்கீதம்.

சத்துருக்கள்மேலும் துரோகியாகிய
யூதாவின்மேலும் முறையிட்ட தீர்க்க
தரிசன சங்கீதம்.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

என் துதியின் பராபரனே,
மௌனமாயிராதேயும். - 2 ஏ
னெனில் ஆகாதவனுடைய வாயும்
கபட்டு வாயும் எனக்கு விரோத
மாய்த் திறந்திருக்கிறது; கள்ள
நாவினால் என்னோடே பேசுகி
றார்கள்.— 3 பகையான வார்த்
தைகளால் என்னைச் சூழ்ந்து
கொண்டு, முகாந்தரமில்லாமல்
என்மேல் போரிடுகிறார்கள். —
4 என் சிநேகத்திற்குப் பதிலாக
என்னை விரோதிக்கிறார்கள்; நா
னோவென்றால் செபம் பண்ணிக்
கொண்டிருக்கிறேன். – 5 நன்
மைக்குப் பதிலாகத் தீமையையும்,
என் சிநேகத்திற்குப் பதிலாகப்
பகையையும் எனக்குக் காண்பிக்
கிறார்கள்.

6 ஆகாதவனை அவன்மேல் நிறுத்
தும்; சாத்தான் அவன்வலது பக்
கத்தில் நிற்பதாக.–7 அவன் நியா
யந் தீர்க்கப்படுகையில், அவன் ஆ
காதவனாகப் புறப்படவும், அவன்

செபம் பாவமாகவுங் கடவது.—
8 அவன் நாட்கள் கொஞ்சமாவ
தாக; அவன் உத்தியோகத்தை
வேறொருவன் பெறக்கடவான்.
9 அவன் பிள்ளைகள் திக்கற்றவை
களும், அவன் பெண்சாதி வித
வையும் ஆவார்களாக.-10 அவன்
பிள்ளைகள் அலைந்து பிச்சை எடுத்
துத் தங்கள் பாழ்க்கடிப்புகளின்
நிமித்தம் இரக்கவேண்டும். —
11 கடன் கொடுத்தவன் அவனுக்
குண்டான எல்லாவற்றையும் பற்
றிக்கொள்வானாக; அந்நியர் அவன்
பிரயாசத்தைப் பறிப்பார்களாக.—
12 அவன் மேல் தயவை நீட்டு
கிறவனுமில்லாமல், அவனுடைய
திக்கற்ற பிள்ளைகளுக்கு இரங்கு
கிறவனுமில்லாமல் போவதாக.—
13 அவனுக்குப் பின்னானவர்கள்
வேர் அறுப்புண்ணக் கடவார்கள்;
இரண்டாந் தலைமுறையில் அவர்
கள் நாமம் குலைந்து போவதாக.—
14 அவன் பிதாக்களின் அக்கிர
மம் கர்த்தருக்கு முன்பாக நினைக்
கப்படவும், அவன் தாயின் பாவம்
நீங்காமல், — 15 நித்தம் கர்த்த
ருக்கு எதிரே இருக்கவுங் கடவது.
அவர்கள் பேர் பூமியில் இராமல்,
வேர் அறுப்புண்ணக் கடவது.

16 என்னென்றால் அவன் தயவு
செய்ய நினைவுகொள்ளாமல், சிறு
மையும் எளிமையும் மனநோவும்
உள்ளவனைக் கொலைப்படுத்தும்
படித் தொடர்ந்து,—17 சாபத்
தைச் சிநேகித்தபடியினாலே, அது
அவனுக்கு வரும்; அவன் ஆசீர்வா
தத்தை விரும்பாதே போனபடி
யினாலே, அது அவனுக்குத் தூர
மாம்.— 18 அவன் சாபத்தைத்
தன் அங்கியாக உடுத்துக்கொண்
டபடியினாலே, அது தண்ணீரைப்
போலே அவன் உள்ளத்திலும்,
எண்ணெயைப் போலே அவன்
எலும்புகளிலும் பாயும். -19 அது
அவனுக்கு மூடுவஸ்திரமாகவும்,
நித்தம் கட்டும் கச்சையாகவும்
இருப்பதாக.—20 இது என்னை
விரோதிக்கிறவர்களுக்கும், என்
ஆத்துமத்துக்கு விரோதமாய்த்
தீங்கு பேசுகிறவர்களுக்கும் கர்த்
தராலே வருங் கூலி.

21 ஆனால், ஆண்டவராகிய கர்த்
தாவே, தேவரீர் உமது நாமத்
தின் நிமித்தமாக என்னை ஆத
ரித்து, உம்முடைய கிருபை நல
மானபடியினாலே என்னை விடு
வியும்.—22 ஏனெனில் நான் சிறு
மையும் எளிமையுமானவன்; என்
இருதயம் எனக்குள் குத்துண்டி
ருக்கிறது. — 23 சாயும் நிழலைப்
போல் போக்கப்பட்டேன், ஒரு
வெட்டுக்கிளியைப்போல் பறக்க
அடிக்கப்படுகிறேன்.—24 உபவா
சத்தினால் என் முழங்கால்கள் தடு
மாறுகிறது; என் மாமிசம் புஷ்
டியற உலருகிறது. — 25 நான்
அவர்களுக்கு நிந்தையானேன்;
அவர்கள் என்னைப் பார்க்கும்போ
து தங்கள் தலையைத் துலுக்குகி
றார்கள்.

26 என் பராபரனாகிய கர்த்தா
வே, எனக்குச் சகாயம் பண்ணும்,
உமது கிருபையின்படி என்னை
இரட்சியும்.-27 இது உமது கரம்
என்றும், கர்த்தாவே, தேவரீர்
இதைச் செய்தீர் என்றும் அவர்
கள் அறிவார்களாக.-28 அவர்கள்
சபித்தாலும், நீர் ஆசீர்வதியும்;

அவர்கள் எழும்பினாலும், வெட்கப்
பட்டுப் போவார்களாக; உமது அ
டியானோவெனில் மகிழுவானாக.
29 என்னை விரோதிக்கிறவர்கள்
இலச்சையால் உடுத்தப்பட்டுச்
சால்வையைப் போல் தங்கள்
வெட்கத்தால் மூடப்படக்கடவார்
கள்.—30 கர்த்தரை நான் மிகுதி
யும் என் வாயினால் துதித்து,
அநேகர் நடுவிலே அவரைப் புகழு
வேன்.—31 ஏனெனில் அவர்
எளியவனுடைய வலது பாரிசத்
திலே அவன் ஆத்துமத்தை ஆக்
கினைக்குள்ளாகத் தீர்க்கிறவர்க
ளின் கைக்கு விலக்கி இரட்சிப்
பதற்காக நிற்கிறார்.

110. சங்கிதம்.

மெல்கிசேதேக்கின் வண்ணமான ஆசா
ரியராகிய மேசியாவின் செயத்தைக்
காண்பிப்பது.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தர் என் ஆண்டவருடனே:
நாம் உம்முடைய சத்துருக்களை
உம்முடைய பாதங்களுக்குப் படி
யாகப் போடுமட்டும் நம்முடைய
வலது பாரிசத்தில் உட்காரும்
என்றார்.—2 உமது வல்லமை
யின் செங்கோலைக் கர்த்தர் சீயோ
னிலிருந்து அனுப்பி உம்முடைய
சத்துருக்களின் நடுவே ஆளும்
என்பார்.—3 உமது பராக்கிரமத்
தின் நாளிலே உம்முடைய சனம்
மகா மனப்பூர்வமும் பரிசுத்த
அலங்காரமுமாயிருக்கும். அதி
கால இருட்டின் கர்ப்பத்தில்
பிறக்கும் பனிக்குச் சமானமாய்
உம்முடைய இளந்தைச் சனம்
உமக்குப் பிறக்கும்.—4 நீர் என்
றென்றைக்கும் மெல்கிசேதேக்
கின் வண்ணமான ஆசாரியர்
என்று கர்த்தர் ஆணையிட்டார்,
மனஸ்தாபப்படாமலும் இருப்பார்.
5 தேவரீருடைய வலது பாரிசத்
திலிருக்கிற ஆண்டவர் தமது கோ
பத்தின் நாளில் இராசாக்களை
வெட்டுவார்.—6 அவர் சாதிகளில்
நியாயந்தீர்த்து, எல்லாவற்றை
யும் பிரேதங்களால் நிரப்பி, விஸ்
தாரமான தேசத்தின் பேரிலே
தலைவனாயிருக்கிறவனை நொறுக்
கிப் போடுவார்.—7 வழியிலே
நதியில் குடிப்பார், ஆகையால் தலை
யை எடுப்பார்.

111. சங்கீதம்.

பாபரனுடைய கிரியைகளின் மகிமை
யைத் தியானித்தது.

அல்லேலூயா. செம்மையான
வர்களின் சங்கத்திலும் சபையி
லும் கர்த்தரை முழு இருதயத்தி
னாலுந் துதிப்பேன்.—2 கர்த்தரின்
செய்கைகள் பெரியவைகளும்,
அவர்களுடைய விருப்பங்களுக்கு
எல்லாம் சரியாய்த் தெரிந்து
கொள்ளப்பட்டவைகளுமாய் இ
ருக்கிறது.—3 அவர் செய்கிறது ம
கிமையும் கனமுமானது; அவரு
டைய நீதி என்றென்றைக்கும்
நிற்கும்.—4 தம்முடைய அதிசயங்
களின் நினைவுகூருதலை உண்டு
பண்ணினார்; கர்த்தர் இரக்கமும்
மன உருக்கமுமானவர்.—5 தமக்
குப் பயந்தவர்களுக்கு ஆகாரங்

கொடுத்தார்; தமது உடன்படிக்
கையை என்றென்றைக்கும் நி
னைக்கிறார்.—6 சாதிகளின் சுதந்
தரத்தைத் தம்முடைய சனத்
துக்குக் கொடுத்ததினாலே தமது
செய்கைகளின் பலத்தைத அதற்
குத் தெரியப்பண்ணினார்.—7 அவ
ருடைய கரங்களின் செய்கைகள்
சத்தியமும் நியாயமும், அவரு
டைய கட்டளைகள் எல்லாம் உண்
மையுமாயிருக்கிறது. — 8 அவை
கள் என்றென்றைக்குமுள்ள ச
தாகாலங்களுக்கும் உறுதியான
வைகளும், உண்மையும் செம்மை
யுமாய்ச் செய்யப்பட்டவைகளுமா
யிருக்கிறது. — 9 அவர் தமது
சனத்திற்கு மீட்பை அனுப்பித்
தமது உடன்படிக்கையை நித்தி
ய உடன்படிக்கையாகக் கட்டளை
யிட்டார்; அவருடைய நாமம் பரி
சுத்தமும் பயங்கரமுமானது. —
10 கர்த்தருக்குப் பயப்படுதலே
ஞானத்துக்குத் துவக்கம்; அவை
களின்படி செய்கிற யாவருக்கும்
நற்புத்தி உண்டு; அப்படிக்கொத்
தவன் புகழ்ச்சி என்றென்றைக்
கும் நிற்கும்.

112. சங்கீதம்.

தெய்வ பயமுள்ளவன் பாக்கியம்.

அல்லேலூயா. கர்த்தருக்குப் ப
யந்து, அவர் கற்பனைகளின்மேல்
மிகவும் பிரியமாயிருக்கிற மனு
ஷன் பாக்கியவான். — 2 அவன்
வித்து பூமியில் வல்லபமாயிருக்
கும்; செம்மையானவர்களின் சந்
ததி ஆசீர்வதிக்கப்படும்.—3 ஆஸ்
தியும் ஐசுவரியமும் அவன் வீட்
டில் இருக்கும், அவன் நீதி என்
றென்றைக்கும் நிற்கும். -4 செம்
மையானவர்களுக்கு இருளிலே
வெளிச்சம் உதிக்கும்; இரக்கமும்
மன உருக்கமும் நீதியுமுள்ளவ
ராயிருக்கிறார். — 5 இரங்கிக் க
டன் கொடுத்துத் தன் காரியங்
களை நியாயமானபடி நடப்பிக்கிற
மனுஷன் பாக்கியமுள்ளவன்.—6
ஏனெனில் என்றென்றைக்கும்
அசைக்கப்படாதிருப்பான்; நீதி
மான் நித்திய கீர்த்தியுள்ளவன்.
7 துர்ச்செய்தியைக் கேட்கிறதி
னாலே பயப்படான்; அவன் இரு
தயம் கர்த்தரை நம்பித் திடனாயி
ருக்கும்.—8 அவன் இருதயம் உ
றுதியாயிருக்கும்; அவன் தன்
சத்துருக்களில் சரிக்கட்டுதலைக்
காணுமட்டும் பயப்படாதிருப்
பான். 9 வாரி இறைத்து, ஏழை
களுக்குக் கொடுக்கிறான், அவன்
நீதி என்றென்றைக்கும் நிற்கும்;-
10 ஆகாதவன் அதைக்கண்டு
மனமடிவாகித் தன் பல்லுகளைக்
கடித்துக் கரைந்து போவான்; ஆ
காதவர்களுடைய ஆசை அழியும்.

113. சங்கீதம்.

மனத்தாழ்மையுள்ளவர்களை உயர்த்து
கிற பராபரனைத் துதிப்பது.

அல்லேலூயா. கத்தருடைய
ஊழியக்காரரே, துதியுங்கள், கர்
த்தருடைய நாமத்தைத் துதியுங்
கள். — 2 கர்த்தருடைய நாமம்
இது முதற்கொண்டு என்றென்
றைக்கும் ஸ்தோத்திரிக்கப் பட்

டிருக்கக் கடவது. — 3 சூரியன்
உதிக்குந் திசை துவக்கி அது
அஸ்தமிக்குந் திசைமட்டும் கர்த்
தருடைய நாமம் துதிக்கப்படக்
கடவது. — 4 கர்த்தர் எல்லாச்
சாதிகள் மீதிலும் உயர்ந்தவர்;
அவருடைய மகிமை வானங்களி
லும் மேல்வட்டமாயிருக்கிறது.
5 உன்னதங்களில் வாசம்பண்
ணி, — 6 வானங்களிலும் பூமியி
லும் உள்ளவைகளைக் கண்ணோக்
கத் தாழ்ந்து கொண்டு, —
7 பிரபுக்களோடுந் தமது சனத்
தின் தலைவர்களோடும் உட்காரப்
பண்ணும்படிக்குச்— 8 சிறியவனை
மண்ணிலிருந்து எடுக்கிறவரும்,
எளியவனைக் குப்பை மேட்டிலி
ருந்து உயர்த்துகிறவரும்,—9 மல
டியை வீட்டிலே சந்தோஷமான
பிள்ளைத்தாய்ச்சியாய்க் குடியிருக்
கப் பண்ணுகிறவருமான நம்மு
டைய பராபரனாகிய கர்த்தருக்
குச் சமானமானவர் ஆர். அல்லே
லூயா.

114. சங்கீதம்.

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவே
லுக்குப் பராபரன் அதிபதியான
மேன்மை.

இஸ்ரவேல் எகிப்திலும், யாக்
கோபின் வீட்டார் அந்நிய பாஷை
யுள்ள சனத்திலுமிருந்து புறப்படு
கையில், — 2 யூதா அவருடைய
பரிசுத்த சாதியும், இஸ்ரவேல்
அவருடைய ஆளுகையுமாயிற்று.
3 கடல் கண்டு விலகி ஓடிற்று;
யோர்தான் பின்னிட்டுத் திரும்
பிற்று.— 4 பருவதங்கள் ஆட்டுக்
கடாக்களைப் போலவும், மேடுகள்
ஆட்டுக் குட்டிகளைப் போலவுந்
துள்ளிற்று.
5 கடலே, நீ விலகி ஓடுகிறதற்
கும், யோர்தானே, நீ பின்னிட்
டுத் திரும்புகிறதற்கும்,-6 பருவ
தங்களே, நீங்கள் ஆட்டுக் கடாக்
களைப் போலவும், மேடுகளே, நீங்
கள் ஆட்டுக் குட்டிகளைப் போல
வுந் துள்ளுகிறதற்கும் உங்களுக்
கு என்ன வந்தது.—7 பூமியே, நீ
ஆண்டவருக்கு முன்பாகவும்,
யாக்கோபுடைய பராபரனுக்கு
முன்பாகவும், அதிரு. – 8 அவர்
கன்மலையைத் தண்ணீர்த் தடாக
மாகவும், கற்பாறையை நீரூற்றுக
ளாகவும் மாற்றுகிறவர்.

115. சங்கீதம்.

விக்கிரகாராதனையை வெறுத்துத்
தெய்வநாம மகிமையை வாஞ்சிப்பது.

எங்களுக்கு அல்ல, கர்த்தாவே,
எங்களுக்கு அல்ல, உம்முடைய
நாமத்துக்கே தேவரீர் உமது கி
ருபையின் நிமித்தமும் உமது
சத்தியத்தின் நிமித்தமும் மகிமை
வரப்பண்ணும்.– 2 அவர்களுடை
ய பராபரன் இப்போது எங்கே
என்று புறச்சாதிகள் சொல்லு
வானேன்.–3 நம்முடைய பராபர
னே பரமண்டலங்களில் இருக்கி
றார், அவர் தமக்குச் சித்தமா
யிருக்கிறது எல்லாவற்றையும்
செய்கிறார்.
4 அவர்களுடைய விக்கிரகங்கள்
மனுஷருடைய கைகளின் வேலை
யாகிய வெள்ளியும்பொன்னுந்தா

னே. – 5 அவைகளுக்கு வாய்
இருந்தும் பேசாது; அவைகளுக்
குக் கண்கள் இருந்தும் காணுது.
6 அவைகளுக்குக் காதுகள் இருந்
தும் கேளாது; அவைகளுக்கு
மூக்கிருந்தும் முகராது.-7 அவை
களுக்குக் கைகள் இருந்தும் தட
வாது; அவைகளுக்குக் கால்கள்
இருந்தும் நடவாது. தங்கள்
தொண்டையால் சத்தமுங் காட்
டாது. – 8 அவைகளைப் பண்ணு
கிறவர்களும் அவைகளை நம்புகிற
எவனும் அவைகளைப்போல்இருக்
கிறுர்கள்.

9 இஸ்ரவேலே கர்த்தரை நம்பு,
அவரே அவர்கள் ஒத்தாசையும்
அவர்கள் கேடயமுமாயிருக்கிறுர்.
10 ஆரோனின் வீட்டாரே, கர்த்
தரை நம்புங்கள்; அவரே அவர்கள்
ஒத்தாசையும் அவர்கள் கேடயமு
மாயிருக்கிறுர். – 11 கர்த்தருக்
குப் பயந்தவர்களே, கர்த்தரை நம்
புங்கள்; அவரே அவர்கள் ஒத்தா
சையும் அவர்கள் கேடயமுமாயி
க்கிறுர்.

12 கர்த்தர் நம்மை நினைத்தி
ருக்கிறுர், அவர் ஆசீர்வதிப்பார்;
இஸ்ரவேல் வீட்டாரை ஆசீர்வதிப்
பார்.-13 கர்த்தருக்குப் பயந்தவர்
களாகிய பெரியோரோடுங் கூடச்
சிறியோரையும் ஆசீர்வதிப்பார்.-
14 கர்த்தர் உங்களை வர்த்திக்கப்
பண்ணுவார், உங்களையும் உங்கள்
பிள்ளைகளையும் தானே.-15 பர
மண்டலங்களையும் பூமியையும் ப
டைத்த கர்த்தராலே நீங்கள் ஆ
சீர்வதிக்கப்பட்டவர்கள்.

16 பரமண்டலங்கள் கர்த்தரு
டையது, பூமியையோ மனுப்புத்
திரருக்குக் கொடுத்தார்.-17 செத்
தவர்களும் மவுனத்தில் இறங்
குகிற அனைவரும் கர்த்தரைத்
துதியார்கள். - 18 நாமோ இது
முதற்கொண்டு என்றென்றைக்
கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்
போம். அல்லேலூயா.

116. சங்கீதம்.

செபத்தைக் கேட்டு இரட்சித்த கர்த்த
ருக்குச் செலுத்தின ஸ்தோத்திரம்.

கர்த்தர் என் சத்தத்தையும்
என் விண்ணப்பங்களையுங் கேட்
டது எனக்குப் பிரியம். – 2 எ
னென்றுல் அவர் தமது செவியை
என்னண்டைக்குச் சாய்த்தார்;ஆ
கையால் என் நாட்கள் உள்ளமட்
டும் அவரை நோக்கிக் கூப்பிடு
வேன்.—3 மரணத்தின் கட்டுகள்
என்னைச் சுற்றிக்கொண்டு நரகத்
தின் இடுக்கண்கள் என்னைப் பி
டித்தது;இக்கட்டையுஞ் சஞ்சலத்
தையும் அடைந்தேன்,-4 ஆனுல்,
ஆ, கர்த்தாவே, என் ஆத்துமத்
தை விடுவியும் என்று கர்த்தரு
டைய நாமத்தைப் பற்றிக் கூப்
பிட்டேன்.

5 கர்த்தர் இரக்கமும் நீதியுமுள்
ளவர்; நம்முடைய பராபரன் மன
உருக்கமானவர். – 6 கர்த்தர் பே
தைகளைக் காக்கிறுர்; நான் சிறு
கிப்போனேன், ஆனுல் என்னை
இரட்சித்தார்.—7 என் ஆத்தும
மே, உன் இளைப்பாறுதலுக்குத்
திரும்பு, ஏனெனில் கர்த்தர்
உனக்கு நன்மை செய்தார்.- 8 அ
தேனென்றுல் என் ஆத்துமத்

தை மரணத்துக்கும், என் கண்
ணைக் கண்ணீருக்கும், என் காலை
இடறுதலுக்குந் தப்புவித்தீர். —
9 கர்த்தருக்கு முன்பாகச் சீவனுள்
ளோருடைய தேசத்திலே நடப்
பேன். — 10 விசுவாசித்தேன், ஆ
கையாலே பேசுகிறேன்; நான்
மிகுதியும் ஒடுக்கப்பட்டிருந்தேன்.
11 எந்த மனுஷனும் பொய்யன்
என்று நான் என் துன்பத்தின்
துரிதத்திலே சொன்னேன்.

12 கர்த்தர் எனக்குச் செய்த
எல்லா உபகாரங்களுக்காகவும் அ
வருக்கு என்ன ஈட்டைச் செலுத்
துவேன். — 13 இரட்சிப்புகளின்
பாத்திரத்தை வாங்கிக் கர்த்தரு
டைய நாமத்தைப்பற்றிக் கூப்
பிட்டேன். - 14 கர்த்தருக்கு என்
பொருத்தனைகளைச் செலுத்து
வேன்; ஆம், அவருடைய எல்லாச்
சனத்துக்கும் முன்பாகத்தானே.

15 கர்த்தருடைய பரிசுத்த
வான்களின் மரணம் அவர் பார்
வைக்கு அருமையானது.-16 ஆ,
கர்த்தாவே, நான் உம்முடைய ஊ
ழியக்காரன். நான் உமது அடியா
ளின் பிள்ளையாகிய உம்முடைய
ஊழியக்காரன்; என் கட்டுகளை
அவிழ்த்தீர்.—17 உமது துதியின்
பலியைப் பலியிட்டுக் கர்த்தரு
டைய நாமத்தைப் பற்றிக் கூப்
பிடுவேன். — 18 கர்த்தருடைய
வீட்டின் பிரகாரங்களிலும், எருச
லேமே, உன் நடுவிலும்.—19 நான்
கர்த்தருக்கு என் பொருத்தனை
களைச் செலுத்துவேன்; ஆம், அவ
ருடைய எல்லாச் சனத்திற்கும்
முன்பாகத்தானே. அல்லேலூயா.

117. சங்கீதம்.

பராபரனைத் துதிக்கிறதற்கு எல்லாச்
சாதிகளையும் ஏவினது.

எல்லாச் சாதிகளே, கர்த்த
ரைத் துதியுங்கள், எல்லாச் சன
சதளங்களே, அவரைப் புகழுங்
கள்.—2 ஏனெனில் அவருடைய
கிருபை நம்முடைய மேல் வல்லப
மாயிருக்கிறது; கர்த்தரின் உண்
மையும் என்றென்றைக்கும் நிற்
கும். அல்லேலூயா.

118. சங்கீதம்.

பாடுபடுகிறதற்கு வருகிற மேசியாவைக்
காண்பிக்கும் தீர்க்கதரிசனம்.

கர்த்தரைத் துதியுங்கள், ஏனெ
னில் அவர் நல்லவர், அவர் கிரு
பை என்றும் உள்ளது.—2 அவர்
கிருபை என்றும் உள்ளது என்று
இஸ்ரவேல் சொல்லுவதாக. —
3 அவர் கிருபை என்றும் உள்ளது
என்று ஆரோனின் வீட்டார்
சொல்லுவார்களாக.-4அவர் கிரு
பை என்றும் உள்ளது என்று கர்த்
தருக்குப் பயந்தவர்கள் சொல்லு
வார்களாக.

5 நெருக்கத்திலிருந்து கர்த்த
ரை நோக்கிக் கூப்பிட்டேன்;
கர்த்தர் என்னைக் கேட்டருளி
விசாலத்திலே வைத்தார்.-6 கர்த்
தர் எனக்கு இருக்கிறார், பயப்ப
டேன்; மனுஷன் எனக்கு என்ன
செய்வான்.-7 எனக்கு அநுகூலம்
பண்ணுகிறவர்கள் நடுவிலே கர்த்
தர் எனக்கு இருக்கிறார்; ஆகை
யால் என் பகைஞரில் சரிக்கட்

டுதலைக் காண்பேன்.— 8 மனுஷ
னை நம்புவதைப் பார்க்கக் கர்த்
தர் மீதில் பற்றுதலாயிருக்கிறதே
நலம்.- 9 பிரபுக்களை நம்புவதைப்
பார்க்கக் கர்த்தர் மீதில் பற்றுத
லாயிருக்கிறதே நலம்.— 10 எல்
லாச் சாதியாரும் என்னை வளைந்
து கொள்ளுகிறார்கள்; ஆனால்
கர்த்தரின் நாமத்தினாலே அவர்
களை வெட்டுவேன்.-11 என்னைச்
சுற்றி வளைந்து கொள்ளுகிறார்
கள்; கர்த்தரின் நாமத்தினாலே
அவர்களை வெட்டுவேன்.-12 தே
னீக்களைப்போல் என்னை வளைந்
து கொள்ளுகிறார்கள்; ஆனால்
முட்செடிகளின் நெருப்பைப்
போல் அணைத்துப் போடப்படு
வார்கள்; கர்த்தரின் நாமத்தினா
லே அவர்களை வெட்டுவேன்.-13
நான் விழ என்னைத் தள்ளவே
தள்ளினாய்; ஆனால் கர்த்தர் எ
னக்கு ஒத்தாசை பண்ணுகிறார்.

14 கர்த்தர் என் பெலனும்
என் கீதமுமானவர்; அவர் எனக்
கு இரட்சிப்பாக இருக்கிறார்.-15
நீதிமான்களின் கூடாரங்களில்
இரட்சிப்பின் கம்பீரசத்தம் இ
ருக்கும்: கர்த்தரின் வலதுகரம்
பராக்கிரமஞ் செய்யும்.-16 கர்த்
தரின் வலதுகரம் உயர்ந்து, கர்த்
தரின் வலதுகரம் பராக்கிரமஞ்
செய்யும். – 17 நான் சாவதில்லை;
நான் பிழைத்திருந்து கர்த்தரு
டைய செய்கைகளை விவரிப்
பேன்.-18 கர்த்தர் என்னைத் தண்
டிக்கவே தண்டித்தும் என்னைச்
சாவுக்கு ஒப்புக்கொடார்.

19 எனக்கு நீதியின் வாசல்
களைத் திறவுங்கள்; அவைகளுக்
குள் பிரவேசித்துக் கர்த்தரைத்
துதிப்பேன்.–20 அது கர்த்தரின்
வாசல்; நீதிமான்கள் அதுக்குள்
பிரவேசிப்பார்கள். – 21 நீர் என்
னைக் கேட்டருளி எனக்கு இரட்
சிப்பாக இருந்தபடியினாலே உம்
மைத் துதிப்பேன்.–22 வீடுகட்டு
கிறவர்கள் ஆகாது என்று தள்
ளின கல்லை கோடிக்குத் தலை
யான கல்லாயிற்று. — 23 அது
கர்த்தராலே ஆயிற்று; அது நம்
முடைய கண்களுக்கு ஆச்சரியமா
யிருக்கிறது. — 24 இது கர்த்தர்
உண்டுபண்ணின நாள், இதிலே
களிகூர்ந்து மகிழக்கடவோம். –
25 ஆ, கர்த்தாவே, இரட்சியு
மேன்; ஆ, கர்த்தாவே, காரியத்
தை வாய்க்கப்பண்ணுமேன்.– 26
கர்த்தரின் நாமத்தினாலே வருகி
றவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்;
கர்த்தரின் வீட்டாரே, உங்களை
ஆசீர்வதிக்கிறோம். – 27 கர்த்தர்
நம்மைப் பிரகாசிப்பிக்கிற பராபர
னாயிருக்கிறார். பண்டிகைப் பலி
யைப் பலிபீடத்துக் கொம்புகள்
மட்டுங் கொண்டுபோகக் கயிறுக
ளால் கட்டுங்கள். – 28 தேவரீர்
என் பராபரன்; உம்மைத் துதிப்
பேன்; என் பராபரனே, உம்மை
உயர்த்துவேன்.- 29 கர்த்தரைத்
துதியுங்கள், ஏனெனில் அவர்
நல்லவர், அவர் கிருபை என்றும்
உள்ளது.

119. சங்கீதம்.

தெய்வ வசனத்தின்மேல் உள்ள வாஞ்
சை விளங்கிய சங்கீதம்.

கர்த்தருடைய வேதத்தின்படி
யே நடக்கிற உத்தம மார்க்கத்
தார் பாக்கியவான்கள்.-2 அவரு
டைய சாட்சிகளைக் கைக்கொண்
டு, அவரை முழு இருதயத்தா
லும் தேடுகிறவர்கள் பாக்கிய
வான்கள்.-3 அவர்கள் அநியாயஞ்
செய்வதும் இல்லை; அவருடைய
வழிகளிலே நடப்பார்கள்.–4 உம
து கட்டளைகளைக் கருத்தாய்க்
காக்கத் தேவரீர் கற்பித்தீர். - 5
ஆ, உமது பிரமாணங்களைக் காக்க
என் வழிகள் நிலைவரப்பட்டால்
தாவிளை. – 6 நான் உம்முடைய
கற்பனைகளை எல்லாங் கண்ணோக்
கும்போது வெட்கப்பட்டு போவ
தில்லை.- 7 உம்முடைய நீதியின்
நியாயங்களை நான் கற்றுக்கொள்
ளுகையால் உம்மைச் செம்மை இ
ருதயத்தால் துதிப்பேன்.–8 உம
து பிரமாணங்களைக் காப்பேன்,
என்னைக் கைவிடாமலேயிரும்.

9 எதினால் வாலிபன் தன் பா
தையைச் சுத்தம் பண்ணுவான்,
உமது வசனத்தின்படித் தன்
னைக் காப்பதினாலே தானே.–10
என் முழு இருதயத்தாலும் உம்
மைத் தேடுகிறேன்; என்னை உ
மது கற்பனைகளை விட்டு வழிதப்
ப ஒட்டாதேயும்.-11 நான் உமக்
கு விரோதமாய்ப் பாவஞ் செய்யா
தபடி உமது வார்த்தைகளை என்
இருதயத்திலே வைத்து வைத்
தேன்.-12 கர்த்தாவே, தேவரீர்
ஸ்தோத்திரிக்கப்பட்டவர்;உம்மு
டைய பிரமாணங்களை எனக்குக்
கற்றுக்கொடும்.-13 உம்முடைய
வாக்கின் நியாயங்களை எல்லாம்
என் உதடுகளால் விவரிப்பேன்.-
14 உம்முடைய சாட்சிகளின் வ
ழியை நான் சகல ஆஸ்தியாகவும்
பாவித்து அதினால் களிப்பாயிருக்
கிறேன்.-15 உமது கட்டளைகளை
யோசித்து உமது பாதைகளைக்
கண்ணோக்குகிறேன்.- 16 உமது
பிரமாணங்களினாலே மனமகிழ்ச்
சியாயிருக்கிறேன்; உம்முடைய
வசனத்தை மறவேன்.

17 நான் பிழைத்து, உம்மு
டைய வசனத்தைக் காக்க உமது
அடியானுக்குத் தயவு செய்யும்–
18 உமது வேதத்திலுள்ள அதிச
யங்களை நான் பார்க்கிறதற்காக
என் கண்களைத் திறவும்.-19 பூமி
யிலே நான் பரதேசி; உமது கற்
பனைகளை எனக்கு மறைக்காதே
யும்.-20 எக்காலமும் என் ஆத்து
மம் உமது நியாயங்களின்மேல்
இருக்கிற வாஞ்சையினாலே நருங்
குண்டிருக்கிறது.- 21 உமது கற்
பனைகளை விட்டு வழிவிலகிச் ச
பிக்கப்பட்ட அகந்தைக்காரரை
உதம்புகிறீர்.-22 நிந்தையையும்
அசட்டையையும் என்னை விட்ட
கற்றும்; ஏனெனில் உம்முடைய
சாட்சிகளைக் கைக்கொள்ளுகி
றேன்.-23 பிரபுக்களும் உட்கார்ந்
திருந்து, எனக்கு விரோதமாய்ப்
பேசிக்கொள்ளுகிறார்கள்; உமது
அடியானோ உமது பிரமாணங்க
ளை யோசிக்கிறான். — 24 உம்மு
டைய சாட்சிகள் என் செல்வங்
களும் என் ஆலோசனைக்காரரு
மாய் இருக்கிறது.

25 என் ஆத்துமம் மண்ணோடு
ஒட்டியிருக்கிறது, உமது வார்த்
தையின்படி என்னை உயிர்ப்பியும்.
26 என் வழிகளை நான் விவரித்

துக் காட்டினதற்கு எனக்கு உத்
தரவு அருளிச்செய்தீரே; உமது
பிரமாணங்களை எனக்குப் போதி
யும்.— 27 நான் உமது அதிசயங்
களை யோசித்துக்கொள்வதற்கா
க என்னை உமது சாட்சிகளின் வ
ழியை உணரப்பண்ணும்.-28 சஞ்
சலத்தால் ஆத்துமம் கரைகிறது;
உம்முடைய வசனத்தின்படி என்
னை எடுத்து நிமிர்த்தும்.-29 கள்
ள மார்க்கத்தை என்னை விட்டு
விலக்கி உம்முடைய வேதத்தை
எனக்குத் தயவு பண்ணும். —
30 சத்தியத்தின் வழியை நான்
தெரிந்துகொண்டு உம்முடைய
நியாயங்களை எனக்கு முன்பாக
நிறுத்தினேன்.— 31உம்முடைய
சாட்சிகளோடு ஒட்டிக்கொள்ளுகி
றேன், கர்த்தாவே, என்னை
வெட்கத்திற்கு உட்படப்பண்ணா
தேயும்.– 32உம்முடைய கற்பனை
களின் வழியிலே ஓடுவேன், ஏ
னெனில் என் இருதயத்தை விரி
வாக்குகிறீர்.

33 கர்த்தாவே, நான் உம்மு
டைய பிரமாணங்களின் வழியை
முடியக் கைக்கொள்வதற்காக அ
தை எனக்குப் போதியும்.- 34 எ
னக்கு உணர்வைக் கட்டளையிடும்,
அப்போது நான் உமது வேதத்
தைக் கைக்கொண்டு அதை முழு
இருதயத்தாலும் காப்பேன். – 35
உமதுகற்பனைகளின்பாதையிலே
என்னை நடத்தும், ஏனெனில் அ
தன் மேல் பிரியமாயிருக்கிறேன்.
36 பொருளாசைக்கு அல்ல, உம
து சாட்சிகளுக்கே என் இருதயத்
தைச் சார்ந்திருக்கப்பண்ணும்.—
37 நீர் என் கண்களை மாயையைப்
பாராதபடி விலக்கி உமது வழி
யிலே என்னை உயிர்ப்பியும். —
38 உமக்குப் பயப்படுகிறதற்கான
உமது வசனத்தை உமது அடியா
னுக்கு நிலைப்படுத்தும். - 39 நான்
அஞ்சுகிற என் நிந்தையை விலக்
கும், ஏனெனில் உம்முடைய நி
யாயத்தீர்ப்புகள் நல்லவைகள்.–
40 இதோ, உம்முடைய கட்ட
ளைகள்மேல் வாஞ்சையாயிருக்கி
றேன்; உமது நீதியால் என்னை
உயிர்ப்பியும்.

41 கர்த்தாவே, உமது வார்த்
தையின்படி உமது தயவுகளும்
உமது இரட்சிப்பும் எனக்கு வரு
வதாக.— 42 அப்போது என்னை
நிந்திக்கிறவனுக்கு மறு உத்தரவு
சொல்லுவேன்; ஏனெனில் உம்
முடைய வசனத்தை நம்புகி
றேன்.— 43 சத்தியத்தின் வச
னத்தை மாத்திரம் என் வாயை
விட்டுப் பிரிய ஒட்டாதேயும்; ஏ
னெனில் உமது நியாயத்தீர்ப்புக
ளுக்குக் காத்திருக்கிறேன். —
44 எப்போதும்என்றைக்குமுள்
ள நித்திய காலமும் உமது வே
தத்தைக் காப்பேன்.- 45 விசாலத்
திலே நடப்பேன், ஏனெனில் உம்
முடைய கட்டளைகளைத் தேடுகி
றேன். – 46 நான் உம்முடைய
சாட்சிகளைக் குறித்து இராசாக்க
ளுக்கு முன்பாகவும் வெட்காமல்
பேசி, – 47 நான் சிநேகித்திருக்
கிற உம்முடைய கற்பனைகளின்
பேரிலே மனமகிழ்ச்சியாயிருந்து,
48 நான் சிநேகித்திருக்கிற உம்
முடைய கற்பனைகளுக்கு நேராக
என் கைகளை ஏறெடுத்து, உமது
பிரமாணங்களை யோசிப்பேன்.

49 நீர் என்னை நம்பப்பண்ணி
ன வசனத்தை உமது அடியானுக்
காக நினைத்தருளும்.— 50 அது
வே என் சிறுமையில் என்னு
டைய ஆறுதல்; ஏனெனில் உம்மு
டைய வார்த்தை என்னை உயிர்ப்
பிக்கிறது. — 51 அகந்தைக்காரர்
மிகவும் என்னைப் பரியாசம் பண்
ணியும், உம்முடைய வேதத்தை
விட்டு விலகேன்.— 52 கர்த்தா
வே, ஆதிமுதலான உமது நியா
யத்தீர்ப்புகளை நினைத்து என்
னைத் தேற்றுகிறேன்.— 53 உம்
முடைய வேதத்தை விட்டு விடு
கிற ஆகாதவர்கள் நிமித்தமாய்
எரிச்சல் என்னைப் பிடித்தது.—
54 நான் பரதேசியாய்த் தங்கும்
வீட்டிலே உம்முடைய பிரமா
ணங்கள் எனக்குக் கீதங்களாயி
ருக்கிறது. — 55 கர்த்தாவே,
இராக்காலத்தில் உம்முடைய நா
மத்தை நினைத்து உம்முடைய
வேதத்தைக் கைக்கொள்ளுகி
றேன்.— 56 நான் உமது கட்டளை
களைக் கைக்கொள்ளுகிறபடியினு
லே இப்படி எனக்கு உண்டா
யிற்று.

57 கர்த்தர் என் பங்கு, உம்மு
டைய வசனங்களைக் காப்பேன்
என்றேன்.— 58 நான் முழு இரு
தயத்தாலும் உம்முடைய முகத்
தை நோக்கிக் கெஞ்சுகிறேன்;
உமது வார்த்தையின்படி எனக்கு
இரங்கும். — 59 என் வழிகளைச்
சிந்தித்துக்கொண்டு, என் கால்
களை உம்முடைய சாட்சிகளுக்கு
நேராகத் திருப்புகிறேன். —
60 உமது கற்பனைகளைக் காத்து
நடக்க நான் தாமதியாமல் தீவி
ரிக்கிறேன்.- 61 ஆகாதவர்களின்
கும்புகள் என்னைக் கொள்ளையிட்
டும், உம்முடைய வேதத்தை மற
வேன்.- 62 உம்முடைய நீதியின்
நியாயத்தீர்ப்புகள் நிமித்தம் உம்
மைத் துதிக்கப் பாதி இராத்திரி
யில் எழுந்திருக்கிறேன்.-63 உமக்
குப்பயந்து உமது கட்டளைகளைக்
கைக்கொள்ளுகிற அனைவருக்கும்
நான் தோழன். - 64 கர்த்தாவே,
பூமி உமது கிருபையினாலே நி
றைந்திருக்கிறது; உமது பிரமா
ணங்களை எனக்குக் கற்றுக்கொ
டும்.

65 கர்த்தாவே, உமது வார்த்
தையின்படி உமது அடியானை
நன்றாய் நடத்தினீர். - 66 நல்
நிதானிப்பையும் அறிவையும் எ
னக்குக் கொடும்; ஏனெனில் உம்
முடைய கற்பனைகளின் பேரில்
விசுவாசமாயிருக்கிறேன். - 67
நான் தாழ்த்தப்படாததற்குமுன்
நான் வழி தப்பினவன்; இப்போ
தோ உம்முடைய வார்த்தையைக்
காத்து நடக்கிறேன். - 68 தேவ
ரீர் நல்லவரும் நன்மை செய்கிறவ
ருமாயிருக்கிறீர்; உமது பிரமாண
ங்களை எனக்குக் கற்றுக்கொடும்.-
69 அகந்தைக்காரர் என்மேல்
பொய்களைப் பிணைக்கிறார்கள்; நா
னோ முழு இருதயத்தாலும் உம்
முடைய கட்டளைகளைக் கைக்
கொள்ளுகிறேன். - 70 அவர்கள்
இருதயம் நிணந்துற்றதுபோல்
கொழுத்திருக்கிறது; நானோ உம்
முடையவேதத்தின்பேரிலே மன
மகிழ்ச்சியாயிருக்கிறேன்.-71நான்
உமது பிரமாணங்களைக் கற்றுக்
கொள்ளும்படி, நான் சிறுமையாக்

கப்பட்டது எனக்கு நல்லது. —
72 அநேகம் ஆயிரமான பொன்
வெள்ளியைப் பார்க்கிலும் உமது
வாக்கின் வேதமே எனக்கு நலம்.
73 உம்முடைய கரங்கள் என்
னை உண்டாக்கி என்னை உரு
வாக்கிற்று; உமது கற்பனைகளைக்
காக்க என்னை உணர்வுள்ளவனாக்
கும்.—74 நான் உமது வசனத்
துக்குக் காத்திருக்கையால், உமக்
குப் பயந்தவர்கள் என்னைக்கண்டு
சந்தோஷப்படுகிறார்கள்.-75 கர்த்
தாவே, உமது நியாயத்தீர்ப்புகள்
நீதி என்றும், உண்மையாலே
என்னைச் சிறுமைப்படுத்தினீர்
என்றும் அறிவேன். — 76 நீர்
உமது அடியானுக்குக் கொடுத்த
உமது வார்த்தையின்படி உமது
கிருபை எனக்குத் தேற்றரவா
யிருப்பதாக.—77 நான் பிழைக்
கும்படி உமது இரக்கங்கள் என்
மேல் வரக்கடவது, ஏனெனில்
உம்முடைய வேதம் என் மன
மகிழ்ச்சி. — 78 அகந்தைக்காரர்
என்னைப் பொய்களால் அமுக்கின
தின் நிமித்தம் வெட்கக் கடவார்
கள்; நானோ உமது கட்டளைகளை
யோசித்திருப்பேன். – 79 உமக்
குப் பயந்து உமது சாட்சிகளை
அறிந்திருக்கிறவர்கள் என்னண்
டைக்குத் திரும்புவார்களாக. —
80 நான் வெட்கத்திற்கு உள்ளா
காதபடி என் இருதயம் உம்மு
டைய பிரமாணங்களில் உத்தம
மாயிருக்கக் கடவது.

81 உம்முடைய இரட்சிப்புக்கு
என் ஆத்துமம் தவனமாய்த்
தொய்ந்திருக்கிறது; உம்முடைய
வசனத்துக்குக் காத்திருக்கிறேன்
82 எப்போது என்னைத் தேற்ற
ரவு பண்ணுவீர் என்று உம்மு
டைய வார்த்தையின்மேல் நோக்
கமாய் என் கண்கள் பூத்துப்போ
கிறது.–83 ஏனென்றால் புகையில்
துருத்தியைப் போல் ஆனேன்,
உமது பிரமாணங்களையோ மற
வேன். — 84 உமது அடியானு
டைய நாட்கள் எம்மாத்திரம்;
என்னைத் துன்பப்படுத்துகிறவர்
களை எப்போது விசாரித்து நியா
யஞ் செய்வீர்.-85 அகந்தைக்காரர்
உமது நியாயப்பிரமாணத்துக்கு
ஏற்காததாய் எனக்குக் குழிகளை
வெட்டினார்கள். - 86 உம்முடைய
கற்பனைகள் எல்லாம் உண்மை;
பொய்களால் என்னைத் துன்பப்
படுத்துகிறார்கள், எனக்குச் சகா
யம் பண்ணும்.—87 அவர்கள் என்
னைப் பூமியிலிராமல் பண்ண
மெத்தச் சமீபமாயிற்று; ஆனால்
நான் உமது கட்டளைகளை விட்ட
தில்லை.—88 உமது கிருபையின்
படியே என்னை உயிர்ப்பியும், அப்
போது உம்முடைய வாக்கின் சாட்
சியைக் காத்து நடப்பேன்.

89 கர்த்தாவே, என்றென்
றைக்கும் உம்முடைய வசனம்
மண்டலங்களில் நிலைநிற்கும். —
90 தலைமுறை தலைமுறையாக
உம்முடைய சத்தியம் இருக்கும்;
பூமியை உறுதிப்படுத்தினீர், அத
னால் அது நிற்கும்.–91 இன்றை
யத்தினம் மட்டும் அவைகள் உம்
முடைய நியாயத்தீர்ப்புகளை நிறை
வேற்றும்படி நிற்கிறது; ஏனெ
னில் சர்வமும் உமக்குப் பணி
செய்யும். — 92 உமது வேதம்
என் மனமகிழ்ச்சியாயிராதிருந்த

தானால், அப்போது என் சிறுமை
யிலே அழிவேன்.-93 என்றைக்
கும் உம்முடைய கட்டளைகளை
மறவாதிருப்பேன், ஏனெனில்
அவைகளால் என்னை உயிர்ப்பித்
தீர்.—94 நான் உம்முடையவன்,
என்னை இரட்சியும்; ஏனெனில்
உம்முடைய கட்டளைகளைத் தேடு
கிறேன்.-95 ஆகாதவர்கள் என்
னை அழிக்க என்னைக் காத்திருக்
கிறார்கள்; நானோ உம்முடைய
சாட்சிகளைச் சிந்தித்துக்கொண்
டிருக்கிறேன்.—96 சகல சம்பூர
ணத்திற்கும் எல்லையைக் கண்
டேன், உம்முடைய கற்பனையோ
மகா விஸ்தாரம்.

97 உமது வேதத்தை எத்தனை
யாய்ச் சிநேகிக்கிறேன். அது நாள்
தோறும் என்னுடைய யோசிப்பு.
98 உம்முடைய கற்பனைகளே
என்னை என் சத்துருக்களிலும் அ
திக ஞானமுள்ளவனாக்குகிறது;
ஏனெனில் என்றைக்கும் அவை
கள் என்னுடனே இருக்கிறது. -
99 என்னை உபதேசித்த எல்லா
ரையும் பார்க்கப் புத்தியுள்ளவனா
யிருக்கிறேன்; ஏனெனில் உமது
சாட்சிகள் என்னுடைய யோசிப்
பு.-100 முதிர்வயதுள்ளவர்களைப்
பார்க்கிலும் உணர்வுள்ளவனாயி
ருக்கிறேன்; ஏனெனில் உம்முடை
ய கட்டளைகளைக் கைக்கொண்
டிருக்கிறேன்.-101 நான் உமது
வசனத்தைக் காத்து நடக்கும்ப
டிச் சகல பொல்லாத பாதைக்கும்
என் கால்களை விலக்குகிறேன்.—
102 உம்முடைய நியாயங்களை
விட்டு விலகேன்; ஏனெனில் தே
வரீர் என்னைப் போதித்தீர். —
103 உம்முடைய வார்த்தைகள்
என் ருசிக்கு எத்தனை தித்திப்
பானவைகள், என் வாய்க்கு அவை
கள் தேனிலும் மதுரமாயிருக்கும்.
104 உம்முடைய கட்டளைகளால்
உணர்வடைந்தேன்; ஆனபடியால்
எல்லாக் கள்ளவழியையும் பகைக்
கிறேன்.

105 உம்முடைய வசனம் என்
கால்களுக்குத் தீபமும் என் பா
தைக்கு வெளிச்சமுமானது. —
106 உம்முடைய நீதி நியாயங்க
ளைக் காத்து நடப்பேன் என்று
ஆணையிட்டேன், அதை நிர்வாக
மும் பண்ணுவேன்.-107 மிகுதி
யும் ஒடுங்குண்டேன்; கர்த்தா
வே, உம்முடைய வசனத்தின்
படியே என்னை உயிர்ப்பியும். —
108 கர்த்தாவே, என் வாயின்
உற்சாகப் பலிகளை நீர் அங்கீகரித்
தருளி, உம்முடைய நியாயங்களை
எனக்குக் கற்றுக்கொடும். —
109 என் ஆத்துமம் எப்போதும்
என் கையில் இருக்கிறது; ஆனால்
உம்முடையவேதத்தை மறவேன்.
110 ஆகாதவர்கள் எனக்குக் கண்
ணி வைக்கிறார்கள்; ஆனால் உம்
முடைய கட்டளைகளை நான் விட்டு
வழி தப்பேன். — 111 உம்மு
டைய சாட்சிகளை நித்திய சுதந்
தரமாக்கிக் கொண்டிருக்கிறேன்;
ஏனெனில் அவைகளே என் இரு
தயத்தின் சந்தோஷம்.-112 உம்
முடைய பிரமாணங்களின்படி
என்றென்றைக்கும் முடியவுஞ்
செய்வதற்கு என் இருதயத்தைச்
சாய்த்தேன்.

113 வீண் சிந்தனைகளை நான்
பகைத்து உமது வேதத்தைச்

சிநேகிக்கிறேன்.- 114 என் மறை
வும் என் கேடயமும் தேவரீர்;
உமது வசனத்துக்குக் காத்திருக்
கிறேன். — 115 பொல்லாதவர்
களே, என்னை விட்டகன்று போ
ங்கள்; ஏனெனில் என் பராபரனு
டைய கற்பனைகளைக் கைக்கொள்
ளுவேன்.— 116 நான் பிழைக்
கும்படி என்னை உமது வார்த்
தையின்படி ஆதரியும்; என் நம்
பிக்கை விருதாவாக என்னை வெட்
கத்துக்கு உட்படுத்தாதேயும்.—
117 நான் இரட்சிக்கப்பட்டு எக்
காலமும் உம்முடைய பிரமாணங்
களின் பேரிலே மனமகிழ்ச்சியா
யிருக்கும்படி என்னை ஆதரியும்.
118 உமது பிரமாணங்களை விட்டு
வழி விலகுகிற யாவரையும் மிதி
த்துப் போடுகிறீர்; ஏனெனில் அ
வர் அவர்களுடைய கபடு வெறும்
பொய்.- 119 பூமியிலுள்ள ஆகா
தவர்களை எல்லாம் களிம்புகளைப்
போல் அகற்றி விடுகிறீர்; ஆகை
யால் உமது சாட்சிகளைச் சிநே
கிக்கிறேன்.- 120 உம்மால் அடை
யுந் திகிலால் என் உடம்பு சிலிர்க்
கிறது; உமது நியாயத்தீர்ப்புக
ளுக்குப் பயமாயிருக்கிறேன்.

121 நியாயமும் நீதியும் செய்கி
றேன்; என்னை ஒடுக்குகிறவர்க
ளுக்கு ஒப்புக்கொடாதேயும். —
122 உமது அடியானுக்கு நன்மை
யாக மேற்போட்டுக் கொள்ளும்;
அகந்தைக்காரர் என்னை ஒடுக்க
ஒட்டாதேயும்.- 123 உமது இரட்
சிப்புக்கும் உமது நீதியின் வார்த்
தைக்குங் காத்திருக்கிறதினால்
என் கண்கள் பூத்துப்போகிறது.
124 உமது அடியானை உமது கிரு
பையின்படியே நடத்தி, உமது
பிரமாணங்களை எனக்குக் கற்றுக்
கொடும்.— 125 நான் உமது அடி
மை; உம்முடைய சாட்சிகளை
நான் அறியும்படி என்னை உணர்
வுள்ளவனாக்கும்.— 126 நீதியைச்
செய்யக் கர்த்தருக்கு வேலையாம்,
அவர்கள் உம்முடைய நியாயப்பிர
மாணத்தை முறித்தார்கள். —
127 அதைக் கண்டு நான் பொன்
னையும் அபரஞ்சியையும் பார்க்க
உம்முடைய கற்பனைகளைச் சிநே
கிக்கிறேன்.— 128 நான் உமது
கட்டளைகளை எல்லாம் முற்றிலும்
செம்மை என்று எண்ணிச் சகல
கள்ள வழியையும் பகைக்கிறேன்.

129 உமது சாட்சிகள் அதிசய
மானவைகள்; ஆகையால் அவை
களை என் ஆத்துமம் கைக்கொள்
ளும்.— 130 உம்முடைய வார்த்
தைகளின் சிறப்பு வெளிச்சந்
தந்து பேதைகளை உணர்வுள்ள
வர்களாக்கும்.- 131 உம்முடைய
கற்பனைகளை நான் வாஞ்சிக்கிற
படியினாலே என் வாயை ஆ
வென்று திறந்து அவைகளுக்கு
ஏங்குகிறேன். — 132 உம்மு
டைய நாமத்தைச் சிநேகிக்கிறவர்
களுக்கு வழங்கும் நியாயத்தின்படி
யே என்னை நோக்கிப் பார்த்து
எனக்கு இரங்கும்.- 133 நீர் என்
காலடிகளை உம்முடைய வார்த்
தையிலே நிலைப்படுத்தி ஒரு அநி
யாயமும் என்னை ஆள ஒட்டாதே
யும்.— 134 உம்முடைய கட்டளை
களை நான் காப்பதற்காக என்னை
மனுஷரின் இடுக்க வல்லடிக்கு
விலக்கி விடுவித்துக்கொள்ளும்.
135 உமது அடியான்மேல் உமது

முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணி,
உமது பிரமாணங்களை எனக்குக்
கற்றுக்கொடும். — 136 உம்மு
டைய வேதத்தைக் காத்து நட
வார்கள் என்று என் கண்களிலி
ருந்து நீர்க்கால்கள் இறங்குகிறது.
137 கர்த்தாவே, தேவரீர்
நீதிபரர்; உமது நியாயத்தீர்ப்பு
கள் செம்மையுமாயிருக்கிறது.—
138 உமது சாட்சிகளுடைய நீதி
யின்படியேயும் உண்மையின்படி
யேயும் நடக்க மிகவுங் கற்பித்தீர்.
139 என் சத்துருக்கள் உம்மு
டைய வார்த்தைகளை மறந்தார்
கள் என்று என் பத்தி வைராக்கி
யம் என்னை அறுக்கிறது. —
140 உமது வசனம் மெத்தவும்
புடமிடப்பட்டது, உமது அடி
யான் அதைச் சிநேகிக்கிறான்.—
141 நான் சிறியவனும் அசட்டை
பண்ணப்பட்டவனுமாய் இருக்கி
றேன்; ஆனால் உமது கட்டளை
களை மறவேன்.— 142 உம்மு
டைய நீதி நித்திய நீதி, உமது
வேதம் சத்தியம்.— 143 இக்கட்
டும் நெருக்கமும் என்னைப் பிடித்
தது; ஆனால் உம்முடைய கற்
பனைகள் என் மனமகிழ்ச்சி. —
144 உம்முடைய சாட்சிகளின்
நீதி என்றைக்கும் நிற்கும்; நான்
பிழைக்கும்படி என்னை உணர்
வுள்ளவனாக்கும். – 145 முழு இ
ருதயத்தாலும் கூப்பிடுகிறேன்;
கர்த்தாவே, என் செபத்தைக்
கேளும்; உம்முடைய பிரமாணங்
களைக் கைக்கொள்ளுவேன். —
146 உம்மை நோக்கிக் கூப்பிடுகி
றேன்; உம்முடைய சாட்சிகளை
நான் காக்கும்படி என்னை இரட்சி
யும்.- 147 அதிகாலமே வந்து சத்
தமிடுகிறேன்; உம்முடைய வார்த்
தைக்குக் காத்திருக்கிறேன். –
148 உமது வசனத்தை யோசிப்
பதற்கு என் கண்கள் சாமங்க
ளுக்கு முன்னே விழிக்கும். –
149 உம்முடைய கிருபையின்படி
என் சத்தத்தைக் கேளும்; கர்த்
தாவே, உமது நியாயத்தின்படி
என்னை உயிர்ப்பியும்.— 150 தீவி
னையைப் பின்பற்றுகிறவர்கள் சமீ
பமாயிருக்கிறார்கள், உம்முடைய
வேதத்துக்குத் தூரமானார்கள்.—
151 கர்த்தாவே, தேவரீர் சமீப
மாயிருக்கிறீர்; உமது கற்பனைகள்
எல்லாம் உண்மை. – 152 தேவ
ரீர் உம்முடைய சாட்சிகளை என்
றென்றைக்கும் நிற்க அஸ்திபாரப்
படுத்தினீர் என்கிறதை நான்
பூர்வகால முதலாய் அவைகளால்
அறிந்திருக்கிறேன்.

153 என் சிறுமையைப்பார்த்து
என்னை விடுவியும்; ஏனெனில்
உமது வேதத்தை மறவேன். –
154 என் வழக்கை நீர் வழக்காடி
என்னை மீட்டுக்கொள்ளும்; உம்
முடைய வார்த்தையின்படியே
என்னை உயிர்ப்பியும்.- 155 இரட்
சிப்பு ஆகாதவர்களுக்குத் தூரமா
யிருக்கிறது; ஏனெனில் உமது
பிரமாணங்களைத் தேடார்கள். –
156 கர்த்தாவே, உம்முடைய
இரக்கங்கள் மிகுதியாயிருக்கிறது;
உம்முடைய நியாயங்களின்படி
என்னை உயிர்ப்பியும். – 157 என்
னைத் துன்பப்படுத்துகிறவர்களும்,
எனக்கு நெருக்கஞ் செய்கிறவர்க
ளும் அநேகர்; ஆனால் உம்முடைய
சாட்சிகளை விட்டு விலகேன். –

158 உம்முடைய வசனத்தைக்
சாக்காத துரோகிகளை நான் கா
ணும்போது அவர்களை அரோ
சிக்கிறேன். — 159 இதோ, உம்
முடைய கட்டளைகளைச் சிநேகிக்
கிறேன்; கர்த்தாவே, உமது கிரு
பையின்படி என்னை உயிர்ப்பி
யும். 160 உம்முடைய வசனம் ச
மூலமும் சத்தியம்; உம்முடைய
நீதியின் நியாயம் எல்லாம் என்
றைக்கும் நிற்கும். – 161 பிரபுக்
கள் முகாந்தரமில்லாமல் என்
னைத் துன்பப்படுத்துகிறார்கள்;
ஆனால் உமது வசனத்துக்கே
என் இருதயம் பயப்படுகிறது.—
162 வெகு கொள்ளைஉடைமை
யைக் கண்டுபிடிக்கிறவனைப்
போலே நான் உமது வார்த்தை
யின் பேரிலே களிப்பாயிருக்கி
றேன்.–163 பொய்யைப் பகைத்
து அருவருத்து உம்முடைய வே
தத்தைச் சிநேகிக்கிறேன். - 164
உமது நீதியினுடைய நியாயங்க
ளின் நிமித்தம் ஒரு நாளில் ஏழு
தரம் உம்மைத் துதிக்கிறேன்.–
165 உம்முடைய வேதத்தைச் சி
நேகிக்கிறவர்களுக்கு மிகுந்த ச
மாதானம் உண்டு; அவர்களுக்கு
இடறல் இல்லை. – 166 கர்த்தா
வே, உம்முடைய இரட்சிப்புக்கு
நான் காத்திருந்து உம்முடைய
கற்பனைகளின்படி செய்கிறேன்.
167 என் ஆத்துமம் உமது சாட்
சிகளைக்காக்கும். அவைகளை மிக
வுஞ்சிநேகிக்கிறேன்.-168 உமது
கட்டளைகளையும் உமது சாட்சிக
ளையுங் காத்து நடக்கிறேன்; ஏ
னெனில் என் வழிகளெல்லாம்
உமக்கு முன்பாக இருக்கிறது.

169 கர்த்தாவே, என் கூப்பிடு
தல் உமக்கு முன்பாகச் சேரக்க
டவது: உமது வசனத்தின்படி
யே என்னை உணர்வுள்ளவனாக்
கும். – 170 என் விண்ணப்பம் உ
மக்கு முன்பாக வரட்டும். உமது
வார்த்தையின்படியே என்னை
விடுவியும்.–171 உம்முடைய பிர
மாணங்களை நீர் எனக்குக் கற்
றுக்கொடுக்கும்போது என் உத
டுகள் உமது துதியை வெளிப்ப
டுத்தும்.—172 என் நாவு உம்மு
டைய வசனத்தைப் பகர்ந்து பே
சும்; ஏனெனில் உமது கற்பனை
கள் எல்லாம் நீதி.-173 உமது க
ரம் எனக்குச் சகாயஞ் செய்ய இ
ருக்கக்கடவது; ஏனெனில் உம
து கட்டளைகளைத் தெரிந்து
கொண்டேன்.- 174 கர்த்தாவே,
உமது இரட்சிப்பின்மேல் ஆசை
யாயிருக்கிறேன்; உம்முடைய
வேதம் என் மனமகிழ்ச்சி.—175
என் ஆத்துமம் பிழைத்து உம்
மைத் துதிக்கக் கடவது; உமது
நியாயத்தீர்ப்புகள் எனக்கு ஒத்
தாசையாயிருப்பதாக. 176 காணா
மல்போன ஆட்டைப்போல் வழி
தப்பினேன், உமது அடியானைத்
தேடும்; ஏனெனில் உமது கற்ப
னைகளை மறவேன்.

120. சங்கீதம்.

பொல்லாத நாவுகள் பேரிலே முறை
யிடுதல்.

படிகளின்மேல் நின்று பாடினது.

என் நெருக்கத்திலே கர்த்தரை
நோக்கிக் கூப்பிட்டேன், என்
னைக் கேட்டருளினார்.- 2 கர்த்தா

வே, கள்ள உதட்டுக்கும் கபட்டு
நாவுக்கும் என் ஆத்துமத்தைத்
தப்புவியும்.-3 கபட்டு நாவு உனக்
குச் செய்ததென்ன, உனக்கு
அப்புறம் உண்டாக்குவதுமென்
ன.-4 அது பெலவானுடைய கூர்
மையான அம்புகளைப் போலே
யும், சூரைச்செடிகளை எரிக்குந்
தழலைப்போலேயும் இருக்கிறது.
5 நான் மேசேக்கிலே குடியி
ருந்தது போதும்; கேதாரின் கூ
டாரங்களண்டையிலே குடியிருக்
கையால் எனக்கு ஐயோ.–6 சமா
தானத்தைப் பகைக்கிறவர்களி
டத்திலே என் ஆத்துமம் குடியி
ருந்தது போதும்.— 7 நான் சமா
தானமாயிருக்கிறேன்; நான் பே
சும்போதோவெனில் அவர்கள்
யுத்தத்திற்கு எத்தனமாயிருக்கி
றார்கள்.

121. சங்கீதம்.

தம்முடையவர்களைப் பராபரன் காப்பாற்றுகிறார் என்பது.

படிகளின்மேல் நின்று பாடுவது.

எனக்கு ஒத்தாசை வரும் பரு
வதங்களுக்கு நேராக என் கண்
களை ஏறெடுக்கிறேன். — 2 வா
னத்தையும் பூமியையும் உண்
டாக்கின கர்த்தரிடத்திலிருந்து
எனக்கு ஒத்தாசை வரும்-3 உன்
காலைத் தள்ளாட ஒட்டார்; உன்
னைக் காக்கிறவர் உறங்கார்.— 4
இதோ, இஸ்ரவேலைக் காக்கிற
வர் உறங்குகிறதும் இல்லை, தூங்
குகிறதும் இல்லை. — 5 கர்த்தர்
உன்னைக் காக்கிறவர்; கர்த்தர்
உன் வலது பக்கத்திலே உனக்
கு நிழலாக இருக்கிறார். – 6 பக
லில் வெய்யிலாகிலும் இராவில்
நிலவென்கிலும் உன்னைச் சே
தப்படுத்துவதும் இல்லை.–7 கர்த்
தர் உன்னை எல்லாத் தீங்குக்
கும் விலக்கமாய்க் காப்பார். அவர்
உன் ஆத்துமத்தைக் காப்பார்.–8
கர்த்தர் உன் போக்கையும் வரத்
தையும் இது முதற்கொண்டு என்
றென்றைக்குங் காப்பார்.

122. சங்கீதம்.

கர்த்தருடைய சபையின் சுகசீரினாலே மகிழ்ந்தது.

படிகளின் மேல் நின்று பாடப்பட்ட தாவீதின் பாட்டு.

கர்த்தருடைய வீட்டுக்குப்போ
வோம் என்று எனக்குச் சொல்
லுகிறவர்களால் மகிழ்ச்சியாயிருக்
கிறேன். – 2 எருசலேமே, உன்
வாசல்களில் எங்கள் கால்கள் நிற்
கலாயிற்று.-3 எருசலேம் இசை
விணைப்பான பட்டணமாகக் கட்
டப்பட்டிருக்கிறது. – 4 அங்கே
இஸ்ரவேலுக்குச் சாட்சியாகக்
கர்த்தருடைய கோத்திரங்களா
கிற கோத்திரங்கள் கர்த்தரின்
நாமத்தை ஸ்தோத்திரிப்பதற்
குப் போய் ஏறும். - 5 ஏனெனில்
அங்கே நியாயாசனங்கள் வைக்கப்
பட்டிருக்கிறது, தாவீதுடைய
வீட்டாரின் ஆசனங்கள் தானே.
6 எருசலேமின் சமாதானத்
திற்காக வேண்டுங்கள்; உன்னைச்
சிநேகிக்கிறவர்கள் சுகித்திருப்
பார்களாக.–7 உன் அலங்கத்துக்

குள்ளே சமாதானமும் உன் அரண்
மனைகளில் சுகமும் இருப்பதாக.
8 என் சகோதரருக்காகவும் என்
சிநேகிதருக்காகவும் உன்னில்
சமாதானம் இருப்பதாக என்
பேன்.—9 எங்கள் பராபரனாகிய
கர்த்தரின் வீட்டுக்காக உனக்கு
நலமாயிருக்கிறதைத் தேடுவேன்.

123. சங்கீதம்.

சக்கந்தக்காரின் பேரிலே முறையிடுதல்.

படிகளின்மேல் நின்று பாடின பாட்டு.

பரமண்டலங்களில் வாசமாயி
ருக்கிற தேவரீர் அண்டைக்கு
என் கண்களை ஏறெடுக்கிறேன்.
2 இதோ, வேலைக்காரரின் கண்
கள் தங்கள் எசமான்களின் கை
யையும், வேலைக்காரியின் கண்
கள் தன் எசமானியின் கையை
யும் நோக்கியிருப்பதுபோலே, எங்
கள் கண்கள் எங்கள் பராபரனா
கிய கர்த்தரை, அவர் எங்கள்
மேல் இரக்கமாகுமட்டும் நோக்கி
யிருக்கிறது.-3 எங்களுக்கு இரங்
கும், கர்த்தாவே, எங்களுக்கு இ
ரங்கும்; ஏனெனில் அசங்கதத்தா
லே மிகவும் நிரப்பப்பட்டோம்.
4 எங்கள் ஆத்துமம் நிர்விசாரரின்
சக்கந்தத்தாலும், அகந்தைக்கார
ரின் அசங்கதத்தாலும் மிகவும்
நிரப்பப்பட்டிருக்கிறது.

124. சங்கீதம்.

குரூர சத்துருக்களின் விக்கினத்திற்குச் சபையைத் தப்பப் பண்ணின பராபரனை ஸ்தோத்திரித்தது.

படிகளின் மேல் நின்று பாடப்பட்ட தாவீதின் பாட்டு.

கர்த்தர் நமக்கு இராதிருந்தா
ரானால், — 2 மனுஷர் நமக்கு
விரோதமாய் எழும்பினபோது,
கர்த்தரே நமக்கு இராதிருந்தா
ரானால்,—3 அப்போது அவர்கள்
தங்கள் கோபம் நம்முடைய மேல்
எரிகையில் நம்மை உயிரோடே
விழுங்கியிருப்பார்கள். — 4 அப்
போது தண்ணீர்கள் நம்முடைய
மேல் புரண்டு, நீரோட்டம் நம்
முடைய ஆத்துமத்தின் மேல்
கடந்து, — 5 உயர்ந்த தண்ணீர்
களே நம்முடைய ஆத்துமத்தின்
மேல் கடக்கும் என்று இஸ்ரவேல்
இப்போது சொல்லுவதாக.
6 நம்மை அவர்கள் பல்லுகளுக்
கு இரையாக ஒப்புக்கொடாதிருக்
கிற கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்
டவர்.-7 நம்முடைய ஆத்துமம்
ஒரு குருவியைப்போலே வேட்
டைக்காரரின் கண்ணிக்குத் தப்
பிப்போயிற்று; கண்ணி தெறித்
தது, நாம் தப்பினோம். —8 நம்
முடைய சகாயம் வானத்தையும்
பூமியையும் உண்டாக்கின கர்த்த
ருடைய நாமத்தில் உள்ளது.

125. சங்கீதம்.

பராபரன் பேரில் வைக்கும் நம்பிக்கை வெட்கப்படுத்தாது என்பது.

படிகளின் மேல் நின்று பாடினது.

கர்த்தரை நம்புகிறவர்கள் அசை
யாதபடி என்றும் நிலைத்திருக்கும்

சீயோன் பருவதத்தைப்போல்
இருப்பார்கள்.—2 எருசலேமைச்
சுற்றிலும் பருவதங்கள் இருப்
பதுபோலே, கர்த்தர் இது முத
லாய் என்றென்றைக்கும் தம்மு
டைய சனத்தைச் சுற்றிலுமிருக்
கிறார். —3 ஏனெனில் நீதிமான்
கள் தங்கள் கைகளை அநியாயத்
திற்கு நீட்டாதபடி ஆகாமியத்
தின் செங்கோல் நீதிமானுடைய
வித்தின் மேலே நிலைக்காதே போ
கும்.
4 கர்த்தாவே, நல்லவர்களுக்
கும் தங்கள் இருதயங்களில் செம்
மையானவர்களுக்கும் நன்மை
செய்யும். — 5 ஆனால் தங்கள்
கோணலான வழிகளுக்குச் சாய்
கிறவர்களைக் கர்த்தர் அக்கிரமக்
காரரோடே போகப்பண்ணுவார்;
இஸ்ரவேலின்மேல் சமாதானம்.

126. சங்கீதம்.

தமது சனத்தின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்புவார் என்ற தீர்க்கதரிசனம்.

படிகளின் மேல் நின்று பாடின
பாட்டு.

சீயோனின் சிறையிருப்பைக்
கர்த்தர் திருப்பும்போது, சொப்ப
னங் காண்கிறவர்களைப் போல்
இருப்போம்.—2 அப்போது நம்
முடைய வாய் நகைப்பினாலும் நம்
முடைய நாவு கம்பீரத்தினாலும்
நிறைந்திருக்கும். அப்போது கர்த்
தர் இவர்களிடத்திலே பெரியதா
னவைகளைச் செய்தார் என்று
புறச்சாதிகளுக்குள்ளே சொல்லிக்
கொள்ளுவார்கள்.-3 கர்த்தர் நம்
மிடத்திலே பெரிதானவைகளைச்
செய்தார், இதன் நிமித்தம் மகிழ்ந்
திருக்கிறோம் என்போம்.
4 கர்த்தாவே, தெற்கத்து வெள்
ளங்களைப் போலே எங்கள் சிறை
யிருப்பைத் திருப்பும். — 5 கண்
ணீரோடே விதைக்கிறவர்கள் கம்
பீரத்தோடே அறுப்பார்கள். —
6 அள்ளித் தூவும் விதையைச்
சுமக்கிறவன் அழுது நடந்து
கொண்டிருக்கிறான்; ஆனால் தான்
அறுத்த அரிகளைச் சுமந்து கம்பீ
ரத்தோடே வரவே வருவான்.

127. சங்கீதம்.

தெய்வ உதவியே எந்தக் காரியத்துக்கும் தேவை என்பது.

படிகளின்மேல் நின்று பாடப்
பட்ட சாலொமோனின் பாட்டு.

கர்த்தர் வீட்டைக் கட்டாரா
கில் அதைக் கட்டுகிறவர்கள் விரு
தாவாய் அதில் உழைக்கிறார்கள்;
கர்த்தர் பட்டணத்தைக் காக்கா
ராகில் சாமக்காரன் விருதாவாய்
விழித்திருக்கிறான். — 2 நீங்கள்
இருட்டோடு எழுந்து நேரப்பட
வேலையில் தரித்து வருத்தங்க
ளுள்ள அப்பத்தைச் சாப்பிடுகி
றது விருதா; தமக்குப் பிரியமான
வனுக்கு நித்திரையை அளிக்
கிறார்.
3 இதோ, பிள்ளைகள் கர்த்தர் அ
ளிக்கிற சுதந்தரமும் கர்ப்பத்தின்
கனி அவரால் வரும் பலனுமாயி
ருக்கிறது.—4 வாலவயதுக் குமா
ரர் பலவானுடைய கையிலுள்ள

அம்புகளுக்குச் சரி.—5 தன் அப்
பருத் தூணியை அவைகளால்
நிரப்பின புருஷன் பாக்கியவான்;
கூச்சமில்லாமல் சத்துருக்களோ
டே ஒலிமுகவாசலிலே பேசுவார்
கள்.

128. சங்கீதம்.

தெய்வ பயமுள்ளவர்களின் ஆசீர்
வாதம்.

படிகளின் மேல் நின்று பா
டின பாட்டு.

கர்த்தருக்குப் பயந்து அவர்
வழிகளில் நடக்கிறவன் எல்லாம்
பாக்கியவான்.—2 உன் கைகளின்
பிரயாசத்தை நீ சாப்பிடுகையில்
உனக்குப் பாக்கியமும் நன்மையும்
இருக்கும். — 3 உன் பெண்சாதி
உன் வீட்டு ஓரங்களில் கனி தருங்
கொடி முந்திரிபோலவும், உன்
பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றி
லும் ஒலிவ மரக் கன்றுகளைப்
போலவும் இருப்பார்கள்.
4 இதோ, கர்த்தருக்குப் பயந்த
மனுஷன் இப்படி ஆசீர்வதிக்கப்
படுவான்.— 5 கர்த்தர் சீயோனி
லிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்.
நீ சீவனுள்ள நாள் எல்லாம் எரு
சலேமின் நன்மையைக் காண்பா
யாக. — 6 நீ உன் பிள்ளைகளின்
பிள்ளைகளையும், இஸ்ரவேலின்
மேல் சமாதானம் இருக்கிறதை
யுங் காண்பாயாக.

129. சங்கீதம்.

சத்துருக்கள் சபையை மேற்கொள்ள
மாட்டார்கள் என்பது.

படிகளின் மேல் நின்று பா
டினபாட்டு.

என் சிறு வயது துவக்கி அநே
கம் விசை என்னை நெருக்கப்படுத்
தினார்கள்.— 2 என் சிறு வயது
துவக்கி அநேகம் விசை என்னை
நெருக்கப்படுத்தியும் என்னை
மேற்கொள்ளாதே போனார்கள்.
3 உழுகிறவர்கள் என் முதுகின்
மேல் உழுது தங்கள் படைச்
சால்களை நீளமாக்கினார்கள். —
4 கர்த்தரோ நீதிபரர். ஆகாதவர்
களின் கயிறுகளை அறுத்தார்
என்று இஸ்ரவேல் இப்போது
சொல்வதாக.
5 சீயோனைப் பகைக்கிற அனை
வரும் வெட்கிப் பின்னிட்டுத்
திரும்பக் கடவார்கள். — 6 பிடுங்
கப்படும் முன் உலருகிற மேன்
கூரைகளின் புல்லைப்போல் இருப்
பார்களாக.— 7 அதனால் அறுக்
கிறவன் தன் கையையும் அரி
களைக் கூட்டுகிறவன் தன் மடி
யையும் நிரப்பான்.— 8 அதற்கு
வழி நடக்கிறவர்கள்: கர்த்தரு
டைய ஆசீர்வாதம் உங்கள் மீது
இருப்பதாக; உங்களைக் கர்த்
தரின் நாமத்திலே ஆசீர்வதிக்கி
றோம் என்று சொல்லுவதும்
இல்லை.

130. சங்கீதம்.

பாவ மன்னிப்பைத் தேடும் வகை.

படிகளின் மேல் நின்று பாடி
னது.

கர்த்தாவே, தாழ்வுகளிலிருந்து
உம்மை நோக்கி கூப்பிடுகிறேன்.

2 ஆண்டவரே, என் சத்தத்தைக்
கேளும்; உம்முடைய செவிகள்
என் விண்ணப்பங்களின் சத்தத்
திற்குக் கவனித்திருக்கக்கடவது.
3 கர்த்தாவே, அக்கிரமங்களை
நோக்கிக் கொண்டிருந்தீரானால்
ஆர் நிலை நிற்பான், ஆண்டவரே.
4 ஆனால் உமக்குப் பயப்படும்படி
மன்னிப்பு தேவரீரிடத்தில் இருக்
கிறது.

5 கர்த்தருக்குக் காத்திருக்கி
றேன், என் ஆத்துமம் காத்திருக்
கிறது; அவருடைய வார்த்தை
யை நம்பியிருக்கிறேன். — 6 எப்
போது விடியும் என்று விடியுங்
காலத்துக்குக் காத்திருக்கிற சா
மக்காரரைப் பார்க்கிலும் என்
ஆத்துமம் ஆண்டவருக்குக் காத்
திருக்கிறது.

7 இஸ்ரவேல் கர்த்தரை நம்பக்
கடவது, ஏனெனில் கர்த்தரிடத்
திலே கிருபையும் அவரிடத்திலே
திரளான மீட்பும் இருக்கிறது.—
8 அவர் இஸ்ரவேலை அதன் அக்
கிரமங்களுக்கெல்லாம் நீங்க
லாக்கி மீட்பார்.

131. சங்கீதம்.

மனத்தாழ்மை ஏற்றது என்பது.

படிகளின் மேல் நின்று பாடப்பட்ட தாவீதின் பாட்டு.

கர்த்தாவே, என் இருதயம்
உப்பினதாயிருக்கிறதில்லை, என்
கண்கள் மேட்டிமையாயிருக்கிற
துமில்லை, நான் பெருங் காரியங்
களிலும் எனக்கு மிஞ்சின கருமங்
களிலும் நடக்கிறதுமில்லை. — 2
நான் என் ஆத்துமத்தைப் பொ
சுங்கவும் அமரவும் பண்ணியிருந்
தேனாகில், என் ஆத்துமம் தன்
தாயினிடத்திலே முலைமறக்கப்
பண்ணப்பட்டிருக்கிற குழந்தை
யைப்போல் என்னிடத்தில் இரு
க்கும். - 3 இஸ்ரவேல் இதுமுதற்
கொண்டு என்றென்றைக்கும்
கர்த்தரை நம்பியிருக்கக்கடவது.

132. சங்கீதம்.

தெய்வ வாசஸ்தலத்துக்காகக் கவலைப்பட்ட தாவீதுக்குக் கர்த்தர் அருளிய வாக்குத்தத்தம்.

படிகளின் மேல் நின்று பாடினது.

கர்த்தாவே, தாவீதையும் அவ
னுடைய சகல உபத்திரவத்தை
யும் நினையும்.— 2 அவன் தான்
கர்த்தருக்கு ஒரு இடத்தையும்
யாக்கோபுடைய வல்லவருக்கு
வாசஸ்தலந்தளையும் காணுமட்
டும்,- 3 தன் வீட்டின் கூடாரத்தி
லே பிரவேசியாமலும், தன் படுக்
கையினுடைய கட்டிலின்மேல்
ஏறாமலும், — 4 தன் கண்களு
க்கு நித்திரையையும், தன் நிமை
களுக்கு உறக்கத்தையுங் கொடா
மலும் இருப்பேன் என்று, —
5 கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்
கோபுடைய வல்லவருக்குப் பொ
ருத்தனை பண்ணினான். — 6 இ
தோ, நாம் எப்பிராத்தாவிலே
அதன் செய்தியைச் சேட்டு ஏயா
ரின் வெளிகளில் அதைக் கண்
டோம். 7 அவருடைய வாசஸ்த
லங்களுக்குள் பிரவேசித்து அவர்
பாதபடியிலே பணிவோம்.

8 கர்த்தாவே, உம்முடைய தா
பர இடத்துக்குத் தேவரீரும்
உமது வல்லமையின் பெட்டியு
மாய் எழுந்தருளும். —9 உம்மு
டைய ஆசாரியர்கள் நீதியை உடுத்
திக்கொண்டு, உம்முடைய பரிசுத்
தவான்கள் கம்பீரிப்பார்களாக. —
10 நீர் அபிஷேகம் பண்ணுவித்த
வனின் முகத்தை உம்முடைய
தாசனாகிய தாவீதின் நிமித்தமா
கப் புறக்கணியாதிரும்.

11 உன் கர்ப்பத்தின் கனியை
உன் இராசாசனத்தின் மேல்
வைப்போம் என்றும்,-12 உன்
குமாரர் நம்முடைய உடன்படிக்
கையையும், நாம் அவர்களுக்குக்
கற்றுக்கொடுக்கப் போகிற நம்மு
டைய சாட்சியையும் காத்து நடந்
தால், அவர்கள் குமாரரும் என்
றென்றைக்கும் உன் இராசாசனத்
தில் உட்காருவார்கள் என்றும்
கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய்
ஆணையிட்டார், அதை விட்டு அவர்
பிசகுவதில்லை. – 13 ஏனெனில்
கர்த்தர் சீயோனைத் தெரிந்து
கொண்டு அது தமக்கு வாசஸ்தல
மாக விரும்பினார்.–14 இது என்
றென்றைக்கும் நாம் தங்கும்
இடம், அங்கே வாசம்பண்ணு
வோம்; ஏனெனில் அதை விரும்
பினோம்.–15 அதன் ஆகாரத்தை
நாம் ஆசீர்வதித்து வருவோம்;
அதன் ஏழைகளை நாம் அப்பத்தால்
திருப்தியாக்கி,–16 அதன் ஆசாரி
யர்களுக்கு இரட்சிப்பை உடுத்து
வோம்; அதன் பரிசுத்தவான்
கள் மிகவும் கம்பீரிப்பார்கள். —
17 அங்கே தாவீதுக்குக் கொம்பை
முளைப்பிப்போம், நாம் அபிஷே
கம் பண்ணுவித்த தாவீதுக்கு
விளக்கை ஆயத்தம் பண்ணி
னோம். — 18 அவன் சத்துருக்க
ளுக்கு வெட்கத்தை உடுத்து
வோம்; அவன் மீதிலோ அவனு
டைய கிரீடம் பூக்கும் என்றார்.

133. சங்கீதம்.

சகோதர சிநேகத்துக்கு ஏவுதல்.

படிகளின்மேல் நின்று பாடப்
பட்ட தாவீதின் பாட்டு.

இதோ, சகோதரர் ஒருமித்து
வாசம்பண்ணுகிறது எத்தனை நன்
றும் எத்தனை இன்பமுமானது.–
2 அது ஆரோனுடைய சிரசின்
மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய
தாடியின்மேல் வடிகிறதும் அவ
னுடைய அங்கிகளின்மேல் இறங்
குகிறதுமான நல்ல தைலத்துக்
கும்,–3 எர்மோனின் பனிக்கும்,
சீயோனின் பருவதங்களின்மேல்
இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்
கிறது, ஏனெனில் அங்கே கர்த்
தர் என்றென்றைக்கும் ஆசீர்வா
தத்தையும் சீவனையும் கட்டளை
யிடுகிறார்.

134. சங்கீதம்.

கர்த்தரின் ஊழியக்காரரைத் தெய்வ
ஸ்தோத்திரிப்புக்கு ஏவினது.

படிகளின்மேல் நின்று பாடினது.

இதோ, இராக்காலங்களில் கர்த்
தருடைய வீட்டிலே நிற்கிற கர்த்
தரின் ஊழியக்காரரே, எல்லாரும்
கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.—

2 உங்கள் கைகளை பரிசுத்த ஸ்த
லத்துக்கு நேராக எடுத்துக் கர்த்த
ரை ஸ்தோத்திரியுங்கள்.-3 வான
த்தையும் பூமியையும் உண்டாக்
கின கர்த்தர் உன்னைச் சீயோனி
லிருந்து ஆசீர்வதிக்கக் கடவார்.

135. சங்கீதம்.

சர்வ வல்லமையுள்ள கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறதற்கு ஏவி, விக்கிரகங்களின் இலச்சையைக் காண்பித்தது.

அல்லேலூயா, கர்த்தருடைய
நாமத்தைத் துதியுங்கள்.—2 கர்த்
தருடைய வீட்டிலும் நமது பரா
பரனுடைய வீட்டின் பிரகாரங்க
ளிலும் நிற்கிற கர்த்தரின் ஊழி
யக்காரரே, துதியுங்கள்.–3 கர்த்த
ரைத் துதியுங்கள், ஏனெனில்
கர்த்தர் நல்லவர்; அவருடைய
நாமத்தைக்கீர்த்தனம் பண்ணுங்
கள், ஏனெனில் அது இன்பமா
னது.

4 ஏனென்றால் கர்த்தர் யாக்
கோபைத் தமக்கென்றும் இஸ்ர
வேலைத் தமக்குச் சொந்தமென்
றும் தெரிந்துகொண்டார். – 5 ஏ
னெனில் கர்த்தர் பெரியவர் என்
றும், நம்முடைய ஆண்டவர் எல்
லாத்தேவர்களுக்கும்மேலானவர்
என்றும் நான் அறிவேன். - 6 வா
னத்திலும் பூமியிலும் சமுத்திரங்
களிலும்எல்லா ஆழங்களிலும்கர்த்
தர் தமக்குச் சித்தமானதை எல்
லாஞ் செய்கிறார்.-7அவர் பூமியின்
கடையாந்தரங்களிலிருந்து மேகங்
களை எழும்பப் பண்ணி, மழையு
டன் மின்னல்களை உண்டாக்கிக்
காற்றைத் தமது பண்டகசாலைக
ளிலிருந்து புறப்படப் பண்ணுகி
றவர்.—8 அவர் எகிப்தின் தலைச்
சன்களை மனுஷனைத் துவக்கி மி
ருகமட்டும் அடித்தவர்.-9 எகிப்து
தேசமே, உன் நடுவே அடையா
ளங்களையும் அற்புதங்களையும் பார்
வோன்மேலும் அவனுடைய எல்
லா ஊழியக்காரர்மேலும் அனுப்
பினார்.–10 அவர் அனேகஞ் சாதி
களை அடித்துப் பலத்த இராசாக்
களைக் கொன்றுபோட்டு, - 11 எ
மோரியரின் இராசாவாகிய சீகோ
னையும், பாசானின் இராசாவாகிய
ஓகையும், கானானின் சகல இராச்
சியங்களையும் அழித்து, - 12 அவர்
கள் தேசத்தைச் சுதந்தரமாகக்
கொடுத்தார்; தம்முடைய சன
மாகிய இஸ்ரவேலுக்குச் சுதந்தர
மாகத்தானே.

13 கர்த்தாவே, உம்முடைய
நாமம் என்றைக்கும், கர்த்தாவே,
உம்முடைய கீர்த்தி தலைமுறை
தலைமுறைக்கும் இருக்கும். – 14
ஏனெனில் கர்த்தர் தமது சனத்
தின் நியாயத்தை விசாரித்துத்
தம்முடைய ஊழியக்காரர்மேல்
பரிதாபமாவார்.–15 அக்கியானிக
ளுடைய விக்கிரகங்கள் மனுஷ
ருடைய கைகளின் வேலையாகிய
வெள்ளியும் பொன்னுந்தானே. –
16 அவைகளுக்கு வாய் இருந்தும்,
பேசாது; அவைகளுக்குக் கண்கள்
இருந்தும், காணாது.—17 அவைக
ளுக்குக் காதுகள் இருந்தும், கே
ளாது, அவைகள் வாயிலே சுவாச
மும் இல்லை. –18 அவைகளைப்

பண்ணுகிறவர்களும் அவைகளை
நம்புகிற அனைவரும் அவைகளைப்
போலே இருக்கிறார்கள்.
19 இஸ்ரவேல் வீட்டாரே,
கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்;
ஆரோனின் வீட்டாரே, கர்த்த
ரை ஸ்தோத்திரியுங்கள்;- 20 இ
லேவி வீட்டாரே, கர்த்தரை ஸ்
தோத்திரியுங்கள்; கர்த்தருக்குப்
பயந்தவர்களே, கர்த்தரை ஸ்
தோத்திரியுங்கள்.- 21 எருசலே
மில் வாசம்பண்ணுகிற கர்த்தர்
சீயோனிலிருந்து ஸ்தோத்திரிக்
கப்படக்கடவார். அல்லேலூயா.

136. சங்கீதம்.

கிருபையுள்ள கர்த்தரைத் துதிக்க
ஏவுகிறது.

கர்த்தரைத் துதியுங்கள்; ஏ
னெனில் அவர் நல்லவர், அவர்
கிருபை என்றுமுள்ளது.- 2 தே
வாதி தேவனைத் துதியுங்கள்; ஏ
னெனில் அவர் கிருபை என்று
முள்ளது.- 3 கர்த்தாதி கர்த்த
ரைத் துதியுங்கள்; ஏனெனில்
அவர் கிருபை என்றுமுள்ளது.
4 ஒருவராய்ப் பெரிய அதிச
யங்களைச் செய்கிறவரையே; ஏ
னெனில் அவர் கிருபை என்று
முள்ளது.- 5 வானங்களை விஞா
வாய் உண்டாக்கினவரையே; ஏ
னெனில் அவர் கிருபை என்று
முள்ளது.- 6 பூமியைத் தண்ணீர்
களுக்கு உயரமாக விரித்தவரை
யே; ஏனெனில் அவர் கிருபை
என்றுமுள்ளது.- 7 பெரிய வெ
ளிச்சங்களை உண்டாக்கினவரை
யே; ஏனெனில் அவர் கிருபை
என்றுமுள்ளது.- 8 பகலில் ஆளச்
சூரியனைப் படைத்தவரையே; ஏ
னெனில் அவர் கிருபை என்று
முள்ளது.- 9 இரவில் ஆளச் சந்தி
ரனையும் நட்சத்திரங்களையும் ப
டைத்தவரையே; ஏனெனில்
அவர் கிருபை என்றுமுள்ளது.
10 எகிப்தியருடைய தலைச்சன்
களை அடித்தவரையே; ஏனெ
னில் அவர் கிருபை என்றுமுள்
ளது.- 11 இஸ்ரவேலை அவர்கள்
நடுவிலிருந்து புறப்படப்பண்ணி
னவரையே; ஏனெனில் அவர்
கிருபை என்றுமுள்ளது.- 12 ப
லத்த கையினாலும் நீட்டிய புயத்
தினாலும் அதைச் செய்தவரை
யே; ஏனெனில் அவர் கிருபை
என்றுமுள்ளது.- 13 நாணற் கட
லை இரண்டாகப் பகிர்ந்தவரை
யே; ஏனெனில் அவர் கிருபை
என்றுமுள்ளது.- 14 இஸ்ரவேலை
அதை நடு வழியாகக் கடக்கப்
பண்ணினவரையே; ஏனெனில்
அவர் கிருபை என்றுமுள்ளது.—
15 பார்வோனையும் அவன் இரா
ணுவப் பெலனையும் நாணற் கட
லில் விழத் தள்ளினவரையே; ஏ
னெனில் அவர் கிருபை என்று
முள்ளது.-16 தம்முடைய சனத்
தை வனாந்தரத்தில் நடத்தினவ
ரையே; ஏனெனில் அவர் கிரு
பை என்றுமுள்ளது.
17 பெரிய இராசாக்களை அடித்
தவரையே; ஏனெனில் அவர் கிரு
பை என்றுமுள்ளது.- 18 வல்ல
மையுள்ள இராசாக்களைக் கொன்
றுபோட்டவரையே; ஏனெனில்
அவர் கிருபை என்றுமுள்ளது,—

19 எமோரியரின் இராசாவான
சீகோனைக் கொன்றவரையே; ஏ
னெனில் அவர் கிருபை என்று
முள்ளது.— 20 பாசானின் இரா
சாவான ஓகையுங் கொன்றவரை
யே, ஏனெனில் அவர் கிருபை
என்றுமுள்ளது.— 21 அவர்கள்
தேசத்தைச் சுதந்தரமாகத் தந்த
வரையே; ஏனெனில் அவர் கிரு
பை என்றுமுள்ளது.- 22 அதைத்
தம்முடைய பணிவிடைச் சனமா
கிய இஸ்ரவேலுக்குச் சுதந்தரமா
கத் தந்தவரையே; ஏனெனில்
அவர் கிருபை என்றுமுள்ளது.
23 நம்முடைய தாழ்மையிலே
நம்மை நினைத்தவரையே, ஏனெ
னில் அவர் கிருபை என்றுமுள்
ளது.— 24 நம்மை நம்முடைய
சத்துருக்களின் கையிலிருந்து ப
றித்துக் கொண்டவரையே; ஏ
னெனில் அவர் கிருபை என்று
முள்ளது.— 25 எல்லா மாமிசத்
துக்கும் ஆகாரங் கொடுக்கிறவ
ரையே; ஏனெனில் அவர் கிருபை
என்றுமுள்ளது;- 26 வானங்களு
டைய பராபரனையே துதியுங்கள்;
ஏனெனில் அவர் கிருபை என்று
முள்ளது.

137. சங்கீதம்.

பாபிலோனியர் சிறையிருப்பின் துயரப் பாட்டு.

பாபேலின் ஆறுகளண்டையி
லே நாங்கள் உட்கார்ந்திருந்து,
அங்கே சீயோனை நினைத்து அழு
துங் கொண்டோம்.— 2 அதன்
நடுவிலிருக்கும் அலரிச் செடிக
ளின்மேல் எங்கள் சுரமண்டலங்க
ளைத் தூக்கிப்போட்டோம்.- 3 ஏ
னெனில், எங்களுக்குச் சீயோ
னின் பாட்டுகளில் சிலதைப் பா
டுங்கள் என்று, அங்கே எங்க
ளை சிறைபிடித்தவர்கள் எங்கள்
பாட்டு வசனங்களையும், எங்களை
மண்மேடுகளாக்கினவர்கள் சந்
தோஷப் பாராட்டலையுங் கேட்
டார்கள்.
4 கர்த்தரின் பாட்டை நாங்கள்
அந்நிய தேசத்திலே பாடுவதெப்
படி.– 5 எருசலேமே, நான் உன்
னை மறந்தால், என் வலது கை
என்னை மறப்பதாக.– 6 நான்
உன்னை நினையாமலும், நான் எரு
சலேமை என்னுடைய அதி
மகிழ்ச்சிக்கு மேன்மையாக உயர்த்
தாமலும் போனால், என் நாவு
என் மேல்வாயோடே ஒட்டிக்
கொள்வதாக.
7 அதைத் திறப்பாக்கிப் போ
டுங்கள், அதை அதன் அஸ்திபா
ரங்கள் மட்டும் திறப்பாக்கிப்போ
டுங்கள் என்று சொல்லியிருக்கிற
ஏதோம் புத்திரரை எருசலே
மின் நாளிலே நினையும், கர்த்தா
வே.– 8 பாழாக்கும் பாபேல் கு
மாரத்தியே, நீ எங்களுக்குச் செ
லுத்தினபடி உன் பதிலை உனக்
குச் செலுத்துபவன் பாக்கிய
வான்.– 9 உன் குழந்தைகளைப்
பிடித்துக் கல்லோடே மோதி அ
டிக்கிறவன் பாக்கியவான்.

138. சங்கீதம்.

தெய்வதயவைத் தாவீது ஸ்தோத்திரித்து, அதற்குத் தன்னை முடிய ஒப்புவித்தது.

தாவீதின் சங்கீதம்.

உம்மை என் முழு இருதயத்
தாலும் துதிப்பேன், தேவர்களு
க்கு முன்பாக உம்மைக் கீர்த்த
னம் பண்ணுவேன். - 2 நான் உம
து பரிசுத்த தெய்வாலயத்திற்கு
நேராய்ப் பணிந்து, உம்முடைய
கிருபையின் நிமித்தமும் உம்மு
டைய உண்மையின் நிமித்தமும்
உமது நாமத்தைத் துதிப்பேன்;
ஏனெனில் உம்முடைய சகல
கீர்த்தியைப் பார்க்கிலும் உம்மு
டைய வார்த்தையை மகிமைப்
படுத்தினீர். – 3 நான் கூப்பிட்ட
நாளிலே எனக்கு மறு உத்தரவு
அருளிச்செய்தீர்; என் ஆத்துமத்
திலே பெலன் தந்து, என்னைத்
தைரியப்படுத்தினீர். – 4 கர்த்தா
வே, பூமியின் இராசாக்கள் எல்
லாரும் உமது வாக்கின் வார்த்தை
களைக் கேட்கும்போது உம்மைத்
துதிப்பார்கள்; - 5 கர்த்தாவின் வ
ழிகளைப் பாடுவார்கள்; ஏனெனில்
கர்த்தரின் மகிமை பெரியது.

6 ஏனென்றால் கர்த்தர் உயர்ந்
தவராயிருந்தும், தாழ்மையானவ
னை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டி
மையானவனையோ தூரத்திலிருந்
து அறிகிறார்.– 7 நான் நெருக்கத்
தின் நடுவிலே நடந்தால், நீர் என்
னை உயிர்ப்பிக்கிறீர்; உம்முடைய
கையை என் சத்துருக்களின் கோ
பத்துக்கு விரோதமாக நீட்டுகிறீர்;
உமது வலது கரம் என்னை இரட்
சிக்கிறது. – 8 கர்த்தர் எனக்காக
யாவையுஞ் செய்து முடிப்பார்.
கர்த்தாவே, உமது கிருபை என்
றென்றைக்குமுள்ளது; உம்மு
டைய கைகளின் கிரியைகளை
நெகிழீராக.

139. சங்கீதம்.

எல்லாவற்றையும் அறிந்து, எங்கும்
நிறைந்திருக்கிற பராபரனைப் பற்றித்
தாவீது தியானித்தது.

இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்
கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

கர்த்தாவே, என்னை ஆராய்ந்
து அறிந்திருக்கிறீர். - 2 என் உட்
காருதலையும் என் எழுந்திருக்குத
லையுந் தேவரீர் அறிந்திருக்கிறீர்,
என் நினைவுகளைத் தூரத்திலிருந்
து உணருகிறீர். — 3 நான் நடந்
தாலும் படுத்திருந்தாலும், என்
னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழி
கள் எல்லாம் உமக்குப் பழக்கமா
யிருக்கிறது. – 4 ஏனெனில் என்
நாவில் சொல் பிறவாததற்கு முன்
னே, இதோ, கர்த்தாவே, அதை
எல்லாம் அறிந்திருக்கிறீர்.- 5 பிற்
புறத்திலும் முற்புறத்திலும் நீர்
என்னை நெருக்கி, என்மேலே
உம்முடைய கரத்தை வைக்கிறீர்.
6 இவ்வறிவு எனக்கு மிஞ்சின
ஆச்சரியமும், எனக்கு எட்டாத
உயரமுமாயிருக்கிறது. – 7 உம்மு
டைய ஆவிக்கு மறைவாக எங்கே
போவேன். உம்முடைய முகத்
துக்கு மறைவாக எங்கே ஓடு
வேன். - 8 நான் வானத்துக்கு ஏறி
னாலும், அங்கே தேவரீர் இருக்கி
றீர்; நான் பாதாளத்திலே படுக்
கை போட்டாலும், இதோ, தேவ
ரீர் இருக்கிறீர். - 9 நான் விடியற்
காலத்தின் செட்டைகளை எடுத்
துக் கடலின் எறு கடைசியிலே
போய்த் தங்கினாலும், - 10 அங்கே
யும் உம்முடைய கை என்னை

நடத்தி, உம்முடைய வலது கரம்
என்னைப் பிடிக்கும்.-11 இருளாகி
லும் என்னை மூடிப்போடுமென்
றாலும் இராவும் என்னைச் சுற்றி
லும் வெளிச்சந்தானே.- 12 உ
மக்கு மறைவாக இருளும் அந்த
காரப்படுத்தாமல், இராக்காலம்
பகலைப் போல் வெளிச்சமாயிருக்
கும்; இருளும் வெளிச்சமும் சரி.-
13 ஏனெனில் தேவரீர் என் உள்
ளிந்திரியங்களைக் கைக்கொண்டி
ருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்
தில் என்னைக் காப்பாற்றினீர்.-14
பிரமிக்கத் தக்க அதிசயமாய்
உண்டானேன் என்கிறதின் நி
மித்தம் உம்மைத் துதிக்கிறேன்;
உம்முடைய கிரியைகள் அதிசய
மானவைகள் என்பது என் ஆத்து
மத்திற்கு நன்றாய்த் தெரியும்.-15
நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்
கப்பட்டுப் பூமியின் தாழ்விடங்க
ளில் சித்திர விநோதமாய் உருப
ணியப்பட்டபோது, என் எலும்பு
கள் உமக்கு மறைவாயிருந்ததில்
லை.-16 என் கருவை உம்முடைய
கண்கள் கண்டது; இவைகள்
ஒன்றுமில்லாதபோதே இவை
கள் அனைத்தும் இவைகள் உரு
வேற்படும் நாட்களும் உம்முடை
ய புஸ்தகத்தில் எழுதியிருந்தது.
17 ஆனதுகொண்டு பராபர
னே, உமது நினைவுகள் எனக்கு
எத்தனை அருமையானவைகள்;
அவைகளின் தொகைகள் எத்த
னை திரட்சி.-18 அவைகளை நான்
எண்ணப் போனால், மணலைப்
பார்க்கிலும் அதிகமாம்; நான் வி
ழிக்கையில் இன்னம் உம்மண்
டையில் இருக்கிறேன்.
19 பராபரனே, ஆகாதவனைக்
கொன்றீரானால் தாவிளை; இரத்
தப்பிரியரான மனுஷரே, நீங்கள்
என்னை விட்டகன்று போங்கள்.-
20 அவர்கள் துர்க்குணப்பேச்சாய்
உம்மைக் குறித்துப் பேசுகிறார்
கள்; உம்முடைய சத்துருக்கள் வீ
ணாக உப்பியிருக்கிறார்கள். —
21 கர்த்தாவே, உம்மைப் பகைக்
கிறவர்களை நான் பகையாமலும்,
உமக்கு விரோதமாய் எழும்புகிற
வர்களை அரோசியாமலும் இருப்
பேனோ.— 22 முழுப் பகையாய்
அவர்களைப் பகைக்கிறேன்; எனக்
குப் பகைஞரானார்கள்.—23 பரா
பரனே, என்னை ஆராய்ந்து என்
இருதயத்தை அறிந்துகொள்ளும்;
நீர் என்னைச் சோதித்து என் சிந்
தனைகளை அறிந்து கொண்டு,—
24 என்னில் வேதனை உண்டாக்
கும் வழி உண்டோ என்று பார்த்
து, என்னை நித்திய வழியிலே
நடத்தும்.

140. சங்கீதம்.

பொல்லாதவர்களுக்குத் தன்னைத் தப்புவிக்கத் தாவீது பராபரனை வேண்டிக்கொண்டது.

இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.

2 கர்த்தாவே, பொல்லாத மனு
ஷனுக்கு என்னைத் தப்புவியும்,
கொடுமைக்காரனுக்கு என்னை வி
லக்கிக் காரும். — 3 இருதயத்தி
லே அவர்கள் பொல்லாப்புகளைச்
சிந்தித்து, நாள்தோறும் யுத்தங்க
ளுக்கென்று கூட்டங் கூடுகிறார்

கள்.- 4 சர்ப்பத்தைப்போலே தங்
கள் நாவைக் கூர்மையாக்குகிறார்
கள்; அவர்கள் உதடுகளின் கீழே
விரியன் பாம்புகளின் விஷம் இ
ருக்கிறது. சேலா. — 5 கர்த்தா
வே, என்னை ஆகாதவன் கைகளு
க்கு நீங்கலாகவும், கொடுமைக்கா
ரனுக்கு விலக்கமாகவுங் காரும்;
அவர்கள் என் காலடிகளைத் தள்
ளாடப்பண்ண நினைக்கிறார்கள்.-
6 அகந்தைக்காரர் எனக்குக் கண்
ணியையும் கயிறுகளையும் மறை
வாய் வைக்கிறார்கள்; வழியோரத்
திலே வலையை விரித்து எனக்குச்
சுருக்குகளை வைக்கிறார்கள். சே
லா.

7 நான் கர்த்தருடனே: தேவ
ரீர் என் பராபரன் என்கிறேன்.
கர்த்தாவே, என் விண்ணப்பங்க
ளின் சத்தத்துக்குச் செவிகொ
டும். — 8 ஆண்டவராகிய கர்த்தா
வே, என் இரட்சிப்பின் பெல
னே, படை நாளிலே என் தலை
யை மூடிக்கொண்டிருக்கிறீர். - 9
கர்த்தாவே, ஆகாதவனுடைய ஆ
சைகளைக் கட்டளையிடாமலும், அ
வன் தன்னை உயர்த்துகிறதற்கு
இடமான அவனுடைய வினையத்
தை நடந்தேறப்பண்ணாமலும்
இருப்பீராக. சேலா.

10 என்னை வளைந்துகொள்ளு
கிறவர்களுடைய நஞ்சென்கிற அ
வர்கள் உதடுகளின் தீவினை அவர்
களை மூடுவதாக.—11 நெருப்புத்
தணல் அவர்கள் மேல் விழுவ
தாக; அக்கினியிலும் தாங்கள் எ
ழுந்திருக்கமாட்டாத பள்ளங்களி
லும் அவர்களை விழப்பண்ணுவா
ராக. - 12 பொல்லாத நாவுள்ள
வன் பூமியிலே நிலைப்படுவதில்லை;
கொடுமையான மனுஷனைப் ப
றக்கடிக்கப் பொல்லாப்பு அவனை
வேட்டையாடும். -13 சிறுமையா
னவனின் வழக்கையும் எளியவர்
களின் நியாயத்தையும் கர்த்தர்
விசாரிப்பார் என்று அறிவேன்.-
14 ஆம், நீதிமான்கள் உம்முடை
ய நாமத்தைத் துதிப்பார்கள்,
செம்மையானவர்கள் உமக்கு மு
ன்பாகத் தரித்திருப்பார்கள்.

141. சங்கீதம்.

பொல்லாதவர்களுக்குத் தன்னை விலக்
கிக் காக்கத் தாவீது செபித்தது.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தாவே, உம்மை நோக்கிக்
கூப்பிடுகிறேன், என்னண்டைக்
குத் தீவிரியும்; நான் உம்மைநோக்
கிக் கூப்பிடுகையில், என் சத்தத்
துக்குச் செவிகொடும்.— 2 என்
விண்ணப்பம் உமக்கு முன்பாகத்
தூபமாகவும், என் கையேற்பு அந்
திப்பலிக் காணிக்கையாகவும் ஒப்
பிடப்படக்கடவது.-3 கர்த்தாவே,
என் வாய்க்குக் காவல் வையும்,
என் உதடுகளின் வாசலைக் காவல்
பண்ணும். — 4 அக்கிரமஞ் செய்
கிற மனுஷரோடே ஆகாமியக் கி
ரியைகளை நடப்பிக்குந் துர்க்கரு
மத்திற்கு என் இருதயத்தை இ
ணங்க ஒட்டாதேயும்; இவர்கள்
பதார்த்தங்களில் சாப்பிடாமல் இ
ருப்பேனாக. -5 நீதிமான் என்னைத்
தயவாய்க் குட்டி, என்னைக் கடிந்
துகொள்ளக்கடவான்; அது தலைக்
கு எண்ணெயைப்போல் இருக்
கும்; என் தலை அதைத் தட்டுதல்

பண்ணுவதில்லை; ஏனெனில் இ
ன்னம் என் செபம் அவர்கள்
இக்கட்டுகளுக்கு எதிரானதாமே.
6 அவர்களுடைய நியாயாதிபதி
கள் கன்மலைச் சார்புகளிலிருந்து
தள்ளுண்கக் கடவார்கள்; என்
வார்த்தைகளையோ இன்பமான
வைகள் என்று கேட்பார்களாக.—
7 பூமியிலே எங்களை ஒருவன்
வெட்டிப் பிளக்குமாப்போல் எங்
கள் எலும்புகள் பாதாளவாய்க்கு
நேராகச் சிதறடிக்கப்பட்டது.—
8 ஆனால், ஆண்டவராகிய கர்த்தா
வே, உம்மை என் கண்கள் நோக்
குகிறது; உம்மை நம்பியிருக்கி
றேன்; என் ஆத்துமத்தை வெறு
மையாக விடாதேயும்.- 9 எனக்கு
அவர்கள் வைத்த கண்ணியின் சிக்
குகளுக்கும், அக்கிரமக்காரரின்
சுருக்குகளுக்கும் என்னை விலக்
கிக் காரும்.- 10 நான் கடந்துபோ
குந்தனிலும் தங்கள் தங்கள் வலை
களில் ஆகாதவர்கள் தானே ஏக
மாய் விழுவார்களாக.

142. சங்கீதம்.

மகா விக்கினத்திலே செய்த வேண்டுதல்.

தாவீது கெபியில் இருக்கும்
போது பண்ணின விண்ணப்பமா
கிய போதக சங்கீதம்.
2 கர்த்தரை நோக்கி என் சத்
தத்தினாலே கூப்பிடுகிறேன்,
கர்த்தரை நோக்கி என் சத்தத்
தினாலே கெஞ்சுகிறேன்.- 3 அவ
ருக்கு முன்பாக என் கெஞ்சுதலை
ஊற்றி, அவருக்கு முன்பாக என்
நெருக்கத்தை அறிக்கையிடுகி
றேன்.- 4 என் ஆவி என்னில்
தியங்கும்போது தேவரீர் என் பா
தையை அறிந்திருக்கிறீர்; நான்
நடக்கிறவழியிலே எனக்குக் கண்
ணியை மறைவாய் வைத்தார்கள்.-
5 நீர் வலது புறமாகக் கண்ணோக்
கி, என்னை அறிகிறவன் எனக்கு
இல்லை என்று பாரும்; ஒதுக்கு எ
னக்கு இல்லாமல் போயிற்று;
என் ஆத்துமத்துக்காக விசாரிக்
கிறவன் இல்லை.- 6 கர்த்தாவே,
உம்மை நோக்கிக் கூப்பிடுகிறே
ன்; தேவரீர் என் அடைக்கலமும்
சீவனுள்ளோருடைய பூமியில்
என் பங்குமாயிருக்கிறீர் என்கி
றேன்.-7 என் கூக்குரலுக்குக் கவ
னியும், ஏனெனில் மெத்தவுங் கு
றுகினேன்; என்னைத் தொடருகி
றவர்களுக்கு என்னைத் தப்புவி
யும்; ஏனெனில் எனக்கு மிஞ்சின
பெலனாக இருக்கிறார்கள்.- 8 உம்
முடைய நாமத்தை நான் துதிக்
கும்படி என் ஆத்துமத்தைக் காவ
லுக்கு நீங்கலாக்கி விடும்; எனக்
குத் தயவு பண்ணினீரானால், நீதி
மான்கள் என்னைச் சூழுவார்கள்.

143. சங்கீதம்.

உபத்திரவப்படுகிற வேளையிலே செய்த விண்ணப்பம்.

தாவீதின் சங்கீதம்.

கர்த்தாவே, என் செபத்தைக்
கேளும், என் விண்ணப்பங்களுக்
குச் செவிகொடும்; நீர் உம்முடை
ய உண்மையின்படியும் உம்முடை
ய நீதியின்படியும் எனக்கு மறுஉத்
தரவு அருளிச்செய்து, - 2 உமது
அடியானோடே நியாயத்தீர்ப்புக்

குள் பிரவேசியாதேயும்; ஏனெ
னில் சீவனுள்ள ஒருவனும் உமக்
கு முன்பாக நீதிமான் அல்ல.
3 ஏனென்ருல் சத்துரு என்
ஆத்துமத்தைத் தொடர்ந்து, என்
பிராணனைத் தரையோடே நசுக்
கிப்போட்டு, என்னைச் சதாகால
மாய் மரித்துக் கிடக்கிறவர்கள் இ
ருக்கிறதுபோலே இருளில் இருக்
கப்பண்ணுகிருன்.- 4 ஆகையால்
என் ஆவி என்னில் தியங்கும்,என்
இருதயம் எனக்குள் திடுக்கிடும்.-
5 பூர்வ நாட்களை நினைக்கிறேன்,
உமது கரங்களின் கிரியைகளை
யோசிக்கிறேன்.-6 என் கைகளை
உமக்கு நேராய் விரிக்கிறேன்;
என் ஆத்துமம் வறண்ட நிலத்
தைப்போல் உம்முடைய மேல்
தாகமாயிருக்கிறது. சேலா.
7 கர்த்தாவே, சீக்கிரமாய் என்
செபத்தைக் கேளும்; என் ஆவி
தொய்ந்துபோகும். நான் குழியில்
இறங்குகிறவர்களுக்கு ஒத்துப்
போகாதபடி, உம்முடைய முகத்
தை எனக்கு மறைக்காதிரும்.-
8 காலமே உமது கிருபையை என்
னைக் கேட்கப்பண்ணும், ஏனெ
னில் உம்மை நம்பியிருக்கிறேன்;
நான் நடக்கவேண்டிய வழியை
எனக்கு அறிவியும், ஏனெனில்
உம்மண்டை என் ஆத்துமத்தை
உயர்த்துகிறேன்.– 9 கர்த்தாவே,
என் சத்துருக்களுக்கு என்னைத்
தப்புவியும்; உம்மிடத்தில் ஒதுங்கு
கிறேன்.-10 உமக்குப் பிரியமா
னதைச்செய்ய எனக்குப் படிப்பி
யும்; ஏனெனில் தேவரீர் என் பரா
பரன், உம்முடைய நல்லஆவி என்
னைச் செம்மையான வழியிலே
நடத்துவாராக.—11 கர்த்தாவே,
உமது நாமத்தின் நிமித்தமாக
என்னை உயிர்ப்பியும்; நீர் உம்மு
டைய நீதியின்படி என் ஆத்துமத்
தை இடுக்கத்திற்கு நீங்கலாக்கி
விட்டு,-12 உம்முடைய கிருபை
யின்படி என் சத்துருக்களைச் சங்
கரித்து, என் ஆத்துமத்தை இடுக்
கப்படுத்துகிற யாவரையும் அழி
யும்; ஏனெனில் நான் உமது அடி
யான்.

144. சங்கீதம்.

*தன்னை ஆதரித்து வந்த பராபரனைத்
துதித்தது.*

தாவீதின் சங்கீதம்.

என் கைகளைப் போருக்கும்
என் விரல்களை யுத்தத்திற்கும் ப
டிப்பிக்கிற என் கன்மலையாகிய
கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்ட
வர்.-2 அவர் என் தயவும், என்
கோட்டையும், என் உயர்ந்த அ
டைக்கலமும், என்னை விடுவிக்கி
றவரும், என் கேடயமும், நான்
நம்பினவரும், என் சனத்தை
எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமா
மே.
3 கர்த்தாவே, மனுஷன் நீர்
அவனை அறிகிறதற்கும், மனுப்
புத்திரன் நீர் அவனை எண்ணுகிற
தற்கும் அவன் எம்மாத்திரம்.—
4 மனுஷன் மாயைக்கும், அவனு
டைய நாட்கள் கடந்து போகிற
நிழலுக்குஞ் சாயலாயிருக்கும்.
5 கர்த்தாவே, நீர் உமது வானங்
களைத் தாழ்த்தி இறங்கிப் பருவ
தங்களை அவைகள் புகையும்படி

நீண்டும்.-6 மின்னல்களை விட்டு
அவர்களைச் சிதறடித்து, உமது
அம்புகளை அனுப்பி அவர்களைக்
கலங்கடியும்.—7 உமது கரத்தை
உயரத்திலிருந்து நீட்டி, என்னை
விடுதலைபண்ணி, என்னைத் திர
ளான தண்ணீர்களுக்கும் அந்நிய
புத்திரரின் கைக்குந் தப்புவியும்.-
8 அவர்கள் வாய் மாயையைப் பே
சும், அவர்கள் வலதுகை கள்ளக்
கையாயிருக்கிறது.

9 பராபரனே, இராசாக்களுக்
குச் செயத்தைத் தந்து, உமது
அடியானாகிய தாவீதைப் பொல்
லாத பட்டயத்துக்குத் தப்புவிக்கி
றவரே,–10 உம்மை நான் புதுப்
பாட்டாய்ப் பாடி, உம்மைத் தம்பு
ராலும் பத்து நரம்பு வீணையாலும்
கீர்த்தனம்பண்ணுவேன்.11என்
னை அந்நிய புத்திரரின் கைக்கு
விலக்கி, என்னைத் தப்பப்பண்
ணும்; அவர்கள் வாய் மாயையைப்
பேசும், அவர்கள் வலது கை கள்
ளக்கையாயிருக்கிறது.-12எங்கள்
குமாரர் தங்கள் இளமையில் பயி
ராக்கப்பட்ட விருட்சக் கன்றுக
ளைப் போலேயும், எங்கள் குமாரத்
திகள் சித்திரந் தீர்ந்த அரண்ம
னைக் கோணங்களைப் போலேயும்
இருக்கவும்,-13 எங்கள் பண்டக
சாலைகள் சகல வகை வஸ்துக்க
ளைத் தரத்தக்கனையாய் நிறைந்த
வைகளாயிருக்கவும், எங்கள் ஆடு
கள் எங்கள் கிராமங்களில் ஆயிரங்
களும் பதினாயிரங்களுமாயிருக்க
வும்,-14எங்கள் எருதுகள் பெலத்
திருக்கவும், பொல்லாங்கு உட்புகு
தலில்லாமலும், வலசை வாங்குத
லில்லாமலும், எங்கள் வீதிகளில்
கூக்குரல் உண்டாகாமலும் இருக்
கவுங்கடவது என்பார்கள்.-15இப்
படிச் சம்பவிக்குஞ் சனம் பாக்கிய
முள்ளது, கர்த்தாவைத் தெய்வ
மாய்க் கொண்டிருக்கிற சனம்
பாக்கியமுள்ளது தானே.

145. சங்கீதம்.

கர்த்தரின் மகத்துவத்தையும் சர்வ தயவு இரக்கம் நீதியையும் ஸ்தோத்திரித்தல்.

தாவீது பாடின துதி.

இராசாவாகிய என் பராபர
னே, உம்மை உயர்த்தி உம்மு
டையநாமத்தை எப்போதும்என்
றென்றைக்கும் ஸ்தோத்திரிப்
பேன்.-2 சகல நாளிலும் உம்மை
ஸ்தோத்திரித்து, எப்போதும்
என்றைக்கும் உம்முடைய நாமத்
தைத் துதிப்பேன்.-3கர்த்தர் பெ
ரியவரும் மிகவும் புகழப்படத்தக்
கவருமாயிருக்கிறார்; அவர் மகத்
துவத்துக்கு ஆராயுதல் இல்லை.-
4 தலைமுறை தலைமுறையாய் உம்
முடைய கிரியைகளின் புகழ்ச்சி
யைச்சொல்லி, உம்முடைய வல்ல
மைகளை அறிவிப்பார்கள்.-5 உம்
முடைய கனமான மகிமையின்
பிரஸ்தாபத்தையும் கிரியைகளை
யுங் குறித்துப் பேசுவேன்.-6 உம்
முடைய பயங்கரங்களின் பலத்
தைச் சொல்லுவார்கள்; உம்மு
டைய மகத்துவத்தை விவரிப்
பேன்,–7 உமது தயவின் கீர்த்தி
யை நினைத்து வெளிப்படுத்தி,
உமது நீதியைக் கம்பீரித்துச்
சொல்லுவார்கள்.

8 கர்த்தர் இரக்கமும் மன உ
ருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்
த கிருபையும் உள்ளவர்.- 9 கர்த்
தர் எல்லார் மேலும் தயவுள்ள
வர்; அவர் இரக்கங்கள் அவரு
டைய எல்லாக் கிரியைகளின்
மேலும் உள்ளது.-10 கர்த்தாவே,
உம்முடைய எல்லாக் கிரியைக
ளும் உம்மைத் துதிக்கும்; உம்மு
டைய பரிசுத்தவான்கள் உம்மை
ஸ்தோத்திரித்துத்—11 தாங்கள்
மனுப்புத்திரருக்கு உம்முடைய
வல்லமையையும் உம்முடைய இ
ராச்சியத்தின் கன மகிமையை
யும் அறிவிக்கும்படி,-12 உமது இ
ராச்சியத்தின் மகிமையைச் சொ
ல்லி, உமது வல்லமையை விவ
ரிப்பார்கள். – 13 உம்முடைய இ
ராச்சியம் எல்லாச் சதாகாலங்க
ளின் இராச்சியமாகவும், உம்மு
டைய ஆளுகை எல்லாத் தலைமு
றை தலைமுறையாகவும் இருக்
கும். – 14 கர்த்தர் விழுகிற யாவ
ரையுந் தாங்கி, மடங்கடிக்கப்பட்
ட யாவரையுந் தூக்கி எடுக்கிற
வர். - 15 எல்லாச் சீவன்களின்
கண்களும் உம்மை நோக்கிக்
கொண்டிருக்கிறது; தேவரீர் ஏற்
ற வேளையிலே அவைகளின் போ
சனத்தை அவைகளுக்குக் கொ
டுக்கிறீர். - 16 உம்முடைய கை
யைத் திறந்து, சீவனுள்ள எல்
லாவற்றையும் இதமியமாய்த் தி
ருப்தியடையப் பண்ணுகிறீர். —
17 கர்த்தர் தமது வழிகளில் எல்
லாம் நீதியுள்ளவரும் தமது கிரி
யைகளில் எல்லாம் கிருபையுள்ள
வருமாயிருக்கிறார்.

18 தம்மை நோக்கிக் கூப்பிடுகி
ற யாவருக்கும், உண்மையாய்த்
தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யா
வருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கி
றார். - 19 அவர் தமக்குப் பயந்த
வர்களுடைய விருப்பத்தின்படி
செய்து, அவர்கள் கூப்பிடுதலைக்
கேட்டு, அவர்களை இரட்சிக்கி
றார். – 20 கர்த்தர் தம்மைச் சிநே
கிக்கிற யாவரையுங் காப்பாற்றி,
ஆகாதவர்கள் எல்லாரையும் அ
ழிப்பார்.-21 என் வாய் கர்த்தரின்
துதியைச் சொல்வதாக: எல்லா
மாமிசமும் அவர் பரிசுத்த நாமத்
தை எப்போதும் என்றென்றைக்
கும் ஸ்தோத்திரிக்கக் கடவது.

146. சங்கீதம்.

மனுஷரை அல்ல, சர்வத்திற்கும் வல்ல தயாபரரையே நம்ப ஏவினது.

அல்லேலூயா, என் ஆத்துமா
வே, கர்த்தரைத் துதி.–2 நான் சீ
வனுள்ளமட்டும் கர்த்தரைத் து
திப்பேன், நான் இருக்குமளவும்
என் பராபரனைக் கீர்த்தனம்பண்
ணுவேன். - 3 பிரபுக்களையும் இ
ரட்சிப்பில்லா மனுப்புத்திரனை
யும் நம்பாதேயுங்கள்.-4 அவனு
டைய ஆவி புறப்படும், தன் மண்
ணுக்குத் திரும்புகிறான்; அந்நாளி
லே அவன் யோசனைகள் அழியும்.

5 யாக்கோபின் பராபரனைத்
தன் துணையாகக் கொண்டிருந்து,
வானத்தையும் பூமியையும் சமுத்
திரத்தையும், அவைகளிலுள்ளது
எல்லாவற்றையும் உண்டாக்கின
தன் பராபரனாகிய கர்த்தரின்
மேல் தன் நம்பிக்கையை வைக்கி
றவன் பாக்கியவான். — 6 அவர்

என்றென்றைக்கும் உண்மை
யைக் காக்கிறார்.—7 ஒடுக்கப்பட்
டவர்களுக்கு நியாயஞ்செய்கிறார்,
பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகா
ரங் கொடுக்கிறார், கட்டுண்டவர்க
ளைக் கர்த்தர் விடுதலையாக்குகி
றார்.
8 குருடரின் கண்களைக் கர்த்
தர் திறக்கிறார், மடங்கடிக்கப்பட்
டவர்களைக் கர்த்தர் தூக்கி எடுக்
கிறார்; நீதிமான்களைக் கர்த்தர் சி
நேகிக்கிறார்.–9 கர்த்தர் பரதேசி
களைக் காப்பாற்றித் திக்கற்ற
வனையும் விதவையையும் ஆதரிக்
கிறார். ஆனால் ஆகாதவர்களின்
வழியைக் கவிழ்க்கிறார்.—10 கர்த்
தர் சதாகாலமாகவும், சீயோ
னே, உன் பராபரன் தலைமுறை
தலைமுறையாகவும் இராசரிக்கம்
பண்ணுகிறார். அல்லேலூயா.

147. சங்கீதம்.

பராபரனுடைய உபகாரங்களின் நிமித்தம் அவரை ஸ்தோத்திரிக்க ஏவினது.

துதியே இன்பமும் ஏற்றதுமா
யிருக்கிறது; கர்த்தரைத் துதியுங்
கள், ஏனெனில் நம்முடைய பரா
பரனைக் கீர்த்தனம் பண்ணுகிற
து நல்லது.–2 கர்த்தர் எருசலே
மைக் கட்டித் துரத்துண்ட இஸ்
ரவேலரைக் கூட்டிச் சேர்க்கி
றார்.–3 இருதயம் நொறுங்குண்ட
வர்களைக் குணமாக்கி, அவர்கள்
நோயுள்ள காயங்களைக் கட்டுகி
றார்.–4 நட்சத்திரங்களின் இலக்
கத்தை எண்ணி, அவைகளை
எல்லாம் பேர் பேராக அழைக்கி
றார். — 5 நம்முடைய ஆண்டவர்
பெரியவரும் மகா பெலனுள்ளவ
ருமாயிருக்கிறார்; அவருடைய உ
ணர்வை எண்ணி முடியாது. – 6
கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்க
ளை உயர்த்தி, ஆகாதவர்களைத்
தரைமட்டுந் தாழ்த்துகிறார்.
7 கர்த்தரைத் துதியோடே பா
டிக்கொண்டிருந்து நம்முடைய
பராபரனைச் சுரமண்டலத்தால்
கீர்த்தனம் பண்ணுங்கள்.-8 அவர்
வானத்தை மேகங்களால் மூடிப்
பூமிக்கு மழையை ஆயத்தப்படு
த்தி, மலைகளில் புல்லை முளைப்
பித்து,-9 மிருக சீவனுக்கும், கூப்
பிடுகிற காக்காய்க் குஞ்சுகளுக்
கும், அவைகளின் ஆகாரத்தைக்
கொடுக்கிறார். – 10 குதிரைப் ப
லத்தின் மேல் விருப்பமாயிரார்,
புருஷனுடைய தொடைகளின்
மேல் பிரியமாயிரார்.-11 தமக்குப்
பயந்து, தம்முடைய கிருபைக்குக்
காத்திருக்கிறவர்களின்மேல் கர்த்
தர் பிரியமாயிருக்கிறார்.

12 எருசலேமே, கர்த்தரை ஸ்
தோத்திரி; சீயோனே, உன் பரா
பரனைத் துதி. - 13 ஏனெனில்
உன் வாசல்களின் தாழ்ப்பாள்க
ளைக் கெட்டியாக்கி, உன்னிலுள்
ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கி
றார்.–14 அவர் உன் எல்லைகளைச்
சமாதானம் உள்ளவைகளாக்கிக்
கோதுமையின் புஷ்டியால் உன்
னைத் திருப்தியாக்குகிறார்.—15
தம்முடைய வார்த்தையைப் பூ
மியின்மேல் அனுப்புகிறார்; அவ
ருடைய சொல் மகா தீவிரமாய்
ஓடும்.–16 பஞ்சடைவாக உறைந்
த மழையைத் தந்து, சாம்பலடை
வாக உறைந்த பனியைத் தூவு

கிருர். — 17 அவர் தம்முடைய
கன்மழையைத் துணிக்கைகளாக
அனுப்புகிருர்; அவருடைய குளி
ருக்கு முன்பாக நிற்பவன் ஆர். —
18 தமது வார்த்தையை அனுப்பி
அவைகளை உருக்குகிருர்; தமது
காற்றை வீசப்பண்ணுகிருர், அப்
போது தண்ணீர்களாய் ஓடும். —
19 யாக்கோபுக்குத் தம்முடைய
வசனங்களையும் இஸ்ரவேலுக்குத்
தம்முடைய பிரமாணங்களையும்
தம்முடைய நியாயங்களையும் அறி
விக்கிருர்.—20 இப்படி அவர் எந்
தச் சாதிக்குஞ் செய்ததில்லை:
அவருடைய நியாயங்களை அறியா
தே போகிருர்கள். அல்லேலூயா.

148. சங்கீதம்.

பராபரனைத் துதிக்கச் சர்வ சிருஷ்டி
யையும் ஏவினது.

அல்லேலூயா. பரமண்டலங்க
ளிலுள்ளவைகளே, கர்த்தரைத்
துதியுங்கள், உயரங்களில் அவ
ரைத் துதியுங்கள். — 2 அவரு
டைய எல்லாத் தூதர்களே, அவ
ரைத் துதியுங்கள்; அவருடைய
எல்லாச் சேனைகளே, அவரைத்
துதியுங்கள்.—3 சூரியனே, சந்தி
ரனே, அவரைத் துதியுங்கள்; வெ
ளிச்சமுள்ள எல்லா நட்சத்திரங்
களே, அவரைத் துதியுங்கள். —
4 வானங்களுடைய வானங்களே,
ஆகாய மண்டலத்தின் மீதி
லுள்ள தண்ணீர்களே, அவரைத்
துதியுங்கள்.—5 அவைகள் கர்த்த
ரின் நாமத்தைத் துதிக்கக் கட
வது; ஏனெனில் அவர் கட்டளை
யிடச் சிருஷ்டிக்கப்பட்டது. —
6 அவர் அவைகளை என்றைக்கு
முள்ள சதாகாலங்களாய் உறுதிப்
படுத்தி, அவைகள் மாருத பிர
மாணத்தை அவைகளுக்குக் கட்
டளையிட்டார்.

7 பூமியிலுள்ளவைகளே, கர்த்
தரைத் துதியுங்கள்; திமிங்கி
லங்களும், சகல ஆழங்களும், —
8 அக்கினியும், கல்மாரியும், உறை
ந்த மழையும், மூடுபனியும், அவர்
சொற்படி செய்யும் பெருங்காற்
றும்,—9 பருவதங்களும், சகல
மேடுகளும், கனிமரங்களும், சகல
கேதுருக்களும், — 10 காட்
டுச் சீவன்களும், சகல மிருகங்க
ளும், ஊர்வனவும், இறகுள்ள
பறவைகளும், — 11 பூமியின்
இராசாக்களும், எல்லாச் சனசத
ளங்களும், பிரபுக்களும், பூமியி
லுள்ள சகல நியாயாதிபதிகளும்,
12 வாலிபரும், கன்னிகைகளும்,
முதிர்ந்த வயது இளவயதுள்ளவர்
களும், — 13 கர்த்தரின் நாமத்
தைத் துதிக்கவும்; ஏனெனில்
அவருடைய மகிமை பூமிக்கும்
வானத்துக்கும் மேலாயிருக்கிற
து.—14 அவர் தம்முடைய எல்
லாப் பரிசுத்தருக்கும் தம்மைச்
சேர்ந்த சனமாகிய இஸ்ரவேல்
புத்திரருக்குமே கொண்டாட்ட
மாகத் தம்முடைய சனத்துக்கு
ஒரு கொம்பை உயர்த்தினுர். அல்
லேலூயா.

149. சங்கீதம்.

தம்முடைய சபையை ஆதரித்து மகி
மைப்படுத்தும் பராபரனைத் துதித்தது.

அல்லேலூயா. கர்த்தரைப்
புதுப் பாட்டாய்ப் பாடுங்கள்; சன்

மார்க்கரின் சபையில் அவருடைய
துதி நடப்பதாக. – 2 இஸ்ரவேல்
தன்னை உண்டாக்கினவருக்குள்
மகிழ்ந்து, சீயோனின் குமாரர்
தங்கள் இராசாவுக்குள் களிகூர்ந்
து, – 3 அவருடைய நாமத்தைக்
கீதவாத்தியத்தால் துதித்து,
அவரை மேளத்தாலும் சுரமண்
டலத்தாலும் கீர்த்தனம் பண்
ணக் கடவார்கள்.–4 ஏனெனில்
கர்த்தர் தம்முடைய சனத்தின்
மேல் பிரியம் வைக்கிறார், சிறு
மையானவர்களை இரட்சிப்பினு
லே சிங்காரிப்பார்.

5 சன்மார்க்கர் மகிமையாய்க்
களிகூர்ந்து, தங்கள் படுக்கைக
ளின்மேல் கம்பீரிப்பார்கள். –
6 அவர்கள் வாயில் கர்த்தரை உயர்
த்துங் கீர்த்தனங்களும், அவர்கள்
கையில் இரு புறமுங் கருக்குள்ள
பட்டயமும் இருக்கும்.–7 சாதிக
ளில் பழிவாங்குதலும், சனசத
ளங்களில் தண்டனைகளுஞ் செய்
வதற்கும்,-8 அவர்களுடைய இரா
சாக்களைச் சங்கிலிகளாலும், அவர்
களுடைய மேன்மக்களை இருப்பு
விலங்குகளாலுங் கட்டி,-9 எழுதி
யிருக்கிற நியாயத்தை அவர்களில்
செய்வதற்குமாகத்தானே. இந்
தக் கனம் அவருடைய சன்மார்க்
கர் அனைவருக்கும் உண்டாம்.
அல்லேலூயா.

150. சங்கீதம்.

மகிமையுள்ள பராபரனைச் சகலவித கீத
வாத்தியத்தாலுந் துதிக்க ஏவினது.

அல்லேலூயா. தம்முடைய பரி
சுத்த ஸ்தலத்திலேயிருக்கிற பரா
பரனைத் துதியுங்கள்; அவருடைய
பலம் விளங்குகிற ஆகாய விரி
வைப் பார்த்து அவரைத் துதியுங்
கள்.–2 அவருடைய வல்லமைக
ளுக்காக அவரைத் துதியுங்கள்;
அவருடைய திரளான மகத்துவத்
துக்காக அவரைத் துதியுங்கள். –
3 அவரை எக்காளத் தொனியி
னாலே துதியுங்கள்; அவரைத்
தம்புராலும் சுரமண்டலத்தாலும்
துதியுங்கள்.-4 அவரை மேளத்
தாலும் கீதவாத்தியத்தாலும் துதி
யுங்கள்; அவரை வீணையாலும்
கின்னரத்தாலும் துதியுங்கள். –
5 அவரை ஓசையான கைத்தாள
ளங்களாலுந் துதியுங்கள்; அவ
ரைக் கம்பீரமான கைத்தாளங்க
ளாலும் துதியுங்கள்.-6 சுவாசமுள்
ளதெல்லாம் கர்த்தரைத் துதிப்ப
தாக. அல்லேலூயா.

முற்றிற்று.

சங்கீத தினப்பாடம்.

வருகை. 1-ம் வாரம்...24. 1—6.
,, 2-ம் ,, ...97. 7-12.6.
,, 3-ம் ,, ...42. 13-18.
,, 4-ம் ,, ஞாயிறு முதல்
வெள்ளிவரைக்கும்...40. 19—23.
டிசெம். மீ 24உ ... ... (8) 132.
பிற. பண். 1-ம் நா. ... 2 (98).
,, 2-ம் நா. ... (100) 45.
டிசெம். மீ 27உ முதல் 30உ வரைக்
கும் 24-27. ஷ 31உ (90) 103.
வருஷப் பிறப்பு ... ... 81 (91).
ஜனுவரி 2உ முதல் 5-ம்உ வரைக்
கும் ... ... 65. 28—30.
மகிமை விள. பண்டி. ... (72) 96.
பிந்தின திங்கள் முதல் சனிவ
ரைக்கும் ... ... 31—36.
பிந். 1-ம் வாரம் ... 84. 37—42.
2-ம் ,, ... 36. 43—48.
3-ம் ,, ... 30. 49—54.
4-ம் ,, ... 124. 55—60.
5-ம் ,, ... 9. 61—66.
6-ம் ,, ... 97. 67—72.
எழுப. நாள். வாரம் ... 73—79.
அறுபதாம் நாள் ... ... 80—86.
ஐம்பதாம் நாளின் ஞாயிறு முதல்
செவ்வாய் வரைக்கும் ...87-89.
ஒருசந்தி நாட்களின் முதலாம்
நாள் ... ... (6) 40.
வியாழக் கிழமை முதல் சனி
வரைக்கும் ... ... 37—39.
ஒருச. 1-ம் வாரம்...91. 31—36.
,, 2-ம் ,, ...25. 30—41.
,, 3-ம் ,, ...55. 19—24.
,, 4-ம் ,, ...145. 31—18.
ஒருச. 5-ம் வாரம் ... 43. 7—12.
,, 6-ம் ,, ... ஞாயிறு முதல்
புதன் வரைக்கும் ... 188. 4-6.
பெரிய வியாழன் ... (34) 111.
பெரிய வெள்ளி ... ... 22. (69).
சனி ... ... (1) 16.
உயிர்த்தெ. ஞாயிறு (2) 113-116.
ஷ திங்கள் ... 18. (117. 118).
ஷ செவ்வாய் முதல் சனி வரைக்
கும் ... ... 90—94.
உயி. ப. பி. 1-ம் வாரம் 95—101.
,, 2-ம் ,, 23. 102-107.
,, 3-ம் ஞாயிறு முதல் வி
யாழன் வரைக்கும் 66. 108-111.
செபதப பெருநாள் ... (67) 102.
சனி ... ... 112.
உயி. 4-ம் வாரம் ...149. 113-118.
,, 5-ம் வாரம் ஞாயிறு முதல்
புதன் வரைக்கும்...27.119.120.
பரத்துக்கே. பண்டிகை (47) 110.
வெள்ளி. சனி ... 121. 122.
6-ம் வாரம் ஞாயிறு முதல் வியா
ழன் வரைக்கும்...65.123. 128.
வெள்ளி ... 127. சனி ... 51.
பரி. ஆ. பண். 1-ம் நா. 68. (134).
ஷ 2-ம் நா. (45) 143.
செவ்வாய்க் கிழமை முதல் சனி
வரைக்கும் ... 128—132.
திரி. பண். வாரம்...99. 133-138.
பிந்தின 1-ம் ,, ... 49. 139-144.
,, 2-ம் ,, ... 87. 145-150.
,, 3-ம் ,, ... 103. 1—6.
,, 4-ம் ,, ... 15. 7—12.
,, 5-ம் ,, ... 127. 13-18.

தி. ப. பி.	6-ம் வாரம்	133.	19-24.
,,	7-ம் ,, ...	147.	25-30.
,,	8-ம் ,, ...	12.	31—36.
,,	9-ம் ,, ...	14.	37—42.
,,	10-ம் ,, ...	137.	43-68.
,,	11-ம் ,, ...	32.	49—54.
,,	12-ம் ,, ...	138.	55-60.
,,	13-ம் ,, ...	41.	61—66.
,,	14-ம் ,, ...	107.	67—72.
,,	15-ம் ,, ...	37.	73—78.
,,	16-ம் ,, ...	116.	79-84.
தி.ப.பி.	17-ம் வாரம்	131.	85-90.
,,	18-ம் ,, ...	110.	91-96.
,,	19-ம் ,, ...	51.	97-102.
,,	20-ம் ,,	122.	103—108.
,,	21-ம் ,,	71.	109—114.
,,	22-ம் ,,	130.	115—120.
,,	23-ம் ,,	85.	121—126.
,,	24-ம் ,,	39.	127—132.
,,	25-ம் ,,	29.	133—138.
,,	26-ம் ,,	75.	139—144.
,,	27-ம் ,,	126.	145—150.

77130
6:417
N20

ஒவ்வொரு திருநாளுக்குங் குறிக்கப்பட்ட

பழைய புதிய

நிருப வாக்கியமுஞ் சுவிசேஷ வாக்கியமும்.

நிருப வாக்கியம்.		சுவிசேஷ வாக்கியம்.	
கிறிஸ்து வருகையின் 1-ம் ஞாயிறு.			
ப. ரோமர்	13, 11-14	ப. மத்தேயு	21, 1- 7
பு. 1 தீமோத்.	1, 15	பு. லூக்கா	1, 67-79
கிறிஸ்து வருகையின் 2-ம் ஞாயிறு.			
ப. ரோமர்	15, 4-13	ப. லூக்கா	21, 25-36
பு. எசாயா	40, 1- 5	பு. லூக்கா	17, 20-30
கிறிஸ்து வருகையின் 3-ம் ஞாயிறு.			
ப. 1 கொரிந்தி.	4, 1- 5	ப. மத்தேயு	11, 2-10
பு. ரோமர்	2, 12-16	பு. லூக்கா	3, 15-17
கிறிஸ்து வருகையின் 4-ம் ஞாயிறு.			
ப. பிலிப்பியர்	4, 4- 7	ப. யோவான்	1, 19-28
பு. 5 மோசே	18, 15-19	பு. லூக்கா	1, 46-55
கர்த்தர் பிறந்த பண்டிகையின் 1-ம் நாள்.			
ப. தீத்து	2, 11-14	ப. லூக்கா	2, 1-14
பு. எசாயா	9, 6. 7	பு. மத்தேயு	1, 18-23
கர்த்தர் பிறந்த பண்டிகையின் 2-ம் நாள்.			
ப. தீத்து	3, 4- 7	ப. லூக்கா	2, 15-20
பு. மீகா	5, 1- 3	பு. யோவான்	1, 1-14
கர்த்தர் பிறந்த பண்டிகைக்குப் பின்வரும் ஞாயிறு.			
ப. கலாத்தியர்	4, 1- 7	ப. லூக்கா	2, 33-40
பு. எசாயா	40, 27-31	பு. லூக்கா	2, 22-32

நிருப வாக்கியம்.				சுவிசேஷ வாக்கியம்.	
		வருஷ முடிவின் இரவு.			
பு.	1 மோசே 32,	22-31	பு.	லூக்கா	13, 6- 9
பு.	சங்கீதம் 102,	26-29	பு.	,,	24, 29
		வருஷப் பிறப்புப் பண்டிகை.			
ப.	கலாத்தியர் 3,	23-29	ப.	லூக்கா	2, 21
பு.	சங்கீதம் 121,		பு.	லூக்கா	4, 16-21
		வருஷப் பிறப்புப் பண்டிகைக்குப் பிந்தின ஞாயிறு.			
பு.	1 பேதுரு 4,	12-19	ப.	மத்தேயு	2, 13-23
ப.	எபிரேயர் 1,	1-12	ப.	யோவான்	1, 1-14
ப.	1 யோவான் 3,	1- 8	பு.	மத்தேயு	14, 1-12
		கிறிஸ்து மகிமை விளங்குதற் பண்டிகை.			
ப.	எசாயா 60,	1- 6	ப.	மத்தேயு	2, 1-12
பு.	எசாயா 42,	5- 8	பு.	அப்போ.	8, 26-39
		மகிமை விளங்குதற் பண்டிகைக்குப் பின்வரும் 1-ம் ஞாயிறு.			
ப.	ரோமர் 12,	1- 6	ப.	லூக்கா	2, 41-52
பு.	எபேசியர் 6,	1- 4	பு.	யோவான்	1, 35-42
		மகி. வி. பண். பின். 2-ம் ஞாயிறு.			
ப.	ரோமர் 12,	7-16	ப.	யோவான்	2, 1-11
பு.	1 கொரிந்தி.1,	26-31	பு.	,,	1, 43-51
		மகி. வி. பண். பின். 3-ம் ஞாயிறு.			
ப.	ரோமர் 12,	16-21	ப.	மத்தேயு	8, 1-13
பு.	ரோமர் 5,	1- 5	பு.	யோவான்	4, 4-14
		மகி. வி. பண். பின். 4-ம் ஞாயிறு.			
ப.	ரோமர் 13,	8-10	ப.	மத்தேயு	8, 23-27
பு.	2 தீமோத். 1,	7-10	பு.	யோவான்	4, 31-42
		மகி. வி. பண். பின். 5-ம் ஞாயிறு.			
ப.	கொலோ. 3,	12-17	ப.	மத்தேயு	13, 24-30
பு.	எபேசியர் 1,	3- 6	பு.	அப்போ.	16, 9-15
		மகி. வி. பண். பின். 6-ம் ஞாயிறு.			
ப.	2 பேதுரு 1,	16-21	ப.	மத்தேயு	17, 1- 9
பு.	1 பேதுரு 1,	13-21	பு.	யோவான்	5, 5-18

நிருப வாக்கியம்.		சுவிசேஷ வாக்கியம்.	

எழுபதாம் நாளென்கிற ஞாயிறு.

ப. 1 கொரி.	9, 24-10, 5	ப. மத்தேயு	20, 1-16
பு. பிலிப்பியர்	3, 7-14	பு. லூக்கா	10, 38-42

அறுபதாம் நாளென்கிற ஞாயிறு.

ப. 2 கொரி.	11, 19-12, 9	ப. லூக்கா	8, 4-15
பு. ஆமோசு	8, 11. 12	பு. மத்தேயு	16, 13-20

ஐம்பதாம் நாளென்கிற ஞாயிறு.

ப. 1 பேதுரு	3, 18-22	ப. மத்தேயு	3, 13-17
பு. யாக்கோபு	3, 13-18	பு. யோவான்	11, 47-57

ஒருசந்தி நாட்களின் முதலாம் நாளாகிய புதன் கிழமை.

ப. 1 கொரி.	13, 1-13	ப. லூக்கா	18, 31-43
பு. எபிரேயர்	12, 1- 6	பு. யோவான்	12, 23-33

ஒருசந்தியின் 1-ம் ஞாயிறு.

ப. 2 கொரி.	6, 1 -10	ப. மத்தேயு	4, 1-11
பு. எபிரேயர்	4, 15. 16	பு. மத்தேயு	16, 21-26

ஒருசந்தியின் 2-ம் ஞாயிறு.

ப. 1 தெசலோ.	4, 1- 7	ப. மத்தேயு	15, 21-28
பு. 1 யோவான்	2, 12-17	பு. லூக்கா	9, 51-56

ஒருசந்தியின் 3-ம் ஞாயிறு.

ப. எபேசியர்	5, 1- 9	ப. லூக்கா	11, 14-28
பு. 2 கொரி.	1, 3- 7	பு. யோவான்	11, 1-26

ஒருசந்தியின் 4-ம் ஞாயிறு.

ப. கலாத்தியர்	4, 21-31	ப. யோவான்	6, 1-15
பு. எசாயா	54, 7-10	பு. ,,	11, 32-46

ஒருசந்தியின் 5-ம் ஞாயிறு.

ப. எபிரேயர்	9, 11-15	ப. யோவான்	8, 46-59
பு. எபிரேயர்	7, 24-27	பு. மத்தேயு	12, 38-42

ஒருசந்தியின் 6-ம் ஞாயிறு.

ப. பிலிப்பியர்	2, 5-11	ப. மத்தேயு	21, 1- 9
பு. 1 யோவான்	4, 9-11	பு. யோவான்	13, 31-35

நிருப வாக்கியம்.			சுவிசேஷ வாக்கியம்.		
பெரிய வியாழக் கிழமை.					
ப.	1 கொரிந்.	11, 23-32	ப.	யோவான்	13, 1-15
			ப.	லூக்கா	22, 14-20
பு.	1 கொரிந்.	10, 16. 17	பு.	மாற்கு	14, 17-25
பெரிய வெள்ளிக் கிழமை.					
ப.	பாடுபட்ட	சரித்திரம்.			
பு.	எசாயா	53, 1- 7	பு.	லூக்கா	23, 33-48
பு.	2 கொரிந்.	5, 14. 15	பு.	மாற்கு	15, 22-37
கர்த்தர் உயிர்த்தெழுந்த பண்டிகையின் 1-ம் நாள்.					
ப.	1 கொரிந்	5, 6- 8	ப.	மாற்கு	16, 1- 8
பு.	1 கொரிந்.	15, 51-57	பு.	மத்தேயு	28, 1-10
கர்த். உயிர்த். பண். 2-ம் நாள்.					
ப.	அப்போ.	10, 34-41	ப.	லூக்கா	24, 13-35
பு.	1 கொரிந்.	15, 12-20	பு.	யோவான்	20, 11-18
உயிர்த்தெழுந்த பண்டிகைக்குப் பிந்தின 1-ம் ஞாயிறு.					
ப.	1 யோவான்	5, 4-12	ப.	யோவான்	20, 19-31
பு.	2 தீமோத்.	2, 1-13	பு.	யோவான்	21, 15-19
உயிர்த். பண். பிந். 2-ம் ஞாயிறு.					
ப.	1 பேதுரு	2, 21-25	ப.	யோவான்	10, 11-16
பு.	எபிரேயர்	13, 20. 21	பு.	யோவான்	10, 1-10
உயிர்த். பண். பிந். 3-ம் ஞாயிறு.					
ப.	1 பேதுரு	2, 11-20	ப.	யோவான்	16, 16-22
பு.	2 கொரிந்.	4, 7-11	பு.	யோவான்	14, 1-12
சேப தப ஒருசந்திப் பெருநாள்.					
ப.	எசாயா	55, 6. 7	ப.	மத்தேயு	3, 8-10
பு.	அறிவிப்பு	3, 14-22	பு.	மத்தேயு	11, 20-24
உயிர்த். பண். பிந். 4-ம் ஞாயிறு.					
ப.	யாக்கோபு	1, 16-21	ப.	யோவான்	16, 5-15
பு.	1 யோவான்	3, 19-24	பு.	யோவான்	15, 1-11

நிருப வாக்கியம்.			சுவிசேஷ வாக்கியம்.		

உயிர்த். பண். பிந். 5-ம் ஞாயிறு.

ப.	யாக்கோபு	1, 22-27	ப.	யோவான்	16, 23-30
பு.	1 தீமோத்.	2, 1- 6	பு.	மத்தேயு	7, 7-11

கர்த்தர் பரத்துக்கேறின பண்டிகை.

ப.	அப்போ.	1, 1-11	ப.	மாற்கு	16, 14-23
பு.	எபேசியர்	1, 20-23	பு.	லூக்கா	24, 50-53

உயிர்த். பண். பிந். 6-ம் ஞாயிறு.

ப.	1 பேதுரு	4, 7-11	ப.	யோவா.	15, 26-16, 4
பு.	எசேக்கி.	36, 26. 27	பு.	அப்போ.	1, 15-26

பெந்தேக்கோஸ்தே பண்டிகையின் 1-ம் நாள்.

ப.	அப்போ.	2. 1-13	ப.	யோவான்	14, 23-31
பு.	எபேசியர்	2, 19-22	பு.	யோவான்	7, 37-39

பெந்தே. பண். 2-ம் நாள்.

ப.	எபேசியர்	1, 15-19	ப.	யோவான்	3, 16-21
பு.	அப்போ.	10, 42-48	பு.	அப்போ.	2, 37-47

திரித்துவப் பண்டிகை.

ப.	ரோமர்	11, 33-36	ப.	யோவான்	3, 1-15
பு.	1 யோவான்	4, 12-16	பு.	மத்தேயு	28, 16-20

திரித். பண். பித். 1-ம் ஞாயிறு.

ப.	1 யோவான்	4, 16-21	ப.	லூக்கா	16, 19-31
பு.	ரோமர்	8, 1-11	பு.	அப்போ.	3, 1-10
பு.	—		பு.	மாற்கு	4, 26-29

திரித். பண். பிந். 2-ம் ஞாயிறு.

ப.	1 யோவான்	3, 13-18	ப.	லூக்கா	14, 36-24
பு.	2 தெசலோ.	3, 1- 5	பு.	மத்தேயு	9, 9-13
பு.	—		பு.	அப்போ.	4, 8-22

திரித். பண். பிந். 3-ம் ஞாயிறு.

ப.	1 பேதுரு	5, 6-11	ப.	லூக்கா	15, 1-10
பு.	1 யோவான்	2, 1- 6	பு.	அப்போ.	5, 1-11
பு.	—		பு.	லூக்கா	15. 11-32

திருப வாக்கியம். சுவிசேஷ வாக்கியம்.

திரித். பண். யிந். 4-ம். ஞாயிறு.

ப.	ரோமர்	8, 18-23	ப.	லூக்கா	6, 36-42
பு.	2 கொருந்தி	4, 13-18	பு.	அப்போ.	6, 8-15
பு.	—		பு.	,,	7, 54-60
பு.	—		பு.	மத்தேயு	5, 13-16

திரித். பண். பிந். 5-ம் ஞாயிறு.

ப.	1 பேதுரு	3, 8-15	ப.	லூக்கா	5, 1-11
பு.	1 திமோத்.	6, 6-10	பு.	அப்போ.	9, 1-20
பு.	—		பு.	மத்தேயு.	7, 24-29

திரித். பண். பிந். 6-ம் ஞாயிறு.

ப.	ரோமர்	6, 3-11	ப.	மத்தேயு	5, 20-26
பு.	2 திமோம்.	3, 15-17	பு.	அப்போ.	10, 25-33
பு.	—		பு.	மத்மேயு	19, 16-26

திரித். பண். பிந். 7-ம் ஞாயிறு.

ப.	ரோமர்	6, 19-23	ப.	மாற்கு	8, 1- 9
பு.	1 பேதுரு	2, 4-10	பு.	அப்போ.	13, 42-52
பு.	—		பு.	மத்தேயு	13, 44-46

திரித். பண். பிந். 8-ம் ஞாயிறு.

ப.	ரோமர்	8, 12-17	ப.	மத்தேயு	7, 15-23
பு.	சங்கீதம்.	1.	பு.	அப்போ.	14, 11-22
பு.	—		பு.	மத்தேயு	12, 46-50

திரித். பண். பிந். 9-ம் ஞாயிறு.

ப.	1 கொரிந்தி.	10 6-13	ப.	லூக்கா	16, 1- 9
பு.	2 தெசலோ.	3, 10-13	பு.	அப்போ.	16, 16-34
பு.	—		பு.	மத்தேயு	18, 1- 6

திரித். பண். பிந். 10-ம் ஞாயிறு.

ப.	1 கொரிந்தி.	12, 1-11	ப.	லூக்கா	19, 41-48
பு.	1 கொரிந்தி.	3, 10-17	பு.	அப்போ.	17, 16-34
பு.	—		பு.	மத்தேயு	23, 34-39

· நிருப வாக்கியம். சுவிசேஷ வாக்கியம்.

திரித். பண். பிந். 11-ம் ஞாயிறு.

ப.	1 கொரிந்.	15, 1-10	ப.	லூக்கா	18, 9-14
பு.	1 யோவான்	1, 8-10.	பு.	அப்போ.	19, 23-40
பு.	—·		பு.	மாற்கு	12, 41-44

திரித். பண். பிந். 12-ம் ஞாயிறு.

ப.	2 கொரிந்.	3, 4-11	ப.	மாற்கு	7, 31-37
பு.	1 கொரிந்.	2, 9-16	பு.	அப்போ.	20, 17-38
பு.	—		பு.	மத்தேயு	5, 33-37

திரித். பண். பிந். 13-ம் ஞாயிறு.

ப.	கலாத்.	3, 15-22	ப.	லூக்கா	10, 23-37
பு.	ரோமர்	8, 31-39	பு.	அப்போ.	24, 24-27
பு.	—		பு.	மத்தேயு	6, 1- 8

திரித். பண். பிந். 14-ம் ஞாயிறு.

ப.	கலாத்.	5, 16-24	ப.	லூக்கா	17, 11-19
பு.	2 தீமோ.	2, 19-21	பு.	அப்போ.	26, 24-32
பு.	—		பு.	மத்தேயு	10, 16-22

திரித். பண். பிந். 15-ம் ஞாயிறு.

ப.	கலாத்.	5, 25-6, 10	ப.	மத்தேயு	6, 24-34
பு.	1 தீமோ.	4, 4-8	பு.	லூக்கா	18, 1- 8

திரித். பண். பிந். 16-ம் ஞாயிறு.

ப.	எபேசியர்	3, 13-21	ப.	லூக்கா	7, 11-17
பு.	பிலிப்பியர்	1, 19-26	பு.	லூக்கா	9, 57-62

திரித். பண். பிந். 17-ம் ஞாயிறு.

ப.	எபேசியர்	4, 1- 6	ப.	லூக்கா	14, 1-11
பு.	2 கொரிந்.	8, 1- 9	பு.	மத்தேயு	20, 20-28

திரித். பண். பிந். 18-ம் ஞாயிறு.

ப.	1 கொரிந்.	1, 4- 9	ப.	மத்தேயு	22, 34-46
பு.	எபிரே.	10, 38-11, 6	பு.	யோவான்	9, 1-12

திரித். பண். பிந். 19-ம் ஞாயிறு.

ப.	எபேசியர்	4, 21-28	ப.	மத்தேயு	9, 1- 8
பு.	எசாயா	55, 8-11	பு.	மத்தேயு	12, 1-13

நிருப வாக்கியம்.			சுவிசேஷ வாக்கியம்.		
		திரித். பண். பிந். 20-ம் ஞாயிறு.			
ப.	எபேசியர்	5, 15-21	ப.	மத்தேயு	22, 1-14
பு.	ரோமர்	14, 1- 9	பு.	மத்தேயு	21, 33-43
		திரித். பண். பிந். 21-ம் ஞாயிறு.			
ப.	எபேசியர்	6, 10-17	ப.	யோவான்	4, 46-54
பு.	1 கொரிந்.	15, 35-50	பு.	மத்தேயு	18, 15-20
		திரித். பண். பிந். 22-ம் ஞாயிறு.			
ப.	பிலிப்பியர்	1, 3-11	ப.	மத்தேயு	18, 23-35
பு.	யாக்கோபு	5, 7-11	பு.	லூக்கா	7, 36-50
		திரித். பண். பிந். 23-ம் ஞாயிறு.			
ப.	பிலிப்பியர்	3, 17-21	ப.	மத்தேயு	22, 15-22
பு.	எபிரேயர்	4, 9-13	பு.	லூக்கா	13, 23-30
		திரித். பண். பிந். 24-ம் ஞாயிறு.			
ப.	கொலொ.	1, 9-14	ப.	மத்தேயு	9, 18-26
பு.	2 கொரிந்.	5, 1-10	பு.	மத்தேயு	25, 14-30
		திரித். பண். பிந். 25-ம் ஞாயிறு.			
பு.	1 தெச.	4, 13-18	ப.	மத்தேயு	24, 15-28
பு.	2 தெச.	2, 1-12	பு.	மத்தேயு	24, 1-14
		திரித். பண். பிந். 26-ம் ஞாயிறு.			
ப.	2 பேதுரு	3, 3-14	ப.	மத்தேயு	25, 31-46
பு.	அறிவிப்பு	20, 11-15	பு.	மத்தேயு	13, 47-50
		திரித். பண். பிந். 27-ம் ஞாயிறு.			
ப.	1 தெச.	5, 1-11	ப.	மத்தேயு	25, 1-13
பு.	அறிவிப்பு	22, 12-17	பு.	மாற்கு	13, 33-37
		மிசியோன் ஸ்தோத்திரப் பண்டிகை.			
ப.	2 கொரிந்.	5, 17-21	ப.	மத்தேயு	28, 18-20
பு.	ஆகாய்	2, 6- 9	பு.	லூக்கா	12, 49
		திருச்சபை சீர்திருத்தப்பட்டதை நினைவுகூரும் திருநாள்.			
ப.	அறிவிப்பு	14, 6-12	ப.	மத்தேயு	11, 25-30
பு.	கொலொ.	2, 6- 9	பு.	—	
பு.	எபிரேயர்	13, 7- 9	பு.	மத்தேயு	5, 1-12

நிருப வாக்கியம்.			சுவிசேஷ வாக்கியம்.		
கோவில் பிரதிஷ்டைப் பண்டிகை.					
ப.	அறிவிப்பு	21, 1-5	ப.	லூக்கா	19, 1-10
பு.	சங்கீதம்	84, 2-13	பு.	யோவான்	4, 21-24
அறுப்புக்காக ஸ்தோத்திரஞ் செலுத்தும் நாள்.					
ப.	2 கொரிந்.	9, 6-15	ப.	லூக்கா	12, 15-31
பு.	சங்கீதம்	34, 9-11	பு.	மத்தேயு	6, 11

B.

திருநாட்களுக்குரிய புதிய நிருப சுவிசேஷ வாக்கியங்கள்.

பழைய வாக்கியங்களில் சிலதுக்குப் பதிலாக உபயோகிக்கத் தக்க வாக்கியங்கள்.

வருகையின் 2-ம் ஞாயிறு	... ...	1 தீமோ. 6, 11-16
கர்த். பிற. பண். 2-ம் நாள்	... ...	1 யோ. 4, 1-4
ஐம்பதாம் நாள் எ. ஞாயிறு	... ...	1 கொரி. 1, 18-24
ஒருசந்தியின் 4-ம் ஞாயிறு	... ...	சங்கீதம் 23
ஒருசந்தியின் 6-ம் ஞாயிறு	... ...	யோவா. 12, 1-19
உயிர்த். பண்டி. 1-ம் நாள்	... ...	1 பேது. 1, 3-9
திரித்துவப் பண்டிகை	... ...	2 கொரி. 13, 13
திரித்.ப. பின்.7-ம் ஞாயிறு	... ...	யோவா. 6, 66-71
,, ,, ,, 10 ,,	... ...	ரோம. 2, 1-11
,, ,, ,, 13 ,,	... ...	,, 7, 18-25
,, ,, ,, 16 ,,	... ...	1 பேது. 1, 22-25